
அலை அரசி
சாண்டில்யன்

# முகவுரை

பண்டைக்கால சேரநாடு தென்னக வரலாற்றில் முக்கியமான பங்கேற்ற காலம். வியக்கத்தக்க நிகழ்ச்சிகளும் திருப்பங்களும் கண்ட நாடு. மலை வளமும், மங்கையர் எழில் வளமும், புலவர் பெருமக்களின் இன்சுவைப் பாக்களும், மன்னர்களின் நெறி தவறா ஆட்சியும் ஒருங்கே இணைந்த நன்னாடு. மேலைநாட்டு வாணிபமும், கலாச்சாரமும் தென்னகத்தே ஊடுருவித் தமிழர் பண்பாட்டுடன் இரண்டறக் கலக்க வழிவகுத்த பெரும்நாடு. சேர நாட்டின் எழில்மிகு மேலைக் கடற்கரையில் தோன்றிய தொண்டி துறைமுகத்தில் இக்கதை ஆரம்பம். அராபியரும், சீனரும், யவனரும், ஆப்பிரிக்கரும் சேர நாட்டின் வாணிப வளத்தால் ஈர்க்கப்பட்டுக் கரையோரங்களில் குடியேற்றங்களை அமைத்தும், வாணிபத்தில் முறையாக ஈடுபட்டும் சேர அரசின் பல பிரிவுகளிலும் பணி புரிந்த காலம். அராபியரும் சீனரும் சேர நாவாய்களைத் திறமையாக மேலைக் கடலில் நடத்திய காலம். யவனரும், ஆப்பிரிக்கரும் கோட்டைக் காவலர்களாகவும், துறைமுக அதிகாரிகளாகவும், கலங்கரை விளக்கங்களின் அதிகாரிகளாகவும் பணிபுரிந்த காலம். சேர மாமன்னன் நெடுஞ்சேரலாதனின் பொற்காலம். இத்தகைய வரலாற்று நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டும், நெடுஞ்சேரலாதனின் இமய வெற்றியை மையமாகக் கொண்டும் 'அலை அரசி' என்ற இந்தச் சரித்திர நாவலைப் புனைந்தேன்.

நெடுஞ்சேரலாதன் ஒருவனே இக்கதையில் வரும் சரித்திர நாயகன். ஏனைய பாத்திரங்களாகிய முருந்தன் பெருவழுதி, அரையன் இளவழுதி, அலை அரசி, அராபியன் அஹமத் யாவரும் என் கற்பனைப் படைப்புகளே. இக்கதையின் சரித்திர விபரங்களை வரலாற்று வல்லுனராகிய கா.அ.நீலகண்ட சாஸ்திரி, சு. ஔவை துரைசாமி அவர்களின் நூல்களிலிருந்து எடுத்திருக்கிறேன். சேர மா மன்னன் நெடுஞ்சேரலாதனைப் பின்னணியாகக் கொண்ட ஒரு வரலாற்று நவீனத்தை அவசியம் எழுத வேண்டும் என்ற என்னுடைய நெடுநாளைய அவா 'அலை அரசி'யின் மூலம் பூர்த்தியாகிறது.

தமிழ் மக்கள் இக்கதையைப் படித்து பண்டைத் தமிழகத்தின் மண் வாசனையை நுகர்வோராகில் என்னை விட மகிழ்ச்சியுறும் தமிழன் இருக்க முடியாது என்று உறுதியோடு கூறுகிறேன்.

'குங்குமம்' பத்திரிகையில் இந்தக்கதை பிரசுரமான காலத்தில் தமிழ் மக்கள் அளித்த பேராதரவைப் புத்தக வடிவில் வந்திருக்கும் இந்த நூலுக்கும் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

இதைத் தொடர்கதையாகப் பிரசுரித்த ''குங்குமம்'' ஆசிரியர் அவர்களுக்கும், இப்பொழுது புத்தக வடிவில் கொண்டு வந்திருக்கும் பாரதி பதிப்பக உரிமையாளர் திரு.பழ.சிதம்பரம் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

சென்னை-17.
4.7.87.

சாண்டில்யன்

## சாண்டில்யனின் பிற நூல்கள்

1. நீலரதி
2. மண்மலர்
3. கடல் வேந்தன்
4. மாதவியின் மனம்
5. விஜயமாதேவி (மூன்று பகுதிகள்)
6. பல்வ பீடம்

# அலை அரசி

## 1. பிசாசு மரக்கலம்

அராபிய, எகிப்திய, சீன, யவன நாடுகளின் மரக்கலங்கள் தனித்தனிக் கூட்டங்களாக மற்ற நாடுகளை விட அதிகமாக நின்று, தொண்டி மாநகர்க் கடலில் மற்றுமொரு புதிய நகரை சிருஷ்டித்துவிட்டது போன்ற பிரமையை ஏற்படுத்தினாலும், அப்படி யாரும் தொண்டியின் கடற்புரத்தை ஆக்கிரமித்துவிட முடியாதென்பதை நிரூபிக்க அலைகள் அன்று பெரும் பேய்களாக எழுந்து கூச்சலிட்டு நங்கூரம் பாய்ச்சிய மரக்கலங்களையும் தூக்கியெறிய முற்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட முகுந்தன் பெருவழுதி, அதுபற்றி மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக துன்பப் பெருமூச்சு விட்டு தனது குடிசையில் உட்கார்ந்த வண்ணம் கடற்பகுதியை நோக்கிக் கொண்டே இருந்தான். சுமார் எண்பது பிராயங்களை அடைந்திருந்தாலும் அறுபதுக்கு மேல் மதிப்பிட முடியாதவனும், கண் பார்வை சிறிதும் மங்காதவனுமான முகுந்தன் பெருவழுதி தனது குடிசை முகப்பில் உட்கார்ந்து கொண்டு காலைக் கதிரவனின் இதந்தரும் கிரணங்களில் குளிர் காய்ந்து கொண்டே கண்களின் மீது கையை வைத்து கடலின் மீது தனது தூரதிருஷ்டியைச் செலுத்தினான். ஆனாலும் அந்தக் கண்களுக்கு தூர இருந்ததாக தனது பேரன் சொல்லிப் போன அந்த தனி மரக்கலம் புலனாகாததால் அதைத் தானே பார்த்து

விடுவதென்ற தீர்மானத்துக்கு வந்தவனாய் எழுந்து குடிசைக்குள்ளே சென்று தனது பெரிய தடியை எடுத்துக் கொண்டு கம்பளிப் போர்வையும் போர்த்திக் கொண்டு கடற்கரையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

மேலைக் கடற்கரையின் இருபெரும் துறைமுகங்களில் ஒன்றும், மேலை நாட்டு வணிகத்துக்குப் பெயர் போனதுமான தொண்டி மாநகர், வணிகத்தின் காரணமாகவே சமுத்திரக்கரை வரையில் படர்ந்திருந்ததால், எங்கும் வியாபாரக் கூச்சலும், அந்த நகரைக் காவல் புரிந்தயவனர் நடமாட்டமும், எச்சரிக்கைக் கோஷமும், அவர்கள் பாதக் குறடுகளின் சத்தமும் சேர்ந்து பிரளயத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தாலும், கடற்கரை முகப்புக்குச் செல்லும் வழிகளிலெல்லாம் மணலில் சிறு வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்கள் அடிக்கடி ''பெரியவரே! பெரியவரே!'' என்று அன்புக் குரல் கொடுத்தாலும், எதற்கும் செவிசாய்க்காமலும், கடல் பகுதியில் வைத்த கண்ணை வாங்காமலும் முகுந்தன் பெருவழுதி தனது பெருந்தடியை மணலில் ஊன்றிய வண்ணம் வேகமாக நடந்தான்.

தலையில் தாறுமாறாகத் தொங்கிக் கொண்டிருந்த மயிருடனும், பெரிய தாடி மீசையுடனும், தலை மயிர் அடிக்கடி விழுந்து கண்ணை மறைத்ததால் அதை விலக்கிக் கொண்டும், மீசை தாடிகள் வாயிலடைக்காமல் அவற்றை விரல்களால் ஒதுக்கி விட்டுக் கொண்டும் நடையைக் கட்டிய பெருவழுதி கடற்கரையை அடைந்ததும் அங்கிருந்த பரதவர் பலர் அவனை நெருங்கி வந்து ''படகை எடுக்கட்டுமா?'' என்று போட்டி போட்டுக் கொண்டு கேட்டார்கள். முகுந்தன் பெருவழுதி அவர்களுக்கு நேரிடையாக பதில் சொல்லாமல் ''என் பேரனை யாராவது பார்த்தீர்களா?'' என்று வினவினான்.



பரதவரில் ஒருவன் முதியவனை நோக்கி ''உங்கள் பேரனை இரண்டு நாட்களாகப் பார்க்கவில்லை'' என்று பதில் சொன்னான்.

முதியவனான முகுந்தன் ''நானும் பார்க்கவில்லை இரண்டு நாட்களாக. அதனால்தான் கவலையாயிருக்கிறது'' என்று துயரம் நிரம்பிய குரலில் சொன்னான்.

''கடலோடும் பரதவர் மூன்று நான்கு நாட்களுக்கு மேல் கடலிலேயே இருப்பது சகஜந்தானே?'' என்றான் இன்னொரு பரதவன்.

முகுந்தன் அப்பொழுதும் கவலையை விடாமலும் துன்பப் பெருமூச்சு விட்டும் பேச முற்பட்டு ''என் பேரன் தொழிலை முன்னிட்டு இரண்டு நாட்களென்ன, ஒரு வாரம் கடலோடி திரும்பாவிட்டாலும் கவலைப்படமாட்டேன். இம்முறை அவன் சுறா இழுக்கும் கொக்கிகளையோ பெரிய வேல்களையோ எடுத்துச் செல்லவில்லை. வலையைக் கூடக் கொண்டு போகவில்லை. அதனால்தான் கவலையாயிருக்கிறது. அவனை வந்து அழைத்துப் போனவனும் யோக்கியனாகத் தெரியவில்லை'' என்று விளக்கிவிட்டு ''இந்த மரக்கலக் கூட்டத்தில் இல்லாமல் தனியாக ஏதாவது மரக்கலம் வந்திருக்கிறதா? தனித்து நிற்கிறதா?'' என்று வினவவும் செய்தான்.

முதியவனான முகுந்தன் விளக்கமும் கேள்வியும் அங்கிருந்த பரதவர் அனைவருக்குமே வியப்பாயிருந்தாலும் ஒருவன் மட்டும் ''அப்படியொரு மரக்கலம் எதுவும் துறைமுகத்திலிருப்பதாகத் தெரியவில்லையே. எதற்கும் முந்தா நாள் இரவு வேல்வலியன் தனது படகுடன் தொலை தூரம் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றான். அவனை விசாரிப்போம்'' என்று கூறினான். வேல் வலியனை அழைத்து வர எட்ட இருந்த அவன் குடிசைக்கு

பரதவன் ஒருவனையும் அனுப்பினான். அவன் இல்லம் சென்று திரும்பியவன் இன்னொரு வாலிபனையும் அழைத்துவரவே அவனை விசாரித்தான் முகுந்தன் ''அப்பா! நீ என் பேரனைப் பார்த்தாயா?'' என்று.

வேல்வலியன் ஏதோ முயன்று வாயை மூடிக் கொண்டு ''இல்லை, பார்க்கவில்லை'' என்று குழப்பத்துடன் பதில் சொன்னான்.

அவன் பொய் சொல்வதை சந்தேகமற உணர்ந்து கொண்ட மற்ற பரதவர்கள் அவனைச் சுடச்சுட பார்த்ததன்றி அவர்களில் ஒருவன் ''வேல்வலியா! கடலோடும் அபாயத் தொழிலில் ஈடுபட்ட பரதவர் ஒருவரையொருவர் விட்டுக் கொடுப்பதில்லை. பொய்யும் சொல்வதில்லை'' என்று கடிந்து கொண்டான். மற்ற பரதவர்கள் வேல்வலியனைக் கொலைப் பார்வையாகப் பார்த்தார்கள். சுற்றும் சீறிய கண்களைப் பார்த்த வேல்வலியன் ''சரி சொல்லிவிடுகிறேன். ஆனால் அப்புறம் என்னைக் கடிந்து பயனில்லை'' என்று முகவுரை கூறிவிட்டு மேலும் தொடர்ந்தான்.

''பெரியவரே! உங்கள் பேரனும் அராபியன் ஒருவனும் முந்தா நாளுக்கு முன் நாளிரவு கடற்கரைக்கு வந்த போது நானும் இருந்தேன். அவர்கள் இருவரும் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொண்டதும் உங்கள் பேரன் அரையன் இளவழுதி தனது படகை கரையிலிருந்து இழுத்துவிட்டுப் படகின் பாயையும் விரித்தான். அதில் அராபியனும் இளவழுதியும் ஏறிக் கொண்ட பிறகு அந்த அராபியன் ஆகாயத்தைப் பார்த்து ஏதோ முணுமுணுத்து கைகளை இருபுறமும் ஆட்டவே எங்கிருந்தோ பெருங்காற்று வந்தது உங்கள் பேரன் படகு அதிவேகமாக அலைகளில் உந்திச் சென்றது. அந்த அராபியன் போக்கும், இளவழுதி அவன் சொன்னபடி ஆடியதும்



எனக்குப் புதுமையாயிருக்கவே நானும் எனது படகைக் கடலில் இழுத்து பாயை அவிழ்த்து விட்டு அவர்கள் படகைத் தொடரலானேன். அன்று அலைகள் மிகப் பெரியதாக எழுந்தன. படகைச் செலுத்துவதே கஷ்டமாயிருந்தாலும் கஷ்டப்பட்டு துடுப்புகளைத் துழாவி அவர்களைத் தொடர்ந்தேன். திடீரென எழுந்த பெருங்காற்று எனது படகையும் வேகமாக இழுத்துச் செல்லவே எனது அலுவல் சுலபமாயிற்று. துறைமுகத்திலிருந்த பல மரக்கலங்களையும் தாண்டிச் சென்ற அவர்கள் படகு நமது துறைமுக எல்லையையும் தாண்டி நடுக்கடலுக்குச் சென்றதும் அலைகள் திடீரென ஸ்தம்பித்து காற்றும் நின்று விடவே அமைதியும் பயங்கரமும் கலந்த காரிருளில் இளவழுதியின் படகு வெகுவேகமாகச் சென்றது. தொலை தூரம் சென்றதும் திடீரென ஒரு பெரிய மரக்கலம் தன்னந்தனியே நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன். அதிலிருந்த ஒரு சிறுவிளக்குக் கூட திடீரென அணைந்துவிட்டதால் அந்த மரக்கலத்தை முழுதும் பார்க்க என்னால் முடியவில்லை. ஆயினும் இளவழுதியின் படகு அந்த மரக்கலத்தை அணுகிவிட்டதைப் பார்த்தேன். படகிலிருந்து அராபியனும் இளவழுதியும் மரக்கல நூலேணியொன்றில் ஏறி தளத்தில் இறங்கியதையும் ஓரளவு பார்க்க முடிந்தது.

அந்த மரக்கலம் கடலின் அந்த இருளிலும் அலைகள் மந்தமாகிவிட்டதால் ஏற்பட்ட அமைதியிலும் மாலுமிகளே இல்லாததாலோ என்னவோ எந்தவித அரவமும் இல்லாமல் பிசாசைப் போல் நின்று கொண்டிருந்தது. அத்தகைய அந்த மரக்கலம் எங்கிருந்து வந்தது? எந்த நாட்டைச் சேர்ந்தது? என்பதை அறிய எந்தவித அடையாளங்களையும் அதில் காணோம். இளவழுதியும் அராபியனும் அந்த மரக்கலத்தில் ஏறிய பிறகு திடீரென மேகங்கள் சூழ்ந்து பெரிய ஒரு மின்னல் அந்த

மரக்கலத்தின் தளத்துக்கு வெளிச்சத்தை அளிக்கவே, அந்த மரக்கலத்தின் நடுப்பாய் மரத்தில் வெளேரென்று உடையணிந்த ஒரு பெண் பிணைக்கப்பட்டிருப்பதையும், அவள் தலைக் குழலிலிருந்து நெற்றியில் தொங்கிய சிறு சங்கிலியின் முகப்பாக இருந்த ஒரு வைரம் அவள் நெற்றியில் விளக்குக் கொளுத்தி வைத்ததுபோல் ஒளிவிடுவதையும் கண்டேன். மின்னல் மறைந்ததும் அந்தக் காட்சியும் மறைந்தது. அடுத்து என்ன நடக்கிறதென்று பார்க்க படகை அந்த மரக்கலத்தை நோக்கிச் செலுத்தினேன். சிந்தனை எங்கெங்கோ சுழன்றிருந்ததால் மரக்கலத்தை அணுகியதும் நூலேணியில் அந்த அராபியன் நின்றிருந்ததை நான் கவனிக்க முடியவில்லையாகையால் அவன் திடீரென ஒரு பெரிய வாளின் நுனியை என் கழுத்தில் ஊன்றினான். 'அருகே வராதே. நீ கண்டதை யாரிடமும் சொல்லாதே. சொன்னால் பிணமாகி விடுவாய். இந்த மரக்கலம் இங்கு வந்திருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம்' என்று அதட்டி, 'உன்னை உயிருடன் போக விடுவது தவறு. இருப்பினும் உன் தோழனை முன்னிட்டு உன்னைப் போக விடுகிறேன். உன் வாயிலிருந்து வார்த்தை எது வந்தாலும் நீ பிணமாகி விடுவாய்' என்று எச்சரித்தான். நான் ஏதும் பேசாமல் படகைத் திருப்பிக் கொண்டு வந்தேன். சிறிது தூரம் வந்ததும் திரும்பிப் பார்த்தேன். பாய் மரத்தில் கட்டியிருந்த பெண்ணை அவிழ்த்துத் தோளில் போட்டுக் கொண்ட இளவழுதி அடுத்தகணம் மறைந்து விட்டான். இதுதான் நான் அறிந்தது."

இதைக் கேட்ட முதியவனான முகுந்தன் தனது படகை அவிழ்த்து எடுத்துக் கொண்டு கிளம்ப முற்பட்டான். அவனைத் தடுத்த மற்றும் இருவர் "முதியவரே! தனியே போகாதீர்கள். நாங்கள் யாராவது துணை வருகிறோம்" என்று உதவிக்கு



விரைந்தும் முகுந்தன் கேட்கவில்லை. வயது தனது உரத்தையோ மனத்திடத்தையோ குறைக்கவில்லையென்பதைக் காட்ட மற்றவர்களை வர வேண்டாமென்று சைகை செய்துவிட்டு படகைச் செலுத்தினான் வேகமாக, அன்று பகல் முழுவதும் படகைச் செலுத்தியும் தனி மரக்கலம் ஏதும் தெரியவில்லை. இருப்பினும் உறுதியை விடாமல் படகை மேலும் செலுத்திய முகுந்தன் இரவின் ஆரம்பத்தில் அந்த மரக்கலத்தை அடைந்தான். நூலேணியில் ஏறி தளத்திலும் குதித்தான். மரக்கலத்தில் யாருமில்லை. எந்த அரவமும் கிடையாது. பிசாசு மரக்கலம் என்று வேல்வலியன் சொன்னது உண்மையென்று அவன் தீர்மானித்த சமயத்தில் திடீரென கிறீச்சென்ற பெரிய சத்தம் ஒன்று மரக்கலத்தின் ஒரு மூலையிலிருந்து கிளம்பி இரவின் அமைதியைக் கிழித்தது. அது தன் பேரன் இளவழுதியின் குரல் என்பதை உணர்ந்த முகுந்தன் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினான்.

# 2. சூன்யக் காரி

அளவுக்கு மிஞ்சி ஆபத்து விளைந்து, உயிரே போய் விடும்படியான பயங்கர நிலையிலும் முகத்தைச் சுளிக்காதவனும், புருவங்களைக் கூட அசைக்காதவனுமான தனது பேரன் இளவழுதி அந்த இரவில் அத்தனை பயங்கரமாகக் கூச்சலிட்டதால் நிலை கலங்கிப் போன முதியவன் பெருவழுதி, கூச்சல் வந்த திக்கை நோக்கி ஓடினாலும், இயற்கையாக அவனுக்கு உள்ளூர இருந்த பழைய உறுதியின் காரணமாக கப்பல் குறுக்குச் சட்டங்களில் தடுக்காமல் ஓரளவு திடமாகவே விரைந்து சென்றான். அந்தப் பெருமரக்கலத்தில் மருந்துக்குக்கூட காவலரோ மாலுமிகளோ இல்லாததால் யாரும் அவனைத் தடை செய்யாததாலும், மரக்கலத்தின் வடகோடியில் ஒரு சிறு அறை காணப்பட்டதாலும், அங்கிருந்துதான் தனது பேரன் அலறி இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான், முதியவனான பெருவழுதி. வேகமாகச் சென்று அந்த அறையை அடைந்து அதன் சிறு கதவைத் திறக்க முயன்றான். அவன் அழுத்தலுக்கோ, தோளை முட்டுக் கொடுத்து அவன் கதவை உடைக்க முயன்றதற்கோ, அந்தக் கதவு இடங்கொடுக்காததால், தனது மடியிலிருந்த வளையறுக்கும் கத்தியை எடுத்து அதன் தாள் துவாரத்தில் வைத்துத் திறக்கவே கதவு கீறிச்சென்று சத்தமிட்டுத் திறந்தபோது இளவழுதியின் இரண்டாவது கிறீச்சென்ற கூச்சலும் எழுந்து கதவின் ஒலியை ஓரளவு அடக்கிவிட்ட சமயத்தில் உள்ளே நுழைந்துவிட்ட முதியவன் அங்கிருந்த காட்சியைக் கண்டு ஸ்தம்பித்து நின்று விட்டான்.

அந்த அறையே அமைப்பில் விசித்திரமாயிருந்தது. அறையின் நாற்புறமும் கடினமான பலகைகள் அடிக்கப்பட்டிருந்தாலும் மேற்புறம் மட்டும் சிறிதளவு மூடப்படாமல் திறந்தே கிடந்ததால் வானை நன்றாகப் பார்க்க முடிந்தது. உள்ளேயிருந்த ஒரு சிறு



அலங்காரக் கட்டிலில் இளவழுதி ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த வண்ணம் படுத்துக்கிடந்தான். அழகுக்கே இலக்கணம் போன்ற அழகியொருத்தி இளவழுதியின் பக்கத்தில் உட்கார்ந்து கையில் இருந்த ஒரு தங்கக் கிண்ணத்திலிருந்து இளவழுதியின் வாயில் ஏதோ புகட்ட முயன்று அவன் வாயைத் திறக்காததால் மூக்கைப் பிடித்து அவன் வாயைத் திறக்கும்படி செய்ய முயன்று கொண்டிருந்தாள். அவன் வாயைத் திறக்க மறுத்து இருபுறமும் தலையை ஆட்டியதால் அந்த வாயைக் கிழிக்க மெல்லிய கத்தியை எடுத்த சற்று எட்ட நின்றிருந்த ஒரு அராபியன் ''அரசி! அஞ்சாதே, அவன் வாயைக் கத்தியால் காதுவரை கிழித்து விடுகிறேன். அப்பொழுது பக்கவாட்டில் நீ அந்த மருந்தைப் புகட்டிவிடலாம்'' என்று கூறிக் கொண்டு அலங்காரக் கட்டிலை நெருங்க ஒரு அடி எடுத்து வைத்தான்.

''நில் அப்படியே! அடுத்த அடி எடுத்து வைத்தால் பிணமாகி விடுவாய்'' என்று வாயிற்படியில் நின்ற வண்ணமே பெருவழுதி அதட்டியதும் அந்த அறையிலிருந்த அந்தப் பெண்ணும் அராபியனும் ஒரே சமயத்தில் முதியவனை நோக்கித் திரும்பினாலும் இருவரும் அச்சத்தைச் சிறிதும் காட்டினார்கள் இல்லை. அந்த அறையிலிருந்த மூவரில் கட்டிலிலிருந்த அரசி என்று அழைக்கப்பட்டவள் எழுந்திருந்தாளேயொழிய இளவழுதி எழுந்திருக்காமல் கட்டிலில் உணர்ச்சி ஏதுமற்றுக் கிடந்ததைக் கண்ட முதியவன் ''என் பேரனை என்ன செய்தீர்கள்?'' என்று வினவினான்.

கட்டிலின் பக்கத்தில் சலனமற்று நின்றிருந்த அந்தப் பெண் முதியவனை ஏதோ ஒரு மிருகத்தைப் பார்ப்பது போல் பார்த்தாள். ''நீ யார்? எதற்காக இங்கு வந்தாய்?'' என்று வினவினாள் அதிகாரம் பெரிதும் ஒலித்த குரலில்.

கிழவன் உடனடியாகப் பதில் சொல்லாமல் அவளை ஏற இறங்கப் பார்த்தான். அன்று வரை அவன் கண்டிராத பேரழகு

அவன் முன்பு நின்று கொண்டிருந்தது. மிக மெல்லிய உடலில் மலரின் மென்மையும் இருந்தது. இரும்பின் கடினமும் தெரிந்தது. அத்தகைய உடலில் கண்ணுக்குத் திட்டமாகப் புலப்படாத அளவுக்கு அவள் இடை சிறுத்துக் கிடந்தது. அவள் வெளேரென்று அணிந்திருந்த மெல்லிய மஸ்லின் உடையின் மத்தியில் கட்டப்பட்டிருந்த நீண்ட வெண்மைக் கயிறு ஒன்றுதான் அவளுக்கு இடையும் உண்டு என்பதைப் புலப்படுத்தியது. அந்த மெல்லிய உடைக்குள் அவள் உடல் பூராவும் தெரிந்ததால் மாசு மருவற்ற அந்த வழவழப்பையும், அழகையும் கண்ட பெருவழுதி பிரமை பிடித்து நின்றான். அவள் கால்கள் சந்தன மரத்தால் கடைந்ததைப் போல் அழகாகவும் தேவையான வளைவுகளுடனும் அனாவசி சதைப்பற்று இல்லாமலும் அளவோடு அமைந்திருந்ததால் அவள் நின்றது ஏதோ பதுமை நிற்பது போன்ற பிரமையைக் கொடுத்தது. அவள் மெல்லிய கழுத்தும் மார்பின் சிறு மொட்டுகளும் அவள் அழகை ஆயிரம் மடங்கு உயர்த்திக் காட்டின. இத்தனைக்கும் மேலாக அவள் கரிய குழலின் அடர்த்தியும், நெற்றிக்கு நேரே தலையில் எடுக்கப்பட்டிருந்த நடுவகிடும் அவளை ஒரு அற்புத சிற்பச் சிலையாக அடித்திருந்தது. அந்த நடுவகிடில் பதிந்த மெல்லிய சங்கிலியின் முகப்பில் இருந்த பெரிய வைரமொன்று அவள் வதனத்தில் படிந்து நெற்றிக்கு ஒரு திலகமாக அமைந்திருந்தது. அந்த வைரம் அத்தனை இருட்டிலும் ஜொலித்தது. அவள் நெற்றியில் ஒரு விளக்கு ஏற்றி வைத்தது போல் காட்சியளித்தது. ஆனால் அந்த வைரத்தைவிட பளபளத்த இரு கண்களின் கருமணிகளும் நல்ல தீட்சண்யத்தையும், வீட்சண்யத்தையும் பெற்றிருந்தன. மொத்தத்தில் அந்த அழகு மானிட அழகாகத் தென்படவில்லை. ஏதோ தெய்வமொன்று எதிரில் நிற்பது போலப் புலப்பட்டதாலும் அவள் விழிகளிலிருந்து கிளம்பிய பார்வை தனது இதயத்தை ஊடுருவுவது போல் தெரிந்ததாலும் செயலற்று நின்றுவிட்டான் பெருவழுதி.



அந்தக் கிழவன் தன்னைத் துருவிப் பார்ப்பதைப் பற்றி எவ்வித கவலையோ, பெருமிதமோ, வியப்போ, கோபமோ கொள்ளாமல் நின்றபடியே நின்ற அந்த யுவதி ''நான் ஏற்கனவே உன்னைக் கேள்வியொன்று கேட்டேன்'' என்றாள்.

முதியவன் அவளையும் அராபியனையும் நோக்கி ''பதில் அவனுக்குத் தெரியும். அவனையே கேள்'' என்று அராபியனைக் காட்டினான்.

அந்த சமயத்தில் இடைமறிக்க முற்பட்ட அராபியன் ''எனக்கு தமிழ் தெரியும், அரசிக்கும் தெரியும்'' என்றான்.

''அதனாலென்ன?'' என்று விசாரித்தான் முதியவன்.

''அரசியை மரியாதைக் குறைவாகப் பேசுவதற்கு எங்கள் நாட்டில் மரண தண்டனை உண்டு'' என்றான் அராபியன்.

''நீ இப்பொழுது உனது நாட்டில் இல்லை. தமிழ் நாட்டில் இருக்கிறாய்.'' என்று சுட்டிக் காட்டினான் கிழவன்.

''இங்கும் அந்தத் தண்டனையை விதிக்கவும் நிறைவேற்றவும் முடியும். மரண தண்டனையைவிடக் கடுமையானவை'' என்றான் அராபியன்.

கிழவன் சினமும் இகழ்ச்சியும் கலந்த புன்முறுவலொன்றைப் படரவிட்டான். ''நீங்கள் குரூரம் மிகுந்த இனமென்பது புரிகிறது. ஆனால் எங்கள் நாட்டு தண்டனை முறைகள் உனக்குத் தெரியாது. உன்னைக் கழுவேற்றுவோம். இல்லை, கோதண்டத்தில் கட்டி அடிப்போம். இந்தத் தண்டனைகளைவிட மரணம் பெரிதென்று மரணத்தை விரும்பியவர்கள் உண்டு'' என்றான் முதியவன் புன்முறுவலின் ஊடே.

அதுவரை பேசாமல் நின்ற அந்த அரபுச்சிலை ''ஊனைப் பற்றிய தண்டனைகளைக் குறிப்பிடுகிறாய் கிழவா. உயிரைப்

பற்றிய. உணர்ச்சிகளைப் பற்றிய தண்டனைகள் தெரியாது உனக்கு. இப்படி வா. உன் பேரனைப் பார்'' என்று கூறிய அரபுச்சிலை கட்டிலின் பக்கத்திலிருந்து விலகி இளவழுதியின் தலைமாட்டில் நின்றாள். நின்றதும் சற்றுக் குனிந்து அவன் விழிகளைத் தனது விழிகளால் ஊன்றிக் கவனித்தாள். பிறகு அவனைப் பார்த்துப் புன்முறுவல் காட்டினாள். அந்த அரபு அழகியின் கட்டளைப்படி கட்டிலின் அருகே வந்த முதியவன் பெருவழுதி தனது பேரனை அழைத்தான் ''அரையா!'' என்று.

அரையன் இளவழுதி தனது பாட்டனைப் பார்க்க முயலவும் இல்லை. விழித்த அவன் விழிகள் ஆகாயத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தன. அப்பொழுது கேட்டாள் அரபுச்சிலை ''அன்பரே! வானம் எப்படியிருக்கிறது?'' என்று.

''ஜகஜ்ஜோதியாயிருக்கிறது'' மெதுவாகவே வந்தது இளவழுதியின் பதில்.

''மதியில்லையே, எப்படி ஜகஜ்ஜோதியாயிருக்க முடியும்?'' என்று அன்பு மிதமிஞ்சிய குரலில் வினவினாள் அரசி.

இளவழுதியின் இதழ்களில் இளநகை அரும்பியது. ''மதி அங்கு எப்படி இருக்கும். அதுதான் உன் முகத்தில் இணைந்து விட்டதே?'' என்றான் இளவழுதி. இதைச் சொன்ன அடுத்த கணம் அவன் இதழிலிருந்த முறுவல் மறைந்தது. உதடுகள் மீண்டும் திறந்து சொற்களை உதிர்த்தன. ''அரசி! வானத்தில் மதியில்லாமல் இருந்தால் என்ன? வானம் பெரிய கறுப்புக் கம்பளி. அதில் நக்ஷத்திர வைரங்கள் இறைந்து விடப்பட்டிருக்கின்றன. அதோ இரண்டு நக்ஷத்திரங்கள் ஒன்றை நோக்கி ஒன்று நகர்ந்து வருகின்றன. அவற்றுக்குத் தலைகள் மட்டும் இருக்கின்றன. உன் தலை ஒன்று. என் தலை ஒன்று. இரண்டும் இணைந்து விட்டன'' என்று தொடர்ந்து பேசினான்.



அவன் தலைமாட்டில் நின்ற அந்த அழகியின் கண்களில் திடீரென ஒளியொன்று தெரிந்தது.

பேரன் பேச்சையும் அவன் நிலையையும் பார்த்துக் கொண்டே நின்ற கிழவன், அரையன் மந்திரத்தால் கட்டுண்டு கிடப்பவன் போல் அசையாமல் கிடப்பதைக் கண்டான். அவன் ஏதோ போதையில் இருப்பது போலவும் தெரிந்தது. அந்தச் சமயத்தில் திடீரென தனது கையை நீட்டிய அந்த அரபுச் சிலை அராபியன் கொடுத்த கிண்ணத்திலிருந்த மருந்து போன்ற மதுவை மீண்டும் இளவழுதிக்குப் புகட்ட முயன்றாள். தன் கன்னத்தை அவன் கன்னத்தோடு இழைத்த வண்ணம் உதடுகளில் தங்கக் கிண்ணத்தைப் பொருத்தினாள்.

அந்த விபரீதம் அப்பொழுதும் நடந்தது. கிறீச்சென்று இளவழுதி மீண்டும் அலறினான். அரபுச்சிலை மிகுந்த கோபத்துடன் எழுந்தாள் கையில் பொற்கிண்ணத்துடன். ஆனால் இம்முறை விளைந்த விபரீதம் வேறு. கிழவன் தனது நீண்ட கையால் அவள் கையிலிருந்த கிண்ணத்தைத் தட்டிவிட்டான். அடுத்து அராபியன் மீது பாய்ந்து அவன் கையைத் திருகி அவன் கையிலிருந்த மெல்லிய கத்தியையும் மரக்கலத்தட்டில் விழும்படி செய்தான். அடுத்து தனது குறுவாளை எடுத்துக் கொண்டு ''அரசி! என் பேரனை மரியாதையாக விட்டுவிடு. உன் மரக்கலத்தை யாரும் தடை செய்யாதவாறு பார்த்துக் கொள்கிறேன். வேண்டுமானால் உன் மரக்கலத்தைச் செலுத்த துடுப்புத் துழாவும் பரதவர்களில் சிலரையும் அனுப்புகிறேன். நீயும் இந்த அராபியனும் தன்னந்தனியாகப் போக வேண்டாம்'' என்றான்.

பதிலுக்கு நகைத்தாள் அரசி. முதியவன் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்பட்டதால் திகைத்தான் பெருவழுதி. மரக்கலம் வெகுவிரைவாக முன்னேற ஆரம்பித்தது. பக்கங்களில் சுமார் நூறு துடுப்புகள் துழாவும் சத்தம் கேட்டது. பெரும் பிரமை பிடித்த பெருவழுதி வெளியே ஓடிப் பக்கப் பலகையில் தலை நீட்டி

சமுத்திர நீர்மட்டத்தைக் கவனித்தான். துடுப்புகள் பல வேகமாகத் துழாவின, கடல்நீரை. ஆனால் துழாவும் மாலுமிகள் யாருமே இல்லை. திரும்ப திகிலுடன் பெருவழுதி அறையை நோக்கி ஓடினான். அறையில் யாருமே இல்லை. மரக்கலம் மட்டும் துடுப்புகள் துழாவ பாய் புடைத்திருக்க வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த அறைக்குள் அராபியன் வந்தான். ''முதியவரே! நீரும் சற்று இளைப்பாறும்'' என்று கட்டிலைக் காட்டினான்.

''உங்களுடன் வர எனக்கு இஷ்டமில்லை'' என்றான் முதியவன்.

''உமது இஷ்டம் எனது இஷ்டம் என்பது இந்த மரக்கலத்தில் எதுவும் கிடையாது'' என்றான் அராபியன்.

''வேறு யார் இஷ்டம்?''

''அரசியின் இஷ்டம்''

''எனக்கு அவள் அரசியல்ல.''

''இந்த மரக்கலத்தில் இருக்கும் எல்லோருக்கும் அவள்தான் அரசி.''

''நான் இஷ்டப்பட்டால் இங்கிருந்தே சைகை செய்து மற்ற மரக்கலங்களை அழைத்து இதைச் சூழ்ந்து கொள்ளச் செய்ய முடியும்'' என்று உஷ்ணத்துடன் பேசினான் கிழவன்.

அராபியன் நகைத்தான். ''முடிந்தால் முயன்று பாரும்'' என்று கூறி மரக்கலத்தின் இன்னொரு மூலைக்கு நடந்து விட்டான்.

முதியவன் சில விநாடிகள் அறையில் தங்கிவிட்டு வெளியே வந்து வானத்தை நோக்கினான். நக்ஷத்திரங்களைக் கணக்கிட்டு மூன்றாவது ஜாமம் நெருங்கி விட்டதை உணர்ந்தான்.



அப்பொழுது மீண்டும் இளவழுதியின் ஒலி கேட்டது. அது பயங்கர ஒலியல்ல. மகிழ்ச்சி ஒலி. வெறிபிடித்தவன் சிரிப்பைப் போன்ற ஒலி மரக்கலத்தின் அமைதியை ஊடுருவியது. பிறகு யாரோ இருவர் தடதடவென்று ஓடும் ஓசை கேட்டது. சுற்று முற்றும் பார்த்தான் முதியவன். எங்கும் யாரும் தெரியவில்லை. தனக்கே பைத்தியம் பிடித்து விட்டதோ என்று ஒரு விநாடி நினைத்தான். ''எப்படியும் இந்தக் கப்பலின் சூட்சமத்தைக் கண்டுபிடித்து விடுகிறேன். அந்த சூன்யக்காரியின் மந்திரத்துக்கும் முடிவு கட்டுகிறேன்'' என்று கூறிக் கொண்டு இரண்டடி தளத்தில் எடுத்து வைத்தான். மூன்றாவது அடி அவன் எடுத்து வைக்கவில்லை. திடீரென தான் கடல் பிரவாகத்தில் சிக்கிக் கொண்ட பிரமை ஏற்பட்டது. ''ஐயோ!'' என்று பெரும் திகிலால் அலறினான் கிழவன்.

# 3. இளவழுதி

மரக்கலத்தின் தளத்தில் இரண்டு அடிகள் எடுத்து வைத்ததுமே தான் ஏதோ கீழே இழுக்கப்பட்டு சரிவது போன்ற பிரமை ஏற்படவே அதற்குக் காரணம் ஏதும் கற்பிக்க முடியாத நிலையில், தனது சரிவைச் சரிக்கட்ட தளத்தின் பக்கக் கட்டை ஒன்றைப் பிடித்த பிறகும் திடீரென தான் கடலின் நீர்மட்டத்துக்கு வந்துவிட்டதையும், கடலின் வேகம் தன்னை மேலும் கீழே இழுக்கமுற்பட்டதையும் கண்ட முதியவனான பெருவழுதி பெரும் திகில்பட்டுக் கதறினானென்றால் அதற்கு அவன் துணிவுக் குறைவு காரணமல்ல. மரக்கலத்தின் அடித்தளத்தில் துளை ஒன்று ஏற்பட்டாலும் மரக்கலம் அமிழ்ந்து விடுமாதலாலும், அத்துடன் தனது குடும்பத்தின் ஒரே சந்ததியான தன் பேரனும் அமிழ்ந்து விடுவானே என்ற அச்சத்தாலும், அப்பொழுதும் அவன் எந்தக் கதிக்கு உள்ளாகிவிட்டானோ என்ற பாசபந்தத்தாலுமே கிழவன் அலறினான். ஆனாலும் அடுத்தமுறை குரல் கொடுக்கவோ அலறவோ தன்னால் முடியவில்லை யென்பதையும், தன் தொண்டை திடீரென அடைத்து விட்டதையும் உணர்ந்த பெருவழுதி சட்டென்று நினைவிழந்து விட்டான்.

எத்தனை நேரம் அவன் அப்படி நினைவிழந்து கிடந்தானோ அவனுக்கே புரியவில்லை. நினைவு வந்து கண்விழித்தபோது, தான் முதல் நாள் கண்டதெல்லாம் கனவா நனவா என்பதை உணர்ந்து கொள்ள கால்களை முடக்கி அவற்றை தனது கைகளால் தடவினான். அதில் நீர் ஏதும் இல்லாததையும், தனது கால்கள் ஏதோ மரக்கட்டையில் நீண்டிருப்பதையும் உணர்ந்து, முதுகை ஒருமுறை புரட்டி முதுகு மெத்தென்ற பஞ்சணையில் இருப்பதை அறிந்து சிறிது நேரம் மிரள மிரள விழித்தவன், பொழுது நன்றாக விடிந்து விட்டதையும், இரண்டு பறவைகள் தனக்கு அருகில் உட்கார்ந்திருப்பதையும், அந்த இரண்டும் கழுகுகள் என்பதையும்



புரிந்து கொண்டதால் மரக்கலத்திலிருந்து கரை அதிக தூரத்தி லில்லை என்பதைப் புரிந்து கொண்டான். தான் இறந்தால் தன்னைக் கொத்தி பட்சணம் செய்யவே அந்தக் கழுகுகள் உட்கார்ந்திருக்க வேண்டுமென்றும், அத்தகைய மரணக்கோலத்தில் தான் இருந்திருக்க வேண்டுமென்றும் ஊகித்தான் பெருவழுதி. எல்லாம் இருக்க தன்னை ஒழிக்கத் தீர்மானித்தவர்கள் தன்னை நல்ல பஞ்சணையில் படுக்க வைக்க வேண்டிய அவசியமென்ன வென்றும் எண்ணிப் பார்த்து, பஞ்சணை அளித்தவர்கள் காலுக்கு எதற்காக மரக்கட்டையை முட்டுக் கொடுத்தார்கள் என்பது புரியாததால் மேலும் வீணான சர்ச்சையில் ஈடுபட்டு மனத்தைக் குழப்பிக் கொள்ளாமல் அடுத்து நடப்பது என்ன என்பதை உணர பேசாமலே படுத்துக் கிடந்தான்.

அப்படிப் படுத்து அவன் மீண்டும் கண்ணை மூடிக் கொண்ட சமயத்தில் யாரோ நாலைந்து பேர் தன்னைச் சுற்றி நடமாடுவதைப் புரிந்து கொண்டதால், ''இந்த மரக்கலத்தில்தான் யாருமே கிடையாதே, அப்படியிருக்க ஏது இத்தனை பேர் நடமாட்டம்? ஆட்கள் நடமாட்டந்தானா இல்லை எனது மனப்பிரமையா?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டும் விடை காணாததால், ''சரி நடக்கிறது நடக்கட்டும்'' என்று உதடுகளில் மெதுவாக முணுமுணுக்கவும் செய்தான். அப்பொழுது சுற்றிலும் நடமாடிய மனிதர்களில் ஒருவன் ''கிழவன் சாகவில்லை'' என்று அறிவித்தான்.

''ஆம். அவன் உதடுகளும் அசைகின்றன'' என்று இன்னொருவன் சுட்டிக்காட்டினான்.

''எதற்கும் இவன் உயிருடனிருப்பதைத் தலைவிக்கு தெரியப்படுத்துவோம்'' என்று முதலில் பேசியவன் கூறியதும் இருவரும் நடந்து செல்லும் காலரவம் தெளிவாக விழுந்தது பெருவழுதியின் செவிகளில்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. அந்த இருவரும் பேசிவிட்டுப் போனதும் யாருமே வராதிருக்கவே மெள்ள தலையை இருபுறமும் அசைத்து நோக்கிய பெருவழுதி தனது காலடியில் மரக்கலத்தின் பாய்மரத்தின் தண்டு உராய்ந்திருப்பதையும், பாயும் புடைத்து மரக்கலத்தை வேகத்துடன் இழுத்துச் செல்வதையும் உணர்ந்தான். பிறகு மெள்ளச் சமாளித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து சூழ்நிலையை நோக்கினான். மேல்திசையில் கடல் பரந்து கிடப்பதையும், கீழ்த்திசையில் பெரும் மலைத் தொடர் தெரிந்ததையும் பார்த்து, கூடியவரை அந்த மர்ம மரக்கலம் கரையை அணைத்தே ஓடுவதையும் புரிந்து கொண்டதால் சிறிது ஆறுதலும் அடைந்தான். சேர நாட்டுக் கடற்கரை நெடுகிலும் பாதுகாப்பு இருந்ததாலும், வெளிநாடுகளிலிருந்து வரும் மரக்கலங்கள் தப்பித்தவறி துறைமுகம் இல்லாத பகுதிகளில் அகப்பட்டுக் கொள்வதைத் தவிர்க்க சேர நாட்டு மன்னர்கள் மேலைக் கடற்கரையில் அடுத்தடுத்து காவற்கூடங்களையும், மலையுச்சிகளில் பார்வைக் கூடங்களையும் அமைத்திருந்ததாலும், எப்படியும் யார் கண்ணிலாவது இந்த மரக்கலம் அகப்பட்டுக் கொள்ளுமென்று திட்டமாக நம்பிய பெருவழுதி, சேர நாட்டுக் காவலர் அந்த மரக்கலத்தை வளைத்து சோதனை செய்வார்களென்பதைத் தீர்மானமாக நம்பி பழைய மனத்திடத்தை மீண்டும் அடைந்தான்.

அந்தத் திடத்தின் காரணமாக மரக்கலம் அணைத்து ஓடும் கரை எதுவென்பதை நிர்ணயிக்க சற்று எழுந்தும் நின்றான். அப்பொழுது மெதுவாகக் காலைக் கதிரவனும் மேற்குத் தொடர் மலையின் உச்சிகளையும் தாவி தனது கிரணங்களை வீச முற்படவே பகல் நன்றாக ஏறிவிட்டதை உணர்ந்த பெருவழுதி இருமுறை தளத்தில் நடந்து மலையை உற்று நோக்கி சேரநாட்டு கடற்கரைக்கு தாங்கள் அருகாமையில் இருப்பதை உணர்ந்ததால் எப்படியும் ஏதாவது இரவில் சைகை செய்து சேரநாட்டுக் காவலரை மரக்கலத்துக்கு



அழைக்கலாமென்று திட்டமும் இட்டான். அத்தகைய எண்ணங்களுடன் அந்த மரக்கலத்தை நன்றாக ஆராயவும், இளவழுதியுடன் எப்படியும் தனிமையில் உரையாடவும் இடம் காலம் அறிய மரக்கலத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினான்.

முதல் நாளிரவு தான் பார்த்த மரக்கலத்துக்கு முற்றும் மாறாயிருந்தது அன்று காலையில் அவன் கண்ட மரக்கலம். யவனர் மரக்கலங்களைப் போல் இரண்டு தளங்களைக் கொண்டிருந்த அந்த மரக்கலத்தின் அடித்தளத்துக்குச் செல்ல தனிப்படிகள் இருந்ததையும், மேல் தளமும் உறுதியான கட்டைகளாலும் வைரம் பாய்ந்த மரப்பலகைகளாலும் இணைக்கப்பட்டு பெரும் போரையும் தாங்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தான். இவை தவிர சேர நாட்டுக் கோட்டைப் பாதுகாப்புக்கு யவனர்கள் சித்தம் செய்த யந்திரங்களைப் போல் இரண்டு யந்திரங்களும் தளத்துப் பலகைகளுக்கு அருகில் இருபுறத்திலும் பொருத்தப்பட்டிருந்ததையும் கிழவன் கண்டான்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டும் எடைபோட்டுக் கொண்டும் நடந்த பெருவழுதி தளத்திலிருந்து அடித்தளத்துக்கு இறங்கிச் சென்றான். அடித்தளத்தில் துடுப்புகளைத் துழாவ பல அடிமைகள் இருந்ததையும், அவர்கள் தப்பாதிருக்க சங்கிலிகளால் அவர்கள் வரிசையாகப் பிணைக்கப்பட்டிருப்பதையும் பார்த்து, முந்திய இரவில் இவர்கள் எங்கு போனார்கள் என்று சிந்தித்தான். மெள்ள அவர்களுடன் பேச்சுக் கொடுக்க முற்பட்டு, "மாலுமிகளே! நீங்கள் ஏன் இப்படி அடிமைத்தொழில் செய்ய வேண்டும்?" என்று வினவினான்.

பதிலுக்கு அந்த மாலுமிகள் கொல்லென்று சிரித்தார்கள். அந்தச் சிரிப்பை அடுத்து அரசி பெருவழுதியைத் தள்ளிக் கொண்டு துடுப்பு துழாவும் மாலுமிகளிடம் சென்று இருபுறமும் தனது

கைகளை நீட்டினாள். இருபுறத்திலுமிருந்த மாலுமிகள் அவள் கைகளில் தங்கள் உதடுகளைப் புதைத்து முத்தம் கொடுத்தார்கள். அப்படிக் கைகளை நீட்டிக் கொண்டே கடைசிவரை சென்ற அரசி திரும்பி அவர்கள் தலைகளில் தனது கைகளை வைத்து வாயில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே திரும்பினாள். திரும்பி வந்தபோது அவள் பெருவழுதியை ஏறெடுத்தும் பாராமல் கீழ்த்தளத்திலிருந்து மேல்தளத்துப் படிகளில் ஏறிச் சென்றுவிட்டாள்.

இந்த அதிசயத்தைக் கண்ட பெருவழுதி அவளைத்தானும் தொடர்ந்து படிகளில் ஏறிச் சென்றான். மேல் தளத்து மாலுமிகளும் அவளைக் கண்டதும் தலைவணங்கி அவள் கைகளில் உதடுகளைப் புதைத்தார்கள். இத்தனைக்கும் அவர்கள் யாரும் பெருவழுதியைப் பார்க்கவோ பேசவோ இல்லை. பெருவழுதியென்ற ஒருவன் அங்கு நடமாடாததுபோலவே அனைவரும் நடந்து கொண்டதால், சிறிது சினத்தின் வசப்பட்டு, "நான் ஒரு மனிதன் உங்களிடை உலாவுகிறேன்" என்று இரைந்தான் முதியவனான பெருவழுதி.

அவனுக்கு யாருமே பதில் சொல்லாமல் அவனைப் பார்த்து மிகுந்த மேட்டிமையுடன் புன்முறுவல் செய்தார்கள். அவர்களில் தலைவனைப் போல் காணப்பட்ட ஒருவன் மட்டும் பக்கப் பலகையில் சாய்ந்து நின்ற வண்ணம், "பெரியவரே! உமக்கு என்ன வேண்டும்?" என்று விசாரித்தான். அவன் தமிழ் பரம சுத்தமாயிருந்ததைக் கண்ட பெருவழுதி வியப்பிற்குள்ளாகி, "நீ தமிழனா?" என்று கேள்வியொன்றைத் தொடுத்தான்.

"ஆம்" - எந்தவித உணர்ச்சியுமில்லாமல் பதில் வந்தது அந்த மனிதனிடமிருந்து.

"மற்றவர்?"



"பாதிப்பேர் தமிழர், பாதிப்பேர் வெளிநாட்டார். ஆனால் அனைவருக்கும் தமிழ் தெரியும்."

"எதற்காகத் தமிழ் பயின்றீர்கள்?"

"அரசி உத்தரவு"

"எந்த அரசி இப்பொழுது போனாளே..." என்று துவங்கிய சொற்களை முடிக்கவில்லை கிழவன், அந்த மனிதன் ஒரே பாய்ச்சலாக அவன் மீது பாய்ந்து கழுத்தை இறுகப் பிடித்தான். கிழவன் மூச்சுத் திணறினாலும் அத்துடன் கேட்டான். "நான் என்ன குற்றம் செய்தேன் நீ கழுத்தைப் பிடிக்க?" என்று.

"அரசியை அவள் என்று அவமரியாதையாகப் பேசினாய். உன்னை இப்பொழுதே கடலில் எறிந்து விடுகிறேன்" என்று மேலும் கழுத்தை இறுக்கினான், கழுத்தைப் பிடித்தவன்.

ஆனால் பெருவழுதியின் வலிமை அவனுக்குப் புரியாததால், பெருவழுதி மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒருமுறை திமிறியதும் அந்த மனிதன் தளத்தில் சாய்ந்தான். அடுத்துப் பெருவழுதி மீது ஒரே சமயத்தில் பலர் பாய்ந்து அவனைக் கீழே தள்ளினார்கள். ஒரு மாலுமி தனது நீண்ட கத்தியை எடுத்து பெருவழுதியின் தலைக்கு உடலிலிருந்து விடுதலையளிக்க ஓங்கினான். தனது ஆயுள் முடிந்துவிட்டதென்றே கருதினான் பெருவழுதி. ஆனால் கத்தி கீழே இறங்கவில்லை. அவனைத் தள்ளிய மாலுமிகள் சட்டென்று விலகி நின்றார்கள். பெருவழுதி மெள்ளச் சமாளித்துக் கொண்டு தனது திடீர் விடுதலைக்குக் காரணத்தைத் தேட சுற்று முற்றும் பார்த்தான்.

தளத்தின் நடுப் பாய்மரத்தினருகே அரசி நின்றிருந்தாள். அவள் இடையை இடது கையால் அணைத்த வண்ணம் நின்றிருந்தான் இளவழுதி. அவன் கண்கள் சுற்றிலுமிருந்த மாலுமிகளைக் கடுமையாக நோக்கிவிட்டு பெருவழுதி மீது நிலைத்தன. "இவர்

என்ன குற்றம் செய்தார்?'' என்ற கேள்வியொன்றையும் சினத்துடன் வீசினான் இளவழுதி.

''அரசியை அவமதித்துப் பேசினார்'' என்றார் தலைவனாகக் காணப்பட்ட மாலுமி.

அதற்குமேல் அவன் விசாரிக்கும் முன்பு ''மகனே! இளவழுதி!'' என்று கூவிக் கொண்டு பேரனை நெருங்க முயன்றார் பெருவழுதி.

தனது வலது கையை உயர்த்தி அவரை இருந்த இடத்திலேயே நிற்கும்படி சைகை செய்த இளவழுதி, ''பெரியவரே! நீர் யார்? இங்கு எதற்காக வந்தீர்?'' என்று வினவினான்.



# 4. எச்சரிக்கை

இளவழுதியின் கேள்விகளைக் காதில் வாங்கியதும், 'திகைப்பு' என்ற சொல்லுக்குப் பொருள் ஏதாவது உண்டானால் அந்தப் பொருளுக்கு இலக்கணமாக விளங்கிய பெருவழுதி, பேரனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து பல விநாடிகள் சிந்தனை வசப்பட்டு நின்றான். தனக்கு முன்பு தனது பேரன் மட்டு மரியாதையோ வெட்கமோ இல்லாமல் அந்த அரபு நாட்டுப் பெண்ணின் இடையை அணைத்தது அணைத்தபடியே நின்றதையும், தான் பார்த்த பிறகும் அவளை விட்டு விலகுவதற்குப் பதிலாக அவள் இடையை நன்றாக இழுத்து இணைய வைத்துக் கொண்டதையும் கவனித்த பெருவழுதி, இதில் ஏதோ தனக்குப் புரியாத மர்மமிருப்பதை உணர்ந்து கொண்டதால் அதை உடைக்கத் தீர்மானித்து, ''இளவழுதி, என்னை நன்றாக உற்றுப்பார். நான் யாரென்று உனக்குத் தெரியவில்லை?'' என்று சொற்களைத் தழுதழுத்த குரலில் உதிர்த்தான்.

இதற்கு உடனே பதில் சொல்லாத இளவழுதி முதியவனைக் கூர்ந்து கவனித்துவிட்டு உதடுகளைத் தானாகவே அசைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த பெண்ணை நோக்கித் திரும்பி, ''அரசி! இவரை நீ ஏற்கனவே பார்த்திருக்கிறாயா?'' என்று வினவினான்.

பேரன் தனக்கு பதில் சொல்லாமல் தன்னைப் பற்றி அந்தப் பெண்ணிடம் விசாரித்ததால் சற்று சினத்தின் வசப்பட்டு, ''டேய் இளவழுதி! என்னை யாரென்று அவளைக் கேட்டுத்தான் நீ தெரிந்து கொள்ள வேண்டுமா?'' என்று குரலிலும் சீற்றத்தைக் காட்டிக் கேட்டான்.

அந்தச் சீற்றத்தைக் கண்ட இளவழுதி பதிலுக்கு சீற்றத்தைக் காட்டவும் இல்லை. நேரிடையாகப் பதில் சொல்லவும் இல்லை. அனுதாபம் நிறைந்த விழிகளை முதியவன் மீது சில விநாடிகள்

நிலைக்கவிட்டு பிறகு அரசியை நோக்கி, ''பாவம்! இவருக்கு ஏதோ பெரிய அதிர்ச்சியால் மூளை கலங்கியிருக்கிறது. இவரை ஜாக்கிரதையாகப் பார்த்து இன்றிரவு வடகரையில் இறக்கி விடுவோம்'' என்று கூறினான். அதை ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாக அரசியும் தலையை அசைத்தாள்.

இளவழுதியின் இத்தகைய மாற்றத்தினாலும் பெருவழுதி அசைந்தானில்லை. தனது பேரன் கண்களில் ஏதோ விவரம் புரியாத சலனமிருப்பதையும் அவன் எதற்கு எடுத்தாலும் அரசியை விளக்கம் கேட்பதையும் கண்டு ஏதோ பெரிய வசியமருந்து பேரனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டதாலும், தான் எதிர்ப்பையோ, உண்மையை உணர்ந்து கொண்டதையோ வெளிப்படுத்தினால் இளவழுதியின் நிலைமையும், தனது நிலைமையும் மிகக் கேவலமாகி விடுமென்பதையும் புரிந்து கொண்டதால் பெருவழுதியும் நாடகமாடத் துவங்கி, ''அப்பா! நீ என் பேரனைப் போலவே இருக்கிறாய். அதனால்தான் ஏமாந்து போனேன்'' என்று தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு, ''ஆமாம் அரசி! நான் எப்படி இந்த மரக்கலத்துக்கு வந்தேன்? எப்பொழுது வந்தேன்? வந்தபோது எப்படி இருந்தேன்?'' என்று அரசியை நோக்கி மிகுந்த பணிவுடனும் ஏதும் அறியாதவன் போலும் கேட்டான்.

அப்பொழுது காலைக் கதிரவின் மேற்கு மலைத்தொடரின் உச்சியில் காணப்பட்டு கிரணங்களை மெதுவாகக் கடல் மீதும் பாய்ச்சியதால், அரசியின் நெற்றியில் தவழ்ந்திருந்த வைரம் பெரிதாக ஒளிவீசி அவள் நெற்றியிலும் ஒரு சிறிய சூரியன் உதயமானது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. அவள் கண்களும் அந்த வைரம் போலவே ஒளிவிட்டதாலும், அந்த ஒளிகூட கருமை விழிகளிலிருந்து வருவது போலவும், ஆழ்ந்த கருங்கடலையும் துளைத்துக் கொண்டு வரும் தெய்வீக ஒளி போலவும் காணப்பட்டதால் அந்தக் கண்கள் யாரையும்



அடிமைகொள்ளும் சக்தி வாய்ந்ததாக இருந்ததைப் பெருவழுதி கண்டான். அந்தக் கண்கள் தன் கண்களில் ஊடுருவி தனது ஆத்மாவைத் துருவிப் பார்ப்பது போலும், தனக்கு மயக்கம் தருவது போலும் இருந்ததை உணர்ந்த பெருவழுதி அவற்றைச் சந்திக்கமாட்டாமல் தனது கண்களை மேற்குத் தொடர்ச்சி மலைகளை நோக்கித் திருப்பினான். ஆனால் மீண்டும் மீண்டும் அவள் கண்கள் தனது கண்களை இழுப்பது போன்ற பிரமை ஏற்படவே மறுபடியும் அரசியைக் கவனித்த முதியவன் பெருவழுதி காலை வெயிலில் அவள் உடலும் வெண்ணிற உடையும் ஒளிபெற்று விளங்குவதைக் கண்டு, 'இந்தப் பெண் மானிடப் பிறவியல்ல' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

இத்தனைக்கும் அவள் சிறிதும் சலனமில்லாமல் இரு கால்களையும் குவித்து ஏதோ வெள்ளிப் பதுமை நிற்பது போலவே நின்றிருந்தாள். அவள் தேகத்தின் வெளுப்பை கன்னங்களில் தெரிந்த சிவப்புத் திட்டுகளும், உதடுகளின் குங்குமச் சிவப்பும் மிகைப்படுத்தினாலும், அனைத்தும் சேர்ந்து கரிய அவள் குழலுக்கு ஈடுகொடுத்து அவளை ஒரு தெய்வ மங்கையாகச் செய்திருந்தன. அவள் குழலும் மேற்கு மலைக் காற்றில் பெரிதாக விரிந்து பரந்து அவள் அழகிய முகத்துக்கு மயக்கமான கருத்த பின்னணியொன்றைச் சிருஷ்டித்ததையும் அந்தக் கரிய குழல்களை ஊடுருவிச்சென்ற கதிரவன் கிரணங்கள் அவற்றுக்கு மிகுந்த பளபளப்பை அளித்ததையும், அந்தப் பளபளப்பு கண்ணைப் பறிக்கும்படியாக அவள் பின்னால் சக்கர வட்டமாகப் பரந்த பிரமையை ஏற்படுத்தியதையும் கண்ட பெருவழுதி அவளை உற்று நோக்கியவண்ணம் தன் கேள்விகளுக்குப் பதிலை எதிர்பார்த்து மௌனமாக நின்றான்.

அவன் கேள்விகளுக்கு அவள் நீண்ட நேரம் பதிலேதும் சொல்லாமலே நின்றுவிட்டு பிறகு பக்கத்தில் நின்ற இளவழுதியை நோக்கி, ''இவர் கேள்விகளுக்கு ஏதாவது பதில் சொல்ல

முடியுமா?'' என்று வினவினாள்.

இளவழுதி பிரமை பிடித்த விழிகளை அவள் மீது திருப்பி ''உனக்குத் தெரியாதது எனக்கெப்படித் தெரியும்?'' என்று பதில் கேள்வி கேட்டான்.

இப்படி அந்த இருவரும் தன்னை அடியோடு தெரியாதது போலவும், புதிதாக அப்பொழுதுதான் பார்ப்பதுபோலவும் நடந்து கொண்ட விசித்திரத்தைத் தாங்கமுடியாததால் பெருவழுதி கேட்டான். ''அரசி! என்னை இப்பொழுது தான் முதல் முறையாகப் பார்க்கிறாயா?'' என்று.

அரசி பெருவழுதியை வியப்புடன் நோக்கினாள். ''வேறு எப்பொழுது பார்த்திருக்கிறேன்?'' என்று வினவினாள்.

பெருவழுதி அந்த முழுப் பொய்யைக் கேட்டு ருத்திராகாரமான கோபம் கொண்டாலும், கோபத்தைக் காட்ட அது சமயமல்ல என்ற எண்ணத்தால் தனது சினத்தை அடக்கிக் கொண்டு ''அரசி! நேற்றிரவு நாடகம் மறந்து விட்டதா உனக்கு?'' என்று வினவினான்.

அதுவரை• பேசாமலிருந்த இளவழுதி குறுக்கிட்டு, ''பெரியவரே! அரசியை மரியாதைக் குறைவாகப் பேச வேண்டாம். அவள் உயர்ந்த நிலை உங்களுக்குத் தெரியாது'' என்று எச்சரிக்கை தொனித்த குரலில் கூறினான்.

''உனக்கு அவள் உயர்வு தெரியும்?'' முதியவன் குரலில் வெறுப்பு இருந்தது.

''நன்றாகத் தெரியும்.''

''அவள்''

''அரசகுலத்தவள்...''

''எந்த நாட்டுக்கு?''





''நாட்டுக்கல்ல''

''என்ன?''

''அலைகளுக்கு அரசி''

''அலைகளுக்கு அரசியா?''

''ஆம்'' - இதைத் திட்டமாகச் சொன்னான் இளவழுதி.

பைத்தியம் தனக்குப் பிடித்திருக்கிறதா? இல்லை இளவழுதிக்குப் பிடித்திருக்கிறதா? என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான் பெருவழுதி. எதற்கும் முந்திய இரவு விவகாரங்களைப் பற்றிப் பேச்சைத் துவங்கி, ''இளவழுதி! நேற்றிரவு நீ மயங்கிக் கிடந்தாய் கட்டிலில். அரசியும் அந்த அராபியனும் உனக்கு ஏதோ மருந்து புகட்டத் தொடங்கினார்கள். நான் தலையிட்டிராவிட்டால் உன் வாயைக் கிழித்திருப்பார்கள்'' என்று கூறி ''சந்தேகமிருந்தால் அராபியனைக் கூப்பிடு'' என்றும் தெரிவித்தான்.

அரசி பதிலேதும் பேசாமல் மரக்கலத்தின் சுக்கானுக்கு அருகில் நின்றிருந்த அராபியனைக் கையால் சைகை காட்டி அழைத்தாள். நல்ல உயரத்துடனும் தலையில் பொருத்தப்பட்டு உடலில் இரு பக்கங்களிலும் காற்றில் அலைந்த படுதாவுடனும் நின்றிருந்த அராபியனும் அவள் அழைப்பை ஏற்று அருகில் வந்தவன் பெருவழுதியைச் சந்தேகத்துடன் பார்த்தான். பிறகு அரசி பக்கம் திரும்பி, ''அரசி! ஏன் அழைத்தீர்கள்? இவர் யார்?'' என்று வினவினான்.

''யாரோ தெரியவில்லை? உன்னைக் கூப்பிடச் சொன்னார்'' என்று ஏதுமறியாதவள்போல் பேசினாள்.

அராபியனும் பெருவழுதியை வியப்பு நிரம்பிய விழிகளுடன் பார்த்தான். ''இவரை எங்கோ பார்த்திருக்கிறேன்?'' என்று பழைய நினைப்பை வரவழைக்க இஷ்டப்படுபவன் போல் புருவத்தைச் சுளித்தான்.

''எங்கோ பார்த்திருக்கிறாயா? என் வீட்டுக்கு நீ வரவில்லை? என் பேரனை அழைத்துப் போகவில்லை? அவைதான் நினைவில்லை. நேற்று என் பேரன் வாயைக் கிழிப்பதாகச் சொன்னாயே, அதுவும் நினைப்பில்லையா? நிறுத்தும்படி கூவினேனே அதுவும் நினைப்பில்லையா?'' என்று வினாக் கணைகளைத் தொடுத்தான் கிழவன்.

அராபியன் முகத்தில் இந்தக் கேள்விகள் எந்தவித மாற்றத்தையும் விளைவிக்கவில்லை. அரசியை நோக்கிய அராபியன், ''இவருக்கு ஏதோ சித்தபிரமை போலிருக்கிறது ஏதேதோ சொல்கிறார். எனக்கு ஏதும் புரியவில்லை?'' என்று பதில் சொன்னான்.

''இவரை என்ன செய்யலாம்?'' என்று அரசி கேட்டாள்.

''வடகரைத் துறைமுகத்தில் இறக்கி விடலாம்'' என்று யோசனை சொன்னான் அராபியன்.

பெருவழுதி சினத்தின் வசப்பட்டாலும் தனது சினத்தால் பயனேதுமில்லை என்பதை உணர்ந்தான். அவர்கள் நாடகத்தில் பங்குகொண்டே அவர்களைச் சமாளிக்க வேண்டுமென்ற உறுதியால், ''வடகரையா! அது எங்கிருக்கிறது?'' என்று வினவினான்.

அராபியன் முகம் சுளித்தான். ''சேரநாட்டின் வட பகுதியில், அதாவது குட நாட்டில் இருக்கிறது'' என்று சொன்னான் அராபியன் எரிச்சலுடன்

''குடநாடா!'' என்றான் பெருவழுதி.

''ஆம். சேரநாடு குட்டநாடு என்றும் குடநாடு என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. வடக்குப் பிரிவு குட நாடு. குடநாட்டு ஆறான சேரலாறு கடலுடன் இணையும் இடத்திலிருக்கிறது வடகரைத் துறைமுகம்'' என்று விளக்கினான் அராபியன்.



சேர நாட்டைப் பற்றி அவன் அவ்வளவு தெளிவாக அறிந்திருப்பதைக் கண்ட பெருவழுதி, ''அங்கு இந்த மரக்கலம் தங்குமா?'' என்று வினவினான்.

''ஒரு நாள் தங்கும்'' என்றான் அராபியன்.

''அங்கு தங்கிவிட்டு...?''

''அடுத்த இரவில் மரக்கலம் செல்லும்.''

''இரவில்தான் போகுமா?''

''ஆம்''

''ஏன்?''

''இரவில் அமைதியிருக்கும். நாம் இயற்கையோடு உறவாடலாம். இதெல்லாம் எனக்குத் தெரியாது. அரசியைத் தான் கேட்க வேண்டும். நீர் ஒழுங்காக நடந்து கொண்டால் அரசி இயற்கையின் சூட்சுமங்களைப் போதிப்பாள்'' என்ற அராபியன் அரசிக்குத் தலைவணங்கிவிட்டு மீண்டும் தான் இருந்த மரக்கல முகப்புக்குப் போகத் திரும்பினான்.

அப்பொழுது அரசி குறுக்கிட்டு ''அஹமத்!'' என்று அதிகாரக் குரலில் அழைத்தாள்.

''அரசி'' - தலைவணங்கினான் அஹமத்.

''இந்தப் பெரியவரையும் உன்னுடன் அழைத்துப் போ. இவருக்கு எந்தவிதக் குறைவுமில்லாமல் பார்த்துக் கொள்'' என்றும் உத்தரவிட்டாள்.

அராபியனும் தன்னைத் தொடர்ந்து வருமாறு பெருவழுதிக்குச் சைகை செய்து முன்னால் நடந்தான். பெருவழுதி, இளவழுதியைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் அராபியனைப் பின்தொடர்ந்தான். அராபியன் பெருவழுதியை மரக்கலத்தின்

கீழ்த்தளத்துக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த ஒரு அறையில் தங்க வைத்தான். அவருடைய தேவைகளைக் கவனிக்க இரண்டு மாலுமிகளையும் நியமித்தான். அன்று பெருவழுதிக்கு ராஜோபசாரம் நடந்தது. பகல் உணவு ராஜபோகமாயிருந்தது. பெருவழுதி உடைகளை மாற்றிக் கொள்ள வேறு உடைகளும் கொடுக்கப்பட்டன. இத்தனை உபசாரத்திலும் அந்த மரக்கலத்தில் தான் சிறைவைக்கப்பட்டிருப்பதைக் கிழவன் புரிந்து கொண்டான். அவன் அறை வாயிலில் இரு மாலுமிகளும் சதா நின்று கொண்டிருந்தார்கள். அவன் எங்கு போனாலும் அவர்களும் தொடர்ந்தார்கள். ஆனால் பெருவழுதியை அவர்கள் எதிலும் தடை செய்யவில்லை. அன்றைய பொழுது நிதானமாகப் போவதுபோல் தோன்றியது. மெள்ள மெள்ள மாலையும் வந்தது. வேகமாகப் போய்க்கொண்டிருந்த மரக்கலம் ஆமைபோல் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. விளக்கு வைக்கும் நேரத்தில் தூரத்தில் வடகரைத் துறைமுகத்தின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அரசியின் மரக்கலத்தில் ஒரே ஒரு பந்தம் மட்டும் கொளுத்தப்பட்டது. மரக்கலம் துறைமுகத்தை அணுகுமுன்பு சட்டென்று நங்கூரம் பாய்ச்சி நின்றுவிட்டது. அந்த மரக்கலத்தை நோக்கி வடகரையின் வணிகப் படகுகள் பல விரைந்து வந்தன. மரக்கலத்தைச் சுற்றி நின்ற படகுகளிலிருந்தவர்கள் மிளகு, லவங்கம், ஏலக்காய் முதலியவைகளை விலை கூவி விற்கத் துவங்கினார்கள். அராபியனே மரக்கலத்தின் பக்கப் பலகையில் சாய்ந்து குனிந்து விலைபேசி பல கூடைகளை வாங்கி மரக்கல மாலுமிகளிடம் கொடுத்தான். தனது சராயின் நீளப் ப...களிலிருந்து இரு கைகளாலும் தங்க நாணயங்களை வணிகருக்கு எடுத்துக் கொடுத்து அவர்களைத் திரும்பிச் செல்ல உத்தரவிட்டான்.

இரவு மெள்ள மெள்ள ஏறிக் கொண்டிருந்தது. வடகரையின் துறைமுகத்திலும் கரையை அடுத்த மலைப்பகுதிகளிலும் பந்தங்களின் நடமாட்டம் பலமாகத் தெரிந்தது. அவற்றை யெல்லாம் கண்டு தனக்கு உதவி ஏதாவது வராதா? என்ற



பெருவழுதி ஏங்கிய வண்ணம் மரக்கலத்தின் பக்கப்பலகையில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான். வணிகப் படகுகள் திரும்பியதும் மரக்கலத்தில் பழைய அமைதி குடி கொண்டது. நேரம்போவது தெரியாமல் மரக்கலத்தில் தளத்தின் ஒரு மூலையில் படுத்துக் கிடந்தான் பெருவழுதி. நடுநிசி வந்து எங்கும் நிசப்தம் குடி கொண்டது. அப்பொழுது தன்னை நோக்கி யாரோ நடந்து வரும் சப்தம் கேட்கவே சற்று கண்களை விழித்துப் பார்த்த பெருவழுதி, வந்த உருவம் தலை முதல் கால் வரை போர்த்திக் கொண்டிருந்ததைக் கண்டான். அந்த உருவம் பெருவழுதியை சில விநாடிகள் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்துவிட்டு அக்கம் பக்கம் பார்த்து மெதுவாக முதியவன் பக்கத்திலேயே படுத்துக் கொண்டது. பிறகு மெதுவாக ஒருக்களித்து கிழவன் காதருகில் உதடுகளைக் கொண்டு வந்து ''தாத்தா!'' என்று மெதுவாக அழைத்தது.

''இளவழுதி!'' என்றான் கிழவன்.

''தாத்தா! நீங்கள் எதுவும் பேசவேண்டாம். நாம் இருவரும் பெருத்த அபாயத்திலிருக்கிறோம். இங்கிருக்கும் யாரிடமும் பேச்சுக் கொடுக்காதீர்கள்'' என்றான் இளவழுதி.

மேற்கொண்டு பேசமுயன்ற பெருவழுதியின் வாயைப் பொத்திய இளவழுதி, ''ஏதும் தெரியாதது போல் நடந்து கொள்ளுங்கள். நான் நடவடிக்கை ஏதாவது எடுக்கும் வரையில் ஏதும் செய்ய முயலாதீர்கள்'' என்று கூறிவிட்டு மெதுவாக எழுந்து தான் வந்த திசைக்கு நேர் எதிர்முகமாக நடந்தான்.

இந்த நாடகத்தைத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்ட அஹமத் மெள்ளப் புன்முறுவல் கொண்டான்.

## 5. வான்மதியும் கடல்மதியும்

இரவு நன்றாக முற்றி மரக்கலத்தில் மாலுமிகள் நடமாட்டம் நின்று அனைவரும் துயின்ற சமயம் பார்த்து பேரன் இளவழுதி தன்னருகே வந்து படுத்து தன்னை எச்சரிக்கையும் செய்துவிட்டுப் போனது பெருவழுதிக்கு ஓரளவு திருப்தியை அளித்தாலும் பேரன் நிலைமை மிகச் சீர்கேடாக இருப்பதைப் புரிந்து கொண்டதால் துன்பமும் அச்சமுமே கொண்டான். அலை அரசி என்ற சூன்யக்காரி இளவழுதிக்கு ஏதோ வசிய மருந்து கொடுத்து அவன் புத்தியைக் குழப்பிவிட்டாலும் அந்தக் குழப்பம் அவ்வப்போது விலகிவிடுகிறதென்பதையும், அந்த சமயத்தில் தனது பேரன் இயற்கையாகச் செயல்படுகிறானென்பதையும் அறிந்து கொண்ட முதியவன் அந்த மருந்து பூர்ணமாக பேரனை வசியப்படுத்துவதற்குள் அவனை மீட்காவிட்டால் அந்த அரசிக்கு அவன் மீது முழு ஆதிக்கம் ஏற்பட்டுவிடுமேயென்றும் கலங்கினான். அந்தக் கலக்கத்தோடு அந்த மரக்கலத்தின் விசித்திரங்களையும் சிந்தித்துப் பார்த்த பெருவழுதி, உண்மையில் அதில் விந்தை ஏதுமில்லையென்பதையும், இரவில், அடித்தளத்தை பக்கவாட்டிலிருந்த யந்திரமொன்று பெரும் பலகையை இயக்கி மூடுவிடுவதால் துடுப்புத் தள்ளும் மாலுமிகள் கண்ணுக்குத் தெரிவதில்லையென்பதையும், அதனால்தான் துடுப்புகள் தாமாகத் துழாவுவது போன்ற பிரமையைத் தனக்கு ஏற்படுத்தியது என்பதையும் தெரிந்து கொண்டான்.

முதல் நாள் ஒரு பகுதியில் தான் பார்த்த மேல் பலகையில்லாத அறையும் அன்று காணாததால் மேல் பலகையை நீக்கும்படியாக அமைத்திருக்கிறார்களென்று தீர்மானித்து அமானுஷ்யமான சக்தியொன்றும் அரசிக்கு இல்லை என்று முடிவு கட்டிய முதியவன் 'இதில் பாதி தந்திரமும் பாதி மருந்தும் வேலை செய்கிறதேயொழிய மனிதன் பிரமிக்கும்படியானது ஏதுமில்லை' என்று தன்னைத்தானே திடப்படுத்திக் கொண்டான். இத்தனையிலும் ஒன்றுக்கு மட்டும் அவனால் விடை காண முடியவில்லை. 'தளத்தில் சாதாரணமாக தான் நடந்தபோது திடீரென ஜலமட்டத்துக்கு இறங்கியது எப்படி? கடலின் வேகம் தன்னை இழுத்தது எப்படி?' என்ற கேள்விகளுக்கு விடை கிடைக்காததால் மரக்கலத்தின் அமைப்பைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.



ஆகையால் எழுந்து மீண்டும் தளத்தில் நடமாட முயன்று மெதுவாக அப்படியும் இப்படியும் நடந்தவன் மரக்கலத்தின் தலைப்பில் இருவர் நின்று கொண்டு வடகரையைக் கவனிப்பதைப் பார்த்தான். அப்பொழுது எழுந்த பின்னிரவு நிலவு அவர்கள் யாரென்பதை திட்டமாக எடுத்துக் காட்டியதால் மெதுவாக அவர்கள் நின்றிருந்த இடத்தை நோக்கி நடந்தான். அவர்களை மிகவும் நெருங்காமல் சற்று எட்டவே நின்று மரக்கலப் பலகையில் சாய்ந்து கொண்டு அவர்களைக் கவனிக்கலானான்.

அரசி இளவழுதியின் தோள்மீது தலைசாய்த்து அவன் கழுத்தில் தனது முகத்தைப் புதைத்த வண்ணம் நின்றிருந்தாள். இளவழுதியின் இடது கை அவளை நன்றாக இழுத்து தன்னுடன் இணைத்துக் கொண்டிருந்தது. அப்படிக் கழுத்தில் புதைத்த உதடுகளை அவன் காதுக்கருகில் கொண்டுபோய் ''இதற்குள் கசந்துவிட்டதா?'' என்று சாதாரண குரலிலேயே கேட்டதால் அவள் கேள்விகளும் இளவழுதியின் பதில்களும் தெளிவாக விழுந்தன, பாட்டன் பெருவழுதியின் காதுகளில்.

''கசந்துவிட்டதா? எது அரசி?'' என்று வினவினான் இளவழுதி.

''எதுவா? நான் என்ன ஜடப் பொருளா அது இது என்று என்னைக் குறிப்பிட?'' என்றாள் அரசி.

''உன்னைப் பற்றிக் கேட்டாயா?'' என்று வினவிய இளவழுதியின் குரலில் அன்பு பெருக்கெடுத்துக் கிடந்தது.

''வேறு யாரைப் பற்றிக் கேட்பேன்? இங்கு இருப்பது நான் ஒருத்திதானே?'' அரசியின் குரல் குழைந்தது இனிமையுடன்.

''உன்னை எப்படிக் கசக்கும் அரசி? கரும்பும் கற்கண்டும் கசந்தால் உன்னையும் கசக்கும்'' வேகத்துடன் பேசினான் இளவழுதி.

''கரும்பும் கற்கண்டும்தானா உங்கள் சிந்தனைக்கு வந்தன?''

''அவற்றை விடச் சிறந்த அமுதம் இருக்கிறது.''

''அப்படியானால் நான்?''

''அமுதம்''

''நான் உங்களுக்கு பொற்கிண்ணத்தில் அளிக்கும் அமுதத்தை விடவா?''

''ஆம் அரசி. பொற்கிண்ணம் எதற்கு? உன் அதரங்களே அமுதம். நீயே பொற்கிண்ணம்.''

இதை இளவழுதி சொன்னதும் அரசி அவனை நோக்கி மெள்ளத் திரும்பி தனது உடலை அவன் உடலுடன் இழைத்தாள். தனது முகத்தையும் அவனது முகத்தை நோக்கித் தூக்கினாள். அவள் .நெற்றியில் இருந்த வைரம் சந்திர கிரணத்தில் பளபளத்ததையும் அதன் ஒளி இளவழுதியின் முகத்தில் விழவே இளவழுதி அவள் இடையைத் தனது இரு கைகளாலும் பிடித்து அவளது உடலைத் தனது உடலுடன் இணைத்துக் கொண்டான். பிறகு தனது இதழ்களை அரசியின் இதழ்களுடன் இணைத்து அழுத்தினான். அந்த நிலையில் அரசியின் உடல் வளைந்து வளைந்து இளவழுதியின் உடலுடன் பலபடி இழைந்து மோகனாஸ்திரங்களை அவன் மீது அள்ளித் தெளித்தது.

இளவழுதி பிறகு மும்முரமாக இயங்கலானான். அரசியின் அழகிய உடலை முரட்டுத்தனமாகப் பல இடங்களில் பிடித்தான்.



பிறகு அவளைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டான். அவள் தனது கைகளால் அவன் கழுத்தைச் சுற்றினாள். கன்னத்தால் அவன் கன்னத்தை இழைத்து உம் உம் என்று வேட்கை ஒலிகளைக் கிளப்பினாள். இளவழுதி சுயநிலை இழந்தான். ''அரசி! அரசி!'' என்று முனகினான்.

''என்ன?'' - இன்பமாக ஒலித்தது அவள் குரல்.

''நான் உன் அடிமை'' என்றான் இளவழுதி.

''அப்படியானால் நான் ஒன்று கேட்பேன்'' என்றாள் அவள்.

''கேள்''

''இது உண்மையா? நடிப்பா?''

''எது?''

''இப்பொழுது நீங்கள் காட்டும் அன்பு!''

''சந்தேகமா உனக்கு?''

''ஆம்''

''எதனால்?''

''என் பக்கத்தில் படுத்திருந்தவர் ஏன் எழுந்து போனீர்கள்?'' இந்தக் கேள்வியை மிகச் செல்லமாகக் கேட்டாள் அரசி.

''முக்கியமான ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.''

''என்ன அத்தனை முக்கியம்?''

''இந்த மரக்கலத்தில் வந்திருக்கிறதே ஒரு கிழம்....'' என்று சற்று இரைந்தே துவங்கினான் இளவழுதி.

இது காதில் விழவே காதைத் தீட்டிக் கொண்ட பெருவழுதி மெள்ள அவர்கள் இருந்த திசையை நோக்கி இரண்டடி நடந்து

பக்கப்பலகைக்கு அருகில் மறைந்து உட்கார்ந்து அடுத்து எழுந்த உரையாடலை அறிந்து கொள்ளக் காதைத் நீட்டிக் கொண்டான். அவன் காதில் விழுந்த சொற்கள் அவனைத் திகைக்க வைத்தன.

"கிழமா? யாரைச் சொல்கிறீர்கள்?" என்று அரசியும் இரைந்தே வினவினாள்.

"என் பாட்டன் என்று உறவு கொண்டாடிக் கொண்டு வரவில்லை தொண்டி துறைமுகத்தில்?" என்று இளவழுதி கேட்டான்.

"அந்த முதியவரா! பாவம் பேரனைப் பார்க்க ஆசையுடன் வந்திருப்பார்" என்றாள் அரசி.

"பேரனாவது மண்ணாங்கட்டியாவது... அவர் பாட்டனுமல்ல, நான் அவர் பேரனுமல்ல" என்று உணர்ச்சியுடன் பேசினான் இளவழுதி.

"அப்படியானால் என்னைவிட்டு எழுந்து போனீர்களே எதற்கு?" என்று கேட்டாள் அரசி.

"அந்தக் கிழத்தை எச்சரிக்க, நான் பேரனாகவே நடித்து எச்சரிக்கையாயிருக்கும்படி கூறினேன். கிழமும் நம்பிற்று. கவலைப்படாதே அரசி. எப்படியும் நாளை அந்தப் பைத்தியத்தை வடகரையில் இறக்கி விடுகிறேன்."

"அவர் போக இஷ்டப்படாவிட்டால்?"

"இஷ்டப்பட வைக்கிறேன்"

"எப்படி?"

இளவழுதி மிகுந்த கடுமையான திட்டமொன்றை விளக்கினான். அதைக் கேட்ட பெருவழுதி பெரும் பீதிக்கும் சினத்துக்கும் இலக்கானான்.



பெருவழுதியைப் பற்றி பிறகு நினைக்காத இளவழுதி அரசியை மெதுவாகத் தளத்தின் பலகையில் கிடத்தி தான் பக்கத்தில் அமர்ந்தான். அவள் மல்லாந்து வான்மதியை நோக்கினாள்.

"இந்தக் கடல்மதி எதற்காக வான்மதியை நோக்க வேண்டும்? அடி அரசி! உன் அமுத அதரங்களைக் கொடு" என்று கேட்ட வண்ணம் அவள் உடல் மீது வளைந்து வளைந்து இதழ்களைப் பருகினான். அந்த இதழ்களின் அமுதத்துக்கு என்னதான் வசீகரச் சக்தியோ! மெள்ள மெள்ள சுயநிலையை இழக்கத் தொடங்கினான் இளவழுதி. சில வினாடிகளில் அடியோடு நினைவிழந்தான். அந்த சமயத்தில் அஹமத் எங்கிருந்தோ தோன்றி கையிலிருந்த ஒரு கிண்ணத்தை நீட்டினான் அரசியிடம். தனது இதழ்களை அவன் இதழ்களிலிருந்து மீட்டுக் கொண்ட இளவரசி அந்தக் கிண்ணத்தை இளவழுதியின் இதழ்களில் வைத்து "அன்பரே! அருந்துங்கள்!" என்று கொஞ்சினாள்.

## 6. பழைய கதை - புதிய நிலை

அரசியை அணைத்துப் படுத்த நிலையில் தன்னை ஒழித்துக் கட்டிவிட திட்டமொன்றை எடுத்து இளவழுதி அரசிக்கு விவரித்ததும், பேரன் மீது பெருஞ்சினம் கொண்ட முதியவனான முகுந்தன் பெருவழுதி, அந்த அரபு நாட்டு மோகினியிடம் ஏற்பட்ட மோகமே அவன் திட்டத்துக்குக் காரணமென்றும், சரச காலத்தில் சாதாரணமாக சொல்லப்படும் பொய்யாகக்கூட இருக்கலாமென்றும் எண்ணி பேரன் சார்பில் காரணங்களைக் கற்பித்து அவன் மீதிருந்த சினத்தைச் சிறிது குறைத்துக் கொண்டான். வாலிபனான அவன் தன்னிடம் வந்து எச்சரிக்கை செய்ததை அரசி புரிந்து கொண்டு விட்டாள் என்பதால் அவளை ஏமாற்றக் கதை கட்டினாலும் கட்டலாமென்றும் பேரனுக்கு சாதகமாக காரணங்களை சிருஷ்டித்தான் பாட்டனான முகுந்தன். 'நாளைக் காலையில் ஏதாவது சாக்குச் சொல்லி கிழவனை வடகரையில் இறக்கி சேரவாற்றில் நீராடும் காரணத்தில் தள்ளி விடுகிறேன். கிழவனுக்கும் நல்ல வயதாயிற்று. போனால் போகட்டுமே' என்று இளவழுதி சொன்னதை மீண்டும் நினைத்துப் பார்த்த முகுந்தன், ஒரு நாளும் தனது பேரன் எண்ணம் தன்னைக் கொலை செய்வதில் இருக்காது என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான். அந்த நினைப்பு எத்தனை சரியென்பதை அடுத்த நிகழ்ச்சிகள் நிரூபித்தன.

அரசியை முரட்டுத்தனமாக ஒரு கையால் அவள் அரபு ஆடையின் இடைக் கச்சையை நீக்கி தனது இன்னொரு கையால் அவள் உடலின் அழகுகளைத் துழாவ முயன்ற இளவழுதி, "அரசி! நீ தேவலோகத்தில் இருக்க வேண்டியவள். தப்பித்தவறி இந்த உலகத்துக்கு வந்துவிட்டாய்" என்று கூறிய வண்ணம் அவள் கழுத்திலும் மார்பிலும் உதடுகளைப் பொருத்திப் பொருத்தி மீண்டும் அதரங்களிடம் வந்தான். அந்த அதரங்களின் சுவையை



பருகி அதுதான் அமுதம் என்று மயங்கிக் கிடந்த நிலையில்தான் அஹமத் அந்த மதுக்கிண்ணத்தை எடுத்து வந்து அரசியிடம் கொடுத்தான். அரசி அதை வாங்கி, 'அன்பரே! அருந்துங்கள்' என்று கொஞ்சியபோது உடனடியாக அதை அருந்தவில்லை இளவழுதி. "இதென்ன அரசி?" என்று கேட்கவே செய்தான், குரலில் சிறிது அலுப்பைக் காட்டி.

"இன்பத்துக்கு சுருதி கூட்டும் பானம்" என்று மயக்கம் தரும் குரலில் பேசினாள் அரசி.

"பொய்! பொய்! பொய் சொல்லாதே அரசி" என்றான் இளவழுதி.

"நான் பொய் சொல்வேனா உங்களிடம்?" என்று குழைந்து பேசினாள் அரசி.

"இப்பொழுது சொல்கிறாயே" என்ற இளவழுதி கிண்ணத்தில் வாய் வைக்காமல் அவள் காதருகில் உதடுகளைக் கொண்டு போனான்.

அதனால் கிண்ணத்தை பக்கத்தில் நின்ற அஹமதிடம் கொடுத்துவிட்டு "என்ன பொய் அன்பரே?" என்று வினவினாள் அரசி மெதுவாக.

"இந்த மது, இன்பத்துக்கு சுருதி கூட்டும் என்று சொன்னாயே, அது பொய் தானே?" என்று கேட்டான் இளவழுதி அவள் காதுக்கருகில்.

"எப்படிப் பொய்யாகும்? நீங்கள் அருந்திப் பார்க்கவில்லையே?" என்றாள் அரசி.

"அருந்திப் பார்க்க என்ன அவசியம்? உன் அதரம் தரும் அமுதத்தை விட இன்பத்துக்கு சுருதி சேர்க்கும் மது எங்கிருக்கிறது? உன் வழவழத்த கன்னத்திற்கு முன்பு இந்த மது

நிற்க முடியுமா வசீகரத்தில், இனிப்பில்? மாதுளையைப் போன்ற உன் மார்பின் முகடு தரும் சித்த பிராந்தியைவிட எது அதிமயக்கத்தைத் தரவல்லது? உன் உடலின் அழகைவிட சிறந்தது நான் உருகக்கூடியது எதுவுமே இல்லையே'' என்ற இளவழுதி அவள் காதுக்கருகிலிருந்து முகத்தை நீக்கி மார்பில் புதைத்தான் அதில் புரளவும் செய்தான் இருமுறை.

அந்தச் சமயத்தில் கோடி பலகையில் சாய்ந்து நின்ற அஹமத் மெதுவாக அரசியை அணுகி அரசியிடம் மதுக்கிண்ணத்தை நீட்டினான். அரசியும் அதை வாங்கி மார்பில் படுத்துக் கிடந்த இளவழுதியின் தலையை சிறிது உயர்த்தி அவன் இதழ்களில் பொருத்தினாள். இப்படி இரண்டாவது முறையாக தன்னிடம் கிண்ணம் நீட்டப்பட்டதும் அதை அவள் கையிலிருந்து அன்புடன் இடது கையால் வாங்கிக் கொண்ட இளவழுதி, அவளைவிட்டு சிறிது விலகி உட்கார்ந்து கிண்ணத்தை வாயில் வைத்து உறிஞ்சுபவன்போல் பாசாங்கு செய்து ''அஹமத்'' என்று அழைத்து அவனிடம் கிண்ணத்தை நீட்டினான். சிறிது உட்கார்ந்த இடத்தில் தள்ளாடவும் செய்தான். அதைக் கண்டு லேசாக நகைத்த அஹமத் மெதுவாக அவனருகில் வந்து குனிந்து கிண்ணத்தை வாங்க முற்பட்டு சற்று திகைத்து, ''மது, மது'' என்று பேசத் துவங்கியதும் கிண்ணத்திலிருந்த மதுவை வெகுவேகமாக அஹமதின் முகத்தில் இளவழுதி வீசிக் கொட்டிவிடவே கண்களை மூடிக் கொண்டு சிறிது தள்ளாடி பின்னுக்கு நகர்ந்தான் அராபியன். அதிக தூரம் நடக்கவில்லை அவன். அவன் கண்களில் மது விழுந்து கரித்ததால் கண்களை மூடியதும் திடீரென எழுந்த இளவழுதி அவனை இரண்டே அடி வைத்து நெருங்கி முஷ்டியைப் பிடித்து அவன் முகத்தில் குத்தினான்.

ஏதோ பெரிய சுத்தியல் கொண்டு தாக்கப்பட்டது போல அந்த ஒரு குத்தினால் நிலைகுலைந்த அராபியன் கிடுகிடுவென்று மூக்கிலிருந்து வந்த குருதியைத் துடைக்க தனது தலைப்பாகைத்



துணியை எடுக்கத் தலையைக் குனிந்தான். நிலவில் பளபளத்த அவன் தலையைப் பார்த்த இளவழுதி அதிகக் கோபத்துக்குள்ளாகி அஹமதின் கழுத்தில் கையால் ஓங்கி அடிக்க அஹமத் வெட்டுண்ட மரம் போல் மரக்கலத்தளத்தில் குப்புற விழுந்தான். அப்படி விழுந்த அஹமதை கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்திய இளவழுதி, ''அஹமத்! உன்னை நான் அடித்ததற்குக் காரணம் புரிகிறதா?'' என்று வினவினான் அவன் முகத்துக்கு அருகில் தனது முகத்தை நெருக்கி, தனது கண்களால் அவன் கண்களை உற்று நோக்கி.

அந்தக் கண்களைக் கண்ட அஹமத் குலைநடுக்கம் கொண்டான். அதில் தெரிந்த மிதமிஞ்சிய வெறியைப் பார்த்த அஹமத் ஏதோ விபரீத நிலைக்கு இளவழுதியின் புத்தி திரும்பி விட்டதை உணர்ந்தான். அதனால் அவன் பிடியிலிருந்து தப்ப முயன்று அவன் கையை உதறவும் திமிறவும் முற்பட்டாலும் அவ்வளவு எளிதில் அது நடப்பதாகத் தெரியவில்லை. இரும்புப் பிடியாக அஹமதைப் பிடித்துக் கொண்ட இளவழுதி அவனை இழுத்துக் கொண்டே மரக்கலத்தின் பக்கப் பலகைக்குச் சென்று அதன்மீது அவனைச் சார்த்தி வயிற்றில் பலமுறை குத்தினான். அந்தக் குத்துகளிலிருந்து தப்ப அஹமத் தனது கைகளை நீட்டியும் மடக்கியும் தடுத்துப் பார்த்தும் முடியவில்லை. அஹமதை தளத்துப் பலகையில் கிடத்திவிட்ட இளவழுதி அவனது மார்பின் மீது காலை வைக்க வலது காலைத் தூக்கிய சமயத்தில் ''நில்லுங்கள்! காலை அவன் மீது வைத்தால் நீங்கள் உயிருடன் இருக்க முடியாது'' என்று நிதானமான குரலில் எச்சரித்தாள் அரசி.

அரசியின் குரலைக் கேட்டதும் அஹமதின் மார்புமீது காலை வைக்காமல் அஹமதைத் தூக்கி நிற்க வைத்து, அவனைப் பிடித்த வண்ணமே அரசியைத் திரும்பி நோக்கினான் இளவழுதி. நிலவில் அவள் இந்திர லோகத்திலிருந்து அப்பொழுதுதான் இறங்கிய அப்ஸரஸ் போல இருந்தாள். அவள் நெற்றியிலிருந்த வைரம் பல மடங்கு அதிகமாகப் பிரகாசித்தது. அதற்கு ஈடாகப் பிரகாசித்த

கண்களின் அதிகார தோரணையும் ஆட்சி செய்யும் சக்தியும் ஒளி வீசியது. அவள் குரலில் இனிமையுடன் கடுமையும் கலந்திருந்தது சற்று முன்பு இளவழுதியின் கைகளால் விலக்கப்பட்ட அவள் நீண்ட அரபுக் கச்சையின் மார்புப் பகுதி லேசாக விலகியிருந்ததால் மார்பின் விளிம்புகள் மட்டும் இரண்டு பிறைச்சந்திரன்கள் அவள் உடலில் தஞ்சமடைந்திருக்கும் பிரமையை சிருஷ்டித்தன.

அவள் எச்சரிக்கைக் குரலாலும், நின்ற தோரணையாலும் சீற்றத்தைச் சற்றுக் குறைத்துக்கொண்ட இளவழுதி அரசியை நோக்கி மெதுவாக நடந்தான். அவளை அணுகியதும், ''அரசி ஏன் தடுத்தாய்?'' என்று சற்று கோபத்துடனேயே கேட்டான்.

''உங்கள் நன்மைக்காகத்தான்'' என்றாள் அரசி, அன்பு ததும்பிய கண்களால் அவனைப் பார்க்கவும் செய்தாள்.

''அரசி, ஒன்றும் எனக்குப் புரியவில்லை...?'' என்றான்.

''என்ன புரியவில்லை?'' என்று கேட்டாள் அரசி.

''இந்த அஹமத் உனக்கு உறவினனா, அடிமையா?''

''இரண்டும் இல்லை''

''வேறு என்ன தொடர்பு இந்த மரக்கலத்துக்கும் அவனுக்கும்?''

''இந்த மரக்கலம் அவனுக்குச் சொந்தம். அவனாலேயே நிர்மாணிக்கப்பட்டது. இதிலுள்ள அத்தனை யந்திர சூட்சுமங்களுக்கும் அவன்தான் பொறுப்பாளி. இந்த மரக்கலத்தை ஒரு விநாடியில் கடலில் மூழ்கும்படிச் செய்ய அவனால் முடியும்.''

அடுத்து இளவழுதி கேள்விகளைத் தொடரவில்லை. சிறிது நேரம் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். அவளே பேசத் தொடங்கி, ''ஏதோ சிந்திக்கிறீர்கள்?'' என்றாள்.

''ஆம்'' - ஒற்றைச் சொல் பதிலையே விடுத்தான் இளவழுதி.



''எதைப் பற்றி என்று நான் அறியலாமா?'' என்று கேட்டாள் அரசி.

''உன்னைப் பற்றித்தான்'' என்றான் இளவழுதி.

''என்னைப் பற்றியா? என்னைப் பற்றிச் சிந்திக்க என்ன இருக்கிறது?'' என்று அரசி வினவினாள்.

''வா சொல்கிறேன்'' என்று அவளை அழைத்துக் கொண்டு ஒரு மூலைக்குச் சென்ற இளவழுதி, ''அரசி சிந்தித்துப் பார். நீயும் நானும் சற்று முன்பு இருந்த நிலை என்ன?'' என்று வினவினான்.

''அதைச் சிந்திப்பதற்கே வெட்கமாயிருக்கிறது. அப்படி இருக்கச் சொல்வது எப்படி?'' என்று கூறிய அரசி வெட்க நகை காட்டினாள்.

''அரசி...'' என்று துவங்கிய இளவழுதி அவள் இடையைப் பிடித்துத் தன்னை நோக்கி இழுத்து தனது உடலுடன் இணைத்துக் கொண்டான். ''நீயும் நானும் இப்பொழுதிருப்பதைவிட அதிக நெருக்கத்திலிருந்தோம்...'' என்றவன் வாசகத்தை முடிக்கவில்லை.

''உம்!'' உணர்ச்சி ஒலி எழுப்பினாள் அரசி.

''அந்தரங்க நிலை''

''ஆம்''

''மற்றவர்கள் பார்க்கக் கூடாதது''

''ஆம்''

''அப்படியிருக்க அந்த சமயத்தில் அஹமத் எப்படி வந்தான்? எந்த தைரியத்தில் கிண்ணத்தை உன்னிடம் கொடுத்தான்...?'' என்று கேட்ட இளவழுதி அவளை பதில் சொல்லவிடாமல் தானே பேசினான். ''அரசி! காதலர்களுடைய சல்லாபத்தின்போது நெருங்குவதே பிசகு. நெருங்கிப் பேசுவதும் குறுக்கிட்டுக்

கிண்ணத்தைக் கொடுப்பதும் பெரும் குற்றம். அடுத்த முறை அவன் நாம் தனித்திருக்கும்போது குறுக்கிட்டால் எனது கைளால் அவன் கழுத்தை முறித்துப் போடுவேன். அவனை எச்சரித்து வை'' என்று சொல்லிவிட்டு மரக்கலத்திலிருந்த அரசியின் அறைக்கு நடந்து சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தக் கதவு சாத்தப்பட்டு வெளியில் தாளிடப்பட்டது. ''அரசி! இவனைத் தொலைத்து விடட்டுமா?'' என்று அஹமத் கேட்டது இளவழுதியின் காதில் தெளிவாக விழுந்தது.

''இவனை அழிக்கக் கூடாது. இவன் உயிருடனிருப்பதால் பலன் இருக்கிறது. இல்லாவிட்டால் இவனை நானே கொன்றிருப்பேன், சென்ற ஆண்டு இங்கு வந்த போது'' என்றாள் அரசி.

இந்த உரையாடலை உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த இளவழுதி பழைய கதை என்றே நினைத்தான். பல உண்மைகள் அவன் புத்தியில் மெதுவாக உதயமாகத் துவங்கின. அவற்றில் பழைய கதையும் புதிய நிலையும் கலந்திருந்தன.



# 7. கண்களைத் தாக்கிய கதிர்கள்

மரக்கலத் தளத்தின் கோடியிலிருந்த அரசியின் அறைக்குச் சென்று கதவை மூடிவிட்டு கட்டிலில் படுத்து விட்ட இளவழுதியின் காதில் அரசியும் அஹமதும் பேசியதெல்லாம் தெளிவாக விழுந்ததால் அவன் பழைய சிந்தனைகளில் இறங்கினான். முதியவன் பெருவழுதி வந்த முதல் இரவில் போலவே அன்றும் அந்த அறையின் மேல் மூடி திறந்ததன் விளைவாக விண்மீன்கள் விளக்கமாகத் தெரிந்திருந்தும் அவற்றை நோக்கிய அவன் கண்களில் பழைய பிரமை ஏதுமில்லை. அவற்றை ரசிக்கும் நிலையில் கூட அவன் சித்தம் இறங்கவில்லை. சித்தமெல்லாம் அறைக்கு வெளியே நடந்த உரையாடலையே வாங்கிக் கொண்டிருந்ததாலும், அதன் விளைவாக பழைய கதைக்கு ஓடிவிட்டதாலும் அவன் நக்ஷத்திரக் கூட்டங்களைக் கவனிக்கச் சக்தியற்றவனானான். அவன் நினைப்பு மூன்று ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சிகளில் திளைத்து நிகழ்காலத்தை மறைத்து விட்டது.

கடலோடுவதில் இணையற்றவனென்று தொண்டியின் பரதவர் பலராலும் பாராட்டப்பெற்ற இளவழுதி எத்தனையோ புயல்களையும், கடலில் பல அபாயங்களையும் சந்தித்திருந்தான். அவன் வீரத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட சேர மன்னனும் அவனுக்கு அவ்வப்பொழுது தனது போர்க்கலங்களில் பணியாற்றவும் அனுமதி கொடுத்தான். அதன் விளைவாக கடல் வீரனாகவும் விளங்கின இளவழுதி, மன்னன் கடல் போர்க்கலமொன்றின் தலைவனாக இருக்கும் பதவியைக் கொடுத்தபோது அதை அவன் மறுக்கவே செய்தான். 'மன்னவா! கடலின் மைந்தன், அதில் சதா திரிவதிலும் அதில் திளைவதிலும் அதிலுள்ள பெருமீன்களைப் பிடிப்பதிலுமே இன்பம் பெறுகிறேன். போர்க்காலத்தில் நான் சேவைக்கு வருகிறேன். அதுவரை என்னை

தனி மரக்கலத்தில் கட்டிப் போட வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டான். மன்னனும் அவன் விருப்பத்துக்கு குறுக்கே நிற்கவில்லை.

அரசப் பணியை நிராகரித்ததில் முதியவனான முகுந்தனுக்கு இஷ்டமில்லையென்றாலும் அவன் ஏதும் செய்ய சக்தியற்றவனானான். 'இளவழுதி! அரசப் பணி நாம் கேட்கும் போது கிடைப்பதில்லை. அதுவாக நம்மை நோக்கி வரும் போது ஏற்காதது புத்திசாலித்தனமல்ல' என்று சொல்லிப் பார்த்தான். இளவழுதி கேட்கவில்லை.

'தாத்தா! நீங்கள் தனியாயிருக்கிறீர்கள். உங்களுக்கு என்னை விட்டால் கதியில்லை. அரசப் பணியை ஏற்றால் நான் மாதக் கணக்கில் உங்களைப் பார்க்க முடியாது. உத்திரவிடும் இடங்களுக்கு மரக்கலம் செல்லும். அத்துடன் நானும் சென்றுவிடுவேன். அந்தச் சமயங்களில் உங்களை யார் கவனிப்பார்கள்?' என்று கேட்டான்.

'இளவழுதி! கிழவனுக்காக இளவயதிலிருப்பவன் தனது வாய்ப்புகளைக் கைவிடுவது தவறு. கடலோடும் பரதவர் வாழ்வு என்றும் நிலையற்றதென்று உனக்கே தெரியும். நமது குலம் என்றும் அபாயத்தைப் பற்றியோ மரணத்தைப் பற்றியோ சிந்திப்பதில்லை' என்று முதியவன் முகுந்தன் மன்றாடினான்.

'தாத்தா! இயற்கை நம்மை விழுங்குவது சகஜம். அதைச் சாக்கிட்டு கடமைகளை மறக்கும் பழக்கம் நமது இனத்திற்கு இல்லை. நான் இல்லாதபோது உங்களுக்கு ஏதாவது ஆனால், அப்பொழுது, நானில்லாவிட்டால் பாட்டனுக்கு பாட்டனாகவும், தந்தைக்கு தந்தையாகவும் இருக்கும் உங்களை என் மனம் நினைத்து நினைத்து வாழ்வு முழுவதும் அல்லல்படும். மனச்சாட்சி சதா உறுத்திக் கொண்டே இருக்கும்' என்று பதில் சொல்லி கிழவன்



ஆசையை நிராசையாக்கிவிட்டான். காலையில் கடலுக்குச் செல்வதும் இரவில் நேரம் கழித்து வருவதுமாகவே காலம் கழித்தான்.

கடலில் மீன்களைத் தவிர வலம்புரிச் சங்கு, முத்துச் சிப்பிகள், பலப்பல கிளைகளாகக் கடலடியில் முளைத்த அழகிய பூச்சிக்கூடுகள் இவற்றையெல்லாம் கொண்டு வந்து கடற்கரையோரக் கரையில் விற்று வந்தான். சில அபூர்வமான பொருள்களைத் தானே ரகசியமாக வைத்துக் கொண்டான். அந்தப் பொருள்களில் ஒன்றுதான் அரசியின் நெற்றியிலாடும் அந்த வைரக்கல். கடலின் ஆழத்தில் அது கிடைத்தது. அதன் அபூர்வ வேலைப்பாட்டை பார்த்து தனது கச்சைக்குள் அதை மறைத்து விட்டான் இளவழுதி.

அந்த வைரச் சுட்டி கிடைத்த இரண்டு நாள் கழித்துத் தான் அவன் அலை அரசியைச் சந்தித்தான். என்ன காரணத்தாலோ அன்று சீக்கிரமாகக் கரைக்கு வந்துவிட்ட இளவழுதி தனது படகைக் கரையில் இழுத்துவிட்டு வலைகளையும் சுறா பிடிக்கும் கொக்கிகளையும் படகில் ஏற்றி விட்டுத் திரும்ப முயன்ற சமயத்தில், கிழிந்த ஆடைகளை அணிந்த ஒரு அரபுப் பெண் அந்தப் படகை நோக்கி வந்தாள். அவள் கால்களைக் கரையில் மோதிய அலைகள் தடவித் தடவிச் சென்றன. அடுத்து ஒரு பெரிய அலை வந்தது. அவளை அப்படியே மூழ்கடித்துவிடுவதுபோல். அதை அவள் லட்சியம் செய்யாமலே நடந்தாள். 'அப்புறம் போய்விடு' என்று கூவினான் தூரத்தில் படகின் பக்கத்திலிருந்த இளவழுதி. அவள் அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். தனது இடது கையால் நெருங்கி வந்து கொண்டிருந்த அலையைப் பார்த்துக் கையை அசைத்தாள். அவள் கையை அசைத்ததும் அந்த அலை சற்று விலகி அவளை விட்டு நாலடி தள்ளி கரையில் மடிந்தது. அந்த நிகழ்ச்சி தற்செயலாக நேர்ந்ததா, அவள் கைவீசியதால் ஏற்பட்டதா என்பதைப் புரிந்து கொள்ள முடியாத

இளவழுதி பிரமித்து அவளை அணுகி, 'பெண்ணே! நீ யார்? உன் பெயரென்ன?' என்று கேட்டான்.

அரசி அவனை உற்று நோக்கினாள். நீண்ட நேரம் நோக்கிக் கொண்டே இருந்தாள். இளவழுதியின் இதயத்தை ஊடுருவியது போலிருந்தது அந்தப் பார்வை. சிறிது நேரம் கழித்து அவள் பேசினாள். 'என் பெயர் அரசி' என்று.

'அரசியா? அரச குலத்தவளா?'

'ஆம்'

'கிழிந்த ஆடைகளை அணிந்திருக்கிறாய்?'

'ஆடை மட்டும் பதவியை அளிக்காது. நல்ல ஆடை அணிபவர்களெல்லாம் அரசர்களாகிவிட முடியாது.' இதை அவள் உறுதியுடன் சொல்லிவிட்டு மேலும் தரையைப் பார்த்துக் கொண்டே நடக்க முற்பட்டாள். அவள் எதையோ தேடுவதைப் போலிருக்கவே அவளைப் பின்பற்றி நடந்தவண்ணம், 'அரசி எதைத் தேடுகிறீர்கள்?' என்று மரியாதையுடன் வினவினான்.

'என் சுட்டியைத் தேடுகிறேன்.'

'அது இங்கு எப்படிக் கிடைக்கும்?'

'இங்குள்ள கடலில்தான் விழுந்துவிட்டது. அலைகள் கொண்டு வரும். இன்று எப்படியாவது எனக்குக் கிடைக்கும்.'

இதைக் கேட்டதும் இளவழுதி சிந்தனை வசப்பட்டான். 'எப்படி அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டான் முடிவில்.

'இந்தக் கடலில்தான் தவறி விழுந்தது. எங்கிருந்தாலும் அதைக் கொண்டுவரச் சொல்லி அலைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்' என்ற அவள் 'எப்படியும் இன்று அது என்னிடம் வந்து சேரும்' என்று சொன்னாள் உறுதியுடன்.



இளவழுதி சிந்தனையில் இறங்கினான். 'அந்தச் சுட்டி எப்படியிருக்கும்?' என்று வினவினான் சிறிது நேரம் சிந்தித்த பிறகு. 'தலைக்குழலில் சொருக சிறு சங்கிலியிருக்கும். அதன் முடிவில் நக்ஷத்திர வடிவில் அது இணைக்கப்பட்டிருக்கும்' என்று அரசி சொன்னதும் வியப்படைந்த இளவழுதி 'அந்த மாதிரி சுட்டியை எந்த பொற்கொல்லனும் செய்வானே' என்றான்.

'சுட்டிகளைச் செய்யலாம். ஆனால் அந்த வைரம் கிடைக்காது. அதற்கு மிகுந்த சக்தியுண்டு' என்ற அவள் சட்டென்று நின்றுவிட்டாள் சிலை போல. பிறகு எங்கிருந்தோ பேசும் குரலில் சொன்னாள் 'உன்னிடமிருக்கிறது அந்தச் சுட்டி. கொடுத்துவிடு' என்று கையை நீட்டினாள்.

'எப்படி உங்களுக்குத் தெரியும்?' என்று கேட்டான் இளவழுதி.

அவள் பதிலேதும் சொல்லாமல் அவன் கச்சையைச் சுட்டிக் காட்டினாள் தனது ஆள்காட்டி விரலால். அவன் கச்சையிலிருந்த அந்த வைரம் பளிச் பளிச்சென்று கதிர்களைப் போல வெளியே ஒளியை வீசிக் கொண்டிருந்தது. அன்றுவரை பளிச்சிடாத அந்த வைரம் திடீரென்று அப்படிப் பளிச்சிடக் காரணம் புரியவில்லை அவனுக்கு.

அரசியே காரணத்தைச் சொன்னாள். 'என்னை அது அழைக்கிறது' என்று.

'அது உங்களுடையது என்பதற்கு அடையாளம் உண்டா?' என்று இளவழுதி வினவினான்.

'நீயே அதை என் தலையில் மாட்டிவிடு. திரும்ப எடுக்க முடிந்தால் எடுத்துக்கொள்' என்றாள் அரசி.

இளவழுதி அந்தச் சுட்டியை எடுத்து அவள் தலைக்குழலில் மாட்டினான். அவன் தலைக்குழலில் அந்த வைரம் விளக்கைப்போல் எரிந்தது. மறுபடியும் குழலிலிருந்து சுட்டிச்

சங்கிலி கொக்கியை எடுக்கப் பார்த்தான். அவள் தலையில் கொக்கி புதைந்து கிடந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அந்த வைரம் தனது கதிர்களை அவன் கண்களில் தாக்கவே அவன் தலை சுழல ஆரம்பித்தது. அப்படியே நிலைத்து நின்றான் இளவழுதி. அவன் கண்விழித்தபோது அந்தப் பெண் அங்கில்லை. தான் நீண்ட நேரம் நிலைத்து நின்று விட்டதை உணர்ந்தான். பரதவர்கள் பலர் அவனைச் சூழ்ந்து நின்றனர். அவனைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டிருந்தனர். அவன் கண்களில் இருந்த புத்தொளியைப் பார்த்து, 'இளவழுதி! இளவழுதி விழித்துக் கொள்' என்று அவனை மேலும் உலுக்கினார்கள்.



# 8. விளக்கு மோகினி

கடலலைகள் மணலை முத்தமிடும் இடத்தில் பிரமை பிடித்து சுய உணர்வு இழந்து நின்றிருந்தவனை சக பரதவர் பிடித்து பலமுறை உலுக்கியபின்பே நனவுலகத்துக்குத் திரும்பிய இளவழுதி, தன்னைச் சுற்றி நின்றவர்களை ஒருமுறை ஏறிட்டுவிட்டு, அவர்களுக்குப் பதிலேதும் சொல்லாமலே தனது குடிசையை நோக்கி நடக்க முற்பட்டான். அவன் தங்களைப் பார்த்த பார்வையில் தெளிவில்லாததையும், நடையிலும்கூட ஒருவித தள்ளாட்டமிருந்ததையும் கவனித்த சக பரதவர்கள் அவனை மெதுவாகப் பின்பற்றிச் சென்றனர். பின்னால் வருபவர்களைக் கவனியாமலும் சொப்பனத்தில் எதையோ நாடிச் செல்பவன் போலும் அவன் நடந்த தோரணையைக் கவனித்துக் கொண்டே அவனைப் பின்பற்றிச் சென்ற பரதவ வாலிபர்கள் அவன் குடிசையருகில் வந்ததும் குடிசையை அணுகாமல் சற்று எட்டவே நின்றுவிட்டனர். இளவழுதி மட்டும் நேராகக் குடிசைக் கதவிடம் சென்று அதைத் தட்டவே, உள்ளிருந்து கதவைத் திறந்த முதியவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றதையும் அவனைப் பின்பற்றி வந்த பரதவ வாலிபர்கள் சற்று எட்டவே நின்றுவிட்டதையும் பார்த்த முகுந்தன் பெருவழுதி, குடிசையின் உட்புறத்தை ஒருமுறை நோக்கினான். அங்கு இளவழுதி கீழே கிடந்த பாயொன்றை விரித்து படுத்துக்கிடந்ததைக் கவனித்துவிட்டு குடிசைக்கு முன்பாக நின்றிருந்த பரதவர்களிடம் சென்று, 'என்ன நடந்தது? இளவழுதி ஏன் மயக்கத்திலிருக்கிறான்?' என்று விசாரித்தான்.

அந்த வாலிப பரதவர்கள் யாரும் எதுவும் பேசாவிட்டாலும் ஒருவன் மட்டும் முதியவனை நோக்கி, 'பெரியவரே! இன்று என்ன

காரணத்தாலோ இளவழுதி மலைவாயிலில் கதிரவன் விழு முன்பே, மஞ்சள் வெயில் மறைந்த சில நாழிகைகளுக்கெல்லாம் கரைக்கு வந்து விட்டான். அந்தச் சமயத்தில் யாரோ ஒரு பெண் அவனிடம் வந்து ஏதோ பேசிவிட்டுப் போனாள். அதற்குப் பிறகு நின்ற இடத்தைவிட்டு நகராமல் இளவழுதி செங்குத்தாக சிலை போல் நின்றிருந்தான். நாங்கள் அழைத்ததற்கு அவன் பதில் சொல்லவில்லை. அவன் கண்கள் விழித்திருந்தன. ஆனால் அவற்றில் பார்வையில்லை. எங்களை அவன் பார்த்ததும் பார்க்காதது போலவே நின்றிருந்தான். நாங்கள் அவனைப் பிடித்து உலுக்கினோம். பிறகு சற்றே அவனுக்கு சுரணை வந்தாலும் முழுச் சுரணையும் வரவில்லை. எங்களிடம் ஏதும் பேசாமல் குடிசையை நோக்கி நடக்கத் துவங்கினான். நாங்கள் பின்பற்றி வந்தோம். அவன் குடிசைக் கதவைத் தட்டியதும் நீங்கள் திறந்ததும் தான் எங்களுக்குத் தெரியும்' என்று சொன்னான்.

முதியவன் முகத்தில் துன்பச் சாயை தெரிந்தது. 'அந்த பெண் எப்படியிருந்தாள்?' என்று கேட்டான்.

'இளவயதுதான். தூரப்பார்வைக்கு அழகாயிருந்தாள். ஆனால் கிழிந்த ஆடைகளை அணிந்திருந்தாள். பிச்சைக்காரி மாதிரி தெரிந்தது' என்றான் பரதவ வாலிபன்.

'அவளை இதற்கு முன்பு இந்தக் கடற்பகுதியில் பார்த்திருக்கிறீர்களா?' என்று முதியவன் கேட்டான்.

'இல்லை பார்த்ததில்லை'

'எந்த நாட்டவள்?'

'பார்வைக்கு அரபு நாட்டவள் போலிருந்தாள். யவனப் பெண்ணாகவும் இருக்கலாம்.'



'சரி நீங்கள் சென்று நமது மருத்துவரை அனுப்பி வையுங்கள்' என்று சொல்லிவிட்டு முதியவன் உள்ளே சென்றான் பேரனைக் கவனிக்க.

பாயில் நீர்க்க உறக்கத்தில் படுத்துக் கிடந்தான் இளவழுதி. அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்து அவனுக்குக் காய்ச்சல் ஏதுமில்லையென்பதை உணர்ந்து அடுப்பு மூட்டி சிறிது பாலைக் காய்ச்சி இளவழுதியின் தலையை தனது மடியில் வைத்துக் கொண்டு. 'இளவழுதி! விழித்துக் கொள். இதை அருந்து!' என்று கெஞ்சினான். இளவழுதி வாயைத் திறக்காததால் வாயைத் தானே திறந்து சிறிதளவு பாலைப் புகட்டினான். அதை இரண்டே வாய் விழுங்கிய இளவழுதி மேற்கொண்டு அருந்த மறுத்தான்.

'உடம்புக்கு என்னடா இளவழுதி?' என்று கிழவன் வினவினான்.

பதில் ஏதுமில்லை பேரப்பிள்ளையிடமிருந்து. நல்ல உறக்கத்திலிருந்ததால் திரும்பி பாயில் விழுந்து ஒருக்களித்துக் கொண்டான். மிகுந்த கவலையுடன் உட்கார்ந்திருந்த முதியவன் மருத்துவரை எதிர்பார்த்து விழித்திருந்தான். சுமார் நான்கு நாழிகைக்குள் வந்த மருத்துவர் பாயில் இளவழுதியின் பக்கத்தில் உட்கார்ந்து நாடியைப் பரிசோதித்தார் நீண்ட நேரம். பிறகு இளவழுதியைத் திருப்பி அவன் வயிறு முதலிய உறுப்புகளை அழுத்திப் பார்த்துவிட்டு, 'பெருவழுதி! வியாதி ஏதுமில்லை. பையன் எதையோ கண்டு பயந்திருக்கிறான்' என்று சொல்ல அவர் குரலில் குழப்பம் பெரிதும் தெரிந்தது.

'மூளைக்கோளாறு ஏதாவது ஏற்பட்டிருக்குமா?' என்று முதியவன் வினவினான், அவர் குரலில் ஒலித்த குழப்பத்தைக் கவனித்து.

'இருக்கலாம். எதற்கும் நமது பிச்சனைக் கேட்டுப் பாருங்கள்' என்றார் மருத்துவர்.

மந்திரவாதி பிச்சனும் வந்து பார்த்து அவருக்கும் ஏதும் புரியாததால், 'முதியவரே! எதற்கும் நமது பகவதி கோயிலுக்கு வேண்டிக் கொள்ளுங்கள். அவளால் முடியாதது ஏதுமில்லை' என்று சொல்லிப் போனார்.

பேரன் பக்கத்தில் உட்கார்ந்து பகவதியை வேண்டினான் பெருவழுதி. அதன் விளைவாகவோ என்னவோ மறுநாள் மாலை இளவழுதியைத் தேடி ஒரு அராபியன் வந்து, 'இங்குதான் இளவழுதி இருக்கிறாரா?' என்று வினவினான்.

நல்ல உயரமும் பருமனுமாய் குறுந்தாடி மீசைகளுடன் காணப்பட்ட அந்த மனிதனைப் பார்த்ததும் அவனிடம் சந்தேகங்கொண்ட பெருவழுதி, 'ஆம். எனது பேரன். அவனிடம் உங்களுக்கு என்ன தேவை?' என்று வினவினான் சந்தேகம் நன்றாகவே தொனித்த குரலில்.

'அவர் தான் வேண்டும்' என்றான் அந்த அராபியன்.

'உள்ளே இருக்கிறான். சென்று பாருங்கள்' என்று முதியவன் வழிவிட்டு நிற்க, அராபியன் உள்ளே சென்று இளவழுதியைப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் நின்றான்.

'எத்தனை நேரமாக இப்படி இருக்கிறார் இவர்?' என்று முதியவனை நோக்கித் திரும்பிக் கேட்டான் அராபியன்.

'நேற்று மாலையிலிருந்தே' என்றான் முதியவன்.

'இதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நாளைக் காலையில் இவர் பழைய நிலைக்குத் திரும்பி விடுவார். திரும்பியதும் இவரை அராபியர் குடியிருப்புப் பகுதிக்கு அனுப்புங்கள்' என்று உத்தரவிடும் தோரணையில் பேசினான் அராபியன்.



'எதற்காக? யாரிடம் அனுப்ப வேண்டும்?' என்று முதியவன் கேட்டான் உஷ்ணமாக.

'அங்கு ஒருவரைச் சந்திக்க' என்றான் அராபியன்.

'யாரை?'

'சொல்ல உத்தரவில்லை'

'இவனை அனுப்பாவிட்டால்?'

'இப்பொழுது ஏற்பட்டுள்ள பிரமை விலகாது.'

இதைக் கேட்டதும் சில விநாடிகள் மௌனமாகி விட்ட முதியவன் கடைசியாக வினவினான், 'எந்த இடத்துக்கு வர வேண்டும்?' என்று.

'இடத்தைச் சொல்வதற்கில்லை. இவர் அரபுக் குடியிருப்புக்கு வந்தால் நானே இவரை அழைத்துப் போவேன்' என்று முடிவாக கூறி அராபியன் மேற்கொண்டு ஏதும் பேசாமலேயே குடிசையை விட்டு வெளியே சென்றவன் மணலில் வடக்கு நோக்கி நடந்து விட்டான்.

அவன் போவதை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே நின்ற முதியவன் அன்று உணவேதும் அருந்தாமல் பேரன் பக்கத்திலேயே படுத்துவிட்டான். படுத்தும் உள்ளிருந்த கவலையின் காரணமாக உறக்கம் வராததால் அதுவரை நடந்த விசித்திர நிகழ்ச்சிகளை எண்ணியே இரவைக் கழித்ததாலும் பொழுது புலர இருந்த சமயத்தில் அசதியால் உறங்கி விட்டான். காலையில் கதிரவன் உதித்த பின்பே எழுந்த முதியவன், இளவழுதி எழுந்து வெளியே செல்ல உடையணிந்து சித்தமாயிருப்பதைக் கவனித்தான்.

'உடம்பு எப்படியிருக்கிறது இளவழுதி?' என்று வினவினான் முகுந்தன்.

'நன்றாகத் தானிருக்கிறது' என்றான் இளவழுதி.

'மாற்றுடை அணிந்திருக்கிறாயே?'

'ஆம்'

'எதற்கு?'

'நான் சந்திக்கப்போவது ஒரு அரசகுடும்பத்தாரை'

'சேர மன்னனையா?'

'இல்லை. இவர்கள் வெளிநாடு.'

'அரபு நாடாயிருக்குமோ?' என்று மெதுவாக ஒரு கேள்வியை வீசினான் முதியவன்.

இளவழுதியின் கண்களில் பிரமை பெரிதாக விரிந்தது.

'தாத்தா! உங்களுக்கெப்படித் தெரியும் அது?' என்று கேட்டான் பிரமை சொற்களிலும் ஒலிக்க.

'உன் பாட்டனுக்கு ஊகசக்தி அதிகம்' என்ற பெருவழுதி 'நானும் உடன் வரட்டுமா?' என்று கேட்டான்.

'வருவதற்கில்லை. யாரையும் அழைத்து வராதே என்று எச்சரித்திருக்கிறாள் அவள்' என்ற இளவழுதியின் முகத்தில் இன்பச்சாயை படர்ந்து கிடந்தது.

'அவளா!?' என்று வினவிய பெருவழுதியின் குரலில் வியப்பு நிரம்பி வழிந்தது.

'ஆமாம். நான் அலையோரத்தில் சந்தித்த பெண். நேற்றிரவு கனவில் வந்து என்னை அழைத்தாள்' என்று கூறிய இளவழுதி, 'அஞ்சவேண்டாம் தாத்தா எப்படியும் மாலைக்குள் திரும்பி விடுகிறேன்' என்று கூறிவிட்டுச் சென்றான். அவன் எதிர்ப்பையும் மீறி அவனைத் தொடர முயன்ற பெருவழுதியைத் தனது கையின் அசைவினால் தடுத்த இளவழுதி, 'தாத்தா எனக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது. நீங்கள் தொடர்ந்து வந்தால்தான் எனக்கு ஆபத்து'



என்று கண்டிப்புடன் பேசிவிட்டு மணலில் நடந்து விட்டான் அரபுக்குடியிருப்பை நோக்கி.

கிழவன் அவனைத் தொடராமல் குடிசை வாயிலிலேயே ஸ்தம்பித்து நின்று பேரன் போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தான். பிறகு வலையை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு கடற்கரையை நோக்கி நடந்தான். அங்கிருந்த தனது பெரிய படகை நீரில் இழுத்து கடலில் செலுத்தினான். மாலை நெருங்கும் நேரம் வரை கடலில் திரிந்துவிட்டு, எடுத்துப் போன வலையை வீசாமலும், மீன்களைத் தூண்டிலால்கூடப் பிடிக்காமலும் சிந்தனையிலேயே காலம் கழித்துவிட்டுத் திரும்பினான் கடற்கரையை நோக்கி. மாலை முதிர்ந்துவிட்ட சமயத்தில் கரைக்கு வந்துவிட்ட முதியவன் தனது குடிசையை நோக்கி வந்தான். குடிசைக் கதவு மூடப்பட்டிருந்ததால் அதைத் திறக்க நினைத்து சிறிது நேரம் நின்றான்.

உள்ளே இருவர் பேசும் குரல் தெளிவாகக் கேட்டது முதியவனுக்கு. தனது பேரன் 'அரசியை நான் எப்பொழுது சந்திப்பது?' என்று கேட்டதையும், 'மூன்று ஆண்டுகளாகும்' என்று காலை வந்த அராபியன் குரல் ஒலித்ததையும் கேட்டான்.

'மூன்று ஆண்டுகள் காத்திருக்க என்னால் முடியாது' என்றான் இளவழுதி.

'நம்மால் முடியும் முடியாதது என்பதில்லை. எல்லாம் அவள் இஷ்டம்' என்ற அராபியன் அடுத்த வினாடி குடிசைக் கதவைத் திறந்துகொண்டு பெருவழுதியைப் பாராமலேயே வேகமாகச் சென்று விட்டான்.

அவனை எரிச்சலுடன் பார்த்த பெருவழுதி உள்ளே வந்து பேரனை நோக்கி 'இளவழுதி! அவளைப் பார்த்தாயா?' என்று கேட்டான்.

'பார்த்தேன்'

'என்ன சொன்னாள்?'

'மூன்று ஆண்டுகள் தள்ளிப்போட்டுவிட்டாள்'

'எதை?' என்று கிழவன் கேட்டான்.

'சொன்னால் உங்களுக்குப் புரியாது' என்று கூறிய இளவழுதி எழுந்து குடிசைக் கோடியில் இருந்த விளக்கை ஏற்றினான். பிறகு அதை உற்று நோக்கினான். அதில் அரசியின் முகம் மிகத் தெரிவாகத் தெரிந்தது. அவள் தன்னைப் பார்த்து நகைப்பதாகவும் தோன்றியது இளவழுதிக்கு. 'என்ன நகைக்கிறாய்? என்னிடமிருந்து தப்பிவிட்டதாக நினைக்காதே?' என்று விளக்கை நோக்கிப் பேசினான் அரையன் இளவழுதி.

'இளவழுதி யாரை நோக்கிப் பேசுகிறாய்? இங்கு யாருமில்லையே' என்றான் பாட்டன்.

'விளக்கின் சுடரைப் பாருங்கள் தாத்தா! அதில் இருக்கிறாள் அந்த மோகினி' என்றான் இளவழுதி. பிறகு விளக்கிடம் சென்று சுடரை நோக்கி பேசவும் முற்பட்டான்.



## 9. அவன் சபதம்

குடிசைக் கோடியிலிருந்த விளக்கின் சுடரில் அலை அரசியின் அழகுப் பிம்பம் தெரிந்ததையும், தன்னை நோக்கி அது நகைத்ததையும் கண்ட இளவழுதி அந்த விளக்கை அணுகி சுடரின் முன்பு உட்கார்ந்து அந்தச் சுடரில் இணைந்த மோகினியுடன் உரையாடத் தொடங்கியதைக் கண்ட முகுந்தன் பெருவழுதி தனக்கும் புரியாத ஏதோ பெரும் வசியத்தில் பேரன் சிக்கிவிட்டதை உணர்ந்து கொண்டதால், இருந்த இடத்திலேயே கல்லெனச் சமைந்து உட்கார்ந்து விட்டான்.

பாட்டனின் மனநிலையைப் பற்றி அறவே கவலைப்படாத இளவழுதி விளக்குச் சுடரைக் கூர்ந்து நோக்கி, 'அரசி! நாம் எதற்காக இப்படிச் சந்திக்க வேண்டும்? நேரில் சந்தித்தால் என்ன? விளக்குச் சுடரில் தோன்றுகிறாயே! சுடர் உனக்குச் சுடவில்லையா?' என்று அன்பு ததும்பும் குரலில் கேட்டான்.

விளக்கு மோகினி மிக மதுரமாகத் தனது முத்துப் பற்களைக் காட்டி நகைத்தாள். 'அன்பரே! நாம் நேரில் சந்திக்கக் காலமிருக்கிறது. அதுவரை பொறுத்திருங்கள். என் நிலைக்கு நான் உங்களைக் கொண்டுவரும் வரையில் நாம் சந்தித்துப் பயனில்லை. இந்த நெருப்புச்சுடர் என்னைச் சுடுமென்று அஞ்சாதீர்கள். நெருப்பு எப்படி நெருப்பைச் சுடாதோ அப்படி இதுவும் என்னைச் சுடாது. நானே நெருப்பு! நான் இந்தச் சுடரில் இருக்கும் வரை இந்தச் சுடர் உங்களையும் சுடாது. வேண்டுமானால் சுடரை நிமிண்டிப் பாருங்கள்' என்று சொன்னாள் அலைஅரசி.

அவள் சொன்னதையொட்டி சுடரைத் தனது கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் இணைத்து நெருடிப் பார்த்த இளவழுதி அதில் சூடு ஏதுமில்லாததைக் கவனித்து, 'சுடர் சிறிதும்

சுடவில்லையே அரசி, சூட்டைக் குளிர்ச்சியாக்க என்ன மந்தி வைத்திருக்கிறாய்?' என்று கேட்டான்.

அவள் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. 'இதில் மந்தி ஏதுமில்லை. உஷ்ணம் உஷ்ணத்தோடு சேரும் போது குளிர் நிலை ஏற்படுகிறது. உங்கள் நாட்டு ஆயுர்வேத முறை 'உஷ்ணம் உஷ்ணேன சாம்யதி' என்று கூறுகிறது. இது ஒரு இயற்கை நிலை. மருத்துவத்தையும் மனோதத்துவத்தை இணைத்து இந்த நிலையை யாரும் எய்தலாம்' என்றாள் அ புன்முறுவலின் ஊடே.

இளவழுதி சிறிது சிந்தித்துவிட்டு கேட்டான் 'நாம் நே சந்திக்க மூன்று ஆண்டுகள் ஆகுமென்று உன் அராபிய சொன்னானே, அது நிஜமா?' என்று.

'அவனாக எதுவும் சொல்லவில்லை. நான் சொன்னதை அவ சொன்னான். அவனாக எதுவும் சொல்ல அவனுக்கு அதிகா கிடையாது' என்றாள் அரசி.

'நீ இப்பொழுது எங்கிருக்கிறாய்? அதே அர குடியிருப்பில்தானே?' என்று ஆவலுடன் கேட்டான் இளவழு

'இல்லை' என்றாள் அவள்.

'வேறு எங்கிருக்கிறாய்?'

'நடுக்கடலிலிருந்து பேசுகிறேன்'

'கடலிலிருந்தா! என்னால் நம்ப முடியவில்லை' என்றா இளவழுதி அவநம்பிக்கை பூரணமாக உதித்த குரலில்.

'உங்கள் குரலில் அவநம்பிக்கை அதிகமாக ஒலிக்கிற இப்பொழுது பாருங்கள்' என்று கூறிவிட்டுச் சற்றே திரும்பின அவள். விளக்குச் சுடருக்குள் பெருங்கடலும் அதில் பெ மரக்கலமும் தெரிந்தது. மரக்கலத்தின் இரு பகுதிகளிலும் அலை



ஓங்கி எழுந்து கொண்டிருந்தன. அவற்றின் நடுவே அரசி நடந்து கொண்டிருந்தாள். அப்படி நடந்தபோது அவள் பின்னெழில்கள் அசைந்து அசைந்து அவன் உள்ளத்தை உலுக்கின. அலைகள் மேலும் பெரிதாகி மரக்கலத்தை மோதி மோதி திவலைகளை உள்ளே தெளித்தன. அவற்றுக்கிடையில் சென்றதும் அவள் திரும்பினாள். அவள் முகத்திலும் ஆடையிலும் அலைத் திவலைகள் வாரி அடித்து முத்துக்களை அவள் முகத்திலும் உடலிலும் நிரப்பின. 'போய் வருகிறேன்' என்பதற்கு அறிகுறியாக அவள் இரு கைகளையும் இணைத்து வணங்கினாள். அடுத்த விநாடி கடலலைகள் மரக்கலத்தையும் அவளையும் விழுங்கிவிட்டன.

பிரமை பிடித்த வண்ணம் சுடரின் அருகிலேயே நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தான் இளவழுதி. சுடர் சர்வ சாதாரணமாக எரிந்து கொண்டிருந்தது. அது மீண்டும் சுடுகிறதா, பழையபடி குளிர்ந்துதான் இருக்கிறதா? என்பதைப் பார்க்க விரல்களால் அதை நெருட முற்பட்டதும் சுடர் கையில் சுரீலெனச் சுட்டதால், 'உஸ்!' என்று கையை எடுத்துக் கொண்ட இளவழுதி மெள்ள விளக்கிடமிருந்து எழுந்தான்.

அதுவரை அவனைப் பார்த்தபடி தூரத்தே தனது பாயில் உட்கார்ந்திருந்த பெருவழுதி, 'விளக்குடன் விளையாடினால் சுடாமலிருக்குமா குழந்தை?' என்றான்.

இளவழுதி பாட்டனை நோக்கி திரும்பி, 'முன்பு தொட்டேன், சுடவில்லை தாத்தா' என்றான்.

'தொட்டதாக பிரமை' என்றான் பெருவழுதி, விளக்கை இளவழுதி முன்பு நெருடியதைப் பார்க்காததால்.

'இல்லை தாத்தா. நிச்சயமாய்ச் சுடவில்லை' என்றான் இளவழுதி.

'விளக்குடன் பேசிக் கொண்டிருந்தாயே. உனக்குப் பைத்தியமில்லையே?' என்று கேட்டான் பெருவழுதி.

'பைத்தியந்தான் தாத்தா. கடலில் வந்த மோகினி என்னைப் பைத்தியமாகத்தான் அடித்து விட்டாள்' என்றான் இளவழுதி துன்பத்துடன்.

'மோகினியல்லடா அவள். மோகினிப் பிசாசு. நமது மந்திரவாதியிடம் சொல்லி அதை விரட்டி விடுகிறேன்' என்றான் பெருவழுதி.

இளவழுதி துன்பம் தோய்ந்த குரலில் நகைத்தான். 'நீங்கள் விரட்ட அவசியமில்லை. அவளே போய்விட்டாள்' என்று சொன்னான்.

'எங்கு போய்விட்டாள்?' என்று வியப்பும் சற்றே கலை நீங்கிய குரலிலும் கேட்டான் பெருவழுதி.

'எங்கென்று தெரியாது. மரக்கலத்தில் சென்று விட்டாள். என்னிடம் விடையும் பெற்றுக் கொண்டாள்' என்றான் இளவழுதி. அவன் குரல் தழுதழுத்துக் கிடந்தது.

முதியவனான முகுந்தன், பேரன் சொன்னதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தான். கேரள பெரிய மந்திரவாதியிடம் பையனைக் காட்டினால் இந்த மனப்பிரமையை அவர் அகற்றிவிடுவார் என்று தீர்மானித்துக் கொண்டான். சற்று சில நாட்கள் காத்திருக்கவும் முடிவு செய்தான். பேரனுக்கு ஏற்பட்டிருக்கும் மனப்பிரமையில் தாம் என்ன சொன்னாலும் ஏறாது என்று தீர்மானித்துக் கொண்ட பெருவழுதி எதற்கும் பேரன் மீது எப்பொழுதும் ஒரு கண்ணை வைத்திருக்கத் தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்துடன் இளவழுதியைப் படுக்கச் சொல்லி தானும் படுத்துக் கொண்ட முதியவன் கண்களை மூடினாலும் உறக்கம் வரவில்லை. ஏதேதோ நினைத்துக் கொண்டும் அடுத்து பேரனைக்



காப்பாற்றத் திட்டங்கள் வகுத்துக் கொண்டும் படுத்த முதியவன் கடைசியில் கண்விழித்தபோது கதிரவன் உதித்து நான்கு நாழிகைகள் ஆகிவிட்டதை உணர்ந்து குடிசைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்த்தான். திடீரென்று கதிரவன் கதிர்களைச் சந்திக்க முடியாததால் கண்களைக் கசக்கிக் கொண்டான். அவன் விழித்தபோது குடிசையில் இளவழுதி இல்லாததால் கடற்கரையை நோக்கி கண்களைச் செலுத்தினான். கடற்கரை அருகே இளவழுதி நடந்து கொண்டிருந்தான்.

அதனால் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்ட பெருவழுதி தானும் கடலில் நீராடச் சென்றான். நீராட்டத்தை முடித்துக் கொண்ட பெருவழுதி அலைகளில் நீந்திப் போய்க் கொண்டிருந்த இளவழுதியை நோக்கி விட்டுத் தனது பக்கத்திலிருந்த பரதவரை நோக்கி, 'இளவழுதி நீராடியதும் குடிசைக்கு வரட்டும். இன்று மீன் பிடிக்கப் போக வேண்டாம்' என்று சொல்லிவிட்டு குடிசைக்குத் திரும்பினான்.

அன்று முதல் இளவழுதி சில தினங்களில் படிப்படியாக சாதாரண நிலைக்கு வந்ததால் பெருவழுதி மனச் சாந்தியடைந்தாலும் அரபுக் குடியிருப்பைப் பார்வையிட தவறவில்லை. இளவழுதி கடலோடிய ஒரு நாள் அவனுக்குத் தெரியாமல் அரபுக் குடியிருப்புக்குள் சென்று விசாரித்தான். அங்கிருந்தவர்கள், ஒரு அராபியனும் ஒரு பெண்ணும் ஒரு இல்லத்தில் தங்கியிருந்தார்களென்றும் பிறகு சொல்லாமல் போய்விட்டார்களென்றும் சொன்னார்களே தவிர வேறெதுவும் அவர்களுக்குத் தெரியவில்லை.

பத்து நாட்கள் கழித்து பெருவழுதி தனது பேரனைத் தொண்டி நகரிலிருந்த கேரள பெரிய மந்திரவாதியிடம் அழைத்துச் சென்றான். மந்திரவாதியும் இளவழுதியை உற்றுப் பார்த்தார். பிறகு பகவதி விக்ரகத்துக்கு எதிரில் விளக்கேற்றி அதில் ஊன்றிக் கவனித்தார். அவரும் விளக்கில் யாருடனோ பேசினார்.

முடிவாகச் சொன்னார் 'உங்கள் பேரனுக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது. இது விஷயத்தில் நாம் தலையிடாதிருப்பது நல்லது' என்று.

'விளக்கில் யாருடனோ பேசினீர்களே, யாருடன்?' கவலை மிருந்திருந்தது பெருவழுதியின் குரலில்.

'இவனைப் பிடித்திருந்த மோகினியிடம்' என்று ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார் பெரிய மந்திரவாதி.

'அரசியுடனா?' என்று வியப்புடன் கூவினான் இளவழுதி.

'ஆம்'

'முடியாது, முடியாது'

'ஏன் முடியாது? பகவதியின் அருளிருந்தால், முடியாதது என்ன இருக்கிறது?'

'நிருபிக்க முடியுமா? உங்களால்?'

'அவள் நெற்றியில் ஒரு வைரம் நக்ஷத்திரம்போல் மின்னுகிறது' என்ற பெரிய மந்திரவாதி இளவழுதியை நோக்கிப் புன்னகை செய்தார்.

பிறகு சிறிது விபூதியைக் கட்டிக் கொடுத்து, 'இதை தினம் குளித்ததும் நெற்றியில் இட்டுக் கொள். அவள் திரும்பி வரும் வரையில் மன நிம்மதியுடன் கடமையைச் செய்துவா' என்று அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த இந்த விசித்திரங்களை யெல்லாம் எண்ணிப்பார்த்த வண்ணம் அன்று மரக்கல அறைக் கட்டிலில் மல்லாந்து படுத்து விண்மீன்களை நோக்கிய வண்ணம் சிந்தித்த இளவழுதியின் மனத்தில் ஒரு சந்தேகமும் ஏற்பட்டது. 'மூன்று ஆண்டுகள் கழித்து வருவேனென்று சொன்னவள் ஓராண்டுக்கு முன்பு வந்ததாக இப்பொழுது அஹமதிடம் பேசினாளே, எப்பொழுது வந்தாள்? எங்கு தங்கியிருந்தாள்?



என்னை ஏன் பார்க்கவில்லை? என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். தவிர, 'என்னைக் கொல்லாததற்குக் காரணம் ஏதோ இருப்பதாக அஹமதிடம் சொன்னாளே, அது என்ன காரணமாக இருக்கும்?' தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அதற்கு அதே சமயத்தில் விளக்கம் தந்து கொண்டிருந்தாள் அலை அரசி, அறைக்கு வெளியே. அவள் சொற்கள் அவன் காதில் மிகத் தெளிவாக விழுந்தன. அதைக் கேட்டதும் மெல்ல உள்ளூர நகைத்துக் கொண்ட இளவழுதி, 'நாளைக்கு நான் யாரென்பதை உங்கள் இருவருக்கும் காட்டுகிறேன்' என்று சபதமும் செய்து கொண்டான்.

# 10. ஆற்றங்கரை சந்திப்பு

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும் சென்ற சில தினங்களுக்கு முன்பு மீண்டும் அஹமத் தனது குடிசைக்கு வந்து தன்னை அழைத்துச் சென்றதையும், பிறகு அன்றைய இரவில் நடந்த விவகாரங்களையும் நினைத்து அறைக் கட்டிலில் மல்லாந்து கிடந்த அரையன் இளவழுதி, அறைக்கு வெளியே அரசியும் அஹமதும் பேசியதைக் கேட்டுத் தனக்குள்ளேயே நகைத்துக் கொண்டான். 'ஓராண்டுக்கு முன்பு அவள் திரும்பவும் தொண்டி வந்ததாகச் சொன்னாளே, எப்பொழுது, எதற்காக வந்தாள், எங்கு தங்கினாள்? என்னை ஏன் பார்க்கவில்லை?' என்று பல கேள்விகளை அவன் தன்னைக் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே, வெளியே இருந்த அரசி அஹமதிடம் சொன்னாள் "அஹமத்! இவரை உயிரோடு அழைத்துக் கொண்டு வரும்படி நமது மதகுரு சொன்னார். இவருக்கு எந்தத் தீங்கும் விளைவிக்கக் கூடாதென்றும் உத்தரவிட்டார். இவரால் நமது நாட்டுக்குப் பெரும் நலன் இருப்பதாகவும் சொன்னார் அதனால்தான் இவரை உயிருடன் அழைத்துச் செல்கிறேன்" என்று.

அஹமத் சிறிது சிந்தித்துவிட்டு, "அப்படியானால் இந்த வடகரையில் நாம் ஏன் காலம் கழிக்க வேண்டும்? நமது நாட்டை நோக்கிச் செல்லலாமே?" என்று கேட்டான்.

"முடியாது" என்றாள் அரசி.

"ஏன்?" என்று அஹமத் கேட்டான்.

"நமது மதகுருவின் நண்பர் ஒருவர் இங்கு நம்மைச் சந்திப்பாரென்றும் அவர் சொற்படி நடக்கும்படியும் மதகுரு நமக்கு உத்தரவிட்டிருக்கிறார்."

"சந்தித்து என்ன செய்யப் போகிறார்?"



"இவரை சிறை செய்து எடுத்துச் செல்ல உதவுவார்."

"இப்பொழுது இளவழுதி சிறையில்லாமல் எப்படி இருக்கிறார்?"

"என் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறார். இந்த மயக்கம் அதிக நாள் நீடிக்காது. இவருக்கு மனம் தெளிவாகிவிட்டால் இவரைக் கொண்டு போகவும் முடியாது."

"யார் சொன்னது?"

"மதகுரு. அவரிஷ்டப்படிதான் நாம் எதையும் செய்ய முடியும். இந்த இளவழுதியை முதலில் கண்டுபிடித்தவரே அவர்தான். அதனால்தான் திட்டமிட்டு நம்மை அனுப்பியிருக்கிறார்."

"என்ன திட்டம்?"

"இவரைக் கூடியவரை சுயபுத்தியுடன் கொண்டு வர உத்தரவிட்டிருக்கிறார். எனது ஆற்றலை அதிகமாகக் காட்டக்கூடாதென்று திட்டமாக உத்தரவிட்டிருக்கிறார். அப்படிப் பாதி நினைவும் பாதி மயக்கமுமாக அழைத்துச் செல்ல வேண்டும்."

"இதற்கு வழி?"

"வடகரையில் பாயும் சேரலாற்றுக் கரையில் நம்மைச் சந்திக்கும் மதகுருவின் நண்பர் சொல்லுவார்" என்ற அரசி அதற்கு மேல் பேசவில்லை.

அடுத்து என்ன நடக்கிறதென்று அறிய சிறிதுநேரம் விழித்திருந்த இளவழுதி கண்களை மூடி பொய்த்துயில் கொண்டான். அரசி அந்த அறைக்குள் மெதுவாக நுழைந்து கட்டிலின் அருகில் நீண்ட நேரம் அவனை உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றாள். பிறகு கதவருகிலிருந்த அஹமதை நோக்கி, "அஹமத்! நன்றாக உறங்குகிறார். நீ போ. கூரையை மூடிவிடு.

நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டுக் கதவைத் தாளிட்டாள். அஹமத் அறைக்கு வெளியிலிருந்த ஏதோ யந்திரத்தை அழுத்த ஒரு பலகை எழுந்து அறையின் மேற்பகுதியை மூடிவிடவே அறைக்குள் நல்ல இருள் கவிழ்ந்து கொண்டது. அந்த இருளில் அலை அரசியின் நெற்றியிலிருந்த வைரம் மட்டும் பெரும் பிரகாசத்தை உண்டு பண்ணவே அதன் ஒளியை இளவழுதியின் முகத்தில் படும்படி லேசாகக் குனிந்து அவனை ஊன்றிப் பார்த்தாள்.

இளவழுதியின் கண்கள் நன்றாக மூடிக்கிடந்தன. வலிய உதடுகள் உரத்துடன் மடிந்து ஒரு உறுதியையும் வைராக்கியத்தையும் காட்டின. உதட்டின் மேலிருந்த சிறிய மீசையும் ஏதோ சித்திரத்துக்கு வரையப்பட்டது போல் காணப்பட்டது. சுருக்கமற்ற நெற்றி மிக அழகாக சந்திரன் போலிருந்தது. இவற்றையெல்லாம் கண்ட அரசி அவன் மீது குனிந்து நெற்றியுடன் தனது நெற்றியை வைத்துக் கொண்டாள். அவன் நெற்றியில் உஷ்ணம் அதிகமாயிருந்ததையும் அது தனது நெற்றிக்குப் பாய்வதையும் கண்ட அரசி தனது கன்னத்தை அவன் கன்னத்துடன் இழைத்தாள். அவன் முரட்டுக் கன்னம் தனது வழவழத்த மென்மையான மலர்க்கன்னத்துக்கு எத்தனை ஆதரவாயிருக்கிறதென்று நினைத்தாள். பிறகு மெள்ள எழுந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து அவன் கையொன்றை எடுத்து தனது மார்பில் வைத்துக் கொண்டாள். அணைத்தும் கொண்டாள். ஆனால் சாதாரணமாக தன் மார்பு தட்டுப்பட்டாலே துடிக்கும் அவன் கை அன்று சுரணையற்று இருப்பதைக் கண்டு அதற்குக் காரணம் நித்திரையாகத்தான் இருக்குமென்று முடிவு செய்து கொண்டாள். அதனால் கட்டிலின் ஓரத்திலிருந்து மேலும் சற்று நெருங்கி அவனை சற்று ஒதுக்கி இடம் செய்து கொண்டு தனது பின்னழகின் எழுச்சியின் ஒருபகுதி முழுவதும் அவன் பக்கத்தில் உரசும்படி உட்கார்ந்தாள். அதற்கும் அவன் எந்த உணர்ச்சியும் காட்டாது போகவே, ''அன்பரே!'' என்று குரலும் கொடுத்தாள்.



அதற்கும் பதிலில்லாது போகவே அவள் அவனை நன்றாக ஒதுக்கிவிட்டு தலையணைமீது வலது முழங்கையை வைத்து புறங்கையால் தலையைத் தாங்கி ஒருக்களித்து அவனருகில் உட்கார்ந்தாள்.

அப்பொழுது மெள்ள அசைய ஆரம்பித்த இளவழுதி தனது இடது கையால் அவள் இடையைச் சுற்றி அரைவாசி எழுந்து அவள் மலர்மடியில் தலையை வைத்துக் கொண்டான். தலைக்குத் தலையணையான வழவழத்த பெரும் மலர்த்தொடைகள் லேசாக அசைந்தன. அந்த அசைவு அவன் உணர்ச்சியைக் கொந்தளிக்கச் செய்யுமென்று எதிர்பார்த்த அரசி மெள்ள அவன் முகத்தின் மீது குனிந்து, ''என்ன அத்தனைத் தூக்கம்?'' என்று கோபக் கொஞ்சல் கொஞ்சினாள்.

அவன் மெதுவாகக் கண்ணைத் திறந்து, ''அரசி! நீ எப்பொழுது வந்தாய் இங்கே?'' என்று வினவினான்.

''நான் வந்து நேரமாயிற்று. நீங்கள் எப்பொழுது உறங்கினீர்கள்?'' என்று அரசி கேட்டாள்.

''வந்தவுடன் உறங்கிவிட்டேன். மிக அலுப்பாயிருந்தது'' என இளவழுதி அவள் முகத்தைத் தனது கைகளால் பற்றி தனது முகத்துடன் இடித்தான் லேசாக. அப்பொழுது அந்த வைரக்கல்லும் அவன் முகத்தில் பதிந்தது. ''அப்பா! இது என்ன வைரக்கல்லா பாறாங்கல்லா?'' என்றான் இளவழுதி வலியைக் காட்டும் குரலில்.

அவன் முகத்தை நிமிர்த்தி வைரம் பதிந்த இடத்தைத் தடவிக் கொடுத்தாள். ஆனால் அந்த வைரம் பதிந்த இடத்தில் வைரத்தின் அடையாளம் ஆழமாகப் பதிந்திருந்ததால் போகவில்லை. இளவழுதியும் தனது முகத்தைத் தடவிப் பார்த்தான். ''அரசி! உன் அடையாளத்தை என் முகத்தில் பதித்து விட்டாயே?'' என்று வினவினான்.

அரசியின் முகத்தில் குழப்பம் லேசாகத் தெரிந்தது. "அதனாலென்ன?" என்று கேட்டாள் குழப்பம் குரலிலும் ஒலிக்க.

"நீயே எனது நெஞ்சில் பதிந்திருக்க நெற்றியில் எதற்கு அடையாளம்?" என்று வினவினான்.

"உள்ளும் புறமும் அடையாளம் ஒன்றாயிருப்பது நல்லதல்லவா?" என்று கேட்டாள் அவள்.

இளவழுதி லேசாக நகைத்தான். "நல்லதுதான் அரசி! ஆனால் அசலுக்கு உள்ள பலம் அடையாளத்துக்கு இருக்குமா?" என்று கேட்கவும் செய்தான் நகைப்பின் ஊடே.

இதைக்கேட்ட அரசியின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. அந்த சிந்தனையின் ஊடே சந்தேக ரேகையும் லேசாக ஓடியது. "என்ன கேட்டீர்கள்?" என்று ஏதும் அறியாததுபோல் வினவினாள்.

"உன் நெற்றியிலாடும் வைரத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் மனம் உணர்ச்சியால் அலைகிறது. என் முகத்தில் பதிந்திருக்கும் அடையாளம் உன் உணர்ச்சிகளைத் தூண்டுமா?" என்று கேட்ட இளவழுதி புன்முறுவல் கொண்டான்.

"உங்கள் முகமே போதும் என் உணர்ச்சிகளை அள்ள. உங்கள் ஒரு பார்வைக்கு நான் அடிமை. அப்படியிருக்க இந்த வைரத்தின் அடையாளம் எதற்கு?" என்று கேட்ட அரசி அவன் நெற்றியில் பதிந்திருந்த அடையாளத்தை அகற்ற தனது கையால் முகச் சருமத்தை தேய்த்து விட்டாள். அதற்கும் அது மறையாததைக் கண்டு பெரும் சிந்தனை வசப்பட்டாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் முகத்தை அவன் மார்பில் புதைத்து அவன் மீது சாய்ந்தாள்.

இளவழுதியின் கைகள் அவள் அழகிய உடலைச் சுற்றித் துழாவின. அவன் கையொன்று அவள் தலைக் குழலைக்



கோதியது. "அரசி! நீ இந்த வடகரைத் துறைமுகக் கோட்டையைப் பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டான்.

"இல்லை, ஏன் கேட்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"உனக்கு அதை நாளை காட்டுவதாக முடிவு செய்திருக்கிறேன்" என்றான் இளவழுதி.

"முடிவு செய்திருக்கிறீர்களா?" என்று வியப்புடன் அவள் கேட்டாள்.

"ஆம்"

"அஹமதைக் கேட்க வேண்டாமா?"

"அவனை என்ன கேட்பது?"

"அவன் தானே மரக்கலத் தலைவன்?"

"இருக்கலாம். எனக்குத் தலைவனல்ல."

"அவன் ஏதாவது தடை செய்தால்?"

"அவன் தலையை வெட்டிக் கழுகுகளுக்குப் போட்டு விட்டு இறங்கிப் போய்விடுவேன்"-இதை மிக அலட்சியமாகச் சொன்னான் இளவழுதி.

"அன்பரே! அஹமதை விரோதித்துக் கொள்ளாதீர்கள். அவன் மிகக் கொடியவன்" என்றாள் அரசி.

"கொடியவர்களைக் களைவது நமது கடமை. நீதிக்குப் பணியலாம். அநீதிக்குப் பணியக்கூடாது? அச்சத்தைவிட விரோதி மனிதனுக்கு எதுவுமே இல்லை" என்ற இளவழுதி, "வா அரசி! இரவு முழுவதும் பேசிக் கழிக்க வேண்டாம். உறங்கு" என்று அவளை அணைத்து ஆதரவாகத் தடவிக் கொடுத்தான்.

மறுநாள் காலையில் முன்னதாகவே எழுந்துவிட்ட இளவழுதி தானும் அரசியும் கரைக்குச் செல்ல முடிவு செய்துவிட்டதாக

அறிவித்தான். பெருவழுதியையும், ''தாத்தா! நீங்களு வாருங்கள் கரைக்கு. அரசியும் அஹமதும் வருகிறார்கள்'' என் பாட்டனையும் அழைத்தான். அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு மாலுமிகளுக்குக் கட்டளையிட்டான். அவ மரக்கலத்தில் குறுக்கும் நெடுக்கும் நடந்து அதிகார தோரணையில் உத்தரவுகளைப் பிறப்பிப்பதைப் பார்த்த அஹ புன்சிரிப்புக் கொண்டான். மெள்ள இளவழுதியிடம் வந் ''தாங்கள் கரைக்குப்போய் எங்கு செல்வதாக உத்தேசம்?'' என் வினவினான்.

''நகரத்தைப் பார்த்துவிட்டு பிறகு சேரவாற்றங் கரைக்கு செல்வோம்'' என்றான் இளவழுதி.

அஹமதின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. ''சென்று?'' என் அதிர்ச்சியுடன் கேட்டான்.

''அங்கு ஒருவரை எதிர்பார்க்கிறேன். அவரைச் சந்திக் வேண்டும்'' என்றான் இளவழுதி.

சென்ற இரவில் தானும் அரசியும் பேசியதை அப்படியே திருப்பி இளவழுதி சொன்னதைக் கேட்டு அதிர்ச்சி அடைந் அஹமத் அலை அரசியை நாடிச் சென்றான். அப்பொழுதுதா அறையிலிருந்து ஆடைகள் நெகிழ தலைவிரிகோலமா வெளியே வந்த அரசி அறைக் கதவில் சாய்ந்து நின்றாள் அஹமதின் முகத்திலிருந்த அச்சத்தைக் கவனித்த அரசி, ''என் விசேஷம் அஹமத்?'' என்று வினவினாள்.

நேற்றிரவு நாம் பேசியதை இளவழுதி கேட்டிருக்க வேண்டும் நமது திட்டத்தையே திருப்பி நமக்குச் சொல்கிறான்'' என்றா அஹமத்.

''ஒருக்காலும் இருக்காது. நாம் பேசியபோது நல் உறக்கத்திலிருந்தார். உள்ளே சென்று நான் எழுப்பியும் சுலபத்தி எழுந்திருக்கவில்லை'' என்று சொல்லி நகைத்தாள்.



அஹமதுக்கு மட்டும் நம்பிக்கை ஏற்படவில்லை. தமிழன் ஏதோ தந்திரத்தில் ஈடுபட்டிருக்கிறான் என்று அவனுக்குத் தெளிவாகவே தெரிந்தது. மரக்கலத்திலிருந்து அரசியுடனும் இளவழுதியுடனும் கரைக்கு வந்த பிறகு அவன் சந்தேகம் மேலும் வலுத்தது. வடகரையில் சங்கமமாகும் சேரவாற்றின் காடு அடர்ந்த இடத்துக்கு அவர்களை இளவழுதி அழைத்துச் சென்ற பின்பு அஹமதின் சந்தேகம் பெரிதும் வலுத்தது. அப்பொழுது ஆற்றின் கரையில் நடந்து வந்த மனிதனைக் கண்டதும் இளவழுதி தங்களை மோசம் செய்துவிட்டதை சந்தேகமற உணர்ந்து கொண்டான் அஹமத்.

இளவழுதி மட்டும் எந்தக் கவலையையும் குழப்பத்தையும் காட்டாமல் எதிரே வந்து கொண்டிருந்த மனிதனை நோக்கி அரசியின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்து எதிரே வந்தவனை அணுகியதும் அரசியை மண்டியிடச் செய்து தானும் மண்டியிட்டு வணங்கினான்.

எதிரே வந்தவன் கண்களில் விஷமம் தாண்டவமாடியது. ''எங்கு வந்தாய் இளவழுதி? இது யார்? உன் மனைவியா?'' என்று அவன் வினவி, ''நமது மாளிகைக்கு உன் மனைவியை அழைத்து வா'' என்று உத்தரவிட்டு நடந்தான்.

## 11. பறவைகளை ஈர்த்த பாவை

வடகரைத் துறைமுகத்தில் இறங்குவதை முன்னதாகவே முடிவு செய்துவிட்ட அரையன் இளவழுதி, ஒரு நாள் முழுவதும் நிலத்தில் தங்க சகல ஏற்பாடுகளையும் செய்த பிறகே மரக்கலத்திலிருந்து கரைக்கு வந்தான். ஆதலால், அவனுக்கும் மற்றவர்களுக்கும் தேவையான உடை முதலியவற்றை இரண்டு மாலுமிகள் சுமந்து வந்தார்கள். அரசிக்கு வேண்டிய ஆடைகளையும் அவனே தேர்ந்தெடுத்து மாலுமியொருவனிடம் கொடுத்து, ''இது அரசியின் உடை, எச்சரிக்கையுடன் எடுத்துவா'' என்றும் உத்தரவிட்டான். இப்படி அவன் அரசியிடம் அதிகப்படியான உற்சாகத்தையும் பொறுப்பையும் காட்டியது அஹமதுக்குப் பிடிக்காவிட்டாலும் அவன் தனது வெறுப்பை வெளிக்குக்காட்டாமலே நடந்து கொண்டான். முதியவன் பெருவழுதி மரக்கலத்தைவிட்டு இறங்கினால் போதுமென்று நினைத்திருந்ததால் பேரன் போக்கைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவுமில்லை. அவன் அரசிக்குக் காட்டிய தனிபரிவைப்பற்றி எந்தவித உணர்ச்சியை வெளிப்படுத்தவுமில்லை.

இளவழுதி மட்டும் மிகுந்த உற்சாகத்தைக் காட்டியும், வடகரைச் சிறப்புகளை அரசிக்கும் அஹமதுக்கும் விவரித்துச் சொல்லிக்கொண்டும் கரையில் இறங்கியவன் ''அரசி! நீ இதுவரை கண்டிராத அற்புதங்களை இந்த வடகரையில் காண்பாய். இதன் கோட்டை மேலைக்கடலோரத்தில் மிகுந்த வலுவுடையது. சுமார் ஆயிரம் சேர வீரர்கள் இந்தக் கோட்டையைச் சுற்றிலும் எப்பொழுதும் நடமாடிக் கொண்டிருப்பார்கள். சேரமன்னரும் ஆற்றங்கரையிலுள்ள காடுகளில் அடிக்கடி வேட்டையாட வந்து கோட்டையில் தங்குவார். ஆற்றங்கரையின் இருபுறத்திலுமுள்ள காடு மிக அடர்த்தியானது. அங்கு எது நடந்தாலும் வெளியில் தெரியாது'' என்று கூறிவிட்டு அரசியை அழைத்துக்கொண்டு



வடவாற்றுக் கரையோரமாகக் கிழக்கு நோக்கி நடந்து சாட்டின் அடர்த்தியான ஒரு பகுதிக்கு வந்ததும், ''அரசி! ஆற்றின் இந்தப்பகுதி சேர அரச குடும்பத்தார் நீராடுவதற்காக ஏற்பட்டது. இங்கு நீராட்டத்தை முடித்துக்கொள்'' என்று கூறி மூட்டைகளை இறக்க மாலுமிகளுக்கு உத்தரவிட்டான்.

மாலுமிகள் இறக்கிய மூட்டைகளிலிருந்து அரசியின் உடைகளை எடுத்த இளவழுதி, ''அஹமத்! நீயும் என் தாத்தாவும் அக்கரையிலுள்ள மறைவில் நீராடுங்கள். ஆற்றைக் கடந்து செல்ல அணை இருக்கிறது'' என்றான்.

''நான் குளிக்கப் போவதில்லை'' என்றான் அஹமத் சீற்றத்துடன்.

''உன் இஷ்டம். அவரவர் பழக்கம் அவரவர்களுக்கு'' என்ற இளவழுதி பாட்டனாரும் மற்றவர்களும் நீராட உத்தரவிட்டான்.

தான் மட்டும் அரசி நீராடிய பகுதியிலிருந்து சிறிது தள்ளி மரங்களால் மறைக்கப்பட்ட துறையில் இறங்கி நீராடி மாற்றுடை அணிந்து அரசியை நாடிச் சென்றான். அவன் அவள் இருந்த துறையை அடையும் முன்பாகவே நீராட்டத்தை முடித்துக்கொண்டு மாற்றுடையணிந்து கரையேறிவிட்ட அரசி தனது தலையை சீப்பொன்றால் சீவி முடித்துக்கொண்டிருந்தாள். அவள் கண்ணாடியின் உதவியின்றி தலையைச் சீவிக் கொண்டையிட்ட அழகைப் பார்த்து பிரமித்த இளவழுதி பக்கத்துச் செடியிலிருந்து ஒரு மலர்க்கொத்தை எடுத்து அவள் குழலில் சொருகி, ''அரசி உன்னைப் பார்த்தால் எப்படியிருக்கிறது தெரியுமா?'' என்று குரலில் ஆவல் துள்ளக் கேட்டான்.

''எப்படியிருக்கிறது?'' என்று வினவி அவனுக்கு முதுகைக் காட்டித் திரும்பிய அரசி, ''பூங்கொத்தை சரியாகச் சொருகுங்கள்'' என்று கூறி அதை எடுத்து அவனிடம் கொடுத்து அதைச் சொருக வேண்டிய இடத்தையும் காட்டினாள்.

அவள் அழகிய குழலைப் பார்த்து மயக்கம் கொண்ட இளவழுதி அவள் காட்டிய இடத்தில் பூங்கொத்தைச் சொருகி, அவள் அழகிய தோள்களைத் தனது இரு கைகளாலும் பிடித்து புஷ்பத்தை முகரவும் செய்தான். அவள் மெதுவாக அவன்மீது சாய்ந்தாள். தனது பூவுடலின் முதுகுப்புறம் அவன்மீது நன்றாகவேபட, அவள் சமீபமும் புஷ்பத்தின் நறுமணமும் இளவழுதியின் சித்தத்தை மயக்கவே அவள் தோள்மீது முகத்தை வைத்து, "அரசி! உன் இயற்கையழகே போதும் என்னை மயக்க; அப்படியிருக்க அந்த வைரம் எதற்கு?" என்று வினவினான்.

அவள் சற்றே திரும்பி தனது மோகனப் பார்வையை அவன்மீது நிலைக்கவிட்டாள். "நீங்கள் இப்படிப் புகழ்ந்தால் எனக்கு கர்வம் உண்டாகிவிடும். அதிகப்படியாக ஏதும் சொல்லாதீர்கள்" என்று குழைந்தாள். அத்துடன் அவனது கையுடன் தனது கையையும் கோர்த்துக் கொண்டாள். அந்த நெருக்கமான நிலையில் ஆற்றங்கரையோரமே நடந்து சென்ற இளவழுதி பகல் மிகவும் ஏறிவிட்டதைக் கவனித்தான். காடு எங்கும் மரங்களின் அசைப்பினால் ஏற்பட்ட சலசலப்பு அதிகமாயிற்று. கிள்ளைகளும், மைனாக்களும் சிறகடித்து மரங்களிலிருந்து கூவின. கொண்டை பெரிதாக இருந்த சிறு பறவை மரக்கிளையிலிருந்து அவர்களை உற்றுநோக்கி இருமுறை தலையை மாற்றி மாற்றி ஆட்டியது.

சுற்றிலுமிருந்து மலர்ச்செடிகளையும் மரங்களில் தாவித் தாவிக் கூவிய கிள்ளைகளையும் குருவி, மைனா இனங்களையும் பார்த்து அரசியையும் பார்த்த இளவழுதி "இந்த இயற்கைச் சூழ்நிலையில் நீ எத்தனை அழகாகப் பொருந்துகிறாய்! இந்தக் குருவிகளும் கிள்ளைகளும் எப்படிக் கூவுகின்றன!" என்று வியப்புடன் வினவினான். அரசி கையை நீட்டியதும் அதில் வந்து உட்கார்ந்த மைனாவைப் பார்த்து பிரமித்தான். "அரசி! பறவைகளையும் வசீகரம் செய்ய என்ன மந்திரம் வைத்திருக்கிறாய்?" என்று வினவவும் செய்தான்.



அரசி பதிலேதும் சொல்லாமல் கலகலவென்று நகைத்தாள். "அன்புள்ள உள்ளத்தைவிட பெரிய வசீகர மந்திரம் எதுவுமில்லை. இதோ பாருங்கள்" என்று கூறி மற்ற பறவைகளையும் அழைத்தாள். பற்பல சிறு பறவைகள் அவள் தலையிலும் தோள்களிலும் உட்கார்ந்ததைக் கண்ட இளவழுதியின் பிரமை உச்ச நிலைக்குச் சென்றது. அவன் பிரமிப்பைக் கண்ட அரசி அந்தப் பறவைகளைத் தனது கையால் எடுத்து எடுத்து மரக்கிளைகளில் விட்டு மேலே நடந்தாள். பிரமை விலகாமலே இளவழுதி நடந்த சமயத்தில் தான் அந்த மனிதன் எதிரே ஆற்றங்கரை ஓரமாக நடந்து வந்தான். அவன் ஆஜானுபாகுவான சரீரத்தையும், கண்களில் சதா சுடர்விட்ட வீர ஒளியையும் கவனித்த அரசி சட்டென்று நடையைத் தளர்த்தினாள்.

அவள் அப்படி திடீரென நடையைத் தளர்த்தியதை அந்த மனிதனும் கவனித்திருக்க வேண்டும். அதன் விளைவாக அவன் இதழ்களில் புன்முறுவலொன்று படர்ந்தது. அவன் தோளில் இருந்த ஒரு வில்லும், தோளுக்குப் பின்பு ஆடிய அம்பறாத்தூளியும், அரையில் சொருகியிருந்த குறுவாளின் மாணிக்கப் பிடியும் அவன் பெரிய பதவியிலிருப்பவன் என்பதை நிருபித்தன.

அவனைக் கண்டதும் அரசியைக் கையைப் பிடித்து அவனிடம் அழைத்துச் சென்று மண்டியிட்ட இளவழுதியை அன்புடன் நோக்கிய அந்த மனிதன் "மாளிகைக்கு உன் மனைவியுடன் வந்து சேர்" என்று சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகளே சொல்லி நடந்து விட்டான்.

அந்த மனிதன் போவதை வியப்புடன் பார்த்த அரசி "அந்த மனிதன் என்னை உங்கள் மனைவி என்று எப்படிச் சொன்னான்?" என்று வினவினாள்.

"நாமிருக்கும் நிலையைப் பார்த்துச் சொல்லியிருக்கலாம்" என்ற இளவழுதி, "நமக்குள் வேறு எவ்வித உறவிருக்க முடியும்?" என்று வினவி, நகைத்தான்.

இளவழுதியை அரசி உக்கிரமாகப் பார்த்தாள். ''அவன் அழைப்புக்கு நாம் ஏன் இணங்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''வேறு வழியில்லை. அது அழைப்பல்ல, கட்டளை'' என்றான் இளவழுதி.

''எனக்குக் கட்டளையிட அவர் யார்?'' என்று கேட்டாள் அரசி சீற்றத்துடன்.

''மாளிகைக்குப் போனதும் புரிந்து கொள்வாய்!'' என்றான் இளவழுதி.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் அஹமதும், பெருவழுதி முதலியோரும் அவர்களிடம் சேர்ந்து கொள்ளவே மாளிகைக்குப் போவதா அல்லவா என்ற தர்க்கம் நடந்தது. ''அரசி யார் உத்தரவுக்கும் கட்டுப்படத் தேவையில்லை'' என்று அஹமத் சீறினான்.

''தேவை உண்டு, மரக்கலத்துக்குத் திரும்ப வேண்டுமென்றால்'' என்று சொன்ன இளவழுதி, ''அஹமத்! உன் அதிகாரம் இங்கு செல்லாது. மந்திரசக்திகூடப் பயன்படாது'' என்று சுட்டிக்காட்டினான்.

அதற்குப் பதில் சொல்லும் வகையில் குரூரமாக நகைத்த அஹமத், ''நானும் அரசியும் மரக்கலத்திற்குத் திரும்புகிறோம். நீங்கள் வந்தால் வாருங்கள்'' என்றுகூறி கடற்கரையை நோக்கி நடக்க முற்பட்டான்.

அவனை அரசியோ மற்றவர்களோ பின்தொடராததால் மிகுந்த சினத்தின் வயப்பட்ட அஹமத், ''அரசி! வருகிறாயா, இல்லையா?'' என்று சீறினான்.

அரசியின் முகத்தில் சிறிது குழப்பம் தெரிந்தது. தனது நெற்றி வைரத்தில் கைவைத்து ஏதோ சிந்தித்தாள். பிறகு சொன்னாள். ''நீ போ அஹமத். நான் இவர்களுடன் மாளிகைக்குப் போய் வருகிறேன்'' என்றாள்.



அஹமதின் முகத்தில் கோபம் மிதமிஞ்சித் தெரிந்தது. ''அரசி! இங்கு உனக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் நான் பொறுப்பாளியல்ல'' என்று சொன்னான்.

இப்படிச் சொல்லிவிட்டு நடக்க முயன்றவன் ஏதோ யோசனை உதிக்கவே ''இப்படித் தவிர்க்க முடியாத உத்தரவை இட்ட அந்த மனிதன் யார்?'' என்று கேள்வியை வீசினான்.

அதற்குப் பதில் ஒரு பெரிய புதரின் மறைவிலிருந்து வந்தது. ''இந்த நாட்டு மன்னன். நெடுஞ்சேரலாதன்'' என்று சொன்ன ஒரு மனிதர் புதரின் மறைவிலிருந்து வெளியில் வந்தார்.

அவரைக் கண்டதும் அஹமத், அரசி இருவரும் மட்டுமன்றி எல்லோருமே மண்டியிட்டு வணங்கினார்கள். சுமார் ஆறடி உயரத்துடனும் சிவந்த மேனியுடனும் உடல் முழுவதும் திருநீறு பூசி, நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுடனும், பக்கவாட்டில் தலையில் தொங்கிய முன்சிகை முடியுடனும், இடுப்பில் வெள்ளையான சிறிய முண்டுடனும், கழுத்தில் மணித்தாவடங்களுடனும், கையில் கமண்டலத்துடனும் காணப்பட்ட அந்த மனிதனைப் பார்த்து அரசி பிரமித்தாள். ''தாங்கள்...?'' என்று ஏதோ கேட்டாள்.

''உங்கள் மதகுருவின் நண்பன்'' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு அவர் மாளிகையை நோக்கி நடக்கலானார்.

இளவழுதி அதிர்ச்சியுற்று நின்றான். பெருவழுதி முகத்தில் அச்சம் விரவி நின்றது. ''கேரள பெரிய மந்திரவாதி!'' என்று முணுமுணுத்தார்.

# 12. நெடுஞ்சேரலாதன்

எந்தவிதமான படாடோபமுமில்லாமல் சாதாரண வேட்டைக்காரன் போல் உடையணிந்து தங்களை அரண்மனைக்கு வரும்படி அழைத்துவிட்டுச் சென்ற சேரமான் நெடுஞ்சேரலாதனையும், சாட்சாத் புராண ரிஷிகளைப் போல் பளபளத்த தேகசாந்தியுடனும் உடலெங்கும் பூசிய விபூதி, ருத்ராக்ஷம், நவரத்தின மாலை, துளசி மணிமாலை ஆகிய மணித் தாவடங்களை அணிந்தும் தங்களைச் சந்தித்து நடந்துவிட்ட கேரள பெரிய மந்திரவாதியையும் அடுத்தடுத்து சந்தித்ததால் பிரமிப்பின் வசப்பட்ட இளவழுதியும் பெருவழுதியும் சில விநாடிகள் பேச்சிழந்து நின்று விட்டார்கள். அத்துடன், அந்த மந்திரவாதி தங்கள் மதகுருவின் நண்பர் என்று தம்மை அறிவித்துக் கொண்டதால் அரசியும் அஹமதும் திகைப்படைந்து தங்கள் மதகுரு சொன்னபடி சகலமும் நடப்பதால் பெரிய மந்திரவாதியிடம் மதிப்பும், அச்சமும் கொண்டு அவரைச் சந்திக்க அரண்மனை செல்ல முடிவு செய்தார்கள். ஆகவே "அன்பரே! அரண்மனைக்கு வழிகாட்டுங்கள்" என்று அரசி இளவழுதியை நெருங்கிக் கூறினாள்.

"அதற்குமுன்பு வடகரை நகரத்தையும் துறைமுகத்தையும் பார்த்தாலென்ன?" என்று வினவினான் இளவழுதி.

"அதையெல்லாம் பிறகு வைத்துக் கொள்வோம் முதலில் மன்னன் ஆசையையும் மதகுரு நண்பரின் கட்டளையையும் நிறைவேற்றுவோம்" என்று அஹமத் சொன்னான்.

அஹமதை அறவே வெறுத்த முதியவனான பெருவழுதி கூட "அஹமத் சொல்வதுதான் சரி. முதலில் அவர்கள் கட்டளைகளுக்குப் பணிவோம். பிறகு நகரைப் பார்க்கலாம்" என்று அஹமதுடன் ஒத்துப் பாடினான்.



இளவழுதி சற்று ஏதோ சிந்தித்தான். "மன்னர் அரண்மனைக்குப் போகவேண்டுமானால் வந்த வழியிலேயே திரும்பித்தான் ஆற்றைக் கடக்க வேண்டும்" என்று கூறித் திரும்பி மற்றவர்களுக்கு வழி காட்டி நடந்தான்.

ஆற்றங்கரை வழி அடுத்திருந்த மலையின் காரணமாகக் கற்கள் ஆங்காங்கு எழுந்து கரடு முரடாயிருந்ததால் சிறிது சிரமப்பட்டே அதில் நடக்கவேண்டியதாயிருந்தபடியால் அலை அரசியின் கையைப் பிடித்துக்கொண்ட இளவழுதி, "அரசி! கீழே பார்த்து நட, உன் கால்களில் கல் குத்தப்போகிறது" என்று கூறி மிகுந்த ஜாக்கிரதையுடன் அவளை அழைத்துச் சென்றான்.

"ஏன் எங்கள் கால்களில் கல் குத்தாதோ?" என்று வெறுப்புடன் கேட்டான் அஹமத்.

"காலுக்குக் கால் வித்தியாசமுண்டு" என்று பதில் சொல்லிக்கொண்டே நடக்கலானான் இளவழுதி.

"என்ன வித்தியாசமோ?" என்று எரிச்சலுடன் கேட்டான் அஹமத்.

"பூவுக்கும் முள்ளுக்கும் உள்ள வித்தியாசம்" - இதை அலட்சியமாகச் சொன்னான் இளவழுதி நடந்து கொண்டே.

"என் கால் முள்ளா?"

"உன் கால் மட்டுமென்ன, உன் உடல், உள்ளம் எல்லாமே முள்தான்."

"இளவழுதி! பேசுவதை யோசித்துப் பேசு."

"சில விஷயங்களைப் பற்றி யோசிக்கத் தேவையில்லை" என்று கூறிக்கொண்டே சென்றவன் திடீரென்று திரும்பி அரசியை தனது கையால் தூக்கிக் கொண்டான். "இந்த இடத்தில் ஆற்றைக் கடக்க வேண்டும். இங்கு ஒரு காலத்தில் பாலமிருந்ததால் அதன்

இடிந்த கற்கள் இந்த இடத்தில் தங்கி இங்கு ஆழத்தைக் குறைத்திருக்கின்றன. இருப்பினும் அந்தக் கற்கள் உருளக் கூடியவை. பார்த்து வாருங்கள்'' என்று மற்றவர்களுக்குக் கூறிவிட்டு அரசியைக் கையில் தாங்கிய வண்ணம் ஆற்றில் இறங்கி நடந்தான். உண்மையில் அந்த இடத்தில் ஆழமேயில்லை. உருண்ட மலைக் கற்கள் மட்டும் ஆங்காங்கு தங்கி பழைய அணையின் இருப்பிடத்தைக் காட்டிக் கொண்டிருந்தன. ஆங்காங்கு முழங்கால் மட்டுமே இருந்த ஆழத்தில் இறங்கியும் கற்களில் லாகவமாகக் கால்களை வைத்தும் ஆற்றை மெதுவாகத் தாண்டிய இளவழுதி அக்கரைக்குச் சென்றதும் பின்னால் வந்தவர்களைத் திரும்பிப் பார்த்தான். பலமுறை அந்த ஆற்றை அதே இடத்தில் கடந்திருக்கும் பெருவழுதி அனாயசமாக வந்து கொண்டிருந்தான். அஹமதும் மற்ற மாலுமிகளும் மிகுந்த அவஸ்தைப்பட்டும் ஓரிரு இடங்களில் கல் உருண்டதால் தங்களைத் திடப்படுத்திக் கொண்டும் மிகவும் கஷ்டப்பட்டே வந்தார்கள்.

அவர்கள் வருகையைக் கவனித்துக் கொண்டிருந்த இளவழுதி அக்கரையை அடைந்த பின்பும் அரசியைக் கீழே விடாமல் கைகளில் தாங்கியே நின்றிருந்தான். ''என்னைக் கீழே விடுவதுதானே?'' என்றாள் அலைஅரசி சற்று நாணத்துடன்.

''மாட்டேன்'' என்றான் இளவழுதி.

அதைக் கேட்டுக் கொண்டே கரையேறி வந்த பெருவழுதி ''அவளைத் தலையில் தூக்கி வைத்துக் கொள்வது தானே?'' என்றார் வெறுப்புடன்.

''உங்கள் உத்தரவு தாத்தா'' என்ற இளவழுதி அவளைச் சற்று உயரத் தூக்கினான்.

''சும்மா இருங்கள். உங்கள் தலைமேல் உட்கார முடியாது'' என்று சீறினாள் அரசி.



''அப்படியானால் தாத்தா தலையில் உட்கார வைக்கட்டுமா?'' என்று கேட்ட இளவழுதி நகைத்தான்.

அவன் நகைப்பைக் கேட்டதாலும், இளவழுதி இருந்த மோக நிலையாலும் அவன் எதையும் செய்வான் என்பதை உணர்ந்த பெருவழுதி சற்று நகர்ந்து கொண்டான்.

இதைக் கண்ட இளவழுதி மீண்டும் நகைத்து அரசியைக் கீழே இறக்கி ''வா அரசி! இனி வழி மிக மிருதுவாயிருக்கும்'' என்று கூறி வடக்கு நோக்கி நடந்தான்.

அவன் கூறியது சரியாகவே இருந்ததை அரசி கண்டாள். அந்த மலைப்பாங்கான இடத்திலும் தரை ஓரளவு சமமாகவும் புற்கள் நிறைந்ததாகவும் இருந்தது. அடுத்தடுத்து நெருக்கமாக இருந்த மலர்ச் செடிகள் காற்றில் ஆடி தங்கள் மலர்க்கரங்களால் அவள் கன்னங்களைத் தடவின. அடுத்தடுத்து பக்ஷிஜாலங்கள் குறுக்கே பறந்து இன்பமாகக் கூவின. இயற்கையின் இந்த சாம்ராஜ்யத்தை அனுபவித்துக் கொண்டே நடந்த இளவரசி திடீரென நடையை நிறுத்தினாள். அவள் இருந்த இடத்திலிருந்து நூறு அடி தூரத்தில் மன்னன் மாளிகை திடீரென கண்முன்பாக எழுந்தது. அதன் அமைப்பைப் பார்த்து பெரிதும் வியந்த அரசி அதன் அழகில் லயித்து நீண்ட நேரம் நின்று விட்டாள்.

தூரத்தே தெரிந்த அந்த மாளிகையின் முற்பகுதி முழுவதும் நன்றாக வெள்ளை அடிக்கப்பட்டு பளிங்குக் கல்லைத் தோற்கடிக்கும் வெண்மையுடனும் வழவழப்புடனும் காணப்பட்டது. முகப்பிலிருந்த பெரிய ஆசார வாசலின் தூண்கள் இரண்டு பக்கங்களிலுமிருந்த மரமல்லி மரங்களின் உயரத்தில் முக்கால் பங்கு இருந்ததால் மரமல்லி மலர்கள் வாயிலில் அடர்த்தியாக விழுந்து வெண்பட்டாடை விரித்திருந்தது. அந்த அரண்மனையின் வாயிலில் காவல்காரர் யாருமே இல்லையென்பதையும், ஒரே ஒரு வெண்புரவி மட்டும் கடிவாளம்

ஏதுமில்லாமல் சுதந்திரமாகப் புல்லை மேய்ந்து கொண்டிருந்ததையும் கவனித்த அரசி இளவழுதியை நோக்கி "இதுதான் மன்னன் மாளிகையா?" என்று வினவினாள்.

"ஆம்" என்ற இளவழுதியின் குரலில் பெருமை இருந்தது.

"இங்கு காவலர் யாருமில்லையே?" என்றாள் அரசி வியப்புடன்.

"உள்ளே எங்காவது இருப்பார்கள்."

"எத்தனை பேர்?"

"நாலைந்து பேர்."

"அவ்வளவுதானா?"

"ஆம்."

"அரசருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால்?"

"சேர மன்னருக்கா!"

"ஆமாம்."

"அவருக்குத் தீங்கு விளைவிக்க யாருக்கு சக்தியிருக்கிறது?"

"திடீரென பகைவரால் வளைக்கப்பட்டால்?"

"பகைவர் நிர்மூலமாக்கப்படுவார்கள்."

இதைக் கேட்ட அரசி முகத்தில் பெருவியப்பைக் காட்டினாள். "உங்கள் அரசரென்ன மந்திரவாதியா?" என்று வினவினாள்.

"அரசி! இங்கு பெரிய மந்திரவாதி ஏன் வருகிறார் தெரியுமா?" என்று கேட்டான் இளவழுதி.

"ஏன்?" - ஏதும் விளங்காத குரலில் கேட்டாள் அரசி.

"அரசரிடம் மந்திரம் கற்க வருகிறார்" என்றான் இளவழுதி.



அரசியின் பிரமிப்பு அதிகமாயிற்று. "என்ன! இன்னொருமுறை சொல்லுங்கள். அரசரிடம் மந்திரம் கற்க, உங்கள் பெரிய மந்திரவாதி வருகிறாரா?" என்றாள் அரசி.

"ஆம்" - இதைத் திட்டமாகச் சொன்ன இளவழுதி, "வா அரசி நாம் போவோம் அரண்மனைக்கு" என்றுகூறி இரண்டடி அரண்மனையை நோக்கி காலெடுத்து வைத்தவன் சட்டென்று நிலைத்து நின்று விட்டான்.

"ஏன் நின்று விட்டீர்கள்?" என்று வினவினாள் அரசி.

அவன் பதில் சொல்ல அவசியமில்லாது போயிற்று. மாளிகைக்கு எதிரே ஒருபுறமாகப் புல் மேய்ந்து கொண்டிருந்த வெண் புரவி திடீரென தலைநிமிர்ந்து எதையோ உற்றுக்கேட்டது. பிறகு திரும்பி அரசியைப் பார்த்தது. அடுத்து அவளை நோக்கி ஒரே பாய்ச்சலில் பாய்ந்துவந்து அவளருகில் நின்று தனது கன்னத்தை அவள் கன்னத்துடன் இழைத்தது. "அரசி! உனக்கு அரசரின் அழைப்பு வந்துவிட்டது. புரவியில் ஏறிக்கொள்" என்றான் இளவழுதி.

"கடிவாளம் ஏதுமில்லையே. எப்படி இதைச்செலுத்துவது?" என்றாள்.

"ஏதும் தேவையில்லை. உன்னைப் பத்திரமாகத் தாங்கிச் செல்லும்" என்ற இளவழுதி அவளைத் தூக்கிப் புரவிமீது உட்கார வைத்தான்.

புரவி முதுகை நன்றாக வளைத்துக்கொடுத்து அவள் உட்கார வசதி செய்து, அவளைத் தாங்கி ராஜநடை போடவும் செய்தது. மாளிகையை அடைந்ததும் வாயிலுக்கு நேராகத் திரும்பி பக்கவாட்டில் அரசி இறங்கவும் வழி செய்தது. அவள் இறங்க முற்படுமுன்பாக சேரமான் நெடுஞ்சேரலாதனே உள்ளிருந்து வந்து அவள் கையைப் பிடித்துக் கீழே இறக்கிவிட்டதும் சற்றே அண்ணாந்து பார்த்தாள். முகப்பிலிருந்த இரண்டு மரமல்லி

மரங்களும் கிளைகளை அசைத்து மலர்களை அவள் தலைமீது உடல் மீதும் பொலபொலவென்று உதிர்த்தன. அடுத்து அவ... கையை பிடித்து மன்னன் அவளை உள்ளே அழைத்துச்சென்றா... வாயிற்படியைக் கடக்குமுன்பு ஒருமுறை திரும்பி தூரத்தே நி... கொண்டிருந்த இளவழுதியை நோக்கி ஏதோ சைகை செய்துவி... உள்ளே சென்றான். மீண்டும் அரண்மனைக் கதவுகள் தாமாகவே மூடிக்கொண்டன.

இந்த விந்தையைப் பார்த்து பிரமித்து நின்றுவிட்... பெருவழுதியையும் மற்றவர்களையும் அழைத்துக்கொண்... மாளிகையின் பின்புறத்துக்குச் சென்றான் இளவழுதி. பெரி... மந்திரவாதி அவர்களை எதிர்கொண்டு, உள்ளே அழைத்து... சென்று, இரண்டு அறைகளைக் காட்டி, "இங்கு தங்கி இருங்கள்... பூஜை சமயத்தில் உங்களுக்கு அழைப்பு வரும்" என்று கூறி... சென்றார்.

அடுத்து இரண்டு நாழிகைகள் கழித்து இரண்டு பணி மக்கள் வந்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்கள். கிழக்கிலிருந்த ஒரு பெரிய அறைக்கு வந்ததும் கதவுகள் மூடியிருந்ததால் அவர்கள் சிறிது நேரம் நிற்க வேண்டியதாயிற்று. பிறகு கதவுகள் மெதுவாகத் திறந்தன. உள்ளே அவர்கள் கண்ட காட்சி அச்சத்தை விளைவித்ததா அதிர்ச்சியைத் தந்ததா என்று விவரிக்க முடியாமல் இருந்தது.

நட்ட நடுவில் சக்தி தேவியின் சிலை இருந்தது. அதன் திருவடிகளில் அரசி தலைவைத்துக் கிடந்தாள். நெடுஞ்சேரலாதன் கையில் வில்லேந்தி அம்பு பூட்டி அவளை நோக்கிக் குறிவைத்துக்கொண்டு நின்றிருந்தான்.

## 13. மந்திரக் காட்சிகள்

பூஜை அறையின் கதவுகள் திறந்ததுமே உள்ளே தெரிந்த அச்சுறுத்தும் காட்சியைக் கண்ட இளவழுதி, பெருவழுதி, அஹமத் மூவரும் சிலவிநாடிகள் செயலற்று நின்றுவிட்டார்களென்றால் அதற்குக்காரணம் இருக்கவே செய்தது. நன்றாக விகசித்த சீரிய உக்ரம் ததும்பும் சக்தி தேவியின் விழிகளும், அவள் கையில் ஏந்தியிருந்த திரிசூலமுமே அச்சத்தை விளைவிப்பதாயிருந்த தன்றி, அரசி சக்தியின் பாதத்தில் தலைவைத்து விழுந்த கிடந்த நிலையும், நெடுஞ்சேரலாதன் தனது நெடிய கைகளில் வில்லின் நாணில் தொடுக்கப்பட்ட வாளியுடன் நின்ற தோற்றமும், அந்த வாளியும் அரசியின் முதுகை நோக்கிக் குறிவைக்கப்பட்டிருந்த திடமும் அதிர்ச்சியைத் தந்தது. அடுத்து நிகழக்கூடியது என்ன என்பது யாருக்கும் புரியாததால் உள்ளே நுழைந்த மூவரும் வாயிற்படிக்கு அருகிலேயே நின்று விட்டனர். அவர்களுடன் கூட வந்த பணிமக்கள் மட்டும் வாயிற்படிக்கு வெளியே நின்றாலும், அங்கேயே நிற்பதா, ஓடிவிடுவதா என்பது புரியாமல் திருதிருவென்று விழிக்கலாயினர்.

இப்படிப் பூஜை அறையின் சூழ்நிலையால் மற்றவர்கள் பிரமை பிடித்து நின்றிருந்த சமயத்தில் சக்தி சிலைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கேரளத்தின் பெரிய மந்திரவாதி பெரிய கற்பூரக் கட்டியைத் தனது உள்ளங்கையில் வைத்து அருகிலிருந்த குத்துவிளக்கு ஜ்வாலையில் அதை ஏற்றி கற்பூரச் சுடரை நிதானமாக தேவிக்குக் காட்டி 'ஓம் ஹ்ரீம் சங் கரீம்' என்ற மந்திரத்தைப் பெரிதாக ஓதினார். இப்படி மூன்றுமுறை கற்பூர தீபத்தை மற்றவர்கள் ஒத்திக்கொள்ள கையிலேயே ஏந்தி வந்தார். நன்றாக எரிந்த அந்த கற்பூரக் கட்டியின் ஜ்வாலை பெரிய மந்திரவாதி கையில் எந்தவித அடையாளத்தையும் செய்யாததை கண்ட இளவழுதி மாத்திரமன்றி பெருவழுதி, அஹமத், மூவருமே

ஆச்சரியத்தின் எல்லையை அடைந்தனர். பெரிய மந்திரவாதியும் கற்பூரக்கட்டியை பனிக்கட்டியை ஏந்துவதுபோல் எந்தவித உணர்ச்சியுமின்றி ஏந்தி சுற்றி வந்து கடைசியில் தேவியின் சிலைக்கு முன்பாகத் தரையில் சமர்ப்பித்தார்.

அடுத்து அவர் நெடுஞ்சேரலாதனை நோக்கி, ''மன்னவா அரசியை பலிகொடுப்பதை தேவி ஒப்புக் கொள்ளுகிறாளா அல்லவா என்பது தெரிய வேண்டும்? எதற்கும் நீ அம்பை எய்து விடு'' என்று உத்தரவிட, மன்னன் நாணை காது வரையில் இழுத்து வாளியை எய்தான். நாணை இழுத்தபோதே ''மன்னவா நில்லுங்கள்'' என்று இளவழுதி கூவியதையும், மன்னனை நோக்கி குறுவாளை வீச அஹமத் இடைக்கச்சையிலிருந்து குறுவாளை எடுத்துக் கொண்டதையும் கண்ட பெரிய மந்திரவாதி சிறிதும் கலங்காமல் சக்தி தேவியை விட்டு அகலாமல் உட்கார்ந்திருந்தார்.

அடுத்து ஏற்பட்ட அற்புத நிகழ்ச்சி அனைவரையும் ஸ்தம்பிக்க செய்துவிட்டது. சேரமன்னன் அம்பு அரசியின் முதுகில் பாய்ந்தது இளவழுதியின் பயங்கரக் கூச்சல், அஹமதின் குறுவாள் அவன் கையில் தோன்றியது எல்லாமே ஒரே சமயத்தில் நிகழ்ந்தாலும் அவற்றின் முடிவும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தது.

அஹமத் வீச முயன்ற குறுவாள் அவன் கையை விட்டுக் கிளம்பவில்லை. இளவழுதியின் கூக்குரல் அந்த பூஜை அறை முழுதும் சுவர்களில் தாக்கி எதிரொலி செய்தாலும் அந்த எதிரொலியும் விநாடியில் அடங்கியது.

அனைவர் கண்களும் அரசியின் முதுகைக் கவனித்து, அதில் அம்புதைத்து கிடுகிடுவென்று ஆடினாலும் அரசியின் முதுகிலிருந்து ஒரு துளி ரத்தம்கூட வராததையும் பார்த்து அதற்குக்காரணம் தெரியாமல் நின்றனர். இது ஏதோ தங்களுக்குப் புரியாத மந்திர ஜாலமென்று நினைத்த அஹமத், அராபிய குருநாதரின் மந்திரத்தையும் மீறிய மந்திரம் ஏதோ, சேர நாட்டில்



இருப்பதையும் புரிந்து கொண்டதால், பெரிய மந்திரவாதியிடம் அடங்கி நடந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லையென்பதை உணர்ந்து கொண்டதால் ஏதும் பேசாமல் மௌனமாயிருந்தான்.

அந்த சமயத்தில் மெல்ல நகைத்த பெரிய மந்திரவாதி ''இளவழுதி! உன் மனைவியின் முதுகிலிருக்கும் அம்பை நீயே பிடுங்கிவிடு!'' என்று உத்தரவிட்டு அருகில் வருமாறு அழைத்தார். அவர் அழைப்பைக் கேட்ட இளவழுதி அரசியை அணுகவும் அச்சப்படவே, ''அஞ்சாதே இளவழுதி!அரசி சக்தி தேவியின் அருளுக்குப் பாத்திரமாகிவிட்டாள். இனி அவளுக்கு எந்தவித குறைவுமில்லை. வா அருகே'' என்று தைரியம் ஊட்டவே இளவழுதி மெதுவாக தேவி சிலையை நோக்கிச் சென்று அரசியின் முதுகை மெதுவாகத் தொட்டுப் பார்த்து, மன்னன் வாளி ஆழமாகப் பாய்ந்திருப்பதைக் கண்டான். அதனால் நடுங்கும் கைகளுடன் மிக மெதுவாக அவள் முதுகிலிருந்த வாளியைப் பிடுங்கினான். வாளி வாழைப்பழத்தில் தைத்த ஊசிபோல் மிக நாசுக்காக வெளியே வந்துவிட்டதையும், அதன் நுனியிலும் பிடியிலும் இடைப்பகுதியிலும் குருதி சிறிதுமில்லாததையும் கவனித்த இளவழுதி பெரிதும் பிரமித்தான். வாளி பிடுங்கப்பட்டதும் வாளி தைத்த இடங்கூட அடியோடு தெரியாததைக்கண்டு இது கண்கட்டு வித்தையென்றே நினைத்தான். அந்த வாளியையும் அரசியின் முதுகையும் திரும்பத் திரும்பத் தடவிப்பார்த்த இளவழுதி அரசியின் பக்கத்திலிருந்து மெல்ல எழுந்து அஹமத் நின்றிருந்த இடத்துக்கு வந்து வாளியைக் காட்டினான். அஹமத் அப்பொழுதுதான் புரிந்து கொண்டான் அராபிய மந்திரத்துக்கு மலையாள மந்திர வித்தை சிறிதும் குறைந்ததல்ல என்று.

இந்த சோதனை தீர்ந்ததும் பெரிய மந்திரவாதி தமது கையிலிருந்த கமண்டலத்திலிருந்து மஞ்சள் நீரை எடுத்து அரசியின் மீது தெளித்ததும் அரசியின் உடல் மெதுவாக

அசையலாயிற்று. பிறகு ஒருமுறை புரண்டு எழுந்து உட்கார்ந்த அரசி அந்த பூஜை அறையைச் சுற்று முற்றும் பார்த்தாள். பிறகு மெதுவாக எழுந்து பெரிய மந்திரவாதியை நோக்கி ''நான் இத்தனை நேரம் எங்கிருந்தேன்?'' என்று கேட்டாள்.

''இங்குதான் இருந்தாய் அரசி'' என்றார் பெரிய மந்திரவாதி.

''இல்லை'' என்றாள் அரசி.

''வேறெங்கு போயிருந்தாய்?''

''அரபு நாட்டுக்கு.''

''யாரைப் பார்க்கப் போயிருந்தாய்?''

''எனது குருநாதரைப் பார்க்க.''

''அவர் என்ன சொன்னார்?''

''உங்கள் அனுமதி பெற்று பிறகு வரச் சொன்னார் அரபு நாட்டுக்கு.''

இதைக்கேட்ட பெரிய மந்திரவாதி புன்முறுவல் செய்து ''அரசி! உன் குருநாதர் மந்திரவித்தையில் தேர்ந்தவர். அவருக்கிணையாக இந்த உலகில் யாரையும் சொல்ல முடியாது. ஆனால் அவர் சத்தியம் மீறாதவர். தமது சக்தியை பிரயோகிக்க மறுப்பவர். அவர் கட்டளையை மீறுபவர் பிழைத்தது கிடையாது'' என்று சிலாகித்தார். மேலும் சொன்னார். ''உன்னையும் அஹமதையும் சில நாட்கள் இங்கேயே வைத்திருக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்'' என்று.

''என் மதகுருவா?'' என்று அரசி கேட்டாள்.

''ஆம்'' என்றார் பெரிய மந்திரவாதி.

''எப்பொழுது?'' சந்தேகம் நிரம்பிய குரலில் கேட்டாள் அரசி.



''நேற்று.''

''நேற்று அவருடன் பேசிக் கொண்டிருந்தீர்களா?''

''ஆம். நானும் மன்னனும் பேசிக் கொண்டிருந்தோம்.''

''மன்னருமா?''

''ஆமாம். மன்னரில்லாவிட்டால் நான் எப்படிப் பேச முடியும்?''

''இதற்கு மன்னர் என்ன செய்வார்?''

''உன் குருநாதரின் சிந்தனையை இங்கு இழுத்து அவர் உருவத்தையும் தோற்றுவித்தார்'' என்று பெரிய மந்திரவாதி கூறியதும் நம்பத்தகாத விழிகளை அரசன் மீது நாட்டினாள் அரசி.

அஹமதும் மற்றவர்களும் இதை அடியோடு நம்பாததை அவர்கள் முகபாவத்திலிருந்தே அறிந்துகொண்ட சேரமன்னன் ''அரசி! இன்றிலிருந்து ஏழாவது நாள் இங்கிருந்து உங்கள் நாட்டுக்குக் கிளம்பலாம் நான் சொல்வது உங்களுக்கு சந்தேகமாயிருந்தால் நீங்களே உங்கள் குரு நாதருடன் பேசலாம்'' என்று கூறினார்.

அதற்குமேல் ஏதும் பேசாத மன்னன் குருநாதரைப் பார்க்கவே குருநாதரே அவன் சார்பில் பேசினார்: ''அரசி! அஹமத்! இன்றிலிருந்து ஏழாவது நாள் சேர மன்னன், சேர நாடு முழுமைக்கும் தலைவனாகிறான். சேரநாட்டில் ஒரு வழக்கு இருந்து வருகிறது. சேர நாடு மொத்தம் எட்டுப் பிரிவாக உள்ளது. அந்த எட்டுப்பிரிவின் தலைவர்களும் தங்களுக்கு ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அந்தத் தலைவனை ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக மற்ற ஏழு பேரும் முடிப் பொன்னால் ஆரம் செய்து கழுத்தில் போட்டுக்கொள்வார்கள்.

இதைக் கொண்டுதான் முன்பு* 'எண்பேர் ஆயம்' என்ற முறையும் சொல்லும் ஏற்பட்டது. அந்த எழுவர் பொன் ஆரம் பூணும் விழா இன்றிலிருந்து எட்டாவது நாள் வருகிறது. அதற்கு நீங்களும் இருக்க வேண்டும் என்பது மன்னன் விருப்பம். உங்கள் குருநாதரின் விருப்பமும் அதுதான்'' என்று கூறிய பெரிய மந்திரவாதி கடைசியாக சக்திதேவிக்கு மங்கல ஆரத்தி எடுத்தார். விபூதி குங்குமப் பிரசாதத்தை அனைவருக்கும் அளித்தார். இளவழுதிக்கும் அரசிக்கும் தனது கைகளாலேயே விபூதியையும் குங்குமத்தையும் இட்டார்.

பிறகு அனைவரும் செல்ல அனுமதி கொடுத்து விட்டு அரசனை மட்டும் இருக்கச் சொல்லி பூஜை அறைக் கதவுகளைச் சாத்தச் சொன்னார். அறைக்கு வெளியே வந்தவர்கள் மீண்டும் அரசனைக் காண இரண்டு நாழிகைகளுக்கு மேல் பிடித்தன. முடிவில் அரசன் வந்து காவலாளிகளை விளித்து விருந்தினர்களுக்கு உணவு படைக்கவும், இருக்க இடம் காட்டவும் பணித்தான்.

அந்தக் காட்டின் வேட்டுவ மாளிகையில் விருந்து அமர்க்களமாக நடந்தது. அரசிக்கும் மற்றவர்களுக்கும் ஒழித்துவிடப்பட்ட அறை மிக விசாலமாயிருந்ததன்றி சகல வசதிகளும் இருந்தன. அன்றிரவும் மெள்ள மெள்ள வரவே அனைவரும் துயில் கொண்டனர். அன்று நள்ளிரவில் அந்த அறையின் சாரளத் தோட்டப்புறத்தில் ஒரு உருவம் மெதுவாக வந்தது. தனது கையிலிருந்த நீண்ட பிரம்பொன்றால் அரசியை மும்முறை தொட்டது. அரசி எழுந்து கனவில் நடப்பவள்போல்

* எண்பேர் ஆயத்தைப் பற்றிய குறிப்பு ஔவை சு. துரைசாமி அவர்களின் ''பண்டை நாளை சேர மன்னர்கள்'' என்ற நூலில் 75ஆம் பக்கத்திற் காணலாம்.



நடந்து சென்றாள் சாரளத்தை நோக்கி. பிறகு சாளரக்கட்டையில் ஏறி வெளிப்புறம் குதித்தாள்.

சாளரக் கதவு திறந்தபோதே விழித்துக்கொண்ட இளவழுதி நடப்பதை அரைக்கண் பார்வையால் கவனித்தான். அரசி சாளரத்துக்கு வெளியே குதித்ததும் மெதுவாக எழுந்து சாளரத்தை நோக்கி நடந்து வெளியே மெதுவாகப் பார்த்தான். தன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. அரசியைத் தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டு பெரிய மந்திரவாதி காட்டுக்குள் சென்று கொண்டிருந்தார்.

# 14. கனவு இருந்தது - நினைவு இல்லை

கோரள பெரிய மந்திரவாதி நள்ளிரவில் கள்ளத்தனமாக சாளரத்தருகில் தோன்றி அலை அரசியை நீண்டதொரு பிரம்பால் தட்டியதையும், அதை அடுத்து அரசி எழுந்து சாளரத்தை நோக்கி நடந்து சாளரத்தின் மீதேறி வெளியே குதித்ததையுங் கண்ட அரையன் இளவழுதி அதிர்ச்சியின் வசப்பட்டானென்றால், மந்திரவாதி அரசியைத் தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டு நடந்து சென்றதைப் பார்த்ததும் சினத்தின் வசப்பட்டு, திரும்ப தான் துயின்ற இடத்துக்குச் செல்லாமலும் வாளைக்கூட எடுத்துக் கொள்ளாமலும் தானும் சாளரத்தில் ஏறி, வெளியே குதித்து பெரிய மந்திரவாதியைத் தொடர்ந்து சென்றான். சிறிது தூரம் நடந்த பின்பே தான் வாளை எடுத்துக்கொள்ளவில்லையென்பதைப் புரிந்து கொண்டாலும் மந்திரத்துக்கு முன்பு வாள் பயனற்றது என்பதை உணர்ந்ததால் அதை ஒரு பெரிய நஷ்டமாகக் கருதாமல் மந்திரவாதியைத் தொடர்ந்து சென்றான்.

அரசியைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்த மந்திரவாதி சற்றும் அக்கம் பக்கம் பார்க்காமலும் பின்னால் யாராவது வருகிறார்களா என்பதைக் கவனியாமலும் செங்குத்தாக நிமிர்ந்த வண்ணம் காட்டின் ஊடே நடந்தார். அவ்வப்பொழுது எதிரே தடைபட்ட மரக்கிளைகளைத் தமது இடது கையில் ஒதுக்கி அவை அரசியின்மீது படாதிருக்க வழி செய்துகொண்டு ஒரே சீராக அவரது நீண்ட கால்கள் பரவ நடந்து சென்றார். காட்டினுள் பல இடங்களில் வளைந்தும் திரும்பியும் சென்ற மந்திரவாதி இரண்டு நாழிகைகளுக்கெல்லாம் காட்டின் மிகவும் அடர்த்தியான பகுதிக்குள் நுழைந்தார். காட்டின் அந்தப் பகுதியில் பயணம் செய்வது சிறிது கஷ்டமாக இருந்ததாலும், குறுக்கே பெரிய பெரிய சிலந்தி வலைகள் பின்னப்பட்டிருந்தாலும், ஆங்காங்கு சில



பறவைகள் தலைக்கு அருகில் பறந்தாலும் அந்தத் தடைகள் எதையும் லட்சியம் செய்யாமல் சிலந்திப் பெருவலைகளைத் தமது கையால் விலக்கி நடந்தார். தலைக்குமேல் பறந்த பறவைகள் அவரை அண்டவே அச்சப்பட்டு அவர் தலையருகில் வந்ததும் விலகிச் சென்றுவிட்டதை இளவழுதி கண்டும் வியப்படைந்தானில்லை. பறவைகளை அரசியே ஈர்த்ததைக் கண்டிருந்த அந்த வாலிபன் மந்திரவாதிக்கு அது ஒரு பெரிய விஷயமல்லவென்பதை உணர்ந்து கொண்டான். இத்தனைக்கும் பெரிய மந்திரவாதி ரகசியமாக அரசியை எடுத்துச் செல்லும் காரணம் என்ன என்பது புரியாது உள்ளூரத் தவித்தான்? பெரிய மந்திரவாதிக்கு மன்னனிடம் இருக்கும் பிடிப்பில் அவர் நேராகவே அரசியை அழைத்துப் பேசியிருக்கலாமே, அல்லது தம்முடன் அழைத்துச் சென்றிருக்கலாமே என்று எண்ணமிட்டான் இளவழுதி. அரசியை அழைக்கவும் பேசவும் அன்று முழுக்க அவகாசம் இருந்திருக்க, நள்ளிரவில் இத்தகைய ஐயத்தைக் கிளப்பும் நடவடிக்கையில் ஈடுபடுவானேன் என்றெல்லாம் சிந்தித்த இளவழுதி தனது வினாக்களுக்கு விடையேதும் கிடைக்காததால் வீணாக சிந்தித்து மனத்தைக் குழப்பிக்கொள்ள இஷ்டப்படாமல் சிந்தனையை உதறி வழியைக் கவனித்து மந்திரவாதியைத் தொடர்ந்தான்.

மந்திரவாதி மேலும் மேலும் கஷ்டமான பாதைகளில் நடந்தும், மலையின் ஒரு குகைக்கு அருகாமையில் வந்ததும் சற்று நின்று குகையை மூடியிருந்த பாறையைக் கையால் தட்டி ''அம்மா! கதவைத் திற'' என்று மெதுவாகக் குரல் கொடுத்தார்.

பாறை நன்றாக இறுகியிருந்ததால் அதில் உட்புக வழி ஏதுமில்லாதிருந்ததாக நினைத்த இளவழுதி அவர் கதவைத் திறக்கும்படி கூறியதைக் கண்டு ஏற்பட்ட வியப்பை அடுத்த விநாடி உதறிக் கொண்டான். அந்தப் பாறை ஏதோ பெரும் கதவுபோல் உட்புறமாக அசைய, உள்ளிருந்த நீண்ட இரு கைகள்

மந்திரவாதியின் தோளிலிருந்த அரசியை மெதுவாக வாங்கிக் கொண்டதையும், அந்தக் கைகள் பெண்ணின் கைகளென்பதையும் அதன் கைகளிலிருந்த வளையல்களால் ஊகித்துக்கொண்ட இளவழுதி தனது பிரமிப்பிலிருந்து விடுபடுமுன்பாக மந்திரவாதி குகைக்குள் சென்று மறைந்துவிட்டார். அவர் மறைந்த பின்பும் குகைக்கதவு திறந்தே இருக்கவே, இளவழுதி அடிமேலடி வைத்து பூனைபோல் நடந்து அந்தக் குகைக்குள் நுழைந்தான்.

குகையின் அமைப்பைக் கண்டு அடியோடு உள்ளத்தைப் பறிகொடுத்த இளவழுதி சேரநாட்டு மலைப் பகுதிகளை தான் அலசியிருக்க இந்தக் குகை எப்படி தனது ஆராய்ச்சியிலிருந்து விட்டுப்போயிற்று என்று நினைத்தான்? சேரமன்னர்களின் விரோதிகளான கடம்பர்கள் அடிக்கடி கொடுத்துவந்த தொந்தரவின் காரணமாகவும், கடம்பர் சில சமயங்களில் கடல் மூலமாகவும் சில சமயங்களில் மலைப்பகுதியிலிருந்தும் கொள்ளையை நடத்தியதால் சேரநாட்டை அடுத்த கடல் பகுதிகளையும் மலைப்பகுதிகளையும் ஆராய தன்னை மன்னர் நியமித்திருந்ததை எண்ணிப் பார்த்தான். அந்தச் சில மாதங்களில் தான் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து, சல்லடை போட்டு சலித்த முயற்சியிலிருந்து, இந்தக் குகை மட்டும் எப்படி விட்டுப் போயிற்று? என்று சிந்தித்தும் விடை காணாததால், தான் போர் வீரனே தவிர மந்திரவாதியல்லவென்பதையும் சிந்தித்து போர்வாளைவிட மந்திரப் பிரம்பு சிறந்ததென்று முடிவு செய்து கொண்டான்.

குகை மிக விசாலமாயிருந்ததையும் மேலிருந்து சந்திர கிரணங்கள் துவாரங்கள் மூலம் வெள்ளிக் கம்பிகளாக உள்ளே நுழைந்திருந்ததையும், அந்த வெள்ளிக் கம்பிகள் ஒரே சீராக அடுத்தடுத்து விழுந்ததால் ஏதோ வெள்ளிக் கம்பிகளால் தடுக்கப்பட்ட சிறை போலத் தெரிந்ததையும் இளவழுதி கண்டான்.



குகையில் பக்கச் சுவரொன்றில் கை வைத்த இளவழுதி அது மிகவும் வழவழப்பாக பளிங்குக்கல் போலிருந்ததைப் பார்த்து 'ஸஹ்யாத்ரி மலைத்தொடரின் குகை எதிலும் பளிங்கு இல்லையே. இது இயற்கை வகுத்ததா, செயற்கை வகுத்ததா' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அவன் மேற்கொண்டு குகை ஆராய்ச்சியில் இறங்குமுன்பு தூரத்தே பாதாளத்தில் ஒரு சிறு விளக்கு சுடர்விட்டதைப் பார்த்தான். அதை நோக்கி இரண்டடி நடந்ததும் சந்திர கிரணங்கள் விழுந்திருந்த இடத்தை அடுத்து கீழ்நோக்கிப் படிகள் ஓடுவதைப் பார்த்து அந்தப் படிகளில் இறங்கிச் சென்றான். அவன் கடைசிப் படியில் காலை வைத்ததும் கீழே நீண்டு ஓடிய சமதரையின் கோடியில் ஒரு பெரிய பீடத்தின் மீது மகாசக்தியின் உருவச்சிலை இருந்ததையும், அதன் கால்களின் அருகில் வைக்கப்பட்டிருந்த சிறு விளக்கின் ஜ்வாலையில் சிலையின் பொற்கவசம் எதிரொளி கிளப்பியதையும், அந்த ஒளி சிலை மீது மட்டும் பட்டு சிலையை ஜோதிமயமாக அடித்திருந்ததையும் கண்ட இளவழுதி இருந்த இடத்திலேயே கல்லாய் சமைந்து நின்றான். இத்தனைக்கும் குகை அடிவாரத்தில் மற்ற இடங்களில் பூர்ணமான இருட்டே குடிகொண்டிருந்தது. மந்திரவாதியோ, அரசியோ, அரசியைத் தாங்கிக் கொண்ட பெண்மணியோ யாரையுமே காணவில்லை. சுற்று முற்றும் எவ்வளவோ உற்றுப் பார்த்தும் யாரும் தெரியாததால், ''குரு நாதரே! குருநாதரே!'' என்று இருமுறை குரல் கொடுத்தான் இளவழுதி. பதிலுக்கு குகைச் சுவர்கள் 'குருநாதரே, குருநாதரே' என்று எதிரொலி செய்ததைத் தவிர வேறெவ்வித அரவமும் கேட்கவில்லை மகாசக்தியின் சந்நிதானத்தில்.

அப்புறம் இப்புறம் நடந்து பார்க்கலாமென்றாலோ வேறு வழி ஏதும் இல்லாததைக் கண்ட இளவழுதி செய்வதென்னவென்று அறியாமல் திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில் வெளியேயிருந்த

குகைக்கதவு கரகரவென்ற சத்தத்துடன் மெதுவாக மூடிக்கொள்வதை உணர்ந்தான். அதனால் எந்தவித கவலைக்கும் உள்ளாகாமலிருந்த இளவழுதி திடீரென்று அந்த சமதரையின் கோடியில் மற்றொரு தீபம் பிரகாசமாகத் தெரிவதையும், அதை மெல்லிய திரையொன்று மறைத்திருந்ததையும் கண்டு அந்த திரையை நோக்கி மெதுவாக நடந்தான். திரை ஓர் அறையை மறைத்திருந்தது. அறைக்குள்ளிருந்த ஒரு மஞ்சத்தில் விரிக்கப்பட்டிருந்த புலித்தோல் படுக்கையில் அலை அரசி கிடத்தப்பட்டிருந்தாள். அந்த மஞ்சத்தின் ஒரு புறத்தில் நின்றவண்ணம் பெரிய மந்திரவாதி கையில் ருத்திராட்ச மாலையை உருட்டி ஏதோ ஜபித்துக் கொண்டிருந்தார். நின்ற நிலையில் அவர் கண்கள் மூடியிருந்தன. அரசியின் தலைப்பாகத்தில் அவர் நின்றிருந்தது தெரிந்ததேயொழிய கால் பகுதியில் இருட்டே அடித்துக் கிடந்ததால் அங்கு இருப்பது யாரென்று தெரியாவிட்டாலும் அது அரசியை வாங்கிய பெண்ணாகத்தான் இருக்கவேண்டுமென்று தீர்மானித்தான் இளவழுதி.

மந்திரவாதி ஜபத்தை முடித்துக்கொண்டு தனது கையை அலை அரசியின் உடலை நோக்கி நீட்டினார். அவர் கை நீண்ட அதே விநாடியில் அரசியின் கால் பகுதிகளிலும் பெரும் பிரகாசம் தோன்றியது. அந்த வெளிச்சத்தில் கால் புறத்தில் நின்று கொண்டிருந்தாள் அந்த இன்னொரு பெண். அவளைக் கண்ட இளவழுதி ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவன் உணர்ச்சிகள் அடியோடு உறைந்து போயின. அரசியின் காலடியில் மஞ்சத்தை அடுத்து நின்றவளும் அலைஅரசிதான். அதே உருவம்! அதே சாயல்! அதே நெற்றி வைரம்! அதே காந்தக் கண்கள்! அவளைக் கண்டதால் உறைந்து போன உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவதைப் போல் மந்திரவாதி பேசத் தொடங்கினார். "பெண்ணே! உங்கள்



குருநாதருடன் பேசமுன்பு உன் சகோதரியைக் கேட்க வேண்டியதைக் கேட்டுவிடு" என்றார். அந்த இரண்டாவது அரசி கேள்விகளை எழுப்பினாள். கேள்விகள் புரியவில்லை இளவழுதிக்கு. ஏதோ வேற்று நாட்டு மொழியாயிருந்தது. புதுமையாக ஒலித்தது. அந்த கேள்விகள் எழுந்ததுமே கட்டிலில் இருந்த அரசியின் கண்கள் மலர்ந்தன. அக்கம் பக்கம் சுழன்றன. கடைசியில் எதிரேயிருந்த பெண்மீது நிலைத்தன. நிலைத்த கண்கள் அசையவில்லை. மெதுவாக மஞ்சத்தின்மீது எழுந்து நின்ற அரசி "என் காலடியில் இத்தனைப் பெரிய கண்ணாடியை யார் வைத்தது?" என்று கனவில் இருப்பவளைப் போன்று வினவினாள். சுய நினைவு இல்லை!

# 15. மலைக்குகை நாடகம்

அடர்த்தியான மலைக்காட்டுக்குள் இருந்த மர்மக் குகையும், குகைக்குள் பாதாளத்தை நோக்கி ஓடியபடிகளும், படிகளின் கீழே இருந்த சமதரையும், மகாசக்தி சிலையும், மெல்லிய திரை மறைத்திருந்த அறையும் எல்லாமே பிரமை தட்டும் திகைப்பைத் தரும் சூழ்நிலையை அளித்திருந்தாலும், வைரம் பாய்ந்த நெஞ்சை படைத்த இளவழுதி எதையும் லக்ஷியம் செய்யாமல் அறைக்குள் நடந்த நிகழ்ச்சிகளை திரைக்கு வெளியிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்தான். திரையும் மிக மெல்லியதாயிருந்ததால் உள்ளே நடந்த நிகழ்ச்சிகளைக் கவனிப்பதில் எந்தவிதத் தடங்கலுமில்லாததால் திரைக்கு ஒரு புறத்தில் மறைவாக நின்றே அறை நாடகத்தை இளவழுதி கவனிக்கலானான். கேரள பெரிய மந்திரவாதி தமது மெல்லிய நீண்ட பிரம்பை நீட்டியதுமே கட்டிலில் கிடந்த அலை அரசி விழித்துக் கொண்டு கட்டிலின் மீது எழுந்து நின்று, கால்மாட்டை நோக்கி, அங்கிருந்த தனது இரட்டையை இரட்டையென்று உணராததால் 'என் காலடியில் இத்தனைப் பெரிய கண்ணாடியை யார் வைத்தது?' என்று வினவிய போது அவள் மயக்கம் தீரவில்லையென்பதையும், மயக்க நிலையிலேயே பேசுகிறாளென்பதையும் புரிந்து கொண்ட இளவழுதி, அறைக்குள் செல்ல ஒரு அடி எடுத்து வைத்த சமயத்தில் பெரிய மந்திரவாதியின் குரல் மீண்டும் ஒலிக்கவே முன்வைத்த காலை பின்வைத்து நிதானித்தான் இளவழுதி.

''அரசி! உன் காலடியில் கண்ணாடி இல்லை. உற்றுப் பார்'' என்றார் பெரிய மந்திரவாதி.

''என் உருவம் தெரிகிறதே. கண்ணாடியில்லாமல் எப்படித் தெரியும்?'' என்று கூறிய அலை அரசி தனது கண்களை பெரிய மந்திரவாதி மீது திருப்பினாள்.



அந்தக் கண்களைப் பார்த்த இளவழுதியின் மனம் பகீரென்றது. கண்களில் உயிரையே காணோம். ஏதோ பதுமையில் பதிக்கப்பட்ட கண்ணாடிகளைப் போல் கண்கள் தெரிந்தன.

மந்திரவாதி மீண்டும் சொன்னார், ''அரசி என்னைப் பார்க்காதே. உன் சகோதரியைப் பார். உன் காலடியில் நிற்கிறாள்.''

அரசி கண்களைத் திருப்பாமலே ''எனக்கு ஏது சகோதரி?'' என்று கேட்டாள்.

''காலடியில் பார், இருக்கிறாள்'' என்றார் பெரிய மந்திரவாதி.

திரும்பி காலடியை நோக்கினாள் அரசி. அப்பொழுதும் அந்த இன்னொரு அரசி பதுமைபோல் நின்றிருந்தாள். அப்பொழுது அவள், அந்த இரட்டை, மெதுவாகப் பேச முற்பட்டு ''சகோதரி! வா இப்படி'' என்று கூறித் தனது கைகளை நீட்டினாள்.

அரசி இரண்டடி நடந்து நின்றாள். ''நீ எப்படி எனக்கு சகோதரி?'' என்று கேட்டாள்.

''உடன் பிறந்ததால்'' சுருக்கமாக இருந்தது பதில்.

''எப்பொழுது பிறந்தாய்?'' என்று அரசி வினவினாள்.

''யாருக்குத் தெரியும்? பிறப்பை யாரும் அறிவதில்லை. ஏன் பிறக்கிறோம்? எதற்கு வந்தோம்? என்பது எந்த மனிதனுக்கும் தெரியாது. போகும்போதும் எங்கு போகிறோமென்பதும் தெரியாது. இந்த மர்மங்கள் இன்னும் அவிழ்க்கப்படவில்லை'' என்றாள் அரசியின் இரட்டை.

அரசி இருமுறை தலையை ஆட்டிவிட்டு மெதுவாக கட்டிலின் முனைக்குச் செல்லவே அந்த இரட்டை அப்படியே அவளைக் கையில் ஏந்தி கீழே இறக்கினாள்.

கட்டிலிருந்த இடத்தின் மறுகோடியில் நின்ற இருசகோதரிகளும் ஒருவரையொருவர் நீண்டநேரம் பார்த்துக் கொண்டே

இருந்தார்கள். பிறகு அந்த இரட்டைப் பெண், அரசியை அணைத்துக் கொண்டு உச்சி முகர்ந்தாள். அரசியின் முதுகை தடவிக் கொடுத்தாள். ''சகோதரி! சகோதரி!'' என்று இருமுறை அழைத்தாள். அந்த சமயத்தில் பெரிய மந்திரவாதி அவர்களை அணுகி தனது மந்திரப் பிரம்பால் அரசியின் தலையை இருமுறை தட்டவே அரசியின் உடல் ஒருமுறை சிலிர்த்தது. பிறகு நிதானத்துக்கு வந்தது. அரசி சற்று எட்ட நின்று சகோதரியை நோக்கினாள். இம்முறை அவள் பார்வையில் பழைய தெளிவும் தீட்சண்யமும் இருந்தன. அவள் பேச்சிலும் அந்தத் தெளிவு பரிமளித்தது. ''ஆம், நீ என் சகோதரியாகத் தான் இருக்க வேண்டும். ஓரிரு முறை நமது குருநாதர் சொல்ல கேட்டிருக்கிறேன். எப்படி இங்கு வந்தாய்? எதற்காக வந்தாய்? இத்தனை நாள் எங்கிருந்தாய்?'' என்று கேள்விகளை வீசினாள் அலை அரசி.

''சில ஆண்டுகளுக்கு முன்பு வந்தேன். உன்னை இங்கு அனுப்பிய குருநாதர்தான் என்னையும் அனுப்பினார். நீ எதற்காக வந்தாயோ அதற்காகத்தான் நானும் வந்தேன்'' என்றாள் இரட்டை

''உன் பெயர்?''

''கடலரசி''

''யார் வைத்தது பெயரை?''

''உனக்குப் பெயர் வைத்தவர்தான். கடலும் அலையும் ஒன்று என்பதற்காக இப்படி இருவருக்கும் பெயர் வைத்தார். காரணமில்லாமல் மதகுரு எதையும் செய்ய மாட்டார்'' - இதை கடலரசி மிகத் தெளிவாகச் சொன்னாள். இம்முறை அவள் பழைய தெரியாத பாஷையில் பேசவில்லை. தெள்ளுத்தமிழிலேயே பேசினாள்.

அத்துடன் அவர்கள் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்த பெரிய மந்திரவாதி, ''பெண்களே! நீங்கள் ஒருவரையொருவர் புரிந்து



கொண்டு விட்டதால் இனி அடுத்து நடக்க வேண்டியதைக் கவனிப்போம் இப்படி வாருங்கள்'' என்று அவர்களை அழைத்துக் கொண்டு திரை நீக்கி வெளியே வந்து மகா சக்தியின் சிலைக்கு அருகில் அவர்கள் இருவரையும் உட்கார வைத்தார். ''இனி உங்கள் மத குருவை அழைக்கிறேன். கண்களைப் புருவத்தின் மத்திக்குக் கொண்டு வாருங்கள்'' என்று உத்தரவிட இரு பெண்களும் கண்களால் புருவ மத்தியை நோக்க பிரம்பை இருமுறை அவர்கள் தலையில் தட்டி ''உங்கள் மதகுருவை அழையுங்கள்'' என்றார்.

சிறிதுநேரம் இருவரும் பூர்ணமான மோனநிலையில் உட்கார்ந்திருந்தார்கள். பிறகு மெதுவாக கடலரசி ''குருவே! வாருங்கள். உங்கள் திருவடி பலம்'' என்று வண்டின் குரலைப் போன்ற ரீங்காரக் குரலில் பேசினாள். அவள் குரல் மெல்லியதாக அந்தப் பாதாள சமதரை முழுவதுமே எதிரொலித்தது. அவள் அழைத்ததும் ஏதேதோ விபரீதமான வாத்ய ஒலிகள் எங்கிருந்தோ மிக மெதுவாகக் கேட்டன. பிறகு குகையின் மேலேயிருந்து ஒரு பெரிய ஒளியொன்று சமதரையில் இறங்கியது. அந்த ஒளியிலிருந்து ஒலியொன்று பிறந்தது. ''அரசிகளே! நீங்கள் தகுந்த இடத்தில் சந்தித்திருக்கிறீர்கள். எதற்காக என்னை அழைத்தீர்கள்?'' என்ற கேள்வி மெதுவாக குகையில் பரவியது.

''அடுத்து நாங்கள் செய்ய வேண்டியதைக் கேட்கவே அழைத்தோம். உத்தரவு என்ன?'' என்று அலை அரசி கேட்டாள்.

''அரசி! எனது நண்பர் பெரிய மந்திரவாதியின் சொற்படி நடக்க ஏற்கனவே உத்தரவிட்டேனே, நினைப்பில்லையா?'' என்று ஒளியிருந்த இடத்தில் ஒலி எழுந்தது.

''அவர்தான் உங்களுடன் பேச உத்தரவிட்டார்'' என்றாள் கடலரசி.

''சேரமன்னர் என்ன சொன்னார்?'' என்று மதகுரு வினவினார்.

''ஆறுநாள் கழித்துப் புறப்படலாம் என்று சொன்னார்'' என்றாள் அலை அரசி.

''அரசர் கட்டளைப்படி நட. அவர் எது சொன்னாலும் தவறு இருக்காது'' என்றார் மதகுரு.

''உங்கள் முதல் கட்டளைப்படி நான் முன்னமேயே இங்கிருந்து கிளம்பியிருக்க வேண்டும்?'' என்றாள் அலை அரசி.

''எந்த ஒரு கட்டளையை நிறைவேற்றுவதும் சூழ்நிலையைப் பொறுத்தது. அதற்குத்தான் எனது நண்பரை கலந்து கொள்ளச் சொன்னேன். கேரள மந்திரவாதி உங்கள் இருவருக்குமே வழிகாட்டுவார்'' என்ற மதகுரு ''நண்பரே!'' என்று கேரள பெரிய மந்திரவாதியை அழைத்தார். பெரிய மந்திரவாதி தாம் இருந்த இடத்தைவிட்டு முதலில் ஒளி விழுந்த இடத்துக்கு வந்து நின்று கொண்டு ''நண்பரே! நான் செய்ய வேண்டியது என்ன?'' என்று கேட்டார்.

''இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இரு அரசிகளும் எங்கள் நாட்டுக்கு வரவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்து விடுங்கள்'' என்றார் மதகுரு.

''சேர மன்னனிடம் சொல்கிறேன்'' என்றார் பெரிய மந்திரவாதி.

''சொன்னால் போதாது. வற்புறுத்தும். இங்கு நிலை மோசமாகிக் கொண்டு வருகிறது'' என்றார் மதகுரு.

''போர் மூண்டுவிட்டதா?'' பெரிய மந்திரவாதி கேட்டார்.

''நிகழும் தருவாயிலிருக்கிறது'' என்ற மதகுரு சற்று பெருமூச்சு விட்ட சப்தம் குகையில் தெளிவாகக் கேட்டது. அதை அடுத்து மீண்டும் மதகுரு பேசினார். ''என் கட்சிக்குத் தலைவன் வேண்டும். காலதாமதம் கூடாது'' என்று.

''தலைவனா?'' பெரிய மந்திரவாதி கேட்டார் வியப்புடன்.



''ஆம்'' மதகுருவின் குரல் நிச்சயத்துடன் ஒலித்தது.

''தலைவனை எங்கிருந்து சம்பாதிப்பது?'' என்று பெரிய மந்திரவாதி கேட்டார்.

''நீ சம்பாதிக்க வேண்டாம். நான் சம்பாதித்து விட்டேன்.''

''யார் அது?''

மெதுவான நகைப்பொலியொன்று குகைக்குள் கேட்டது. அதை அடுத்து மதகுருவின் குரல் ஒலித்தது. ''உமது அருகிலேயே இருக்கிறான்! இளவழுதி! மறைந்து நிற்காதே. வெளியே வா!'' என்று ஆணையிட்டது. திகைத்தது இளவழுதி மட்டுமல்ல, குகையிலிருந்த அனைவருமே திகைத்தார்கள். திகைப்பை அதிகப்படுத்த குகையின் கதவு வேறு திறந்து மூன்றாவது உருவமொன்றும் உள்ளே நுழைந்து குகையின் சமதரை நிகழ்ச்சிகளைக் கவனிக்கலாயிற்று.

# 16. பூங்கரம் புதைந்த அடையாளம்!

மலைக்குகையின் பாறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த மூன்றாவது உருவம் குகையின் உச்சிப்படியில் நின்று கீழேயிருந்த சமதரையில் நடந்த நிகழ்ச்சிகளைக் காண்பதற்கும், அரபு நாட்டு மதகுருவின் குரல் இளவழுதியை மறைவிலிருந்து வெளியே வர உத்தரவிட்டதற்கும் நேரம் சரியாயிருக்கவே அது மேற்படியிலேயே ஸ்திரமாய் நின்றுவிட்டது. படியை அணைத்து நின்ற குகையின் வழவழத்த பக்கச்சுவரில் வலது கையை ஊன்றியும் இடது கையை இடுப்பில் வைத்துக் கொண்டும் அதிகார தோரணையில் நின்ற உருவம் தனது உதடுகளில் ஏதோ சொற்களை முணுமுணுக்கலாயிற்று.

இப்படி மூன்றாவது உருவமொன்று வந்ததை அறியாமலே மதகுருவின் ஆணைப்படி மறைவிலிருந்து வெளிப்போந்த இளவழுதி சமதரை நடுவுக்கு வந்து, "என்னை அழைத்தது யார்? எதற்காக அழைத்தீர்கள்?" என்று வினவினான்.

மதகுருவின் சொற்கள் இளவழுதியின் காதுக்கருகில் ஒலித்தன. "அரபு நாட்டு மதகுரு அழைத்தேன். உனக்கு எனது கட்சித் தலைவனாகவும், படைகளின் தலைவனாகவும் பதவியும் அளித்தேன். அதை நீ கேட்கவில்லை!" என்ற மதகுருவின் குரல் திடமாக சப்தித்து குகைச்சுவர்களில் தாக்கி எதிரொலி செய்தது.

"நீங்கள் சொன்னதைக் கேட்டேன். ஆனால் உங்கள் நாட்டை நான் பார்த்ததில்லை. உங்களையும் கண்டதில்லை. உங்கள் கட்சி என்ன? எது? என்பதும் எனக்குத் தெரியாது. அதற்கு நான் தலைமை வகிக்க ஒப்புக் கொள்ள அவசியமென்ன?" என்று வினவினான், இளவழுதி சிறிது அச்சம் கலந்த குரலில்.

"என் நாட்டுக்கு வரும்போது என்னை நீ காணலாம். அதனால் எந்தப் பயனும் இல்லை. ஊனக்கண்ணின் பார்வை சக்தியற்றது,



அகக்கண்ணால் நீ பார்க்க முடியாது. மனிதர் கண்ணால் பார்ப்பதெல்லாம், மனத்தால் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் மனிதன் தெய்வமாகிவிடுவான். கண்டதெல்லாம், எண்ணுவதெல்லாம் நடக்குமென்றோ காணாததெல்லாம், எண்ணாததெல்லாம் நடக்காதென்றோ சொல்ல முடியாது. உன் வாழ்வு அனைத்தும் முன்னமேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி நீ நடப்பதைத் தவிர வழியில்லை. இளவழுதி! உனக்குப் பெரும் பிற்காலம் இருக்கிறது. இரண்டு அரசிகளின் சக்தி உன்னை உலகத்தில் உச்ச நிலைக்குக் கொண்டு போகும். ஆகவே அவர்களுடன் எங்கள் நாட்டுக்கு வந்து சேர்" என்று உத்தரவிட்டார் மதகுரு.

இளவழுதி முதலில் ஒளிவிழுந்த இடத்தை அணுகி, "என்னைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினான்.

உருவமற்று அருவமாக நின்ற மதகுரு மெல்ல நகைத்தார். "தெரியாமலா அலை அரசியை உன்னிடம் அனுப்பினேன். தெரியாமலா கடலரசியை இங்கு அனுப்பி உங்கள் மூவரையும் சந்திக்க வைத்தேன்?" என்று வினவினார் மதகுரு நகைப்பின் ஊடே.

"எல்லாம் உங்கள் ஏற்பாட்டின்படிதான் நடக்குமா? நீங்கள் என்ன கடவுளா?" என்று துணிவுடன் வினவினான் இளவழுதி.

"கடவுளில்லை. மனிதன் கடவுளாக முடியாது. ஆனால் தெய்வ சக்தியை உபாசனைகள் மூலம் அடையலாம். உங்கள் நாட்டு மந்திரவாதிகளே எத்தனையோ அற்புதங்களைச் செய்கிறார்களே, உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார் அரபுநாட்டு மதகுரு.

"எந்த அற்புதத்தையும் நான் கண்டதில்லை. அற்புதங்களில் எனக்கு நம்பிக்கையுமில்லை. கண் கட்டு வித்தை கூட ஏதோ தந்திரம் என்று நினைக்கிறேன்" என்றான் இளவழுதி.

''சந்தேகமுள்ள மனத்தில் தெளிவிருக்காது. தெளிவில்லாத மனது எதையும் சரியாக சிந்திக்க முடியாது. சிந்திக்காத வரையில் உண்மை புலனாகாது'' என்ற மதகுரு, ''இளவழுதி! இந்த இரவின் ஆரம்பத்தில் உங்கள் மன்னன் சக்தியின் சந்நிதானத்தில் அலை அரசியின் முதுகில் அம்பு எய்ததைக் கண்டாய். பிறகு அந்த முதுகிலிருந்து அம்பைப் பிடுங்கியும் குருதி ஏதும் வரவில்லை. ஏன்? அலை அரசியின் உடலில் ரத்தமில்லையா?'' என்று வினவினான்.

அந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தான் இளவழுதி. உண்மையில் அம்பு தைத்த இடம்கூடத் தெரியவில்லை அரசியின் முதுகில். இதில் ஏதோ சூது இருக்கிறதென்று மட்டும் நினைத்தான். ''ஆம், அம்பு தைத்த இடம்கூடத் தெரியவில்லை'' என்றான்.

''இது விசித்திரமாயில்லையா உனக்கு?''

''ஆம்.''

''உன் கண்ணெதிரிலேயே நடந்த சம்பவத்தை உன்னால் நம்ப முடிகிறதா?''

''முடியவில்லை. இருப்பினும் நேரில் பார்த்தேன்.''

''நீ எதையும் பார்க்கவில்லை இளவழுதி. அங்கு நீ பார்த்தது ஒரு பிரமை. அரசன் ஒரு பூஜையின் துணையுடன் உன் கண்களையும் உன்னுடன் வந்த மற்றவர் கண்களையும் கட்டிவிட்டான்.''

''அப்படியானால் மன்னர்?''

''பல கலைகளையும் அறிந்தவர். மலையாளத்தில் மந்திரவாதிகள் பலர் உண்டு. அவர்களில் தலையாய பெரும் சக்தியை உடையவன் சேர மன்னன். பெரிய மந்திரவாதிகூட அவனிடந்தான் மந்திரம் கற்றார்...'' என்று சொல்லிக் கொண்டு



போன மதகுரு, ''சற்று இரு. மன்னருடன் பேசிவிட்டு வருகிறேன்'' என்றார்.

கேரளத்தின் பெரிய மந்திரவாதி சட்டென்று நிமிர்ந்து நின்றார். ''மன்னரா! இங்கு வந்திருக்கிறாரா?'' என்று வினவினார்.

''ஆம்'' என்ற ஒரு சொல்லுக்குப்பின் வேறு சொற்கள் வரவில்லை மதகுருவிடமிருந்து. அடுத்து யாரோ இருவர் பேசும் குரல் மட்டும் கேட்டது. ''மன்னவா! இது நீ வழக்கமாக வரும் இடந்தானே? ஏன் படிகளின் உச்சியிலேயே நின்று விட்டாய்?'' என்று மதகுருவின் குரல் ஒலித்தது.

அடுத்து ஒலித்தது மன்னன் குரல். ''நீங்கள் வந்திருப்பதைப் பார்த்தேன்...'' என்று.

''எங்கு பார்த்தாய்? எப்படிப் பார்த்தாய்?'' வினவியது மதகுருவின் குரல்.

''வழக்கப்படி என் மாளிகையிலிருக்கும் சக்தி மாதாவின் விளக்குச் சுடரில் பார்த்தேன்'' என்றான் மன்னன்.

''மகா சக்தியின் ஜோதியில் தெரியாதது உலகத்தில் எது இருக்கிறது!'' என்று வியப்புடன் பக்தியையும் காட்டிய மதகுரு, ''அன்னை என்ன சொன்னாள்?'' என்று கேட்டார்.

''அன்னையை எதுவும் நான் கேட்கவில்லை. அல்ப காரியங்களுக்கெல்லாம் அன்னையைக் கேட்பது சரியல்ல'' என்றான் அரசன்.

''உண்மை உண்மை'' என்ற மதகுரு, ''மன்னவா! இளவழுதியை எப்பொழுது அனுப்புகிறாய்?'' என்று வினவினார்.

''இன்னும் ஏழு நாட்களில்'' என்ற அரசன், ''அவனைத் திருப்பி அனுப்புவது உமது பொறுப்பு'' என்றான்.

''அத்தனை முக்கியமானவனா அவன்?'' என்று கேட்டார் மதகுரு.

இம்முறை மன்னன் நகைத்தான். ''முக்கியமானவனல்லாமலா நீங்கள் அழைத்துப் போக விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டான் நகைப்பின் ஊடே.

''மன்னிக்க வேண்டும் மன்னவா! அவன் சக்தி அவனுக்கே தெரியாது. தெரிய வைத்து திருப்பி அனுப்புகிறேன். உன் இமாலயப் படையெடுப்புக்கும் உதவியாயிருக்கும்'' என்றார் மதகுரு.

''நன்று மதகுருவே. இப்பொழுதே இளவழுதி மகாவீரன். தாங்கள் அளிக்கும் பயிற்சியும் சேர்ந்தால் சேர நாட்டுக்கே அணிகலனாயிருப்பான். உங்கள் ஆசியும் பயிற்சியும் பரிபூர்ணமாயிருக்கட்டும் அவனுக்கு'' என்ற மன்னன் சரேலென்று திரும்பி குகையை விட்டு வெளியேறினான். குகையின் பாறைக் கதவும் சத்தம் ஏதுமின்றி மூடிக் கொண்டது. அரசன் வெளியேறிய அதே சமயத்தில் ''இளவழுதி! அலை அரசி! கடலரசி! மூவரும் வந்து ஒன்றாக நில்லுங்கள்'' என்று உத்தரவிட்டார் மதகுரு.

அவர் உத்தரவுப்படி ஒலி எழுந்த இடத்தருகில் வந்து இளவழுதியின் இருபுறத்திலும் இரு அரசிகளும் நின்று கொண்டார்கள். ''நீங்கள் மூவரும் வாழ்நாளில் இப்படியே இருக்க ஆண்டவன் அருள் புரியட்டும்'' என்று ஆசீர்வதித்த மதகுரு, ''இளவழுதி! அலை அரசியை நீ ஏற்கனவே சந்தித்திருக்கிறாய். அவள் யாரென்று பார்'' என்று உத்தரவிட்டார்.

இளவழுதி இருவரையும் மாறி மாறி நோக்கினான். இருவரும் ஒரே அச்சில் வார்த்தது போலிருக்கவே அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் திணறினான் இளவழுதி. மரக்கலத்தில் தான் இறுகத் தழுவிப்பிடித்த உடல் எது என்று தெரியவில்லை. அத்தனை அருகாமையிலிருந்தும் சிறிது நேரம் கண்களை



மூடினாள். பிறகு சட்டென்று திரும்பி தனக்கு இடது புறத்திலிருந்த அலை அரசியை இடது கையால் இழுத்துக் கொண்டான்.

''இப்பொழுது புரிகிறதா?'' என்று கேட்டார் மதகுரு.

''எது?'' என்று வினவினான் இளவழுதி.

''நீ கண்ணை விழித்திருந்தபோது அலை அரசியை நீ அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. கண்ணை மூடியதும் முடிந்தது. எப்படி?'' என்று கேட்டார் மதகுரு.

''என்னை மீறிய சக்தியொன்று என்னை அவள்பால் இழுத்தது'' என்றான் இளவழுதி.

பார்ப்பதை விட பார்க்காத சக்தியின் பலத்தை நீ உணர்ந்தாயல்லவா? இம்மாதிரி பல சக்திகள் மனித சிருஷ்டியில் இருக்கின்றன. மகான்கள் இதை உணருகிறார்கள். உனக்கு இந்த சக்தியை போகப் போக இரு அரசிகளும் அளிப்பார்கள். நீ அரபு நாட்டுக்கு வந்ததும் கடமைகள் பல இருக்கின்றன. அரசன் அனுமதி பெற்று வந்து சேர்'' என்று மதகுரு சொன்னதும் மீண்டும் அந்தப் பழைய ஒளி குகையின் மேல்துவாரத்துக்கும், சமதரைக்குமாக நின்றது. அடுத்த விநாடி அது மறைந்தது.

அதுவரையில் வாளாவிருந்த கேரளத்தின் பெரிய மந்திரவாதி, ''இளவழுதி! நீ அரசிகளுடன் இங்கு தங்கியிருந்து காலையில் மாளிகைக்கு வந்து சேர்'' என்று கூறியவர் சட்டென்று நின்று, ''வேண்டாம், அரசிகளை மட்டும் அனுப்பிவிடு'' என்றார்.

''நான்?''

''நீ காலையில் சேரவாற்றில் காலைக் கடன்களை முடித்து மன்னனுக்குக் காத்திரு.''

''மன்னர்?''

''உன்னை நாடி வருவார்''

"நானும் இப்பொழுதே வந்தாலென்ன?" என்று வினவினான் இளவழுதி.

"மன்னர் உத்தரவு அப்படியில்லை" என்று கூறிவிட்டு படிகளில் ஏறிச் சென்று விட்டார்.

இரு அரசிகளுடன் தனிமையில் விடப்பட்ட இளவழுதியின் நிலை பரம சங்கடமாயிருந்தது. 'இரண்டாவது அரசி இருப்பதால் அலை அரசியுடன் சரசம் முடியாது. தவிர உணர்ச்சிகளைக் கொண்டுதான் அவர்களை அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும். என்ன உபத்திரவம் இது?' என்று எண்ணமிட்ட இளவழுதி இரு அரசிகளையும் அழைத்துக் கொண்டு திரைமறைவிலிருந்த அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தான். இரு அரசிகளும் கட்டிலுக்கு இருபுறத்திலும் நின்றார்கள், அவனை உற்றுப் பார்த்தபடி.

இளவழுதியின் தாபம், கோபத்தை உந்தியதால், "அட சனியன்களா! ஏன் நிற்கிறீர்கள்? கீழே படுத்துத் தொலையுங்கள்!" என்று கூவிவிட்டு கண்களை மூடினான். குகையில் திடீரென இருள் மூண்டது. மகாசக்தி சந்நிதானத்திலிருந்த விளக்கும் ஒளியிழந்து கொண்டிருந்தது. மூன்றாம் ஜாமத்தில் ஒரு பூங்கரம் அவன்மீது விழுந்தது. காதில், "நான் தான் அலைஅரசி. என் கையில் பற்களால் கடித்து விடுங்கள்" என்றது அந்தக்குரல்.

"எதற்கு?"

"எங்கள் இருவரில் என்னை அடையாளம் கண்டு கொள்ள."

அவள் சொற்படியே பற்களைப் புதைத்ததும் அந்த பூங்கரம் விலகியது. மகிழ்ச்சியுடன் உறங்கினான் இளவழுதி. அந்த மகிழ்ச்சி காலை வரையில்தான் இருந்தது. காலையில் எழுந்ததும் கட்டிலுக்கு இருபுறமுள்ள அரசிகளின் கைகளை மெதுவாகத் தூக்கிப் பார்த்தான். இருவர் இடக்கைகளிலும் பல் புதைத்த அடையாளம் இருந்தது.



# 17. புறாவுக்கு அபசாரம்! அஹமதுக்கு கிரகசாரம்!

பொழுது புலர்ந்துவிட்ட சமயத்தில் கட்டிலில் எழுந்து உட்கார்ந்த அரையன் இளவழுதி, கட்டிலின் மீது தனது இரு புறத்திலும் இரு உள்ளங்கைகள் பதிந்து கிடந்ததையும், இரு உள்ளங்கைகளிலும் பற்குறிகள் இருப்பது புலனாகியதையும் கண்டு, 'இது எப்படிச் சாத்தியம்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு கட்டிலிலிருந்தபடியே இருபுறமும் குனிந்து நோக்கினான். இடதுபுறத்திலிருந்தவள் இடதுகை சாதாரணமாகக் கட்டிலின்மீது கிடந்ததால் அதுதான் அலை அரசியின் கையாயிருக்க முடியும் என்று எண்ணமிட்டவன், வலதுபுறத்தில் படுத்திருந்தவளும் சற்று ஒருக்களித்து தனது இடது கையையும் கட்டிலின் மீது வைத்திருந்ததைக் கவனித்து அதுவும் இடக்கையாயிருந்ததையும் அதிலும் பற்குறி இருந்ததையும் பார்த்து, 'இது எப்பொழுது எப்படி ஏற்பட்டது?' என்று மறுபடியும் வினாவொன்றை எழுப்பிக் கொண்டான்.

அந்த இரண்டு கைகளையும் மீண்டும் ஒருமுறை உற்றுப் பார்த்தபோது ஒரு கையில் இருந்த அதே இடத்தில் அதே பரிமாணத்தில் பல் அடையாளம் இன்னொரு கையிலும் இருந்ததைப் பார்த்து, 'இந்த மர்மத்தை இவர்களைக் கேட்டுத்தான் உடைக்க வேண்டும்' என்று தீர்மானித்து இருவரையும் தனது கைகளால் அசைத்து எழுப்பினான். அதனால் கண்விழித்த இரு பெண்களும் தங்கள் ஆடைகளை சீர்செய்து கொண்டு கட்டிலின் இருபுறங்களிலும் எழுந்து நின்றார்கள் ஒரு விநாடி. பிறகு இடதுபுறத்திலிருந்தவள் கேட்டாள், "ஏன் எழுப்பினீர்கள்?" என்று.

"பொழுது புலர்ந்துவிட்டது" என்று சொன்னான் இளவழுதி எரிச்சலுடன்.

''புலர்ந்தாலென்ன?'' வலது புறத்திலிருந்தவள் வினவினாள்.

''இந்த நாட்டின் பெண்கள் பொழுது புலருவதற்கு முன்பே எழுந்திருப்பது வழக்கம். பின் தூங்கி முன்னெழும் பேதைகள் தாம் இங்குண்டு'' என்று பெண் இலக்கணத்தை விளக்கினான் இளவழுதி.

''யாருக்குப் பின் தூங்கி முன்னெழ வேண்டும்?'' - இடது புறத்திலிருந்தவள் கேட்டாள்.

''கணவனுக்கு'' - இளவழுதியின் பதில் உறுதியுடனும் அவர்களை இடித்துக் காட்டும் முறையிலும் வந்தது.

''கணவனுக்குத்தானே?'' - வலது புறத்திலிருந்த அரசி கேட்டாள்.

''ஆம்''

''இங்கு எங்களுக்கு யார் கணவன்? இருவருக்கும் திருமணமாகவில்லையே?''

இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழித்த இளவழுதி, ''திருமணமாகாதவர்கள் என்னுடன் தனிமையில் எப்படிப் படுக்கலாம்?'' என்று வெகுண்டு வினவினான்.

''பெரிய மந்திரவாதியின் கட்டளை'' என்றாள் இடதுபுறத்திலிருந்தவள்.

''உனக்கும் கட்டளையிட்டாரா?'' என்று வலப்புறத்திலிருந்தவளைக் கேட்டான் இளவழுதி சினத்துடன்.

''அவரோ மதகுருவோ கட்டளையிடாமல் நாங்கள் எதுவும் செய்துவிட முடியாது'' என்று வலப்புறத்திலிருந்தவள் சொன்னாள்.

சற்று சிந்தித்தபின் இளவழுதி இருவரையும் மாறி மாறி நோக்கினான். ''உங்கள் இருவரில் யார் அலை அரசி, யார் கடலரசி?'' என்று கேட்டான் முடிவாக.



''அதை நீங்களாகத்தான் புரிந்து கொள்ள வேண்டும்'' என்றாள் இடதுபுறத்திலிருந்தவள்.

அடுத்து இடதுபுறத்திலிருந்தவளை விட்டு வலது புறத்தில் நின்றவளைப் பார்த்து, இவள் கையில் பற்களால் அடையாளம் செய்தவன் யார் என்பதைப் புரிந்து கொள்ள ''உன் கையில் எப்படி இந்த அடையாளம் வந்தது?'' என்று கேட்டான் இளவழுதி.

''இதுவும் நீங்கள் செய்த அடையாளந்தான். இரண்டு கைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்'' என்று தனது கையைக் காட்டினாள் வலது புறத்திலிருந்தவள். அடுத்து இருவரையும் தனது இருபுறத்திலும் உட்காரச் சொல்லி இருகைகளையும் பரிசோதித்தான் இளவழுதி. பல் அடையாளத்தில் எந்தவித வித்தியாசமுமில்லை. அதே இடம், அதே பற்கள், அதே இடைவெளி! இரண்டு கைகளையும் பார்த்த இளவழுதி என்ன செய்வதென்றறியாமல் திகைத்தான்.

''என்னால் உங்களில் யார் எவர் என்று நிர்ணயிக்க முடியவில்லை. இதனால் பல விபரீதங்கள் ஏற்படலாம். எது ஏற்பட்டாலும் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல'' என்று கூறிய இளவழுதி கட்டிலின் கோடிக்கு நகர்ந்து இறங்கினான். பிறகு திரும்பி இரு பெண்களையும் நோக்கி, ''என்ன தவறு நேர்ந்தாலும் உங்கள் மதகுரு தான் பொறுப்பாளி'' என்று திட்டமாகக் கூறினான்.

இதைக் கேட்ட அரசிகள் இருவரும் நகைத்தனர். ''அப்படி என்ன தவறு ஏற்பட்டுவிடும்?'' என்று ஒரு அரசி கேட்டாள்.

''ஒரு ஆணுடன் தனிமையில் இரு பெண்கள் படுத்தால் ஏற்படும் தவறு'' என்றான் இளவழுதி மூர்க்கமாக.

''அது தவறு என்று யார் சொன்னது?'' என்று கேட்டாள் இன்னொரு அரசி.

''அப்படியானால் உங்கள் இருவரையும்...'' என்று ஏதோ சொல்ல முயன்ற இளவழுதி பேச்சை முடிக்காமல் வெகுவேகமாக அந்த அறையிலிருந்து வெளியேறி சமதரைக்கு வந்து மகாசக்திக்குத் தலைவணங்கி படிகளில் ஏறி குகையின் மேல்புறம் சென்றான்.

மேலே குகைவாயில் திறந்தே இருந்ததால் ஜில்லென்ற தென்றல் காற்று அவன் முகத்தில் தாக்கி அவனுக்குப் புதுச் சக்தியைக் கொடுத்தது. அதை அனுபவித்துக் கொண்டும் குகையிலிருந்து மீண்டதால் சற்றுத் தெளிவடைந்த சிந்தனையுடனும் வெளியே வந்த இளவழுதி மலைப்பகுதியின் காலை நேரச் சூழ்நிலையை பெரிதும் ரசித்தான். மரங்களின் இலைகளில் தவழ்ந்து வந்த காற்றை நன்றாக இழுத்து முகர்ந்தான். மலையின் சரிவிலிருந்த பல புஷ்பச் செடிகள் தன்னை தலையசைத்து வரவேற்ற அழகையும் பார்த்து புன்முறுவல் செய்தான். அந்த சரிவை அடுத்து சலசலவென்று ஓடிக் கொண்டிருந்த சிறு அருவியிடம் சென்று பல் துலக்கி முகம் கழுவி ஏதோ பெரிய சாம்ராஜ்யத்தை அடைந்துவிட்டது போன்ற மகிழ்ச்சி அடைந்தான். குகைக்குள்ளே மயக்க நிலையிலிருந்தவன், மெள்ள எழுந்த சூரியனும் சுத்தமான காற்றும் அருவியின் நீரும் தன்னை மீட்டுவிட்டதை உணர்ந்து 'இதுதான் விடுதலை போலிருக்கிறது' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு அருவியைத் தாண்டி நடந்தான்.

சரிவில் சிறிது தூரம் சென்றதும் தூரத்தே தெரிந்த வடகரையின் துறைமுகமும், கடலில் ஆடி நின்ற இரண்டு மூன்று மரக்கலங்களும் அவனை மீண்டும் பூவுலகத்தின் வீரனாகச் செய்துவிடவே இளவழுதி வேக வேகமாக நடந்து அந்த மலைச்சரிவிலிருந்து வேறுபுறம் நடந்து சேரவாறு பிரவாகித்துக் கொண்டிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

அதைத் தாண்டி சிறிது தூரம் மேற்கில் அதன் கரையோரமே நடந்தவன் கடைசியாக முதல் நாள் மன்னனை சந்தித்த இடத்துக்கு



வந்ததும் அங்கிருந்த துறையில் நீராடினான். சேரவாற்றின் குளிர் நீர் அவன் உடலைத் தழுவி அவன் களைப்பையெல்லாம் நீக்கியதால் அதிலேயே நீண்டநேரம் திளைந்து எழுந்து தனது அங்கியையும் சராயையும் பிழிந்து ஆற்றங்கரையிலிருந்த மரமொன்றில் உலரப் போட்டான். பிறகு இடையிலிருந்த சிறுதுண்டுடன் கரைமீதே அமர்ந்து, சென்ற இரவின் சம்பவங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி அவற்றை எடைபோட முற்பட்டான். இத்தனை நிகழ்ச்சிகளிலும் தனது பாட்டன் பெருவழுதியோ அஹமதோ யாரும் சம்பந்தப்படாததை நினைத்துப் பார்த்து 'அவர்கள் காலையில் என்னைக் காணாவிடில் என்ன நினைப்பார்கள்? அஹமத் என்ன நினைப்பான்?' என்று வினாக்களை அடுக்கிக் கொண்டு 'யார் எதை நினைத்தால் என்ன? நடப்பதெல்லாம் மனித செயலுக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது' என்று சமாதானமும் சொல்லிக் கொண்டான். இப்படி சுமார் ஒரு ஜாமக் காலத்தை ஓட்டிய பிறகு தனது உடைகளை அணிந்து கச்சையில் கரைமீது வைத்திருந்த குறுவாளையும் சொருகிக் கொண்டு எழுந்து 'மன்னர் என்னை சந்திபாரென்று மந்திரவாதி சொன்னாரே. எங்கு வருவார்? எப்பொழுது வருவார்?' என்று கேட்டுக் கொண்டு மரங்களின் ஊடே நடந்து சென்றான்.

மரங்களிலிருந்த பட்சி ஜாலங்கள் சில அவன் வருகையைக் கண்டு சிறகடித்துப் பறந்து மேல் கிளைகளுக்குத் தாவின. இன்னும் சில அவனை லட்சியம் செய்யாமல் அடிக்கிளைகளில் ஆடி ஆடி இன்பமாகக் கூவின. பக்கத்திலிருந்த புதரொன்றிலிருந்து முயல் குட்டியொன்று வேகமாக ஓடவே அதைப் பிடிக்க இளவழுதியும் ஓடினான். ஆனால், அது வேறொரு புதருக்குள் மறைந்து விடவே புதரிலிருந்து வெளியே நடந்துவந்த வெண்புறா ஒன்றைக் கையால் பிடிக்க முயன்றான். புறா சட்டென்று பறந்து இன்னொரு இடத்தில் உட்கார்ந்தது. மீண்டும் அதைப் பிடிக்க முயன்ற இளவழுதியை அது ஏமாற்றிவிட்டு விர்ரென்று பறந்தது

எதிர்ப்புறமாக. அதைப் பிடிக்க மீண்டும் முயன்ற இளவழு மரத்தின் வேரொன்று தடுக்க திடீரென நெடுஞ்சாண் கிடைய தரையில் விழுந்தான்.

“எழுந்திரு இளவழுதி!” என்ற குரலைக் கேட்டுத் தலைநிமிர் இளவழுதி, மன்னன் தன்னெதிரே புன்முறுவலுட நின்றிருந்ததைக் கண்டான். அவன் தோள் மீது அந்த வெண்பு உட்கார்ந்திருந்தது. அதைக் கையில் பிடித்து இளவழுதியி கொடுத்த மன்னன் “இளவழுதி! இதை விட்டுவிடாதே. இதை வி உனக்குத் துணை வேறு யாரும் இருக்க முடியாது” என் கூறியதன்றி “இதை மாத்திரம் துன்புறுத்த முயலாதே. அப்ப முயன்றவன் கதியைப் பார்” என்று சொல்லி தான் நின் இடத்துக்கு சற்று எட்ட இருந்த மரத்தடியைக் காட்டினான்.

அங்கிருந்த காட்சியைக் கண்ட இளவழுதி பிரமிப்பின் எல்லையை எய்தினான். அந்த மரத்தடியில் பலத்த காயங்களுடன் அஹமத் விழுந்து கிடந்தான். “இதற்கு அபசாரம், அவனுக்கு கிரகசாரம்” என்றான் மன்னன் வெறுப்புக் கலந்த குரலில்.



# 18. அஹமதின் கதை

மன்னன் பிடித்துக் கொடுத்த புறாவை இடது கையில் வைத்து வலது கையால் தடவிக் கொடுத்த வண்ணம் எதிரே மரத்தடியில் ரணங்களுடன் மூர்ச்சையாக விழுந்து கிடந்த அஹமதைப் பார்த்த இளவழுதி, சாத்வீகப் பறவையான புறா எப்படி அத்தனை காயங்களை அஹமதுக்கு ஏற்படுத்தியிருக்க முடியும்? என்று உள்ளெழுந்த சந்தேகத்தைக் கேள்வியாகவும் தொடுத்து “மன்னவா! இந்தப் புறாவா இத்தனைக் காயங்களை விளைவித்தது?” என்று வினவினான்.

சாதாரண சமயத்தில் புன்முறுவல் பூத்து நிற்கும் சேர மன்னன் வதனம் அன்று கருங்கல்லாகக் காட்சியளித்தது. “சந்தேகமிருந்தால் புறாவிடம் அவனைக் காட்டி விடுதலை செய்து விடு. நடப்பதைப் பார்” என்றான் மன்னன் குரலில் கடுமை ஒலிக்க.

இளவழுதி அந்தப் பரீட்சையை செய்து பார்க்குமுன்பாகவே அவன் கையிலிருந்த புறா இருமுறை தலையை ஆட்டி அஹமத் விழுந்திருந்த இடத்தைப் பார்த்ததும் தனது சிறகுகளை வேகமாக அசைத்து இளவழுதியின் கையிலிருந்து தப்ப முயன்றதன்றி தொடர்ந்து குக்குக் என்று கத்தவும் தொடங்கியதால் மன்னன் சொல்வதில் பொருளிருக்கிறது என்று புரிந்து கொண்ட அரையன் இளவழுதி “மன்னவா! இதற்கும் அவனுக்கும் என்ன அப்பேர்ப்பட்ட விரோதம்?” என்று வினவினான்.

“அரசியல் விரோதம்?” என்றான் மன்னன் பழைய கடுமையான குரலில்.

“இதற்கு அரசியல் பரிச்சயமுண்டா?” இளவழுதியின் குரலில் வியப்பு அதிகமாயிருந்தது.

''ஆதிகாலம் முதல் உண்டு. நாட்டுக்கு நாடு செய்தி கொண்டு செல்லும் தூதுப் புறாக்களைப் பற்றி நீ கேள்விப் பட்டதில்லையா?'' என்று மன்னன் கேட்டான்.

இளவழுதி மன்னனை உற்று நோக்கினான். ''கேள்விப்பட்டிருக்கிறேன். பார்த்ததில்லை. இப்படிப் புறாக்கள் இருப்பதாகக் கதைகளில் வாசித்திருக்கிறேன்'' என்ற இளவழுதியின் குரலில் அப்பொழுதும் சந்தேகம் இருந்தது.

''கதைகளெல்லாம் கட்டுக்கதைகள் அல்ல, உண்மை புதைந்த கதைகளும் உண்டு'' என்ற மன்னன், ''வேண்டுமானால் இந்தப் புறாவின் சிறகுகளை நீக்கிப் பார்'' என்றான்.

இளவழுதி கையிலிருந்த புறாவின் சிறகுகளை நீக்க முயன்றான். புறா சிறகுகளைப் பிரிக்கவிடாமல் நன்றாக அழுத்திக் கொண்டது. அப்படியும் பலவந்தமாக சிறகைப் பிரிக்க முயன்றபோது தனது அலகால் அவன் கையைச் சுரீரெனக் கொத்தவே வலது புறங்கையில் சிறிது ரத்தமும் துளிர்த்தது. அதனால் வியப்படைந்த இளவழுதி ''மன்னவா! விசித்திரமாயிருக்கிறது. கோழிகளில் சண்டைக்கோழிகள் என்று ஒரு பிரிவு உண்டு. புறாவில் அப்படியிருப்பதாகக் கேள்விப்பட்டதில்லை'' என்று கூறினான்.

''இளவழுதி! எந்த சிருஷ்டியிலும் சண்டைப்பிரிவு ஒன்று உண்டு. இல்லாவிட்டால் சிருஷ்டியில் சுக துக்கங்கள் இருக்காது. இந்தப் புறா அரபு நாட்டிலிருந்து வருகிறது. இது கொண்டு வந்த செய்தியைப் பார்'' என்று கூறிய மன்னன் தனது கையிலிருந்து மிக மெல்லிய இறகு ஒன்றை எடுத்துக் கொடுத்தான். பட்டுப் போன்ற அந்த இறகில் ஏதோ சில வரிகள் நுண்ணிய கருவி கொண்டு எழுதப்பட்டிருந்தன. அடியில் சிறிய கையொப்பமொன்றும் இருந்தது. இளவழுதி அதைப் பற்றி ஏதோ கேள்வி கேட்கத் தொடங்கு முன்பாக மன்னனே பேச முற்பட்டு



''இளவழுதி! இந்த இறகைப் புறாவின் சிறகுக்குள் மறைத்து விடு'' என்று கூறினான். அந்த மெல்லிய இறகை அவன் புறாவின் சிறகுக்குள் மறைக்க முயன்றபோது புறா அடம் செய்யாமல் சிறகை அனுகூலமாக பிரித்துக் கொடுத்தது. அந்தச் செய்தி இறகில் வைக்கப்பட்டதும் மீண்டும் தனது சிறகை கெட்டியாக மூடி பழையபடி அழுத்திக் கொண்டது. அதைக் கண்ட இளவழுதி, ''மன்னவா! இதைப் பறக்கவிட்டால் என்ன ஆகும்?'' என்று வினவினான்.

''முதலில் அஹமதின் கண்ணைக் கொத்திவிடும். பிறகு எனது மாளிகைக்குப்போய்ச் சேரும்'' என்று விளக்கிய மன்னன், ''இளவழுதி! புறாவைத் தளரவிடாதே. முதலில் அஹமதின் நிலையைக் கவனிப்போம்'' என்று கூற, இளவழுதி புறாவை மன்னனிடம் கொடுத்துவிட்டு அஹமத் காயங்களைப் பரிசோதித்தான். அஹமதின் கன்னங்களில் புறா கொத்தி ஆழமான காயங்கள் இருந்தன. அவை தவிர அவன் விழுந்த இடத்திலிருந்த கற்கள் குத்தியதால் மார்பிலும் முதுகிலும் காயங்கள் பட்டு குருதி உறைந்து கிடந்தது. அவன் வழுக்கை மண்டையில் ஆழமாய்த் தெரிந்த ஒரு காயத்தைக் கண்ட இளவழுதி, ''இதனால்தான் அவனுக்கு மயக்கம் வந்திருக்க வேண்டும்'' என்று நினைத்தான்.

மன்னன் கடுமையான குரலில் பேசலானான். ''இளவழுதி! அஹமதின் காயங்களைக் கழுவி அவன் விழுந்து கிடக்கும் மரத்தின் இலைகளை அரைத்துப்போடு. அவன் விழித்தால் சிறிது நீர் மட்டும் கொடு. சிறிது நேரத்தில் இங்கு எனது வீரர்கள் வருவார்கள். அவர்களிடம் அஹமதை ஒப்படைத்துவிட்டு நீ புறப்பட்டு இந்த மலையின் உச்சிக்கு வந்து சேர். அங்கிருக்கும் நான்கு குடிசைகளில் நடுக்குடிசையில் நான் இருப்பேன்'' என்று கூறி விட்டுப் புறாவை மீண்டும் இளவழுதியின் கையில் திணித்து விட்டு மலைமீது ஏறிச் சென்றான்.

மன்னன் சிறிது தூரம் நடந்த பின் ஏதோ நினைத்துக் கொண்டு திரும்பி வந்து, "இளவழுதி! புறாவை விட்டு விடு" என்று உத்தரவிட்டான். அஹமதையும் புறாவையும் பார்த்த இளவழுதி, "இது மீண்டும் இவனைக் குத்தினால்?" என்று வினவினான்.

மன்னன் மீண்டும் நடந்து வந்து அந்தப் புறாவைக் கையில் வாங்கி அதன் கண்களை உற்றுப் பார்த்து ஏதோ சொன்னான். பிறகு அதை எடுத்து மாளிகை இருந்த திக்கைக் காட்டி மேலே பறக்கவிட்டான். புறா மேலே பறந்து அவர்கள் இருந்த இடத்தின் மீது இருமுறை சுற்றியது. பிறகு அம்புபோல் மாளிகையை நோக்கிப் பறந்தது. அது சென்ற திசையைப் பார்த்த மன்னனும் முகத்தில் திருப்தியைக் காட்டி வேகமாக மலைமீது ஏறிச் சென்று விட்டான்.

மன்னன் கண்களுக்கு மறைந்ததும் இளவழுதி, அஹமதின் அருகில் உட்கார்ந்து அவனை இருமுறை அசைத்துப் பார்த்தும் அவன் கண்ணைத் திறக்காததால் நதிக்கரையில் இறங்கி தான் உடுத்தி நீராடிய துண்டை நனைத்து எடுத்து வந்து அஹமதின் காயங்களை மெதுவாகத் துடைத்தான். இன்னொரு முறை நீர்க்கரைக்குச் சென்று இரு கைகளிலும் நீரை ஏந்தி வந்து அஹமதின் முகத்தில் தெளித்து சிறிது வாயிலும் புகட்டினான். இந்த சைத்தியோபசாரங்களால் மெள்ளக் கண்விழித்த அஹமத் மிரள மிரள நோக்கினான். "அஞ்சவேண்டாம், காயங்களுக்கு மருந்து போட்டு விடுகிறேன்" என்று தைரியம் சொன்ன இளவழுதி மெதுவாக அவன் காயங்களைக் கழுவித் துடைத்து அவன் கிடந்த மரத்திலிருந்த இலைகளைப் பறித்து மலைக்கல்லில் அரைத்து மெள்ளக் காயங்களுக்குத் தடவினான்.

அந்த மரத்தின் இலைக்கு ஏதோ பெரும்சக்தி இருக்க வேண்டும். பச்சிலை போடப்பட்ட ஒரு நாழிகைக்குள் அஹமத் தனது கைகளை உதறிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் நோக்கினான். "புறா எங்கே? புறா எங்கே?" என்று கூவினான்



இரைந்து. புறா கிடைத்தால் நசுக்கும் நோக்கத்துடன் கையில் பக்கத்திலிருந்த ஒரு கருங்கல்லையும் எடுத்துக் கொண்டான்.

"புறா பறந்து விட்டது அஹமத். கல்லைக் கீழே போடு" என்று இளவழுதி கூறியதும், "அதை நீதான் விட்டாயா?" என்று இளவழுதியை நோக்கிச் சீறினான்.

"கேவலம் புறாதானே அஹமத்! அதற்காக இத்தனை ஆத்திரமா?" என்று இளவழுதி வினவினான்.

"அது சாதாரண புறாவல்ல. ராட்சஸப் புறா. என்னை சாகடித்தாலும் பாதகமில்லை. என் கண்களைக் கொத்திவிட முயன்றது. பறந்து அப்புறம் செல்வதும் மீண்டும் என் முகத்தின் மீது வேகமாகப் பாய்வதுமாக என்னை அழிக்க முயன்றது. அதனிடமிருந்து தப்பமுயன்று இரு கைகளாலும் கண்ணை மூடிக் கொண்டு நடந்ததால் தடுக்கி பலமுறை விழுந்து மலைக்கற்களால் காயமும் அடைந்தேன். மயக்கமும் அடைந்தேன். நீ வராவிட்டால் என் உயிரையும் அது குடித்திருக்கும்" என்ற அஹமத், "அது கொண்டு வந்த செய்தி கிடைத்ததா?" என்று கேட்டான். அத்தனை ரணவலியிலும் ஆவலைக் காட்டி.

"அது செய்தியா கொண்டு வந்தது?" என்று ஏதுமறியாதவன் போல் கேட்டான் இளவழுதி.

"தூதுப் புறா வேறு என்ன கொண்டு வரும்? அதுவும் நீண்ட தூரம் காரணமில்லாமலா பறந்து வரும்?" என்றான் அஹமத்.

"நீண்ட தூரம் பறந்து வந்ததா?"

"ஆம். அரபு நாட்டிலிருந்து."

"அனுப்பியது யார்?"

"என் பரம வைரி, மதகுரு"

"மதகுருவா! அவர் எதற்காக செய்தியனுப்புகிறார்?"

''சதி செய்ய''

''யாருக்கு எதிராக?''

''எனக்கு எதிராக.''

''உங்களுக்கு எதிராகவா? உங்களுக்கு எதிராக சதி எப்ப செய்ய முடியும்? எதற்காகச் சதி செய்ய வேண்டும்?''

''என்னை அழிக்காவிட்டால் மதகுரு என் அரசைப் பறிக்க முடியாது. அரசைப் பறிக்காவிட்டால் மதகுரு அரபு நாட்டில் வாழ முடியாது'' என்றான் அஹமத்.

''அஹமத்! நீ யார்? உனக்கும் மதகுருவுக்கும் என்ன சம்பந்தம்? மதகுருவுக்கு நீ எதிரியானால் அவர் சீடப் பெண்ணா அலைஅரசியுடன் எதற்காக இங்கு வந்தாய்?'' என்று கேள்விகளை வீசினான் இளவழுதி.

அஹமத் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அவன் முக உணர்ச்சி ஏதுமற்ற கல்லாயிருந்தது. கடைசியில் அவ பேசியபோது பேச்சில் வெறுப்பு மிதமிஞ்சிக் காணப்பட்டது. ''அ பெரிய கதை. இப்பொழுது உனக்குச் சொன்னால்கூட உன விளங்காது. இருப்பினும் சுருக்கமாய்ச் சொல்கிறேன் கேள்'' என்று துவங்கிய அஹமத் அங்கிருந்த பாறை ஒன்றில் உட்கார்ந்து கீழே கிடந்த கூழாங்கல் ஒன்றை எடுத்து சேரவாற்றின் நீரி எறிந்துவிட்டு கதையைத் துவங்கலானான். ''எனது விரோதிக சக்தி வாய்ந்தவர்கள். அவர்களை அழிக்க மனித பலம் மட்டு போதாது'' என்று கூறிய அஹமத் மெதுவாகப் பேச முற்பட்டான்



# 19. பிள்ளைப் பருவம்

அரையன் இளவழுதி அதுவரை சொப்பனத்தில்கூட நினைக்காத பல அனுபவங்களை அன்று காலையில் பெற்றதால் - அவன் நினைப்பு முழுவதும் அன்றைய நிகழ்ச்சிகளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்ததால் அஹமதின் கதையை முழு சிந்தனையுடன் கிரகிக்க அவனால் இயலவில்லை. தூதுப் புறாக்களைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தாலும் ஒரு புறா, அஹமதைப் போன்ற ஒரு வீரனுடன் போர் புரியுமென்றோ, காயப்படுத்த முடியுமென்றோ அவன் நினைக்க முடியாததால் அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டிருப்பதைப் பற்றி நினைத்து, 'மேலுக்கு சாத்வீகமாக இருக்கும் மனிதர்களைப் போலவே பட்சிகளையும் நம்ப முடியாது' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான். அதுமட்டுமன்றி அஹமத் விழுந்து கிடந்த மரத்தின் இலையை அரைத்து அவன் காயங்களுக்குப் போடும்படி மன்னன் சொன்னதையும், அதன்படி அரைத்துப் போட்டவுடன் அஹமதின் காயங்களில் குருதி நின்று அஹமதும் எழுந்து விட்டதையும் கண்ட இளவழுதி 'இந்த மரத்தின் இலைகளுக்கு இத்தனை மகிமை உண்டு என்பதை மன்னர் எப்படி அறிந்தார்? மன்னனுக்கு பச்சிலை மர்மங்கள் எப்படித் தெரிந்தன? மருத்துவம் எப்பொழுது பயின்றார் மன்னவர்?' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்ட தன்றி 'மன்னர் மந்திரம் கற்றிருக்கும்போது மருத்துவம் ஏன் கற்றிருக்க முடியாது?' என்று தானே சமாதானமும் செய்து கொண்டான். இத்தகைய கேள்விகளால் குழம்பியிருந்த இளவழுதியை அஹமதின் கோபக்குரல் இவ்வுலகத்துக்கு இழுத்து வந்தது. ''இளவழுதி எந்த உலகத்திலிருக்கிறாய்? நான் சொல்வது உன் காதில் விழுகிறதா இல்லையா?'' என்று சினத்துடன் கேட்டதும், ''அஹமத்! என் மூளையே குழம்பியிருக்கிறது. மன்னித்துவிடு'' என்று இளவழுதி மன்னிப்புக் கேட்டதும்

அஹமதின் முகத்தில் சீற்றம் தணிந்து சாந்தமும் முறுவலும் கலந்த சாயை படர்ந்தது. "எதற்கும் மசியாத மகாவீரனென்று பெயர் பெற்ற இளவழுதியே குழம்புவதென்றால் நிகழ்ந்த சம்பவங்களில் பெரு வலிமை இருக்க வேண்டும்" என்று கூறிய அஹமத், "இளவழுதி! நன்றாக உற்றுக்கேள் நான் சொல்வதை. நீ அரபு நாட்டுக்கு வரும்போது உனக்கு என் அனுபவங்கள் மிகுந்த பயனை அளிக்கும்" என்று சொல்லி மேலும் பேச்சைத் தொடர்ந்தான். சொந்த நாட்டைப் பற்றிப் பேசத் தொடங்கியதும் அவனது கண்களில் கனவு படர்ந்தது. அவன் குரல் குழைந்தது. மிக மெதுவாகவும் குழைந்த குரலுடனும் பேச முற்பட்ட அஹமத் சொன்னான்.

"இளவழுதி! அரேபியா, ஆண்டவன் சிருஷ்டியில் மிக அற்புதம் வாய்ந்த நாடு. அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்கள் மிகுந்த நாடு. அங்குள்ள சிறுவன்கூட பிறர் ஏசப் பொறுக்க மாட்டான். குத்தும் கொலையும் அங்கு சர்வ சாதாரணம். அத்துடன் ரம்மியமான வாழ்க்கையும் மிகுந்த நாடு. அந்த நாட்டில் மேலைக்கரையில் பாதிமா என்றொரு துறைமுகம் இருக்கிறது. கிழக்கு தேசத்திலிருந்து வரும் எந்த மரக்கலமும் அங்கு தங்கித்தான் செல்லும். பெரிய நகரமில்லாவிட்டாலும் நடுத்தர வசதிகளை உடையதாகையால் மரக்கலங்கள் தங்குவதற்கு வசதியிருப்பதாலும் எந்த மரக்கலமும் அங்கு தங்கித்தான் போக முடியும். அந்தத் துறைமுக குடிசைகள் ஒன்றில்தான் நான் பிறந்து வளர்ந்தேன். எனக்கு அப்பொழுது உலகத்தின் சூதுவாதுகள் தெரியாது. நிர்மலமான சூழ்நிலையில் சிறுவயதைக் கழித்தேன். காலையில் எழுந்ததும் கடலில் நீராடச் செல்வேன். அலைகளில் நீந்துவேன். புதிதாக வந்து நங்கூரம் பாய்ச்சி இருக்கும் மரக்கலங்களில் தொத்தி ஏறுவேன். அந்த மரக்கல மாலுமிகளுக்கு கர்ணம் போட்டு வித்தைகள் செய்து காட்டுவேன். அவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு வந்து என் தாயிடம்



கொடுப்பேன். அவள் எனக்கு ஆசையுடன் உணவு அளிப்பாள். அவளே கடைக்குச் சென்று இறைச்சி வாங்கி வந்து ருசியாக சமைத்து என் வாயில் ஊட்டுவாள். பத்து வயதிலேயே நெடிது வளர்ந்துவிட்ட என்னை வாள் பயிற்சி சொல்லிக் கொடுக்கும் ஒரு ஆசிரியனிடம் கொண்டுவிட்டு, 'இவனுக்குப் போர்த் தந்திரங்களைப் போதிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டாள்.

அவர் வியப்புடன் கேட்டார், 'இவன் என்ன படையில் சேரப் போகிறானா? இவனுக்கு வாணிபம் சொல்லிக் கொடுக்கலாமே' என்று.

'இல்லை. இவன் வீரனாக வேண்டியவன்' என்று என் அன்னை சொன்னாள்.

ஆசிரியர் எத்தனை கேட்டுப் பார்த்தும் அன்னை மேற்கொண்டு ஏதும் பேச மறுத்தாள். கடைசியில் ஆசிரியர் வாட்போர் சொல்லிக் கொடுக்க ஒப்புக் கொண்டார். மறுநாள் முதல் எனது போர்ப் படிப்பு துவங்கியது. பல மர்மங்களை எனக்கு ஆசிரியர் சொல்லிக் கொடுத்தார். அவர் எதைச் சொன்னாலும் நான் அப்படியே திருப்பிச் செய்து விடுவதைக் கண்டு ஆசிரியர் உற்சாகம் கொண்டார். சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் எங்கள் குடிசை வாயிலில் ஒரு வெண்புரவி நின்றது. அத்துடன் ஒரு காசாரியும் வந்திருந்தான். அவன் குதிரையேற்றத்தில் எனக்குப் பயிற்சியளித்தான். சில மாதங்களில் குதிரைச் சவாரியில் எனக்கு இணை யாருமில்லை என்பதை உணர்ந்து என் தாயார் மகிழ்ச்சியடைந்தார். அடுத்து என்னை ஒரு படகோட்டியிடம் கொண்டுவிட்டு என்னைக் கடலோடவும் பயிற்சிபெறச் செய்தாள். நான் நல்ல சூறாவளியிலும் படகைச் செலுத்தும் பயிற்சி பெற்றேன். என் சாமர்த்தியத்தைக் கண்ட ஒரு மரக்கலத் தலைவன் என்னைத் தனது உதவியாளனாக அமர்த்திக் கொண்டான். என் அன்னை அதற்கும் சம்மதம் தெரிவித்தாள். நான் கடலோடி பெரிய பெரிய மீன்களைப் பிடித்து வந்தேன். ஒருமுறை கொள்ளை

மரக்கலமொன்றையும் பிடித்ததால் பணமும் கிடைத்தது. அதற்குப் பிறகு குடிசையிலிருந்து பெரிய வீட்டுக்குப் போகலாமென்று முடிவு செய்தேன்.

என் தாய் ஒப்புக் கொள்ளவில்லை. ''இந்தக் குடிசையை விட்டு நான் உயிருடனிருக்கும் வரையில் வெளியில் போகாதே'' என்று திட்டமாகக் கூறிவிட்டாள்.

'நம்மிடம்தான் இப்பொழுது பணம் இருக்கிறதே. வேறு வீட்டுக்குப் போனால் என்ன?' என்று கேட்டேன்.

அன்னை பதில் சொல்லவில்லை. அவளை நான் வற்புறுத்தத் தொடங்கினேன். அப்படி நான் பிடிவாதம் பிடித்த ஒருநாள் நாலைந்து புரவி வீரர்கள் எங்கள் குடிசைக்கு எதிரில் வந்து இறங்கினார்கள். வாயிலிலேயே நின்று, 'யாரங்கே? வெளியே வா!' என்று அதட்டினார்கள்.

என் அன்னை முக்காடிட்டு வெளியே சென்றாள். 'அஹமத் எங்கே?' என்று ஒருவன் அதிகாரத்தோரணையில் கேட்டான்.

'என் மகனா?' என்று அச்சத்துடன் கேட்டாள் என் அன்னை.

'உன் மகனா?' என்று கேட்ட அவன் பெரிதும் நகைத்தான்.

'என் மகன்தான்' என்றாள் அன்னை.

'அவனை வெளியே அழை' என்றான் அந்த மனிதன்.

அவன் குரலிலிருந்த அதிகாரத்தையும் என் அன்னையை அவன் அலட்சியமாக நடத்துவதையும் பார்த்து வெகுண்ட நான் என் வாளை எடுத்துக்கொண்டு வெளியே வந்து அந்த வீரன் அடுத்த சொல்லை உதிர்க்கு முன்பாக அவனைப் புரவியிலிருந்து தூக்கி தூரத்தில் எறிந்தேன். மற்ற வீரர்கள் புரவியிலிருந்தபடியே வாளை உருவிக் கொண்டு வந்தார்கள். ஒரு சுழல் சுழன்று அவர்கள் வாட்களை நான் தடுத்தேன். என்னால் கீழே



எறியப்பட்டவன் எழுந்து வாளுடன் வந்தான். ஆனால் வாளை ஓங்கவில்லை. மற்றவர்களையும் வாட்களை உறையில் போடுமாறு கட்டளையிட்டான். பிறகு என்னை நோக்கி, 'நீ வீரனாக வளர்ந்திருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்' என்று சொன்னான்.

'சந்தேகமிருந்தால் வாளைச் சுழற்றிப்பார்' என்றேன் நான்.

'எங்கள் தலைவர் மகனுக்கு எதிரில் நாங்கள் வாளை எடுக்க முடியாது' என்றான் அந்த வீரன். 'நீ எங்களுடன் வர வேண்டும்' என்று கூறினான்.

'எதற்கு?'

'உன் பதவியை ஒப்புக் கொள்ள.'

'என்ன என் பதவி?'

'அவளைக் கேட்டுப் பார்' என்று என் தாயைச் சுட்டிக் காட்டினான் அவன்.

'என் தாயை அவமரியாதையாகப் பேசாதே' என்று நான் சீறினேன்.

ஒரு வினாடி அவன் ஏதும் பேசவில்லை. பிறகு அவன் மெதுவாகச் சொன்னான். 'அவள் உன் தாய் அல்ல' என்று.

நான் என் தாயைத் திரும்பிப் பார்த்தேன். முக்காட்டுக்குள் அவள் அசையாமல் சிலை போல் நின்றாள். 'நான் என் தாயுடன் பேசிவிட்டு நாளை வருகிறேன். நீங்கள் போகலாம்' என்று உத்தரவிடும் தோரணையில் பேசினேன்.

'செவிலி! நீ என்ன சொல்கிறாய்? நாளைக்கு அனுப்பி விடுகிறாயா?' என்று அவன் வினவினான்.

எனது தாய் தலையை அசைத்தாள். அதற்குப் பிறகு அந்த வீரர்கள் எனக்குத் தலைவணங்கிச் சென்றுவிட்டார்கள். எனக்கு எல்லாமே புரியாத புதிராயிருந்தது. அன்று நடுநிசியில் எனது தாய் என்னை எழுப்பினாள். 'என்னம்மா?' என்று துடித்து எழுந்தேன்.

'மகனே! நாம் இப்பொழுதே இங்கிருந்து போய்விட வேண்டும்' என்றாள்.

'ஏன்?'

'இங்கிருப்பது அபாயம்.'

'என்ன அபாயம்?'

'உன் உயிருக்கு அபாயம். உன்னை அழைத்துப் போக வந்தவர்கள் உன் சிற்றப்பன் வீரர்கள்.'

'யார் என் சிற்றப்பன்?'

'அரபு நாட்டின் குடிமக்களின் ஒருபகுதியின் தலைவனாக இப்பொழுது இருக்கிறான். நீ இருக்க வேண்டிய இடத்தில் அவன் இருக்கிறான். மிகவும் கொடியவன். நீ அங்கு போனால் இங்கு திரும்ப மாட்டாய்' என்று சொன்னாள்.

எனக்கு அவள் சொல்வது ஓரளவு புரிந்தது. அவள் என் தாயில்லை என்பதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. 'அம்மா! நீ எதைச் சொன்னாலும் சரி. ஆனால் என் சிற்றப்பனிடமிருந்து தப்ப யாருடன் போகப் போகிறோம்?' என்று வினவினேன்.

'உன் சிற்றப்பன் எப்படியும் உன்னைக் கண்டுபிடித்து விடுவான் என்பது எனக்குத் தெரியும். அதற்கு ஒரு புகலிடம் ஒன்றை ஏற்கனவே ஏற்பாடு செய்திருக்கிறேன். புறப்படு' என்றாள்.

குடிசையைப் பூட்டிக் கொண்டு ஒரு சிறு மூட்டையுடன் என் தாய் கிளம்பினாள். என் தாயைப் புரவி மீது உட்கார வைத்து நான்



பின்னால் உட்கார்ந்து புரவியைச் செலுத்தினேன். அன்னை சொன்ன வழியில் சென்றேன். மறுநாள் காலை அடர்ந்த ஒரு பாலைவனச் சோலைக்கு வந்தோம். மீண்டும் பயணம் செய்து பாலைவனச் சரிவுகளையும் மணற் குன்றுகளையும் தாண்டி மறுநாள் இரவில் இன்னொரு அடர்ந்த சோலையையும் அடைந்தோம். அதில் மனித அரவம் எதுவுமே காணோம். புரவியிலிருந்த எனது தாய் முதலில் இறங்கிச் சோலைக்குள் சென்றாள். நானும் புரவியிலிருந்து இறங்கி அவளைத் தொடர்ந்தேன். ஓரிடத்தில் அன்னை திடீரென்று நின்றாள். எட்ட இருந்த புதர்களிலிருந்து ஒருவர் வெளியே வந்தார். இடையில் ஒரு மான் தோலை அணிந்து உயரமும் பருமனும் உள்ள ஒரு மனிதர் தோன்றினார். அவர் தலை முழு வழுக்கையாயிருந்தது. மற்றபடி தாடி மீசையுடன் உடலெங்கும் ரோமத்துடன் மிருகம்போல் காட்சியளித்தார். அவர் புருவங்கள் பெரிதாக வளர்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்தன. அவற்றை விலக்கி அவர் தனது கண்களால் என்னை நோக்கினார். அம்மாதிரி கண்களை நான் அதுவரை கண்டதில்லை. என் அன்னை, 'மதகுருவை மண்டியிட்டு வணங்கு' என்று அச்சமும் மரியாதையும் மிகுந்த குரலில் கூறினாள்.

நான் மண்டியிட்டேன். மதகுரு என் தலையில் கையை வைத்தார். எனது உடல் முழுவதும் ஏதோ மின்சாரம் போன்ற விசை ஊடுருவிச் சென்றது.''

# 20. முடியாத கதை

சிறிது நேரம் ஏதும் பேசாமல் மௌனமாகிவிட்ட அஹமத் மேலும் தனது கதையைத் தொடர்ந்தான்.

''அன்று வரை அந்த மாதிரி ஒரு அனுபவம் ஏற்பட்டதில்லை. ஏதோ விவரிக்க இயலாத சக்தி என் உடலின் ஒவ்வொரு அணுவையும் ஊடுருவுவதாக எனக்குத் தோன்றியது. மதகுரு எனது தலையிலிருந்து தமது கையை எடுத்த பின்பும் எனக்கு முழு சுரணையும் வரவில்லை. எழுந்திருக்கக்கூட சக்தியில்லாத நிலையில் சிறிது கஷ்டப்பட்டே எழுந்து மதகுருவை நோக்கினேன். அவர் வலிய உதடுகளை மூடியிருந்த தாடியையும் மீசையையும் ஒரு கையால் ஒதுக்கிவிட்டு பிறகே பேசினார். 'மகனே! உன்னை உன் தாய் நல்ல பலசாலியாக வளர்த்திருக்கிறாள். ஆனால் உலகை ஆள உடல் பலம் மட்டும் போதாது. மனோபலமும் வேண்டும்' என்று குரு அறிவுறுத்தினார்.

'எனக்கு மனோபலமும் உண்டு' என்று சொன்னேன் நான்.

'உலகத்தார் நினைக்கும் மனோபலம், அதனால் பயன் ஏதுமில்லை. வேறு மனோபலம் இருக்கிறது. போகப் போக நீ புரிந்து கொள்வாய்' என்று கூறினார்.

'அவர் சொன்னதும் ஏதும் எனக்குப் புரியாவிட்டாலும் புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தேன். பிறகு அவர் என்னையும் என் அன்னையையும் அழைத்துக் கொண்டு அந்த சோலையின் அடர்த்தியான ஒரு பகுதிக்குச் சென்றார். அங்கு பல மரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்தன. சில தரையில் படுத்தும் கிடந்தன. அப்படிப் படுத்த மரக்கிளைகளை விலக்கிக் கொண்டு மதகுரு நடந்தார். அவற்றுக்குள்ளே மறைந்து கிடந்தது ஒரு பெரிய குடிசை. அங்கு என்னையும் என் தாயையும் தங்கும்படி உத்தரவு



பிறப்பித்துவிட்டு மதகுரு சென்றுவிட்டார். அந்தக் குடிசையில் உணவுப் பொருள்கள் அனைத்துமிருந்ததாலும் தீ மூட்டும் சாதனங்களும் இருந்ததாலும், என் அன்னை சமைத்து எனக்கு உணவளித்துத் தானும் உண்டாள். அன்றும் மறுநாளும் மதகுரு தலையைக் காட்டவில்லை. மூன்றாவது நாள் காலையில் வந்த மதகுரு எனது அன்னையை நோக்கி 'இவனை இவன் சிற்றப்பன் ஆட்கள் தேடுகிறார்கள். அவர்கள் இங்கு வந்தாலும் வரலாம். நீ போய்விடு. இவனை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொன்னார்.

என் தாய் சம்மதிக்கவில்லை. 'இவனைவிட்டு நான் போக முடியாது' என்று திட்டமாக அறிவித்தாள்.

'இவன் என்ன நீ பெற்ற பிள்ளையா?' என்று மதகுரு கேட்டார்.

'பெற்ற பிள்ளையைவிட செல்லமாக வளர்த்தேன். என் உயிர் போனாலொழிய நான் இவனைப் பிரிய முடியாது' என்றாள் அன்னை.

மதகுரு அதற்கு மறுப்புச் சொல்லவில்லை. ஆனால் மறுநாள் முதற்கொண்டு எனக்கு வித்தியாப்பியாசம் தொடங்கினார். அடிக்கடி கடலுக்கு அழைத்துச் சென்று ஒரு சிறு மரக்கலத்தில் மரக்கலமோட்டும் பயிற்சியளித்தார். அந்தப் பயிற்சிக் காலங்களில் பெரும் பிரமை அடைந்தேன். திடீரென்று மதகுரு கையசைப்பார். காற்றில்லாத போதும் பாய்கள் புடைத்து மரக்கலம் ஓடும். அலைகள் கூட சில சமயங்களில் அதிகமாக எழுந்து மரக்கலத்தைத் தரையில் ஒதுக்கிவிடும். அந்த சமயங்களில் மதகுரு காரணமில்லாமல் சிரிப்பார். அவர் எனக்கு மரக்கலமோட்டும் பயிற்சியளித்த இடத்தில் வேறு மரக்கலங்களோ மாலுமிகளோ கிடையாது. நான்கு வருஷங்களில் நான் பெரிய மாலுமியானேன். அவர் ஏதேதோ மந்திரங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்தாலும் அவை எனக்கு வரவில்லை. எனக்கு வயதும் இருபத்தி ஒன்றுக்கு

மேலாகிவிட்டதால் எனது தாய் 'இவன் எதிரியை எப்பொழுது கொல்லப் போகிறீர்கள்?' என்று இம்சை செய்து கொண்டிருந்தாள். 'சமயம் எனக்குத் தெரியும். தற்சமயம் எதிரி பெரும் பலத்துடன் இருக்கிறான்' என்று சாக்குச் சொல்லி வந்தார்.

என்னுடைய ராஜ்யம் எது? எந்த குடிமக்களுக்கு நான் தலைவன்? என்பது தெரியாததால் அன்னையை அடிக்கடி தொந்தரவு செய்தேன். அவள் ஒரு நாள் மணலில் கோடிழுத்து எனது குடிமக்கள் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டி, 'இந்த சிற்றரசு உன்னுடையது. இது பாக்தாத் காலிப்புக்கு அடங்கியது' என்று சொன்னாள். அந்த இடத்தைப் பார்த்துவிட நான் தீர்மானித்து அன்னைக்கும் தெரியாமல் ஒரு நாளிரவு என் சிற்றப்பன் இருந்த இடத்துக்குச் சென்றேன். இரண்டு நாள் பயணத்துக்குப்பிறகு அந்த இடத்தை அடைந்ததும் அங்கிருந்த கடைவீதியில் அலைந்து அந்த ஊர் தலைவர் இருக்குமிடத்தை விசாரித்தேன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த வணிகர்கள் தங்களது தலைவர் மாளிகையை காட்டுவதாக அழைத்துச் சென்றார்கள். அந்த மாளிகை வெளிப்பார்வைக்கு சிறியதாக இருந்தாலும் உள்ளே நெடுக ஓடியது. அடுத்தடுத்து ஆயுத அறைகள் பல இருந்தன. கடைசியில் கம்பிகள் இருந்த ஒரு அறைக்கு என்னை அழைத்துச் சென்று 'உள்ளே போ' என்று கூறினார்கள். அங்கு பலர் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்ததைப் பார்த்து நான் பின் வாங்கினேன். எனது மண்டையில் ஒரு பலத்த அடி விழ நான் உணர்விழந்தேன். அப்படி எத்தனை நாழிகை இருந்தேனோ எனக்குத் தெரியாது? நான் கண்விழித்தபோது அந்த பழைய அறையில் இல்லை. பஞ்சணை விரித்த கட்டிலில் படுத்துக் கிடந்தேன். அப்பொழுது பொழுது விடிந்து பல நாழிகைகள் ஆகி இருக்க வேண்டும்.

சாளரத்தின் மூலமாக உள்ளே வெயில் புகுந்திருந்தது. சாளரத்துக்கு வெளியே நீண்ட பாலைவனத்தின் மணற்பரப்பு



தெரிந்தது. அதில் வெயில் ஜ்வாலை கிளம்பி பயங்கரமாகக் காட்சி அளித்தது. சாளரத்தின் மூலம் தப்பிவிட்டால் என்ன என்று நினைத்து எழுந்து சாளரத்தை நோக்கி நடந்தேன். சாளரத்துக்கு வெளியே இரு ஒட்டகங்களின் வீரர்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள். நான் எட்டிப் பார்த்ததும் அவர்களில் ஒருவன் ஒட்டகத்தை என் சாளரத்திடம் செலுத்த அது தன் நீண்ட கழுத்தை உள்ளே நீட்டியது. நான் அதைத் தடவிக் கொடுத்தேன். அது தனது முகத்தால் என் கன்னத்தில் உராய்ந்தது. அப்பொழுது அதன் மீதிருந்த காவலன் சொன்னான் 'நீங்கள் தப்ப முயன்றால் கத்தி எறிந்து கொன்றுவிட உத்தரவு. ஆகவே முயற்சி ஏதும் செய்ய வேண்டாம்' என்று. கையிலிருந்த குறுவாளையும் காட்டினான். அந்த முயற்சியை நான் கைவிட்டேன். பத்துநாள் அங்கிருந்தேன். வேளா வேளைக்கு ஆகாரம் அளிக்கப்பட்டது. ஆனால் எப்பொழுதும் யாரோ என்னைக் கண்காணிப்பதாக ஒரு உணர்ச்சி எனக்கு இருந்து கொண்டிருந்தது.

பல கேள்விகள் என் மனத்தே எழுந்து உலாவின. 'என் சிற்றப்பன் என்னை ஏன் பார்க்க வரவில்லை? என்னை முன்னமே கொன்றுவிட முயன்றவன் என்னை ஏன் கொல்லவில்லை?' இப்படிப் பலபடி சிந்தித்தேன். திடீரென்று ஒரு நாள் என் சாளரத்துக்கு வெளியே ஒரு பெண் அலறும் ஒலி கேட்டது. எட்டிப் பார்த்தபோது எனது அன்னையை இரு காவலர்கள் பிடித்து இழுத்து வந்திருந்தார்கள். ஒருவன் அவள் தலைமயிரைப் பிடித்துக் கீழே தள்ளினான். இன்னொருவன் அவளை வெட்ட கத்தியை உருவினான். அடுத்து நடந்தது என்னையும் மீறிய செயல். என் சாளரத்துக்கு அருகே இருந்த ஒட்டகத்தின் மீது தாவி அதை நடத்திய வீரனைக் கீழே தள்ளினேன். என் தாய் மீது வாளை ஓங்கிய காவலன் மீது ஒட்டகத்தைப் பாய விட்டேன். ஒட்டகத்தின் குளம்புகள் அவன் ஊட்டியை மிதித்திருக்க வேண்டும். அவன் அலறினான். நான் ஒட்டகத்திலிருந்து கீழே குதித்து என் தாயை

அணைத்துக்கொண்டேன். ஒட்டகத்திலிருந்த வீரனைத் தள்ளியபோது அவனிடமிருந்து கைப்பற்றிய வாளை எடுத்துக் கொண்டேன். முதலில் வந்த இருவரை வெட்டிப் போட்டேன். மூன்றாவது வீரன் வந்தபோது அவனுடன் பத்துவீரர்கள் வந்தார்கள். அவர்களை அடுத்து மதகுருவும் வந்தார். அவர் பழையபடி நிராயுதபாணியாகத்தான் வந்தார். அவரைக் கண்டதும் அந்தச் சோலையிலிருந்த அனைவரும் ஓடிவிட்டார்கள். தன்னுடன் வரும்படி கூறி என்னையும் என் அன்னையையும் அழைத்துக் கொண்டு முன்னால் நடந்தார். எங்களை யாரும் பின் தொடரவில்லை. மதகுரு அந்த நகரை விட்டு அசையவில்லை. அன்று முழுவதும் அங்கிருந்த ஒரு வீட்டில் தங்கினார். எங்களையும் அங்கு தங்க வைத்தார். மறுநாள் பொழுது விடிவதற்கு முன்பே அங்கிருந்து ஒரு மூடு வண்டியில் எங்களை ஏற்றிக் கொண்டு சென்றார். எந்த இடைஞ்சலோ தடையோ இல்லாமல் எங்கள் பழைய இடத்துக்கு வந்து சேர்ந்தோம். அடுத்த சில மாதங்களில் மதகுரு என்னை கடற்கரையோரமாக உள்ள ஒரு சிற்றூருக்கு அழைத்துச் சென்றார். அங்கு தமது மேற்பார்வையில் ஒரு மரக்கலத்தை நிர்மாணம் செய்தார். அடுத்த சில மாதங்களில் அந்த மரக்கலத்தில் எனக்கு பயிற்சி அளித்தார். கடைசியாக ஒரு நாள் அவரே சில மாலுமிகளையும் அழைத்து வந்து எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். கடைசியாக அதில் சில ஆண்டு காலம் பல இடங்களுக்கும் சென்று வந்தேன். எனது இருபத்து நான்காவது வயதில் ஒருநாள் என்னை அழைத்து அலைஅரசியை அறிமுகப்படுத்தினார். 'இவள் சொற்படி நட. இவள் போகுமிடத்திற்கு நீயும் போ' என்று உத்தரவிட்டார். அவளுடன் நான் இங்கே வந்தேன். உன்னைச் சந்தித்தோம். பிறகு நடந்தது உனக்கு தெரியும். நான் உன்னை சந்திப்பதற்கு முன்பு அவள் உன்னைச் சந்தித்திருப்பதாகத் தெரிகிறது. பிறகு நான் அவள் கைப்பொம்மையானேன். அந்த இன்னொரு அரசியை நான் பார்த்ததில்லை. ஏதோ இனம் புரியாத பெரிய சிக்கலில் நான்



சிக்கியிருக்கிறேன். இடையில் என் சிற்றப்பனும் மதகுருவின் அடிமையானார். அவர் இஷ்டப்படி அந்த சிற்றரசு இப்பொழுது ஆளப்படுகிறது. அதை மதகுரு அபகரித்துக் கொள்வாரோ என்று எனது அன்னை அஞ்சுகிறாள். அதை அபகரிக்கும் பணிக்கு உபயோகப்படுத்தத்தான் உன்னை அங்கு அழைத்து வரச் சொல்லியிருக்கிறார்'' என்ற அஹமத் தனது கதையை முடித்தான்.

''உனது கதை விசித்திரமாயிருக்கிறது!'' என்றேன் நான்.

''இன்னும் முடியவில்லை. எனக்கோ உனக்கோ விளங்காத மர்மங்கள் இருக்கின்றன. இன்னும் முடியாத கதை இது. எப்படி முடியுமோ எனக்குத் தெரியாது?'' என்ற அஹமத் பெருமூச்செறிந்தான். ''நீ எனக்கு ஒரு உதவி செய்வாயா?'' என்று கேட்டான்.

''என்ன உதவி?'' என்று கேட்டேன்.

''எப்படியாவது இன்றிரவு அந்தப் புறாவைப் பிடித்துக் கொன்று விடு'' என்றான் அஹமத். அதைச் சொன்னபோது அவன் உடல் நடுங்கியது.

# 21. மன்னன் மந்திராலோசனை

அற்புதங்களும் மர்மங்களும் நிறைந்த அஹமதின் விசித்திரக் கதையைக் கேட்ட அரையன் இளவழுதி 'அராபிய இரவுகள்' பற்றிய கதைகள் கற்பனையாக இருக்கமுடியாது என்ற முடிவுக்கு வந்து ''அஹமத்! புறாவைப்பற்றி நீ கவலைப்படாதே. அதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று தைரியம் சொல்லிவிட்டு ''இந்த அலை அரசியை நீ எப்பொழுது சந்தித்தாய்? எங்கு சந்தித்தாய்? மதகுரு அறிமுகப்படுத்துமுன்பு உனக்கு அவளை அடியோடு தெரியாதா?'' என்று வினவினான்.

அஹமத் ஒருமுறை நீண்ட பெருமூச்சுவிட்டான். பிறகு ஆயாசம் மிகுந்த குரலில் பேசினான். ''அரசியை முன்பின் எனக்குத் தெரியாது. திடீரென ஒருநாள் மதகுரு அவளை எனது இல்லத்திற்கு அழைத்து வந்தார். 'அஹமத்! இவள்தான் இனி உனக்குத் தலைவி. இவள் சொல்கிறபடி நடந்து கொள்' என்று சொன்னார்.

'இவள் யார்? இவள் பெயரென்ன?' என்று என் தாயார் கேட்டாள்.

'இந்த நாட்டின் சிறந்த பெண்களில் இவள் ஒருத்தி. இவள் அரச குடும்பத்தில் பிறந்தவள். பெயர் அலைஅரசி' என்று மதகுரு அறிவித்தார்.

மிகவும் சூட்சும புத்தியுள்ள எனது தாய், 'அலைக்கு அரசியா! அப்படியானால் அரபு நிலத்துக்கும் இவளுக்கு சொந்தம் கிடையாதா?' என்று கேட்டாள்.

'நிலம் எதற்கு?' என்று கேட்டார்.

'அது நிரந்தரமானது' என்றாள் என் தாய்.

'யார் சொன்னது? உன் பிள்ளைக்குச் சொந்தமான நிலம் யாரிடமிருக்கிறது? பிள்ளையிடம் இருக்கிறதா?' என்று கேட்ட



மதகுரு 'நிலத்தைவிட நீரில் அரசு செலுத்துவது கஷ்டமானாலும் பயனுண்டு. இவள் சொற்படி சமுத்திரம் ஆடும். அலைகள் இவள் உத்தரவுக்குப் பணியும்' என்றவர், 'அம்மா! உன் மகன் ராஜ்யம் திரும்பக் கிடைக்க வேண்டுமானால் இவள் உதவி அவசியம். ஆகையால் இவளுடன் உன் மகன் செல்லட்டும். இவன் படைகளை நடத்தவும் இவன் சிற்றப்பனை முறியடிக்கவும் பிறந்துள்ள ஒருவனை இவள் அழைத்து வருவாள்' என்று கூறி, 'சரி அஹமத்! உன் எசமானியுடன் உனது மரக்கலத்தில் இன்று இரவே புறப்பட்டு விடு' என்று உத்தரவிட்டார்.

'பயணத்துக்கு வேண்டிய சாமான்களை சித்தம் செய்ய வேண்டாமா?' என்று எனது தாயார் கேட்டாள்.

'எல்லாம் மரக்கலத்திலிருக்கின்றன. உன் மகன் ஒரு குறையுமில்லாமல் திரும்பி வருவான்' என்று கூறினார்.

'என் மரக்கலத்தில் நான் எந்தப் பொருளையும் சேகரித்து வைக்கவில்லையே?' என்று நான் கூறினேன்.

'நான் சேகரித்து வைத்து விட்டேன். தவிர உனது மரக்கலத்தில் சில சூட்சுமங்களையும் வைத்திருக்கிறேன். அவையெல்லாம் அரசிக்குத் தெரியும். அன்னையிடம் உத்தரவு பெற்றுக் கிளம்பு' என்றார் மதகுரு.

'போகும் இடத்தை நான் அறியலாமா?' என்று கேட்டாள் என் தாய்.

'பாரதத்தின் தென் முனைக்குச் செல்கிறான். சேர நாட்டில் இவன் படைத்தலைவன் இருக்கிறான். அவனை இவள் அழைத்து வருவாள்' என்றார் மதகுரு.

என் தாய் மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. அன்னையை வணங்கி அவள் ஆசியைப் பெற்றுக் கிளம்பினேன். இத்தனைக்கும் அரசி வாயைத் திறக்கவில்லை. மௌனமாகவே நின்றிருந்தாள்.

நான் மதகுருவுடன் புறப்பட்டதும் அவளும் புறப்பட்டு வந்தா
அன்றிரவு நாங்கள் மரக்கலத்தில் கிளம்பினோம். மதகு
கடற்கரையில் நின்றபடியே வலது கையைத் தூக்கி ஆசி கூறின

அன்று அடியோடு காற்று இல்லை. கடல் மிக
மந்தமாயிருந்ததால் மாலுமிகளை துடுப்புகளைத் துழாவுமா
உத்தரவிட்டேன். அலைஅரசி அப்பொழுதுதான் முதன் முதலா
பேசினாள். 'அஹமத்! பாய்களை அவிழ்த்துவிடு' என்
வேலைக்காரனுக்கு உத்தரவிடுவதுபோல் உத்தரவிட்டாள்.

நான் அவளை முறைத்துப்பார்த்தேன். 'பாய்களுக்கு காற்
ஏது?' என்று சீறினேன்.

'கேள்வி கேட்காதே. சொன்னபடி செய்' என்றாள் அரசி.

எனக்குக் கோபம் தலைக்கு மேல் ஏறினாலும் அதை நா
வெளிக்குக் காட்டாமல் பாய்களை அவிழ்த்து விட்டே
இருந்தாற்போலிருந்து காற்று எங்கிருந்தோ வந்து பாய்க
புடைத்து மரக்கலம் விரைந்தது. நான் வியப்புடன் அரசியை
பார்த்தேன். அவள் கலகலவென்று நகைத்தாள். இரவு வெ
சீக்கிரம் முற்றி ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பளிச்சிட்டன. அர
'என்னை அழைத்து அஹமத்! இந்த அறையின் கூரையை
தூக்கிவிடு. நான் நக்ஷத்திரங்களைப் பார்த்துக் கொண்டே
படுக்கிறேன்' என்றாள்.

என் வியப்பு எல்லை மீறியது. அந்த அறையின் சூட்சும
எனக்கு மட்டுந்தான் தெரியும் என்று நினைத்திருந்தேன். அந்
அறையின் சூட்சுமம் மட்டுமல்ல, மரக்கலத்தின் மற்ற மர்மங்களு
அரசிக்குத் தெரிந்திருந்ததை நான் சில நாட்களில் புரிந்
கொண்டேன். அரசியை அதைப்பற்றி அன்று கேட்கவில்லை
அறையின் கூரையை விசை கொண்டு திறந்துவிட்டேன். அர
அதில் மல்லாந்து படுத்து விண்மீன்களை நோக்கி



கொண்டிருந்தாள். நான்காம் ஜாமத்துக்கு சற்றுமுன்பே அறையின் கூரையை விசை கொண்டு அவளே மூடிவிட்டு உறங்கினாள்.

அவ்வப்பொழுது மரக்கலம் எந்தத் திசைகளில் செல்கிறது என்பதையும் அவள் சொன்னாள். அதைத் திருப்பும் திசையையும் அவளே சொன்னாள். என்னைவிட அவளுக்கு மரக்கலத்தின் மர்மங்கள் அனைத்தும் தெரியுமென்பதையும், மரக்கலத்துக்கு நான் சொந்தக்காரனாயிருந்தாலும் உண்மையில் அரசியை மீறிநான் எதையும் செய்ய முடியாதென்பதையும் புரிந்து கொண்டேன். இந்த நாட்டை அடைவதற்கு முன்பே நான் அரசியின் அடிமையாகி விட்டேன். அவள் எதைச் சொன்னாலும் சிரசால் ஏற்றுச் செய்ய முற்பட்டேன். என் சொந்த புத்தி அவள் உத்தரவுகளை மீறி வேலை செய்ய மறுத்தது. ஆகவே அவள் உன்னை அழைத்துவரச் சொன்னபோது நான் உன் இல்லம் வந்தேன். பிறகு நடந்ததெல்லாம் உனக்குத் தெரியும்'' என்று கதையை முடித்தான் அஹமத்.

சிறிது நேரம் அஹமதின் கதையை நினைத்துப் பார்த்த இளவழுதி, ''அது கிடக்கட்டும். அன்று நான் நீங்கள் கொடுத்த மதுவை அருந்த மறுத்தபோது என் வாயைக் கிழித்துவிட யோசனை சொன்னாயே, அது ஏன்?'' என்று முதல் நாள் இரவு நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டான்.

''அது அரசியின் உத்தரவு. வாயைக் கிழித்து மதுவைப் புகட்டியிருந்தால் உன் சுயபுத்தி போயிருக்கும். நீயும் அவள் சொல்படி செயல்படுவாய். அதுவும் அரசியின் தூண்டுதல்தான். ஆனால் உன் மனஉறுதி அதைப் பயனற்றதாகச் செய்துவிட்டது'' என்று காரணம் சொன்னான் அஹமத்.

''இந்தப் புறாவை நீ ஏற்கெனவே பார்த்திருக்கிறாயா?'' என்று கேட்டான் இளவழுதி, அன்றைய நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு.

"பார்த்திருக்கிறேன். அப்பொழுது அது மதகுருவிடமிருந்தது. மிகவும் சாதுவாயிருந்தது. மதகுரு இதை ராட்சஸப் புறாவாக மாற்றியிருக்கிறார்" என்று கூறினான் அஹமத்.

"உன்னைக் கொல்வதால் மதகுருவுக்கு என்ன பயன்?" என்று கேட்டான் இளவழுதி.

"பயன் ஏதுமில்லை. அதனால்தான் என்னை உயிருடன் விட்டிருக்கிறார். என்னைக் காட்டி என் சார்பில் போரைக் கிளப்பி என் சிற்றப்பனைத் தோற்கடித்து அரசைக் கைப்பற்றப் பார்க்கிறார். அரசு கைவசமானதும் அநேகமாக நான் இருக்கமாட்டேன். இருந்தாலும் அவரது கைப்பாவையாக இருப்பேன்" என்று சொன்ன அஹமத் துக்கப் பெருமூச்செறிந்தான்.

அதற்குப் பிறகு எதைப்பற்றியும் கேட்காத இளவழுதி, "அஹமத்! நீ மரக்கலத்துக்குச் சென்றுவிடு. அங்கு நான் உன்னைச் சந்திக்கிறேன்" என்று கூறினான்.

"அரசியின் உத்தரவில்லாமல் நான் அங்கு எப்படிப் போக முடியும்?" என்று கேட்டான் அஹமத்.

"அஹமத்! அஞ்சாதே எதற்கும். அரசியோ வேறு யாரோ கேட்டால் சேரமன்னனின் உத்தரவென்று கூறி விடு. நான் மன்னனைச் சந்தித்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு அஹமதை துறைமுகப் பக்கம் செல்லக் கட்டளையிட்டான். மலைச்சரிவில் அவன் இறங்க முற்பட்டதும் இளவழுதி மலை உச்சிக்குச் செல்லும் பாதையில் திரும்பி நடந்தான்.

உச்சிக்குச் செல்லும் ஒற்றையடிப்பாதை கடுமையாகவே இருந்தாலும் சூழ்நிலை ரம்மியமாயிருந்தது. அக்கம் பக்கங்களில் இருந்த பிரும்மாண்டமான மரங்கள் போதிய நிழலை அளித்தன. காற்றும் மிக சுகமாக வந்தது. அருவியும் பக்கத்திலேயே வந்து கொண்டிருந்தது. அது மிகவும் சிறுத்து உற்பத்தி ஸ்தானத்தை



அடைந்ததும் அங்கே மலை உச்சியில் நான்கு குடிசைகள் தெரிந்தன. அந்தக் குடிசைகளின் வாயிலில் பல புரவிகள் நின்றிருந்தன. அந்தக் குடிசைகளில் மன்னன் கூறிய நடுக் குடிசை எதுவென்பது தெரியாததால் குடிசைகளை மெதுவாக நெருங்கினான் இளவழுதி. உள்ளே சேர மன்னன் நெடுஞ்சேரலாதன் குரல் கணீரெனக் கேட்டது. "எந்த நேரத்திலும் கடம்பர்கள் நம்மைத் தாக்கலாம். அவர்களைச் சமாளிக்கத்தான் உங்களை அழைத்தேன்" என்று கூறினான்.

"ஏன் மன்னா! உங்கள் மந்திரத்தால் அவர்களைத்தடை செய்ய முடியாதா?" என்று மற்றொருவர் கேட்டார்.

பதிலுக்கு மன்னன் பெரிதாக நகைத்தான். "மந்திரத்தால் எல்லாவற்றையும் சாதிக்க முடியுமானால் உலகத்தில் உழைப்புக்கே அவசியமிருக்காது. மந்திரம் ஒரு மாயை. சில வித்தைகளைக் காட்டலாம். ஆனால் போர்களை நடத்த முடியாது. அப்படி நடத்த முடிந்தால் பெரிய மந்திரவாதியான அரபு நாட்டின் மதகுரு நம் நாட்டிலிருந்து ஒரு படைத்தலைவனை அழைப்பானேன்?" என்று கேட்டான் நகைப்பின் ஊடே.

"அந்த படைத்தலைவனும் இப்பொழுது வருவான். அவன் வந்ததும் மந்திராலோசனையைத் துவக்குவோம்" என்று மன்னன் கூறிய சமயத்தில் இளவழுதி உள்ளே நுழைந்தான்.

# 22. மன்னன் ஏவிய மந்திரக் கணை

கடம்பர் தாக்குதல் எந்த நேரத்திலும் ஏற்படலாமென்றும், அந்தத் தாக்குதலைச் சமாளிக்கவே படைத் தலைவனொருவனைத் தாம் வரச் சொல்லியிருப்பதாகவும் மன்னன் அறிவித்ததற்கும் இளவழுதி குடிசைக்குள் நுழைவதற்கும் நேரம் சரியாயிருக்கவே அங்கிருந்தவர் அனைவரும் இளவழுதியை ஏறெடுத்து நோக்கவே செய்தார்கள். மன்னனைத் தவிர அங்கு ஏழுபேர் இருந்ததையும், அவர்கள் ஒவ்வொருவர் கழுத்திலும் பொற் பதக்கமொன்று இருந்ததையும் கவனித்த இளவழுதி, அந்த எழுவரும் அரசனுக்கு அடுத்தபடி சேரநாட்டின் பிரமுகர்களென்பதை உணர்ந்து கொண்டதால் அவர்கள் அனைவருக்கும் தலைதாழ்த்தினான். மன்னன் அருகிலும் சென்று அவன் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு, ''மன்னவா! தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கிறேன்'' என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டான்.

நெடுஞ்சேரலாதன் பதில் சொல்லவில்லை. முகத்தில் பெருமை கலந்த சாயையையும் உதட்டில் பெருமிதப் புன்முறுவலொன்றையும் படரவிட்டுக் கொண்டான். மற்ற ஏழு கேரளப் பெருந்தலைவர்களும் இளவழுதியை நோக்கி திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்கள்.

மன்னன் அந்தப் பெருமக்களை நோக்கி, ''உங்களுக்கு சம்மதந்தானே?'' என்று கேட்டான்.

''சம்மதம். முற்றும் சம்மதம்'' என்று அந்த எழுவரில் ஒருவர் கூற மற்றவர்கள் தலையசைத்து ஒப்புதல் தெரிவித்தனர்.

''படைத் தலைவன் திறமையைச் சோதித்துப் பார்த்தாலும் பார்க்கலாம்'' என்றான் மன்னவன் மற்ற எழுவரையும் நோக்கி.



''அவசியமில்லை'' என்று ஒருவர் கூற மற்றவர்கள் தலையாட்டினார்கள்.

அவர்களில் பெரியவராகக் காணப்பட்டவர் மட்டும் ''மன்னர் இதுவரையில் எதற்கும் தகுதியற்றவரைத் தேர்ந்தெடுத்ததில்லை'' என்று கூறினார்.

''உங்கள் நம்பிக்கைக்கு நன்றி தெரிவிக்கிறேன்'' என்று கூறிவிட்டு மன்னன் இளவழுதியை நோக்கி ''இளவழுதி! உன்னை ஒரு முக்கியப் பணிக்கு அமர்த்தத்தான் இங்கு வரவழைத்தேன். எதற்கும் இவர்கள் அனுமதியின்றி நான் எந்த முடிவையும் எடுப்பதில்லை. இனி இன்று முதல் அடுத்த ஒரு வார காலத்திற்கு வடகரையிலிருக்கும் நமது படைகளை நீ நடத்த வேண்டும். கடம்பர் எந்த சமயத்திலும் வடகரையைத் தாக்கலாம், நிலத்திலும் தாக்கலாம், நீரிலும் தாக்கலாம். இரண்டையும் சமாளிக்க நீ ஏற்பாடுகளைச் செய்துகொள்'' என்று உத்தரவிட்டார்.

அந்த உத்தரவை எந்தவித பதட்டமுமின்றி இளவழுதி ஏற்றுக் கொண்டான். சேரவேந்தனிடம் பிரபல படைத்தலைவர்கள் பலர் இருக்கத் தன்னை எதற்குமன்னன் தேர்ந்தெடுத்தார் என்பது தெரியாததால் கேள்வி தொக்கிய பார்வையொன்றை மன்னன் மீது செலுத்தினான்.

மிகவும் சூக்ஷ்ம புத்தியுடைய மன்னன் ''இளவழுதி இந்த போருக்கு வேறு படைத்தலைவர்களை நியமிப்பதற்கில்லை. கடம்பர் தங்கள் படையெடுப்பை மிக ரகசியமாக வைத்திருக்கிறார்கள். நாமும் ஏதுமறியாதது போல் ரகசியமாகவே தாக்குதலைச் சமாளிக்க சித்தமாக வேண்டும். நாடறிந்த எனது படைத்தலைவர்களில் ஒருவரை நியமித்தாலும் நமது ரகசியம் அம்பலமாகிவிடும். அதனால்தான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்'' என்று! கூறினான்.

"மன்னவா! கடல் போரென்றால் நான் சமாளித்து விடுவேன். கடலோடிப் பழக்கமுண்டு. நிலப்படையை இயக்கிப் பழக்கமில்லையே" என்றான் இளவழுதி.

"இளவழுதி! கவலைப்படாதே நிலப்படையை நீ வெற்றியுடன் இயக்குவாய். தவிர இந்தச் சண்டை பாதி நிலத்திலும் பாதி கடலிலும் நடக்கும். கடம்பர்கள் தங்கள் கடற்படையைச் சேர்ந்த நான்கு மரக்கலங்களை வடகரை வர உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகையால் இரண்டுக்கும் நாம் சித்தமாக வேண்டும். தேவையானால் கடற்போரை சமாளிக்க அஹமதை பயன்படுத்திக் கொள்" என்றான் மன்னன்.

"யாரது? அஹமத்?" என்று எழுவரில் பெரியவர் கேட்டார்.

"அரபு நாட்டவன். அவன் மரக்கலந்தான் நமது துறைமுகத்தில் நிற்கிறது. அதுவும் சாதாரண மரக்கலமல்ல. பல யந்திர வசதிகளை கொண்டது. அந்த ஒரு மரக்கலம் போதும் கடம்பரின் பத்து மரக்கலங்களைச் சமாளிக்க" என்று கூறினான் மன்னன்.

அதற்குப் பிறகு விவாதம் ஏதும் நடக்கவில்லை. மன்னன் முதலில் எழுந்து தனது இடையிலிருந்த பெரிய வாளொன்றை இளவழுதியின் இடையில் அணிவித்தான். அந்தப் பணி முடிந்ததும் அரசன் தனது கையிலிருந்த ஒரு பெரிய தங்கக் கங்கணத்தையும் எடுத்து இளவழுதியின் கையில் அணிவித்து "இந்தக் கங்கணம் இன்றுமுதல் உன்னை சேரநாட்டுப்படைகளுக்கெல்லாம் தலைவனாக்குகிறது. நீ இங்கும் படைத்தலைவன், அரபு நாடு சென்றாலும் அங்கும் எனது படைத்தலைவன் என்ற முறையில் பணி செய்வாயாக" என்று கூறி தனக்கு முன் மண்டியிட்ட இளவழுதியின் சிரசில் கையை வைத்தான்.

மற்ற எழுவரும் எழுந்து வந்து இளவழுதியின் சிரசின் மீது கையை வைத்தார்கள். இப்படிப் பதவி ஏற்று முடிந்ததும் மன்னன்



சொன்னான்: "இளவழுதி! இன்று பிற்பகல் நீ உனது படைகளைப் பார்வையிடலாம். கடற் போரை நீயே நடத்தினாலும் சரி, அல்லது அஹமதையோ அலை அரசியையோ நியமித்து நடத்தினாலும் சரி, உசிதப்படி செய். ஆனால் நீ இங்கிருந்து புறப்படுவதற்குள் கடம்பரின் பலத்தை சிறிதளவாவது ஒடுக்கிவிடு" என்று.

அத்துடன் இளவழுதி போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையால் சைகையும் செய்தான்.

இளவழுதி பற்பல சிந்தனைகள் சிந்தையில் உலாவ வெளியே நடந்தான். 'கடம்பர் நீண்ட நாட்களாகச் சேரர்களின் எதிரிகளாயிருந்தும் மன்னன் அவர்களை ஏன் முறியடிக்காமல் விட்டு வைத்திருக்கிறான்? மந்திர பலமும் புஜபலமும், படை பலமும் கொண்ட சேர மன்னன் நினைத்தால் இத்தனை நாள் கடம்பரைத் தீர்த்துக்கட்டியிருக்கலாமே, அதை ஏன் செய்யவில்லை மன்னன்? என்ன காரணத்திற்காக தரைப்போர் பயிற்சி அதிகமில்லாத என்னைப் படைத்தலைவனாக்கினான்? பாதுகாப்பு ஏற்பாடுகளை ரகசியமாக வைத்திருப்பதற்காகத் தனது புகழ்வாய்ந்த படைத்தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று மன்னன் கூறியதில் நியாயமிருப்பது போல் தோன்றினாலும், அதில் தனக்கும் புரியாத மர்மம் ஏதோ இருப்பதையும் உணர்ந்து கொண்டான். இருந்தும் பொறுத்துப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை, என்ற காரணத்தால் அருவிக்கரை ஓரமே நடந்து சென்றான். கதிரவன் உச்சிக்கு வந்துவிட்ட நேரத்தில் மன்னன் மாளிகையை அடைந்த இளவழுதி, பூஜை அறையில் மன்னனைத் தவிர மற்ற எல்லோரும் இருந்ததையும், பூஜையைக் கேரள பெரிய மந்திரவாதியே நடத்தியதையும் பார்த்து பூஜை அறையின் கதவருகில் ஒருபுறமாக நின்றான்.

கேரள பெரிய மந்திரவாதி மகாசக்திக்கு பூஜையை வெகு சம்பிரதாயமாக நடத்தினார். அவர் சிவந்த புஷ்பங்களையும்

வில்வ இலைகளையும் கொண்டு அர்ச்சனை செய்தபோதும் அதற்கப்புறமும்கூட கண்ணைத் திறக்கவில்லை. கண்ணைத் திறந்து கற்பூரம் காட்டியபோது மட்டும் சற்றுத் திரும்பி இளவழுதியை நோக்கி அவன் இடையில் மன்னன் அணிவித்த வாளைச் சுட்டிக்காட்டி அதை அவிழ்த்து அம்பாளின் பாதத்தில் வைக்கும்படி ஜாடை காட்டினார். இளவழுதியும் மந்திரவாதி சொற்படி வாளை வைத்ததும் அதில் அம்பாளின் குங்குமத்தை வைத்து மந்திரவாதி பெரிய குரலில் பேசினார். ''இளவழுதி இன்று சேர நாட்டின் பிரதான சேனாதிபதியாகி விட்டான். இந்த வாள் அவனிடம் இருக்கும்வரை அவனை வெற்றி கொள்ள யாராலும் முடியாது'' என்று. பிறகு இளவழுதியை அருகில் வரச்சொல்லி அந்த வாளை இவன் இடுப்பில் கட்டிவிட்டார். ''இந்த வாள் இந்த நாட்டில் மட்டுமல்ல, அயல் நாட்டிலும் பிரசித்தி பெறும்'' என்று கூறினார்.

இளவழுதி ஏதும் பேசவில்லை. பூஜா கிரகத்தில் இரண்டு பதுமைகள் போல் நின்றிருந்த அலை அரசியும் கடலரசியும் இமைகளைக்கூட அசைக்காமல் இளவழுதியைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள். இளவழுதி அவர்கள் இருவர் கண்களையும் சந்தித்தான். கடைசியில் உத்தரவிட்டான். ''அரசிகளே! நீங்கள் இருவரும் அஹமதை அழைத்துக்கொண்டு மரக்கலத்திற்குச் செல்லுங்கள். நான் என் பாட்டனாருடன் நாளை மரக்கலம் வருகிறேன். இடையில் நமது மரக்கலம் தாக்கப்பட்டால் எதிர்த்துப் போராடுங்கள்'' என்று சொல்லிவிட்டு பெரிய மந்திரவாதியிடமிருந்து பிரசாதங்களை வாங்கிக்கொண்டு வெளியே சென்றான். பிறகு மன்னரின் பேட்டி அறைக்குச் சென்றான். மன்னர் தமது வில்லையும் அம்பறாத்தூணியையும் துறந்து வாள்கூட கச்சையில் இல்லாமல் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருந்தார். மன்னனை வணங்கி எழுந்த போது அவன் கண்களில் தெரிந்தது அந்த வெண்புறா. மன்னர் அதை மடியில்



வைத்து தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார். இளவழுதி எழுந்ததும், ''இளவழுதி! புறா இன்று அரபு நாடு போகிறது. நீ ஏதாவது செய்தி அனுப்புவதானால் அனுப்பலாம்'' என்றார்.

''யாருக்கு நான் செய்தியனுப்ப முடியும்? அங்கு யாரையும் தெரியாதே'' என்று கூறினான் இளவழுதி.

''அங்கிருக்கும் மதகுருவுக்கு உன்னைத் தெரியும். நீ அவரை விரைவில் சந்திப்பாய் என்று நான் எழுதியிருக்கிறேன். நீ ஏதாவது சொல்லவேண்டுமானால் சொல். அதையும் சேர்த்து எழுதிவிடுகிறேன்'' என்று மன்னன் சுட்டிக்காட்டினான்.

''சொல்ல ஏதுமில்லை'' என்று வெறுப்புடன் இளவழுதி கூற வெண்புறாவைக் கையில் பிடித்த வண்ணம் சாளரத்துக்குச் சென்ற சேரமன்னன் சாளரத்தருகில் சென்றதும் திகைத்து நின்றான் ஒரு விநாடி. கடலில் அரசியின் மரக்கலம் பாய் விரித்து ஓடிக்கொண்டிருந்தது. ''புறா! அந்த மரக்கலத்தை நிறுத்து'' என்று சினத்துடன் கூறிய மன்னன் கையிலிருந்த புறாவை மரக்கலத்தை நோக்கி வீசினான். புறாவும் அம்புபோல் பறந்து சென்றது மரக்கலத்தை நோக்கி. அது வருவதை அறவே உணராமல் புடைத்த பாய்களைப் பார்த்து மகிழ்ந்தவண்ணம் தளத்தின் மீது நின்றிருந்தான் அஹமத். அவனைக் கிழித்துவிடும் மந்திரக்கணை போல் புறா அவனை நோக்கி வேகமாகச் சென்றது. புறா வருவதை அருகில் வந்த பிறகு உணர்ந்த அஹமத் அதை அழித்துவிடும் நோக்கத்துடன் தனது வாளை உருவிக் கொண்டான்.

# 23. யமப்புறா! செல்லப்புரவி

மந்திரங்களை போல் மரக்கலத்தை நோக்கி மன்னன் ஏவி அந்த வெண்புறாவை மன்னன் பக்கத்தில் நின்ற வண்ணம் நோக்கிய இளவழுதி. "இதென்ன விசித்திரம் மன்னவா?" என்று வினவினான்.

"எது இளவழுதி?" என்று மன்னன் வினவினான் பதிலுக்கு.

"இந்தப் புறா தனியாக எங்கிருந்தோ வந்திருக்கிறது. ஆனால் அதோ பாருங்கள். அதைப் பற்றச் செல்லும் நான்கு வல்லூறுகளையும் ஜாலம் காட்டி மேலும் கீழுமாகப் பறந்து தப்பி சென்றுவிட்டதே!" என்று கூறி வெளியே சுட்டிக்காட்டினான்.

பலர் அதை அழித்துவிட முயன்றாலும் பயனளிக்கவில்லை என்பதையும் இளவழுதி கண்டான். அந்தப் புறா அம்புபோல் பாய்ந்து சென்றாலும் வல்லூறுகள் அணுகிய போதெல்லாம் மேலே பறந்துவிட்டது. வல்லூறுகள் சிறிது பின்தங்கியதும் பழையபடி நேராக மரக்கலத்தை நோக்கிப் பறந்தது.

அது மரக்கலத்தின் மத்திய பாய்மரத்தை அடைந்ததும் அதைக் கொல்ல அஹமத் வாளை உருவியதையும் கண்ட இளவழுதி "மன்னவா! ஒரு சிறு புறாவைக் கொல்ல இவ்வளவு பெரிய வாள் தேவையா? அஹமத் போன்ற படைவீரன் இந்த முயற்சியில் ஈடுபட வேண்டியதுதானா?" என்று வினவினான்.

மன்னன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சற்று நிதானித்துவிட்டு, "இளவழுதி! ஔவையார் வாக்குண்டாம் படித்திருக்கிறாயா?" என்று வினவினான். இளவழுதி புறாவின் சாமர்த்தியத்தை எண்ணி வியந்து நின்றதால் மன்னனின் கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை.

"படித்திருக்கிறாயா இல்லையா?"



"படித்திருக்கிறேன் மன்னவா. ஔவை மூதாட்டி நூல்களை அறியாதவன் தமிழனாயிருக்க முடியுமா?" என்று வினவி தனக்குள்ள தமிழ்ப்பற்றையும் அறிவையும் விளக்கினான் இளவழுதி மறைமுகமாக.

மன்னன் புன்முறுவல் கொண்டான் சில விநாடிகள்.

"நன்று சொன்னாய் இளவழுதி. ஆனால் உண்மை என்ன தெரியுமா? 'சிறியவர் என்றிருக்க வேண்டா' என்று கூறுகிறார். அதாவது ஒரு மனிதன் அல்லது பிராணியின் உடல் சிறியதாயிருப்பதாகப் பாவித்து ஏமாறாதே. உதாரணம் நமது கண் முன்பே இருக்கிறது. புறா சிறியது அஹமத் பெரியவன். அவன் வாளும் பெரியது. ஆகவே என்ன செய்ய முடிந்தது?" என்று வினவிய மன்னன் "இப்பொழுது மரக்கலத்தைப் பார்" என்றான்.

மரக்கலத்தில் அஹமத் பாய்ந்து வாளைச் சுழற்றிக் கொண்டு அங்குமிங்கும் குதித்துக் கொண்டிருந்தான். மரக்கலப் பாய்ச்சீலையொன்றில் உட்கார்ந்திருந்த அந்த வெண்புறா அடிக்கடி அஹமத் மீது பாய்ந்து அவன் முகத்தைக் கொத்த முயன்று கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அஹமத் ஆயாசத்தால் தளத்தில் மல்லாந்து விழுந்தான். புறா ஜிவ்வென்று பாய்ந்து அவன் தலையில் உட்கார்ந்து தனது அலகைத் தீட்டலாயிற்று.

இனி தாமதிப்பது தவறு என்ற சேரமன்னன், "இளவழுதி, நீ அலை அரசியை அழைத்துக்கொண்டு மரக்கலம் போய் அஹமதை அந்தப் புறாவிடமிருந்து காப்பாற்றி அழைத்துவா" என்றான்.

அரசனிருந்த இடத்தைவிட்டு இளவழுதி வெளியே வந்ததும் வாயிலில் சித்தமாகக் காத்திருந்த அலை அரசி அவன் கையுடன் தனது கையைக் கோர்த்துக் கொள்ள இருவரும் கடற்கரையை நோக்கிச் சென்றனர்.

அன்று வடகரை முகத்துவாரத்தில் மரக்கலங்கள் அதிகமில்லாவிட்டாலும் படகுகள் நிரம்ப இருந்ததால் ஒரு படகை தளையிலிருந்து இளவழுதி அவிழ்த்துக்கொள்ள அலை அரசியும் அதில் ஏறித் துடுப்புக்களைத் துழாவினாள்.

படகும் சீக்கிரம் மரக்கலத்தை அடைந்தது. அஹமத் மரக்கலத்தின் ஓரத்தில் நின்று குனிந்து தனது கையொன்றை நீட்ட அதைப்பற்றிய அலை அரசி, மரக்கல தளத்துக்குள் குதித்தாள். அடுத்து அஹமத் கையை நீட்டக் காத்திராமல் இளவழுதி மரக்கலப்பக்கம் பலகையில் தொத்தி ஏறி மரக்கல தளத்தை அடைந்துவிட்டான்.

தளத்துக் காட்சி பிரமிக்கத்தக்கதாயிருந்தது. அஹமதின் உடைகள் இரண்டு இடங்களில் கிழிந்து சின்னாபின்னமாகக் கிடந்தன. அஹமதின் தலையில் பல இடங்களில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. பல அலகுக் கொத்துக்களால் குழி குழியாய் அவன் வழுக்கைத் தலையில் தெரிந்தன.

''அஹமத்! ஒரு புறாவைச் சமாளிக்க உன்னால் முடியவில்லை?'' என்று வினவினான் இளவழுதி.

''உன்னால் முடிந்தால் பாரேன்'' என்றான் அஹமத்.

இளவழுதி வாளை உருவவில்லை. தனது தலைப்பாகைத் துணியை விரித்து பாய்ச்சீலையில் உட்கார்ந்திருந்த புறாவின் மீது வீசினான். அடுத்த கணம் அதில் சிக்கிய புறாவுடன் துணியை பந்தாகச் சுருட்டிக் கையில் வைத்துக் கொண்டான்.

''அதை இங்கு கொடு'' என்று கையை நீட்டினான் அஹமத்.

இளவழுதி அசையவில்லை.

''இந்தப்புறா உனக்கு எதற்கு?'' என்று வினவினான்.

''அது எனக்கு ஒரு செய்தியை வைத்திருக்கிறது.''



''எங்கு? என்ன செய்தி? யார் அனுப்பியது?'' என்று கேள்விகளை அடுக்கினான் இளவழுதி. அத்துடன் கேட்டான், ''இது என்ன, தூதுப்புறாவா? அல்லது வேவுப்புறாவா?'' என்று.

''இரண்டுமில்லை. என்னை அழிக்க வந்த யமப் புறா'' என்றான் அஹமத்.

அத்துடன் துணியை இளவழுதியிடமிருந்து பிடுங்கி புறாவின் அடிச்சிறகை விரித்துப் புறாவை மட்டும் கையில் பிடித்துக் கொண்டான். பிறகு அவன் ஏதோ சொல்ல புறா தனது அடிச்சிறகுகளை நன்றாக விரிக்க, அடியிலிருந்து ஒரு சிறிய மெல்லிய துணி விழுந்தது கீழே. அதை அஹமத் எடுத்துப் பிரித்து, ''படி இளவழுதி'' என்று நீட்டினான்.

அந்தச் சிறு துணி பாரதத்தில் உற்பத்தியாவதும் உலகெங்கும் பிரசித்தி உள்ளதுமான மஸ்லின் என்பதை உணர்ந்து அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். பொடிப் பொடி எழுத்துக்களால் அதில் ஒரு கடிதம் வரையப்பட்டிருந்தது. அதைப் படித்த இளவழுதி பிரமிப்படைந்தான். அதிர்ச்சிக்கும் உள்ளானான்.

மாளிகையின் கதவுகள் முன்னமே மூடப்பட்டிருந்தன. இளவழுதி ஒருமுறை குரல் கொடுக்கவே கதவுகள் திறக்கப்பட்டன. மஸ்தானாவுடன் உள்ளே நுழைந்த இளவழுதி அதிர்ச்சியுற்று மீண்டும் பின்னடைந்தான். உள்ளே அலைஅரசியும் கடலரசியும் இரு கயிறுகளால் பிணைக்கப்பட்டுக் கிடந்தார்கள். இளவழுதி தாமதிக்கவில்லை. தனது வாளை உருவி பிணைத்த கயிறுகளை அறுத்து எறிந்தான். இரு அரசிகளும் எழுந்திருந்து, ''படைத் தலைவரே! எங்களையும் குளிப்பாட்டி விடுங்கள்'' என்று கேட்டார்கள்.

''இதுதான் எனக்கு வேலையா?'' என்று இளவழுதி வினவினான்.

''புதிதாக எதையும் சொல்லவில்லையே. சற்றுமுன்பு அவளுக்குச் செய்ததை எங்களுக்கும் செய்தாலென்ன?'' என்று அலைஅரசி வினவினாள்.

''மஸ்தானா! அவள் விஷயம் வேறு'' என்றான் இளவழுதி.

''என்ன வித்தியாசம்? அவளும் பெண், நாங்களும் பெண்கள்தானே?'' என்று அரசி வினவினாள்.

''பெண்கள் எல்லாரும் ஒன்றா?'' என்று இளவழுதி வினவினான்.

''வித்தியாசமிருந்தால் நீங்கள்தான் சொல்ல வேண்டும்?'' என்றாள் அரசி.

''சொல்கிறேன் கேள். எங்கள் மனங்கள் ஒன்றுபட்டு விட்டன.''

''அப்படியானால் திருமணம் செய்து கொள்வது தானே!''

''அதுதான் உத்தேசம்.''

அப்பொழுது திட்டமாக வந்தது ஒரு குரல். ''உத்தேசம் நிறைவேறாது'' என்று மன்னர் குரல் ஒலித்தது.

''ஏன்?'' என்று வினவினான் படைத்தலைவன்.

''அவளுக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டது.'' இதைச் சொன்ன மன்னர், ''இளவழுதி! உன் ஆசையை விட்டுவிடு. உனக்குச் சரியான ஒரு பெண்ணைப் பார்த்து நானே திருமணம் செய்து வைக்கிறேன்'' என்றும் கூறி படைத்தலைவனை திருப்திப்படுத்த முயன்றார்.

''இவள் சுதந்திரப் பறவை. இவளை மறந்துவிடு'' என்றும் கூறினார்.

மஸ்தானாவுக்குத் திருமணமாகிவிட்டதென்ற செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த இளவழுதி, நின்ற இடத்திலிருந்து அசையும் சக்தியையும் இழந்ததால் செல்லப் புரவி மீதிருந்த மஸ்தானாவை ஒரு கையால் அணைத்தும் புரவியின் கடிவாளங்களை இன்னொரு கையால் பிடித்தும் வெளியூரிலிருந்து அரசகுமாரியை அழைத்துவரும் பணிமகனைப் போல் பவ்யமாக நின்றான். பிறகு மெள்ளப் பேசத் துவங்கி, ''மஸ்தானா! அரசர் சொல்வது உண்மைதானா?'' என்று வினவினான்.

இதனால் மாளிகைக்கு நடுவில் நின்ற மன்னர் சினத்தின் வசப்பட்டு, ''அரசன் மீது பொய்க்குற்றம் சாட்டுகிறாயா இளவழுதி?'' என்று வினவினார் கோபம் குரலிலும் ஒலிக்க.



''இல்லை மன்னவா மஸ்தானாவுக்குத் திருமணமாகியிருந்தால் அவள் தந்தை அவளை ஏன் என்னுடன் தனியாக அனுப்பி வைத்தார்? அவள் கணவனை எனக்கு ஏன் அறிமுகப்படுத்தவில்லை?'' என்று வினவினான்.

சேரமன்னர் சிறிது சிந்தித்துவிட்டு, ''மதகுரு காரணமில்லாமல் எதையும் செய்யமாட்டார். நாளை அவரே இங்கு வருகிறார். அவரையே கேட்டு விடுவோம்'' என்றார்.

மதகுரு மறுநாள் வந்தார். தனித்து வரவில்லை. மஸ்தானாவின் கணவனையும் அழைத்து வந்திருந்தார். அவன் பெரிய ராக்ஷஸன் போலிருந்தான். அவன் இளவழுதியைக் கண்டதும், ''டேய்! என் மனைவியைத் தூக்கி வர உனக்கு என்ன துணிச்சல் இருக்க வேண்டும். உன் மனைவியை இன்னொருவன் கொண்டு போயிருந்தால் நீ என்ன செய்வாய்?'' என்று வினவினான்.

''அவனைக் கொன்றுபோட்டு மறுவேலை பார்ப்பேன்'' என்றான் இளவழுதி.

''அதற்குத்தான் நானும் வந்திருக்கிறேன்'' என்றான் மஸ்தானாவின் கணவன். ''நாளை மற்போரில் முடிவு செய்வோம், மஸ்தானாவின் கணவன் யார் என்பதை?'' என்றும் சொன்னான்.

அதுவரை எட்ட செடி மறைவிலிருந்த அஹமத் வெளியே வந்து, ''முடிவை இப்பொழுதே சொல்லி விடுகிறேன். நாளைக்கு நான் புதிய படைத்தலைவரை நியமிக்க வேண்டும். அவருக்கு வேறு மனைவியையும் தேட வேண்டும்'' என்றான்.

சற்று நிதானித்த இளவழுதி, ''இவர் யார்? இவர் பெயரென்ன? தொழில் என்ன?'' என்று கேட்டான்.

''இவர் பெயர் ஜமாலுதீன். பாண்டி அரசர்கள் இவரிடமிருந்துதான் புரவிகளை வாங்குகிறார்கள். இவரும் ஹார்மோஸ் என்ற இடத்தில் பெரும் புரவிப் பண்ணை

வைத்திருக்கிறார். மதகுருவைவிட இவர் புரவி வாணிபத்தில் சிறந்தவர். உலக அறிவிலும் சிறந்தவர். இவரால் மதகுருவுக்கு பெரும் லாபம்'' என்றான் அஹமத்.

''சரி, நாளை?'' என்றான் படைத்தலைவன்.

பதிலுக்கு மஸ்தானாவின் கணவன் அசுரத்தனமாக நகைத்தான். ''படைத்தலைவரே! அவருடன் போரிட ஒப்புக் கொள்ளாதீர்கள். உங்களைப் பிண்டமாயப் பிய்த்துப் போட்டுவிடுவார்'' என்று கெஞ்சினான் அஸமத்.

அந்த கெஞ்சலுக்கு ஜமால் பதில் சொன்னான். ''தமிழா! வேண்டுமானால் மஸ்தானாவுக்குப் பின் மறைந்து கொள்'' என்று.

''தமிழன் சாவுக்கு அஞ்சுவதில்லை. வந்த போரையும் விடுவதில்லை'' என்றான் இளவழுதி.

மறுநாள் மாளிகை முகப்பிலேயே மற்போர் துவங்கியது.

இளவழுதியைக் கண்டு அனைவருமே பரிதாபப்பட்டனர். ஜமால் பெரிய அசுர நடை நடந்து இளவழுதியை நோக்கி வந்தான், பூனை எலியை நோக்கி வருவது போல.



# 30. நற்செய்தி

வடகரை மாளிகையின் முகப்பு நல்ல சதுக்கமாகவும் நன்றாக செதுக்கப்பட்டு நிலம் கெட்டிப்பட்டும் இருந்தது. கடல் மணல் நிரம்பக் கொட்டப்பட்டு மற்போருக்கு நல்ல வசதியாகவும் இருந்தது. அந்த இடத்தில் பெரும் ராட்சன் போல இறங்கிய ஜமாலுதீனை, புரவி வாணிப கங்காணிகளும், மாளிகைக் காவலரும் கண்டு பிரமித்தனர்.

கடம்பர் சிலரும் கூட பிரமிப்புடன் பார்த்தனர். சிலர் படைத்தலைவனிடம் அனுதாபம் கொண்டனர். இவனிடம் படைத்தலைவர் சிக்கி மாள்வது திண்ணம் என்று உள்ளூர எண்ணி வருந்தினர். மற்றும் சிலர், நம்மிடமிருக்கும் ஒரே வீரனை இழக்க நேரிடுமே என்று அனுதாபம் கொண்டனர். மகாபாரதத்தைப் படித்தோ கேட்டோ அறிந்தவர்கள் பீமன், கடோற்கஜன், ஜராசந்தன் இவர்கள் உண்மையாக இருந்திருப்பார்களோ என்ற சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகவே வந்தவன் போல் காணப்பட்டான். ஜமாலுதீன் அரபு புரவியிலிருந்து கீழே குதித்து தோள்களையும் தொடைகளையும் தட்டிக் கொண்டு அட்டகாசமாக காட்டிக் கொண்டான். மற்போரின் முடிவைப் பற்றிப் பலரும் பலவிதமாக எடை போட்டுக் கொண்டிருக்கையில் மாளிகையின் வாயில் வழியாக இளவழுதி தனது மெல்லிய கைகளை ஆட்டிக் கொண்டு வெளியே வந்தான். அவனைப் பலரும் அனுதாபத்துடன் நோக்கினர், பலிக்குச் செல்லும் ஆட்டைக் காண்பவர் போல. உப்பரிகையிலிருந்த மஸ்தானாவும் கண் கலங்கினாள். சிறிது தேம்பவும் செய்தாள். அத்தனையையும் கவனித்தபடி மிகுந்த அசட்டையுடன் அரங்கத்தில் புகுந்த இளவழுதியை அணுகி அரபு ராட்சதனான ஜமாலுதீன் தனது இரு பெரிய கைகளாலும் அவனை அணைத்து இறுக்கினான்.

ஏதோ பெரியக் கரடியின் பிடியிலகப்பட்டதைப் போல் எண்ணிய இளவழுதி தனது கைகளை முஷ்டியாகப் பிடித்து அவன் வயிற்றில் வேகமாகக் குத்துக்களை விட்டான். நல்ல மர்மஸ்தானங்களாகப் பார்த்து வயிற்றில் பலவீனமான இடத்தில் சரமாரியாக விட்ட குத்துக்கள் அந்த ராட்சதனையும் முகம் சுளிக்க வைத்தது. அப்பொழுது ஜமாலுதீன் சொன்னான் "பிழைத்துப்போ தமிழா! இத்துடன் உன்னை விட்டுவிடுகிறேன்" என்றான் ஏளனக்குரலில்.

"அஞ்சாதே அரபு வணிகா. அடுத்த குத்துக்களை சிறிது வலிக்காமல் கொடுக்கிறேன். மார்பை தடவி விடுகிறேன். பொட்டிலும் குத்தவில்லை" என்று சமாதானம் சொன்னான் படைத்தலைவன். ஆனால் அந்த சமாதானத்தை ஏற்காத ஜமாலுதீன் முன்னைவிட மும்முரமாகப் போரிடத்துவங்கி இளவழுதியின் காலொன்றை தனது புஜங்களுக்கிடையே இறுக்கி மேலே தூக்க, இளவழுதி மல்லாந்து கீழே விழுந்தான் மணலில். அதே விநாடி அவன் மீதுத் தாவி உட்கார்ந்தான் ஜமாலுதீன்.

அவன் சீர பளுவையும் அவன் கைகள் கழுத்தை நெரிக்க முற்பட்டதையும் தாளாமல் இளவழுதியும் முகம் சுளித்தான். அந்த சுளிப்பில் வேதனை தெரிந்ததால் இளவழுதியின் முடிவுக்கு அது ஆரம்பமென்று பலரும் நினைத்தனர். மஸ்தானா உப்பரிகையிலிருந்து ஓடி வந்து இளவழுதியின் பக்கத்தில் உட்கார்ந்து, "படைத்தலைவரே! அஞ்ச வேண்டாம். உங்களுக்கு எந்த ஒரு தீங்கு நேர்ந்தாலும் இவரது பெரிய குதிரை வியாபாரத்தை ஒழித்து விடுகிறேன்" என்றாள்!

அதைக்கேட்ட ஜமாலுதீன் முகத்தில் அச்சம் தெரிந்தது அவனுடைய பலவீனமான இடத்தைப் புரிந்து கொண்ட இளவழுதி, "இனி இவன் புரவிகள் தமிழ்நாட்டில் நுழையவிடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான். இடியே



தலையில் இறங்கியதுபோல நடுங்கினான் ஜமாலுதீன். புரவி வியாபாரந்தான் அவனை வாழவைத்து புகழையும் பணத்தையும் தந்தது. அதுவும் அவன் வாணிபம் தமிழ்நாட்டில்தான் அதிகம் என அறிஞர் வாஸப் சொல்கிறார்.

நடுங்கிய ஜமாலுதீனின் அருகில் சென்ற இளவழுதி அவன் கையைப் பிடித்துக் 'கரகர'வெனச் சுழற்றி எறியவே, அராபியன் வெகுவேகமாக மாளிகையின் முகப்பில் விழுந்து தலை மோதிக் கொள்ள, அவன் தலையிலிருந்து குருதி ஆறாகப் பெருகியது. அவன் கண்கள் பஞ்சடைந்தன. அவன் மூர்ச்சையடைந்தான்.

ஆனால் மறுநாள் ஏற்பட்ட நிகழ்ச்சி அன்றைய நிலைக்கு அடியோடு மாறியது.

மஸ்தானா-இளவழுதி திருமணம் நடப்பதற்குப் பெரும் தடையை ஏற்படுத்தினான் ஜமாலுதீன்.

மறுநாள் மணவறையில் முத்துப் பந்தலில் உட்கார்ந்திருந்த இளவழுதியின் முன்பு ஒரு பெரும் வாளின் நுனி நீண்டது. "தமிழா! எழுந்துவிடு. இல்லையேல் மணவறை பிணவறையாகி விடும்" என்ற அமங்கலச் சொற்களும் உதிர்ந்தன. மணவறையைப் பலர் சூழ்ந்து நின்றதையும் இளவழுதி கவனித்தான். அப்படிக் கூடியிருந்த வீரர்களில் பலர் கடம்பர் என்பதை அறிந்து, "நீங்களா! ஒருவனைக் கொல்ல இத்தனைப் பேர் வேண்டுமா?" என்று ஏளனத்துடன் வினவினான் இளவழுதி.

அடுத்தகணம் முத்துப் பந்தலுக்குள் மூன்று கடம்பர் நுழைந்து விட்டனர். வாட்கள் மூன்று இளவழுதியின் மார்பைத் தடவின. அடுத்து ஒரு அலறல் கேட்டது. மணவறையிலிருந்த அனைவரும் திகைத்தனர். மஸ்தானா மூர்ச்சையடைந்தாள். அடுத்து நிகழ்ந்தது ஒரு பிரளயம்.

ஜமாலுதீனுக்கு மாமிசபலத்துடன் சிறிது மூளையும் இருந்ததை இளவழுதி புரிந்து கொண்டான். மற்போர் நடந்த மாலையிலிருந்து

இரவு வரை ஜமாலுதீன் அடியோடு எங்கோ மறைந்து விட்டான். திரும்ப அவன் தோன்றியது மணவறையில்தான்.

மணவறை சொர்க்கலோகம் போல் சிங்காரிக்கப்பட்டிருந்தது. மணவறை நுழைவாயிலில் புஷ்பச்சரங்கள் தொங்கின.

நான்கு பேர் படுக்கக் கூடிய பெரிய அம்சதூளிகா மஞ்சத்தைச் சுற்றிலும் பாண்டிநாட்டு முத்துச்சரங்கள் தொங்கின. பஞ்சணை மீது புஷ்பங்கள் ஏராளமாகத் தூவப்பட்டிருந்தன. அறையின் ஒரு மூலையிலிருந்த கணப்புச் சட்டியிலிருந்து சாம்பிராணி வாசனை எழுந்து அறையை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. திருமணத் தம்பதிகள் அருந்துவதற்காகப் பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ போட்டுக் காய்ச்சப்பட்ட பசும்பால் ஒரு பெரும் சொம்பில் வைக்கப்பட்டிருந்தது. தவிர உள்ளிருக்கும் மஞ்சத்தில் ஏராளமான பலகாரங்களும், பழங்களும் வைக்கப்பட்டிருந்தன.

அந்த சமயத்தில் பத்து கடம்ப வீரர்களுடன் உள்ளே நுழைந்த ஜமாலுதீன், 'உம் ஆகட்டும்' என்று ஊக்குவிக்க மூன்று கடம்பர்கள் தங்கள் வாட்களை உருவி இளவழுதியின் மார்பில் நிறுத்தி, 'இளவழுதி! எழுந்து ஓடிவிடு! மணவறை பிணவறையாகிவிடும்' என்று மிரட்டியதன்றி வாட்களை சிறிது ஊன்றவும் செய்தனர்.

ஆனால் இளவழுதி இவற்றை லட்சியம் செய்யாது ஒரு கடம்பன் மீது மோத அவன் அலறிக்கொண்டே மற்ற வீரர்கள் மீது விழுந்தான். அடுத்து அந்த மணவறைப் போர் அறையாயிற்று. விநாடி நேரத்தில் பஞ்சணையிலிருந்து துள்ளியெழுந்த இளவழுதி தன் தலையணைக்குக் கீழிருந்தக் குறுவாளை எடுத்து எதிரிலிருந்த கடம்பன் ஒருவன் மீது எறிய, அது அவன் ஊட்டியில் பாயவே அவன் பயங்கரமாக அலறினான். அவன் முன்னாலிருந்த கடம்பன் சற்றுப் பின்னடைந்தான்.

இளவழுதி அவன் பின்னே பஞ்சணையிலிருந்துக் கீழே குதித்து கடம்ப வீரன் ஒருவன் கையிலிருந்த வாளைப் பிடுங்கிக் கொண்டு போருக்குச் சித்தமானான். அடுத்த விநாடி வாட்களுடன் வாட்கள்



மோதும் சத்தம் அந்த அறையெங்கும் ஒலித்தது. அந்த ஒலி கீழேயிருந்த மன்னர் காதிலும் விழவே தன் வீரர்களை ஏவி மேலே நடப்பதைப் பார்க்க அனுப்பினார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மஸ்தானா மூர்ச்சை தெளிந்து தள்ளாடி எழுந்தாள். அவளைப் பார்த்த மன்னர் அனுதாபம் கொண்டு, ''என்ன அலங்கோலம் இது?'' என விசாரித்தார்.

''ஜமாலுதீன் எங்கிருந்தோ கடம்பர்களை அழைத்துக் கொண்டு வந்து மணவறையிலேயே படைத்தலைவரை ஒழித்துவிடப் பார்த்தான். ஆனால் அது அவரிடம் நடக்க வில்லை'' என்று சொல்லிக்கொண்டே ம்றுபடியும் மூர்ச்சையாகி விழப்போனவளைப் பின்னால் வந்த இளவழுதி அணைத்துத் தூக்கிக் கொண்டு மறுபடியும் மேலே அழைத்துச் சென்றார்.

அவர்களைப் பின்பற்றி ஜமாலுதீனும் சென்றான். அப்போது சேரமன்னர், ''ஜமாலுதீன்! உனக்கு இங்கு என்ன வேலை?'' என்று எரிந்து விழுந்தார்.

ஜமாலுதீன், ''மன்னா! இந்தக் கேள்வியே சரியில்லையே. மணவறையில் மணமகனுக்கு என்ன வேலையென்று கேட்டால் என்ன பதில் சொல்வது?'' என வினவவும் செய்தான்.

இந்த சம்பவங்களால் நாணத்தினால் குன்றிப்போன மஸ்தானா மளமளவென்று மாடியறைக்குச் சென்று மணவறைக் கட்டிலில் படுத்துவிட்டாள். அவள் படுத்ததும் முதன் முதலாக உள்ளே நுழைந்தவன் ஜமாலுதீன்.

அவனைக் கண்டதும் ''நீ எங்கு வந்தாய்?'' என வினவினாள் மஸ்தானா.

''ஒரு மணமகள் மணமகனைப் பார்த்துக் கேட்கும் கேள்வியா இது?'' என்று கூறிக் கொண்டே அவளை மெல்ல அணுகி அவள் பக்கத்தில் 'தொப்'பென விழுந்தான். அவன் பளுவைத் தாங்க

முடியாத கட்டில் கிரீச் கிரீச் என அலறியது. மெல்ல ஜமாலுதீன் தன் கையை மஸ்தானாவின் மேல் போட்டு அவளை அணைத்தான்.

மஸ்தானா அவன் கையைத் தூக்கி அப்புறம் தள்ளினாள்.

அப்போது உள்ளே நுழைந்த இளவழுதி, ஜமாலுதீனை ஒருபுறமாக ஒதுக்கிவிட்டு அவனிருந்த இடத்தில் தான் படுத்துக் கொண்டான். அவன் கைகள் மஸ்தானாவை அணைத்துக் கொண்டன.

ஜமாலுதீன், ''இது தகுதியல்ல இளவழுதி!'' என முறையிட்டான்.

''எது?''

''என் மனைவியை நீ அணைப்பது''

''அவளைத்தான் மற்போரில் பணயம் வைத்து என்னிடம் தோற்றுவிட்டாயே. இனி அவள் எனக்குத்தான் சொந்தம்'' என உரிமை கொண்டாடினான் இளவழுதி.

அப்பொழுது, ''மஸ்தானா! இவனை நீ ஏற்றுக் கொள்கிறாயா?'' என்று ஜமாலுதீன் வினவினான்.

''நீங்கள் தோற்றபிறகு வேறு என்ன செய்வது?'' என அவள் கேட்டாள்.

''மஸ்தானா! இது இத்துடன் நிற்காது. இவனை உன் தகப்பனார் மருமகனாக ஒப்புக் கொள்ளவே மாட்டார். இவன் உன்னைக் கட்டினால் நீ தாங்கமாட்டாய். இவன் கரடி போன்றவன். இவன் தழுவல் கரடித் தழுவல் - என்னை இறுக்கியபோதே என் எலும்புகள் முறிந்துவிடும் போலிருந்தன'' என்றான் ஜமாலுதீன்.

இதைக்கேட்டு நகைத்தாள் மஸ்தானா. ''ஜமாலுதீன்! அந்த மற்போருக்கும் காமப்போருக்கும் வேறுபாடுகள் உண்டு. தவிர இவர் என்னை ஏற்கனவே அணைத்திருக்கிறார்'' என்றாள்





நகைப்பினூடே.

''எங்கு?''

''பஸ்ராவில், என் தந்தையின் முன்பாக. அப்போது இவர் இறுக்கின இறுக்கில் என் மார்பே வெடித்துவிடும் போலிருந்தது. அதற்கு இவரே சிகிச்சையும் செய்தார்'' என்ற அவள் குரலில் நாணம் பெரிதும் ஒலித்தது.

''என்ன சிகிச்சை?'' என உறுமினான் ஜமாலுதீன்.

''கையால் மார்பை மெல்ல வருடினார். தனது உடலையும் வைத்து இதமாகப் புரட்டினார். இன்னும் ஏதேதோ செய்தார்'' என்று அரைகுறையாக விஷயத்தைச் சொன்னாள். ஜமாலுதீன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. ''மஸ்தானா! உன் வாழ்வையும் இந்தத் தமிழன் வாழ்வையும் நீயே கெடுத்துக் கொண்டு விட்டாய்'' என்று சீறிய ஜமாலுதீன் ''நாளை இந்தத் தமிழன் இருக்க மாட்டான்'' என்றும் சொன்னான்.

''அபசகுனமாகப் பேசாதே!'' என்று எரிச்சலுடன் பேசிய இளவழுதி, ஜமாலுதீன் கையைப் பிடித்துக் கட்டிலிலிருந்து கீழே இறக்கி மாடிப்படியில் தரதரவென இழுத்துக்கொண்டு ஓடி மாளிகையின் வாசலில் இருந்த சதுக்கத்தில் நிறுத்தி, ''எங்கே உன் மற்போர் சாமர்த்தியத்தை மறுபடியும் பார்ப்போம் ஜமாலுதீன்?'' என்றான். ஜமாலுதீன் தன் கைகளை உதறிக்கொண்டு அட்டகாசமாக நின்றான். உக்கிரமாக நடந்த சண்டையில் மறுபடியும் ஜமாலுதீன் தோல்வியுற்றான்.

இளவழுதி அவனைத் தன் தோளின் மீது போட்டுக் கொண்டு கடற்கரையை அவன் அணுகியபோது அதிர்ச்சியொன்று காத்திருந்தது. புதியதாக ஒரு மரக்கலம் வந்திருந்தது. அதில் மதகுரு நின்றிருந்தார். அவரைக் கண்டதும் இளவழுதி ஜமாலுதீனை கீழே இறக்கி விட்டான். மதகுருவைப் பார்த்ததும்

இருவரது சப்தநாடியும் ஒடுங்கிவிடவே அசைவற்று நின்றனர். மரக்கலத்தின் முகப்பில் நின்றபடியே மதகுரு கேட்டார், "உங்கள் இருவரில் யார் என் மருமகப்பிள்ளை? என் மகள் எங்கே?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டார்.

"நடந்ததெல்லாம் உங்களுக்குத் தெரியும்?" என இளவழுதி வினவினான்.

"எனக்குத் தெரியாதது எதுவுமில்லை. வேண்டுமானால் உங்கள் மன்னரைக் கேளுங்கள்" என்ற மதகுரு "உங்கள் மன்னருக்கு நாளை ஒரு நற்செய்தி வரும்" என்று சொன்னார்.

இதைக்கேட்ட இளவழுதி மாளிகை நோக்கி ஓடினான். நடந்ததை மன்னரிடம் சொன்னான். மன்னர், என்ன செய்தியாயிருக்கும் என சிந்தித்தார்? மறுநாள் காலை வந்தது செய்தி. வடபுலத்தரசர் இருவர் சேரநாட்டு வடகோடி நிலங்களைக் கைப்பற்றி விட்டதாக ஒற்றர்கள் சொன்னார்கள். மன்னர் ஏதும் பேசவில்லை. இளவழுதியை நோக்கினார். அடுத்து இளவழுதி "மன்னவா! தாங்கள் அனுமதித்தால் நான் இன்றே நமது புரவிப் படைகளுடன் வடக்கே செல்கிறேன்" என்று வேண்டி நின்றான்.

மன்னர் பதிலேதும் கூறவில்லை.

இளவழுதி அந்த விநாடி முதல் மும்முரமாகப் போர் ஏற்பாடுகளில் இறங்கினான்.



# 31. மாந்தை கோட்டை

குடக்கோ நெடுஞ்சேரலாதன் வந்த செய்தியைக் கேட்டதும் இளவழுதி குழம்பிய சித்தத்தால் ஏற்பட்ட கவலை பாய்ந்த முகத்துடன் மன்னனை உற்று நோக்கினான்.

மன்னர் சொன்னார் :

"இளவழுதி! வடபுலத்தரசர்கள் வழக்கம்போல் துணிவுடன் நமது எல்லையில் புகுந்துவிட்டார்கள். இனி நடக்கவேண்டியதைக் கவனி" என்றார்.

இளவழுதி, "மன்னவா! நமது நாட்டிற்கு வடபுலத்திலிருந்து எப்போதும் எதிர்ப்பு வந்திருக்கிறது. மாற்றார் நமது நிலத்தை ஆட்கொள்வதும் அதைச் சாக்காக வைத்துக் கொண்டு போரிடுவதும் நமது மரபாகிவிட்டது. இதைப் பற்றித் தாங்கள் கவலை கொள்ள வேண்டாம். வடக்கத்தியானை நான் கவனித்துக் கொள்கிறேன். இப்பொழுதே *மாந்தைக்குப் புறப்படுகிறேன்" என்றான்.

அரசர் கேட்டார்.

---

* 'பழயங்காடி' என்னும் புகை வண்டி நிலையம் இதன் ஒரு பகுதி. அகநானூறு பாடல் 127-ல் சங்க கால கவி மாமூலனார் மாந்தை நகரின் சிறப்புப் பற்றி புகழ்ந்துரைக்கிறார். அதுபோலவே நற்றிணை (35-395), பதிற்றுப்பத்து (15-வது) பாடல்களில் சங்க காலக் கவிஞர்களில் ஒருவரான கண்ணனார் மாந்தை நகரின் எழிலையும், அதன் நகர அமைப்பு, கோட்டை கொத்தளங்கள், அகழி போன்றவற்றையும் விரிவாக எடுத்துரைக்கிறார்.

ஆதாரம் : ஔவை சு.துரைசாமி பிள்ளை எழுதிய பண்டை நாளைச் சேரமன்னர்கள்-பக்கம் 73லிருந்து 96 வரை.

''நமது தலைநகருக்கா?''

''ஆம், மன்னவா... அங்குதான் இப்பொழுது நாம் வாங்கி வந்திருக்கும் நானூறு அரபுக் குதிரைகளையும் நிறுத்தியுள்ளோம். அவற்றை நமது புரவிகளுடன் சேர்த்து அழைத்து பழக்கி அணிவகுத்துப் போரிட ஏற்பாடு செய்ய வேண்டும். மாந்தையிலிருந்து இன்னும் இரண்டே நாளில் நான் வடபுலத்துக்குச் செல்கிறேன். தங்களுக்கு அவகாசம் இருந்தால் தாங்களும் கலந்து கொள்ளலாம்'' என்றான்.

''கண்டிப்பாய் அவகாசமிருக்கும், இளவழுதி வடக்கத்தியாருக்கு தலைவணங்கவா குடக்கோ இருக்கிறான். அவர்களைப் புறமுதுகு கண்டு பின்பு தலைநகரம் மீளுகிறேன்'' என்றார் மன்னர்.

மீண்டும் மன்னர் சொன்னார் : ''உனக்குத் தேவையானால் ஓர் உபதளபதியை நியமித்துக் கொள்'' என்றார்.

''மன்னவா! ஏற்கனவே நியமித்துக் கொண்டு விட்டேன்''. இளவழுதி சொன்னான்.

''என்னைத்தானே! என்று கேட்டுக் கொண்டு ஜமாலுதீன் அங்கு வந்தான்.

''சே சே! நீயா!'' என்று இழிவாகப் பேசினான் இளவழுதி.

''வேறு யார்?'' என்று ஜமாலுதீன் கேட்டான்.

''மஸ்தானா!'' என்று இளவழுதி பதில் சொன்னான்.

''பெண்ணா?'' என்று மன்னர் சந்தேகத்துடன் கேட்டார்.

அந்தச் சமயத்தில் மாளிகையிலிருந்து வெளிவந்த மஸ்தானாவை நோக்கி, ''இவளைப் பார்த்தால் பெண்ணாகவாத் தெரிகிறது? பத்து ஆண்பிள்ளைகளுக்குச் சமானம். பத்து ஆண்பிள்ளைகளை நிர்வகிக்க வல்லவள். சற்று முன்பு நாமே



பார்த்தோமே ஜமாலுதீனை எப்படித் தூக்கியெறிந்தாள்?'' என்ற இளவழுதி, ''மஸ்தானா! நீ போய் ஒரு புரவியை எடுத்துக் கொண்டு வா. நாம் மாந்தைக்குப்போகிறோம்'' என்றான்.

அவளும் சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய புரவி மீது ஏறிக் கொண்டு வந்தாள். இளவழுதியும் இன்னொரு புரவியில் ஏறிக்கொள்ள இருவரும் மேல்திசையை நோக்கிப் புரவியை நடத்திச் சென்றார்கள். அவர்கள் போவதை மன்னர் மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் பார்த்துக் கொண்டு நின்றார்.

மறுநாள் நெடுஞ்சேரலாதன் பெரும்படை இளவழுதியின் தலைமையில் மாந்தையிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றது. இளவழுதியின் பக்கத்தில் மஸ்தானா மிக கம்பீரமாக போர் உடையில் தனது புரவியில் உட்கார்ந்து சென்று கொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த நீண்ட வாளானது அடிக்கடி தலைக்குமேல் எழுந்து ஆடவே, அதற்குத் தகுந்தபடி படைகள் அணிவகுத்துப் பிரியலாயின.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவைகள் முக்கோண வடிவத்திற்கு வந்து ஒருவித அமைப்பிற்குள் வரவே, அதைப் பார்த்த இளவழுதி மஸ்தானாவை நோக்கி, ''உபதளபதி! நாம் இனி வடக்கத்தியரை ஜெயித்துவிடுவோம்'' என்று திட்டமாகக் கூறினான்.

அவள் மகிழ்ச்சிப் புன்முறுவல் கொண்டாள். அன்றிரவு படைகள் தளமடித்துத் தங்கியபோது படைத்தலைவன் உபதளபதியோடு தனது கூடாரத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். மஸ்தானா அவன் பிடியிலிருந்து நழுவ முயன்றாள். முடியவில்லை. ஏதேச்சையாகக் கூடாரத்திற்குள் நுழைந்த மன்னர், ''படைத்தலைவரே! நல்ல உபதளபதியைச் சேர்த்துக் கொண்டீர். ஜாக்கிரதையாகக் காப்பாற்றும். இல்லாவிடில் மதகுரு சீற்றத்துக்கு ஆளாவோம். நாளைப் போர் மூளும் போது இவள் பேரில் ஒரு கண்ணை வைத்திரும்'' என்றார்.

இளவழுதி நகைத்து, "இவள் பேரில் நான் கண் வைக்காத நேரம் எது?" என்று கேட்டான்.

அப்போது மன்னர் நகைத்தார்.

மறுநாள் போர் துவங்கியபோது மற்றும் பலர் நகைத்தனர். படைகளை அணிவகுத்த பின்பும் இளவழுதி மஸ்தானாவையே சுற்றிக் கொண்டிருந்தான்.

வடபுலத்துத் தளபதி "இவனைப் பிடிப்பதைவிட அந்தப் பெண்ணைப் பிடிப்பது நல்லது" என்று சொன்னான்.

வீரர்களும் ஆமோதிப்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தார்கள்.

மறுநாள் பிற்பகல். மஸ்தானாவைக் காணவில்லை.

இளவழுதி குணத்தைப் பற்றி ஒன்று சொல்வதுண்டு. அவன் எதையாவது செய்வது என்று தீர்மானித்து விட்டால் செய்துதான் முடிப்பான் என்று அவனுக்கு ஒரு பிரக்யாதி இருந்தது. ஆகவே, அவன் அன்றே மாந்தை நகரை நோக்கிப் புறப்பட்டுவிட்டான். மாந்தை என்பது தற்சமயம் கண்ணனூருக்கு அருகில் பதிமூன்று மைல் தூரத்தில் 'மாதை' என்று ஒரு சிறு கிராமமாக இருந்து வருகிறது என்று தமிழ்ப் பேராசிரியரும் சரித்திர ஆராய்ச்சி யாளருமான ஔவை சு.துரைசாமிப் பிள்ளையவர்கள் தமது 'பண்டை நாளில் சேரமன்னர்கள்' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த மாதை ஒரு காலத்தில் பெரிய கோட்டை கொத்தளங்களுடன் பாதுகாப்பு அரணாக இருந்ததாக ஒரு மலையாளப்பாட்டு இருப்பதாகவும் அவர் தமது கூற்றுக்கு சான்று கூறுகிறார்.

நல்ல வேளையாக இளவழுதி தோன்றிய காலத்தில் அது பழையபடியே பெரும் கோட்டையாக இருந்தது. அந்தக்



கோட்டையின் முன்பு நின்று அதை ஏற இறங்கப் பார்த்தான். 'நல்ல பலமான கோட்டை' என்றும் சொல்லிக் கொண்டான். பின்னால் திரும்பி, "உபதளபதி! இந்தக் கோட்டையைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டான், ஏற்கெனவே இருந்த உபதளபதியிடம்.

உபதளபதி தங்கு தடையில்லாமல் பதில் சொன்னான்: "நமது படையைக் கொண்டு இதைப் பிடிக்க முடியாது!" என்று.

"ஏன்?"

உபதளபதி, "படைத்தலைவரே! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இந்தக் கோட்டைக்கு ஆறுவாயில்கள் இருக்கின்றன. தாங்கள் அரேபியாவில் வாங்கி வந்த நானூறு புரவிகளை நான்கு பிரிவுகளாய்ப் பிரித்து விட்டோம். இந்த நான்கில் எந்த இரண்டு பிரிவுகள் இரண்டு பகுதிகளைத் தாக்கினாலும், மற்ற இரண்டு வாயில்கள் வழியாக எதிரி வெளியே வந்து நம்மைச் சூழ்ந்து கொள்வான். விளைவு தங்களுக்குப் புரியாததல்ல" என்றான்.

இளவழுதி உபதளபதியை முதுகில் தட்டிக் கொடுத்து "உபதளபதி! நீ தளபதி பதவிக்குத் தகுதியாகிவிட்டாய். நன்றாய் சிந்திக்கிறாய். சரி, இதற்குப் பதில் **சொல்**. எதிரி நீ சொன்னபடி நம்மைச் சூழ்ந்து கொண்டால் நாம் செய்ய வேண்டியது என்ன?" என்று வினவினான்.

"படைத்தலைவரே! எதிரி இரண்டு வாயில்கள் வழியே வெளியே வந்தால் அவனை அங்கேயே மறித்து அழித்துவிட வேண்டும். பின்னால் வந்து அவன் நம்மைச் சூழ இடம் கொடுக்கக் கூடாது. அப்படியே அவன் முயன்றாலும் நமது பிரிவுகளில் இரண்டை அவன்மீது ஏவி அழித்துவிடலாம்!" என்றான் உபதளபதி.

''நன்று சொன்னாய் உபதளபதி. ஆனால் நாம் அவனை அழிக்கப் போகும் போது அவன் கையைக் கட்டிக் கொண்டு சும்மாவா உட்கார்ந்திருப்பான்? நம்மை எதிர்க்க மாட்டானா?'' என்று இளவழுதி வினவினான்.

''படைத்தலைவரே! அவன் என்ன செய்தாலும் பயன்படாது. அவன் அடித்தால் பிரயோஜனம் இல்லை'' என்று சொல்லி படைத்தலைவன் அருகில் வந்து அவன் காதில் ஏதோ முணுமுணுத்தான்.

அதைக்கேட்ட இளவழுதியின் முகத்தில் விவரிக்க வொண்ணாத வியப்பு விரிந்தது.

''அப்படியா? எப்போது அனுப்பினாய் செய்தியை பூழி நாட்டிற்கு?''

''இங்கு வந்த அன்றே அனுப்பிவிட்டேன். எந்த நிமிஷத்திலும் பூழி நாட்டு அதிபதியை எதிர்பார்க்கலாம். அவன் பெரும் யானைப்படையும் கூட வரும். ஆகையால் எதிரி வெளியே வந்ததும் யானைப்படை அவர்களைத் துவம்சம் செய்துவிடும்.''

இதைக்கேட்ட இளவழுதி, உபதளபதியின் முன்யோசனையை வியந்து மகிழ்ச்சிப் புன்முறுவல் செய்தான்.

''உபதளபதி! அடுத்த பெரும் போர் ஏற்படுமுன் நாமும் ஒரு யானைப்படையைச் சேர்த்து விடுவோம்'' என்று கூறிய இளவழுதி, ''நால்வகைப் படையில் நம்மிடம் இப்போது இரண்டு தானே இருக்கிறது!'' என்று வருத்தத்துடனும் சொன்னான்.

இதைக் கேட்ட உபதளபதி, ''தவறு தளபதியாரே! தாங்கள் ஒருவர் இரண்டு படைகளுக்குச் சமானமாயிற்றே! பெரும் போர்கள் தளபதிகளின் சாமர்த்தியத்தாலும் தந்திரத்தாலும் ஜெயிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, படை எண்ணிக்கையால் ஜெயிக்கப்படவில்லை என்பது தாங்கள் அறியாததல்ல'' என்று பணிவுடன் கூறுவது போல் பாராட்டினான்.



# 32. குட்டுவனுடன் போர்!

இளவழுதி அந்தப் பாராட்டுதலை ஏற்றுக் கொண்டு, ''நன்றி உபதளபதி! உன்னைப் போல் சிந்திக்கக்கூடிய நான்கு உபதளபதிகள் எனக்கு இருந்தால் பெரும் படைத் தேவையில்லை. சிறுபடை போதும்'' என்று பதிலுக்குப் பாராட்டினான்.

அப்போது தெற்குத்திக்கிலிருந்து பேரரவம் கேட்டது. யானைகளின் பிளிறல்களும் மரக்கிளைகள் ஒடியும் சத்தமும் கேட்டதும், மகிழ்ச்சி கொண்டான் இளவழுதி.

அதற்குள் வரவேண்டிய எதிரிப்படை கோட்டையிலிருந்து வெளிவரவில்லை. அதைக் கவனித்த தளபதியும் உபதளபதியும் ஒருவரைப் பார்த்து ஒருவர் அர்த்தமுள்ள புன்முறுவலை வெளியிட்டுக் கொண்டார்கள். அந்தச் சமயம் கோட்டைக்குள் பேரிரைச்சல் கேட்டது. கோட்டையின் பின் கதவு பெரும் சப்தத்துடன் திறக்கப்பட்டு பெரும் புரவிப் படையொன்று வாயு வேகத்தில் வெளி வந்தது. கொம்புகளும் சங்குகளும் ஒரே சமயத்தில் பலமாக முழங்கின. நாலைந்து முரசுகளும் கடுமையாக சப்தித்தன. அப்போது கோட்டை மதிலின்மேல் தோன்றிய ஒரு பெரிய வீரன், ''இளவழுதி! இளவழுதி!'' என்று சப்தமிட்டான்.

இளவழுதி நெருங்கிச் சென்றான். அவன் நெருங்கியதும் மதிலில் இருந்தவன் தனது வில்லில் ஒரு கணையைப் பூட்டி நாணை வலுவாக இழுத்தான். இளவழுதியின் மார்புக்குக் குறியும் பார்த்தான். இளவழுதி மிக அலட்சியமாகத் தனது அங்கியைப் பிரித்து மார்புப் பகுதியைக் காட்டிக் கொண்டு நின்றான். ஆனால் அவன் மார்பில் அம்பு பாயவில்லை. அதற்குப் பதில் மதில்மேல் இருந்தவன் இருமுறை தள்ளாடி பின்னால் கோட்டைக்குள் விழுந்தான். இளவழுதியின் பக்கத்திலிருந்த உபதளபதி தனது வில்லையும் அம்பறாத் தூணியையும் அடுத்திருந்த வீரனிடம் கொடுத்து, ''இதை என் கூடாரத்தில் வை!'' என்று உத்தரவிட்டான்.

இளவழுதி அவனைப் பார்த்தான். திடீரென அவனைத் தழுவிக் கொண்டான்.

''உபதளபதி! எதிர்பாராத சமயத்தில் அவன் மீது அம்பைப் போட்டுவிட்டாய். இது தர்மமா?'' என்று வினவினான்.

''தாங்கள் எதிர்பாராத சமயத்தில் தங்கள் மீது அவன் அம்பு எய்ய முயலவில்லையா? அது எந்த தர்மத்தில் சேரும்?'' என்று பதில் கேள்வியை வீசினான். மேலும் கேட்டான், ''தளபதியைக் காப்பது உபதளபதியின் கடமையல்லவா?'' என்று.

இரவு நெருங்கியது. இளவழுதியும் மஸ்தானாவும் இளவழுதியின் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள். பூமி நாட்டான் குட்டுவனால் மஸ்தானா கடத்தப்படுவாள் என்று நினைத்தான் இளவழுதி.

பஞ்சணைக்குச் சென்றதும் ஒருவர் அருகில் ஒருவர் படுத்துக் கொண்டார்கள். அப்போது இருவரிடையேயும் மவுனமே ஆட்சி செலுத்தியது. இரவும் ஓடிக் கொண்டிருந்தது. வேறு எந்தவிதமான சில்மிஷமும் இல்லாத நிலையில் அவர்கள் நித்திராதேவியின் உத்தரவுக்கு ஆட்படுகிற நேரம், யாரோ சாளரத்தின் வழியாக ஏறி உள்ளே குதித்தார்கள்.

அதிலிருந்த ஒருவனை அடையாளம் கண்டு கொண்ட இளவழுதி, ''குட்டுவா, பூழி நாட்டு வீரம் பெண்களைத் தூக்கிச் செல்வதில்தான் இருக்கிறதா?'' என ஏளனம் தொனித்த குரலில் கேட்டான்.

குட்டுவன் சற்று சிந்தித்தான். ''இங்கே வீரர்களிடமும் செல்லும்'' என்று கூறி, ''வாளை எடுத்தக் கொள்ளும்'' என்றான்.

அந்தச் சவாலை ஏற்றுக்கொண்ட சேர படைத்தலைவன் தனது கச்சையில் வரிசையாகச் சொருகியிருந்த ஐந்தாறு குறுவாள்களை ஒவ்வொன்றாக எடுத்து எங்கோ குறிபார்த்து வீசினான். அடுத்து



நாலைந்து யானைகள் பெரிதாக அலறிக் கொண்டு வாயில் வழியாக ஓடின. ஒவ்வொன்றின் முதுகிலும் நாலைந்து சர்ப்பங்கள் நகர்ந்து கொண்டு இருந்தன. யானைகளின் பிளிறல் நரிகளின் ஊளை போலக் கிளம்பி அந்தக் காட்டுப் பகுதியை பயங்கரமாக அடித்தன. அப்பொழுது ஒரு சர்ப்பம் குட்டுவன் தலைக்கு நேரே தொங்கியதைப் பார்த்த இளவழுதி அதையும் தன் வாளால் வெட்டி, ''வா மஸ்தானா! இவரை நாளைக்கு சந்திப்போம்'' என்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியேறினான்.

ஏக காலத்தில் குட்டுவனும் வெளியேற, இளவழுதி அங்கிருந்து நேராக மன்னர் மாளிகைக்கு வந்தான்.

அந்த விடியற்காலை நேரத்திலும் அங்கு வாயிலுக்கு அப்பால் சிறிது தூரத்தில் ஒரு பெரிய புரவியின் மீது ஆஜானுபாகுவாக ஓர் வீரன் உடல் முழுவதும் இரும்புக் கவசம் அணிந்து தனது பெரிய வாளை உருவி உயரப்பிடித்துக் கொண்டு, அமர்ந்திருந்ததைக் கண்ட இளவழுதி 'இவர் எங்கே வந்தார்?' என்று தனக்குள் வினவிக் கொண்டான்.

அந்த மனிதனும் புரவியை நடத்திக் கொண்டு உள்ளே வந்து, புரவியிலிருந்து கீழே குதித்து, ''படைத்தலைவரே! மற்ற சேர மன்னர்கள் வரவேற்கும் முறை இதுதானா? உங்கள் மன்னர் 'அதிராஜன்' ஆகிவிட்டதால் ஏற்பட்ட செருக்கா இது?'' என்று இரைந்து சீற்றம் ஒலித்த குரலில் வினவினான்.

''இங்கு செருக்கு ஏதுமில்லை. இருந்தால் அதிராஜனாகிய தங்களிடம் தான் இருக்க வேண்டும்'' என்று அவன் கழுத்தில் அணிந்திருந்த ஏழு கிரீடங்கள் கொண்ட மாலையைச் சுட்டிக் காட்டினான்.

அப்பொழுது முரசுகள் ஒலிக்க உள்ளிருந்து வந்த நெடுஞ்சேரலாதன், வந்திருந்த மன்னனை நோக்கி, ''யார்... தகடூர் எறிந்த பெருமகனா?'' என்று விசாரித்தான்.

''ஆம் மன்னவா! தாங்களும் சீக்கிரம் இந்த மாலையை சூடலாம். அதற்குரிய வழியும் செய்து வருகிறீர்கள்'' என்று சுற்றுச் சாட்டினான்.

நெடுஞ்சேரலாதன் ஏதும் புரியாமல் படைத்தலைவனை நோக்கினான்.

அப்பொழுது குட்டுவன் சொன்னான். ''மகாராஜா! ஏற்கனவே இரண்டு வடபுலத்து அரசரை அழிக்க படைகளை நிறுவி விட்டீர்கள். நான் ஒருவன் உங்கள் தாயத்தான். என்னையும் சேர்த்து மூன்று அரசர்களாகிவிட்டோம். இந்த பெருஞ்சேரல் இரும்பொறை தனியாக சிக்கிக் கொண்டிருக்கிறார். இவரையும் அழித்துவிட்டால் உங்களுக்கு கழுத்தில் நான்கு கிரீடங்கள் ஏற்படுகின்றன. இன்னும் நான்கு கண்டுபிடிப்பது பிரமாதம் அல்ல'' என்றான்.

நெடுஞ்சேரலாதன் குட்டுவன் சொன்னதை ரசித்ததாகத் தெரியவில்லை. ''உன்னை அழிக்கப் போவதாக யார் சொன்னது?''

குட்டுவன் இளவழுதியை நோக்கினான். ''உங்கள் படைத் தலைவர் நேற்றுதான் குறுவாள்களை எறிந்து என் யானைப் படையில் கால்வாசிப் படையைத் தகர்த்து விட்டார்.''

''ஒரு மன்னன் படையின் ஒரு பகுதியை இன்னொரு மன்னனின் படைத்தலைவன் அழித்துவிட்டால் அவன் செய்ய வேண்டியது என்ன?'' என்று கேட்டான் குட்டுவன்.

நெடுஞ்சேரலாதன் புருவங்கள் சற்றே மேலெழுந்தன.

''சரியான க்ஷத்திரியனாயிருந்தால் போர்க்கொடி உயர்த்த வேண்டியதுதான்'' என்று சொன்னார்.

''சரி மன்னவா! நான் போருக்குத் தயார்! எங்கு சந்திக்கலாம்?'' என்று குட்டுவன் மறுபடியும் வினவினான்.

''அதை எனது படைத்தலைவருடன் விவாதித்து முடிவு செய்து கொள்ளுங்கள்'' என்று மன்னவன் கூற, இளவழுதி குட்டுவன் கையை பிடித்து அழைத்துக் கொண்டு வெளியே சென்றான்.

அங்கு சொன்னான் : ''போர் செய்வது என்றால் இடத்துக்கா பஞ்சம். தங்கள் பாம்புப் புதர்க் கோட்டைக்கு* எதிரிலேயே வைத்துக் கொள்ளலாம். நாளையே நான் தங்களைச் சந்திக்கிறேன்'' என்றான் இளவழுதி.

குட்டுவன் பதிலுக்கு தலைசாய்ந்த்துவிட்டு வெளியே சென்று விட்டான்.

இளவழுதி பின்னாலிருந்தே கூறினான் : ''நாளைக் காலை சூரியன் உதித்த இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு என் புரவிப்படை அந்தப் பாம்புப் புதருக்கு அருகில் சித்தமாயிருக்கும்'' என்றான்.

''எனது யானைப்படையும் தங்களை வரவேற்கக் காத்திருக்கும்'' என்றான் குட்டுவன்.

காலை வேளையும் துரிதமாக அகன்றது. நெடுஞ்சேரலாதன் படைத்தலைவனை நோக்கி, ''போர் விஷயத்தை இவ்வளவு சீக்கிரம் முடிவு செய்து விட்டாயே, நாளைக் காலைக்குள் படைகளை சித்தம் செய்ய முடியுமா?'' என்று வினவினார்.

இளவழுதி சற்றே சிந்தனையில் இறங்கிவிட்டு, ''மன்னவா! உங்கள் படைத்தலைவன் முடியாததைப் பற்றி வீராப்பு பேசுவதில்லையென்பதை தாங்கள் அறிய மாட்டீர்களா?'' என்று கேட்டான்.

---

* குட்டுவன் தன் அரண்மனைக்குப் பக்கத்தில் பாம்புப் புற்றுகளை வளர்த்து வருவதால் அந்தப் பகுதி அப்பெயர் பெற்றது.

பிறகு, ''மஸ்தானா வா, நாளைப் போரைப் பற்றி விவாதிப்போம்'' என்று அவளை அழைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த படிகளில் ஏறி மேலே சென்றான்.

பள்ளியறை வாசல் அவர்களுக்காகத் திறந்திருந்தது. இளவழுதி திரும்பி மாடிப்படிக்கருகில் சென்று,

''மன்னவா! நமது வில், அம்பு, இலச்சினைக் கொடி நாளைக் காலையில் பாம்புப் புதருக்கு எதிரில் உயர்த்தப்படும். தாங்கள் அவசியம் வர வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டு தலையையும் தாழ்த்தினான் வணக்கத்திற்கு அறிகுறியாய்.

மன்னனிடமிருந்து பதிலேதும் வரவில்லை. ஆனால் அஹமத் வெகு வேகமாகப் படிகளில் ஏறி வந்து கொண்டிருந்தான். அவனை எதிர்கொண்ட இளவழுதி, ''வாருங்கள்! நீங்களும், நாளைப் போரைப் பற்றிப் பேசுவோம்'' என்று அவனையும் மந்திராலோசனைக்கழைத்தான்.

அஹமத் பதிலுக்கு நகைத்தான் : ''படைத்தலைவரே! பேச்சினால் போரை ஜெயிக்க முடியாது'' என்றான் இளக்காரமான குரலில்.

''ஆனால் சரியான திட்டத்தில் ஜெயிக்கலாம், திட்டமிட பேச வேண்டும்'' என்ற இளவழுதி தரையில் உட்கார்ந்து, ''அஹமத், நீயும் உட்கார். மஸ்தானா நீயும் வா. வந்து கவனி'' என்று கூறி தரையில் பல கோடுகளை இழுத்தான், கையிலிருந்த சுண்ணாம்புக் கட்டியால்.

''இதுதான் அந்தப் புதர்'' என்று ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, ''இதன் எதிரில் உள்ள பெரிய சதுக்கத்தில் நமது புரவிப்படை நிறுத்தப்படும். குட்டுவன் யானைப் படை வர நேர்வழி ஒன்றுதான் இருக்கிறது. ஆனால் அவன் படைகளை மூன்றாகப் பிரித்து பக்கவாட்டிலும் வரலாம். அப்படி வந்தால் அவனை நமது வில்லவர் கவனித்துக் கொள்வார்கள். இரண்டு பக்கங்களிலும் ஏறிவரும் அவனது யானைப்படை மீது வில்லவர் அம்பு மாரி





பொழிந்தால் யானைகள் கட்டுக்கடங்காது தறிகெட்டு நாலாப் பக்கங்களிலும் ஓடும். அப்போது நான் நமது புரவிப் படைகளுடன் அவனைத் தொடருவேன். யானைகளுக்கு கடல் ஒன்றுதான் வழி. ஆகவே அதற்குள் நமது புரவிகள் வேகமாகச் சென்று, அவற்றை மறித்து இரண்டு வரிசைகளாக அவனது அணிவகுப்பைக் குலைத்துவிடும். மற்றொரு பகுதி மஸ்தானாவின் தலைமையில் மலைச்சரிவில் வந்து யானைப் படையைப் பின்புறமாக வளைத்துக் கொள்ளும். நமது இரண்டு படைகளுக்கும் நடுவில் எதிரியின் யானைப்படை நொறுக்கப்படும். அப்பொழுது நமது ஜெயக்கொடியை உயர்த்தலாம். மன்னரும் அங்கிருப்பார். மற்றவை சம்பிரதாயப்படி நடக்கும்'' என்று விவரித்தான் இளவழுதி.

அப்போது அஹமத், ''நல்லது. என்னை விலக்கியே விட்டீர்களே'' என்று குறைபட்டுக் கொண்டான்.

''தவறு அஹமத்! உங்களை விலக்கி இந்தப் போர் நடக்காது. இதில் உங்கள் கடமைதான் முக்கியம்'' என்று சமாதானம் சொன்னான்.

''அது என்ன கடமையோ?'' என்று அஹமத் வினவினான்.

''இப்பொழுது அரேபியாவிலிருந்து வந்திருக்கும் புரவிகளெல்லாம் உன்னால் பயிற்சியளிக்கப்பட்டவை. அவற்றை நீதான் அணிவகுக்க வேண்டும். அதற்கு என்னென்ன சைகைகளோ, எழுப்ப வேண்டிய போர் ஒலிகள் என்னென்னவோ அவற்றையெல்லாம் நீதான் தீர்மானிக்க வேண்டும். புரவிகளையும், சாரதிகளையும் நடுநிசிக்கு இங்கு அனுப்பிவிடுகிறேன். அவற்றை இரண்டு அணியாகப் பிரித்து அந்தப் பாம்புப் புதருக்கு எதிரிலும், பின்னாலும் சரிபாதியாக நிறுத்தி வையுங்கள். நான் விடியுமுன்பே அங்கு வந்து விடுகிறேன். எனக்கு முன்பே உனக்கு உதவ உதவி தளபதி வருவார்'' என்றான்.

அத்துடன் மந்திராலோசனை கலைந்தது.

# 33. பட்டத்து யானை மீது மஸ்தானா!

இளவழுதி சொன்னபடி சரியாக நடுநிசிக்குப் புரவிகள் பெருங்கூட்டமாகப் புதருக்கு எதிரில் வந்து நிரம்பின. புரவிகளுக்கு முன்பாக வந்த உதவித் தளபதி புதருக்கு நெருப்பு வைத்தான்.

சற்று நேரத்தில் அங்கு தோன்றிய இளவழுதி தனது புரவியிலிருந்து கீழே குதித்து, வேறு பாதை வழியாகப் புதரைத் தாண்டி இன்னொரு பக்கம் சென்று சங்கு ஒன்றை எடுத்து பலமாக ஊதினான்.

புரவிகள் பல நாலாபக்கங்களிலும் கூட்டம் கூட்டமாக ஓடத் துவங்கின. கடற்கரையும் புதருக்கு எதிரிலிருந்த மலைச்சதுக்கமும் புரவிகளால் நிரம்பி வழிந்தன. அப்போது எங்கிருந்தோ பெரிய யானைப்படை ஒன்று வரும் சத்தம் கேட்டது. குட்டுவன் தனது யானைப்படைத் தொடர ஒரு பெரும் யானை மீது வந்து கொண்டிருந்தான். அங்கு யானையின் மத்தகத்தின் மீது உட்கார்ந்திருந்த மஸ்தானாவின் இரு கால்களும் யானையின் முகத்தில் தொங்கி ஏதோ மாணிக்க அலங்காரப் பட்டைகள் இரண்டு தொங்குவது போன்ற பிரமையை அளித்தது.

திடீரென்று குட்டுவன் தனது சங்கை எடுத்த முழங்கினான். கடலை நோக்கி அவனது யானைப்படை நகர்ந்தது. அதன் முதல் வரிசையில் குட்டுவன் சென்றான். கடல் அலைகளை அடைந்ததும் யானைப்படை அப்படியே நின்றது. அதன் எதிரே சுவர்போல் அராபியப் புரவிப்படை மறித்து நின்றது. அடுத்து சிலவிநாடிகளில் இன்னொரு புரவிப்படை வெகுவேகமாக மலைச்சரிவில் இறங்கி கடற்கரையை நோக்கி வந்தது. இந்த இரண்டு புரவிப் படைகளுக்கு எதிரில் சிக்கிக் கொண்ட யானைப் படையை நோக்கி, இளவழுதியின் திட்டப்படி சேரநாட்டு வில்லவர் அம்பு மழை பொழியவே, அவற்றால் தாக்குண்ட யானைகள் அணிவகுப்பு



கலைந்து ஓடத் தலைப்பட்டன. அப்போது இரு புரவிப் படைகளும் அவற்றை நெருக்கவே மும்முரமான போர் துவங்கியது. எங்கும் யானைகளின் பிளிறல்களும், புரவிகளின் கனைப்புகளும் ஒரு பங்கரமான சூழ்நிலையைச் சிருஷ்டித்தன. அப்போது இளவழுதி தனது புரவியின் மீது வெகுவேகமாக வாளைச் சுழற்றிக் கொண்டும், ஏதேதோ சைகைகள் செய்து கொண்டும் கடற்கரைக்கு வந்தான்.

அப்பொழுது அங்கிருந்த உதவி படைத் தளபதியிடம் ஏதோ சொல்ல, அவன் பல வீரர்களை ஏவி புரவிகளின் அணிவகுப்பை நாலாகப் பிரித்து யானைப் படைக்குள் ஊடுருவி விட்டான். ஒரு போர் வந்ததால் யானைப்படை பலமுள்ளதா, புரவிப்படை பலமுள்ளதா என்று நிர்ணயிக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்பொழுது இளவழுதி புரவிப்படையின் ஒரு பகுதியை தன் பின்னால் வரும்படிச் சொல்லி யானைப் படைக்குள் ஊடுருவி, ஏற்கெனவே ஊடுருவிய புரவிப் படைகளை சற்றுத் திருப்பி யானைப் படையின் பக்கப்பகுதிகளையும் மூன்றாகப் பிளந்து விட்டான். பின்பக்கமாக மூன்றும், முன்பக்கத்தில் மூன்றுமாகப் பிளக்கப்பட்ட யானையின் அணிவகுப்பு கலைந்து ஓடலாயிற்று. புரவி வீரர்கள் போட்ட கூச்சல் யானைகளைப் பெரிதும் குழப்பிவிடவே அவைகளின் அணிவகுப்பு கலைந்து நாலாப்பக்கத்திலும் ஓட ஆரம்பித்தன.

புரவிகளின் அணிவகுப்பு மட்டும் ஒரே சீராக நாலாப் பக்கத்திலும் அவற்றை வளைத்துப் போரிட்டதால் சில கடலுக்குள் ஓடின. மற்றும் சில மலைச்சரிவில் ஏறி பாம்புப் புதரை நோக்கி விரைந்தன. புதரின்மேல் வைக்கப்பட்ட தீக்குத் தப்பி புதரிலிருந்து சீறி வந்த சர்ப்பங்களால் கடிபட்ட யானைகளும், அலைகளால் கடலில் இழுத்துச் செல்லப்பட்ட யானைகளும் கிளப்பிய ஒலிகளும், இடையே இளவழுதியின் தலைமையில் மலைச்சரிவில் ஏறிச் சென்ற புரவிப்படை வீரர்கள் புதர்க்கோட்டையின் மதில்கள்

மீது ஏறி செய்த சங்கநாதங்களும், ஊதப்பட்ட கொம்புகளும் எல்லாமாகக் கலந்து ஏதோ பெரும் பிரளயம் ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டின.

இடையே திடீரென்று கோட்டையின் மீது உயர்த்தப்பட்ட சேரனின் வில் அம்பு இலச்சினைக் கொடியும், அதே சமயத்தில் வீரர்கள் வெளியிட்ட வெற்றிக் கோஷங்களும் சேரநாடு ஒரு பேரரசின் பதவியை எய்திட்ட நிலையைச் சுட்டிக்காட்டின. அப்பொழுது தூரத்தில் நெடுஞ்சேரலாதன் ஒரு பெரிய வெள்ளைப் புரவியில் வந்து கொண்டிருந்தாரங.

பெருஞ்சேரல் இரும்பொறை ஒரு பெரிய கரிய புரவியின் மீது இரும்புக் கவசங்களை வழக்கப்படி அணிந்து சேரன் பக்கத்தில் வந்து கொண்டிருந்தான். இளவழுதி சில வீரர்கள் கூட்டத்துடன் மன்னரை எதிர்கொண்டு, "சேர மன்னர் வாழ்க!" என்று வாழ்த்துரை கூவி, "குட்டுவன் யானைத் திமிர் அழிந்தது" என்றும் கூறி சங்கை எடுத்துப் பலமாக ஊதினான்.

காட்டு மலர்களைக் கொண்டு மாலையொன்றைத் தொடுத்து மஸ்தானா பக்கத்திலிருந்து நீட்ட, அதை வாங்கி மன்னன் கழுத்தில் போட்டான் இளவழுதி.

மாலையைப் போட்டு முடித்த கையோடு "மஸ்தானா, நீ எப்படி எதிர்த்தரப்பில் சேர்ந்தாய்?" என்று கேட்கவும் செய்தான் இளவழுதி.

"நானா சேர்ந்தேன்? நீங்கள் மந்திராலோசனை முடித்தவுடன் மறுநாள் எப்படி அணிவகுப்பை நிறுவலாம் என்று முடிவு செய்ய அஹமதுடன் அந்தப் புதர்கோட்டைக்குச் சென்றேன். வழியில் எங்கள் இருவரையும் மடக்கி சிறையெடுத்துச் சென்றான் குட்டுவன். போகும் வழியில் எப்படியோ அஹமத் தப்பி ஓடிவிட்டான். என்னால் தப்ப முடியவில்லை. குட்டுவன் என்னைச் சிறையிலடைத்து போர்த்திட்டம் பற்றி விசாரித்தான். எனக்குத் தெரியாது என்று சொல்லவே, அதை அவன் ஒப்புக் கொள்ளவில்லை. எனவே என்னை வற்புறுத்த முயன்றான். பயனில்லாது போகவே, என்னைக் கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினான். பிறகு அவனிடமிருந்து தப்ப முயன்றேன். முடியவில்லை. பிறகு பட்டத்து யானை மீது குட்டுவன் என்னை ஏற்றி அனுப்பினான். 'இது பட்டத்து யானையாயிற்றே?' என்று நான் மறுத்தேன். குட்டுவன் 'பட்டமகிஷி அதில் போவதில் தவறில்லை' என்றான். அவன் கெட்ட எண்ணம் எனக்குப் புரிந்தாலும் என்னால் ஏதும் செய்ய முடியவில்லை. உங்களையும் நமது படையையும் அதிர்ச்சியுறச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அவனது யானையின் முன்னர் என்னை அமரச் செய்தது. சரி; நமது படைகளுக்கு எந்த வகையிலும் இவனுடன் இருந்து கொண்டே உதவ முடியாதா? என்று வந்து விட்டேன்" என்றாள். அவள் குரலில் பெருந்துயரம் பரிபூரணமாக ஒலித்தது.



"எப்படியும் குட்டுவன் என்னை இன்றிரவு புதர்க் கோட்டையில் எதிர்பார்க்கிறான்" என்று சொல்லவும் செய்தாள்.

"அதற்கு வழி செய்வோம்" என்றான் இளவழுதி.

"அது புது வழியாக இருக்கும்" என்று அஹமத் இடைபுகுந்து பேசினான்.

அங்கு புதர்க் கோட்டையில் காத்திருந்த குட்டுவனிடம் பட்ட மகிஷி வந்தாள். அவளைத் தழுவிய குட்டுவன் திடீரென மூச்சுவி - முடியாமல் திணறினான். அஹமதின் இரும்புப்பிடி அவன் எலும்பை முறித்துக் கொண்டிருந்தது. அந்தக் கோட்டையின் இன்னொரு அறையிலிருந்து சிரிப்பொலி ஒன்று கேட்டது. அது மஸ்தானாவின் குரல் என்பதை உணர்ந்த குட்டுவன் திடீரெனத் திரும்பி அந்த அறையை நோக்கி ஓடினான். அங்கு அவனை, உருவிய வாளுடன் நின்ற இளவழுதி வரவேற்றான். இன்னும் பத்துப் பெண்களும் அந்த அறையில் குறுவாட்களுடன் நின்றிருந்தார்கள்.

குட்டுவன், தான் சதியில் சிக்கிக் கொண்டிருப்பதை சந்தேகமற உணர்ந்து கொண்டான்.

''இந்தச் சதிக்கு வித்திட்டவன் யார்?'' என்று கேட்கவும் செய்தான்.

''இதில் சதி ஏதுமில்லை. இன்னொருவன் மனைவியைக் கற்பழிக்க முயன்ற குற்றத்தின் விளைவு. அறம் காப்பாற்றப்பட்டது'' என்றான் அஹமத்.

''நாங்கள் கொஞ்ச நேரம் கழித்து வந்திருந்தால் இவள் பாஞ்சாலியாகியிருப்பாள். முதல் கணவன் நான் – இரண்டாவது ஜமாலுதீன் – மூன்றாவது இதோ இளவழுதி – நான்காவது நீ - இன்னும் ஒருவன்தான் பாக்கி'' என்று விளக்கவும் செய்தான் அஹமத்.

''இது உண்மை என்று எனக்கு எப்படித் தெரியும்?'' என்று குட்டுவன் கேட்டான்.

''நான் சாட்சி'' என்று சொல்லிக் கொண்டே ஜமாலுதீன் உள்ளே நுழைந்தான்.

''நானும் சாட்சி!'' என்றார் சேர மன்னர்.



# 34. தகடூர் வெற்றி

**தா**ன் பாஞ்சாலி என்பதற்கு சேரமன்னனும் சாட்சி என்று சொன்னதைக் கேட்ட மஸ்தானா சிறிது முகம் சுளிக்கவே செய்தாளானாலும் சிறிதும் அச்சத்தைக் காட்டாமல்,

''மன்னவா! தங்களுக்கு இந்த தொழில் தேவையா?'' என்று கேட்டாள். மன்னர் முறுவல் கொண்டார். ''மக்களுக்கு மகிழ்ச்சி தரும் எந்த வேலையும் மன்னனின் வேலைதான் மஸ்தானா. அதில் தவறு ஒன்றுமில்லை'' என்று கூறினார் முறுவலினூடே.

''நான் தங்கள் மகள் ஸ்தானத்தில் இல்லையா? என்னுடைய கற்புக்கு மாசு கற்பிக்க ஒரு தந்தை முயலலாமா?'' என்றாள் மஸ்தானா. ''மாசு கற்பிக்கும் வேலையில் இறங்குவது தம் தொழில் கடமைகளில் ஒன்றா?'' இதை மிகுந்த துணிவுடனும் சீற்றத்துடனும் கேட்டாள் மஸ்தானா, மன்னரை ஏறெடுத்து நோக்கி.

''மாசு கற்பித்தேனா?'' என்று ஏதும் புரியாதது போல் மன்னர் வினவினார்.

''ஆம்! நான் பாஞ்சாலியென்பதற்கு தாங்களும் சாட்சி என்று சொல்லவில்லையா?''

''சொன்னேன். ஆனால் பாஞ்சாலி கற்புடையவள் அல்லவென்று யார் சொன்னது? வியாசமுனிவர் மஹாபாரதத்தில் சொல்லவில்லையா?''

''ஐந்து பேரை மணந்தாள்.''

''ஆம்! ஆனால் ஐவரில் யாருக்கும் அவள் துரோகம் செய்ததாக வரலாறோ புராணமோ கிடையாது. தவிர அவளை மணந்தவளாகக் கூடப் புராணம் கூறவில்லை. ஐந்து கன்னிகைகளில் ஒருத்தியாகவே வைத்திருக்கிறார்கள். திரௌபதியை கற்பிற்கு

இலக்கணமாகவே மதிக்கிறது புராணம். ஆகவே, உனக்கு நான் எப்படி மாசு கற்பித்ததாக ஆகும்? புராணங்களில் ஆத்மாவைப் புரிந்து கொள்ளாமல் அரைகுறையாகப் படித்துவிட்டு, மேற்கோள் காட்டும் பெரியவர்களின் பட்டியலில் நீயும் சேர்ந்துவிட்டாயா மகளே?'' என்று சற்று துயரத்துடன் சொன்னார் மன்னர். மேலும் சொன்னார் : ''மஸ்தானா, புராணத்தின் உட்கருத்தைப் புரிந்து கொள்ளாமல் கண்டபடி கதை கட்டுவது பாமரர்கள் வழி. சிறிதாவது அறிவுடையவர்கள் செல்லும் வழியல்ல.'' இதைச் சேர மன்னர் மிகுந்த திடத்துடனும் திட்டமாகவும் சொன்னார்.

''எத்தனைப் பேரை மணந்தாலும் அவள் பதிவிரதை தானா?'' என்று மஸ்தானா வினவினாள்.

சேரமன்னர் சிறிது நகைத்தார். ''கற்பெனப்படுவது சொற்திறம்பாமை என்பது தமிழ் இலக்கணம். யாரை மணந்தாலும் அவன் சொல்லை மீறாமல் அவன் செல்லும் வழி அவளும் செல்லும் வரை அவள் கற்புக்கு ஊறு ஏதுமில்லை. நிழலைப் போல அவள் கணவனைப்பின் தொடர வேண்டும்★ என்றுதான் நெறி வகுக்கப்பட்டிருக்கிறது'' என்றார் மன்னவர்.

மஸ்தானா சற்று நிதானித்துவிட்டு, ''மன்னவா! தாங்கள் சொன்ன கணக்கில் எனக்கு மாப்பிள்ளைகள் நால்வர் ஏற்பட்டார்கள். ஐந்தாவது யார் என்று தெரியவில்லையே?'' என்றாள்.

''அதில் அதிக கஷ்டமிருக்காது'' என்றான் குட்டுவன் இடை புகுந்து.

''பார்த்தாயா மஸ்தானா! பூழி நாட்டு மன்னனே உன்னை ஏற்க சித்தமாயிருக்கிறான்'' என்று கூறினார் சேரமன்னர்.

---

★ வால்மீகி ராமாயணம். மணமுடி படலத்தில் ஜனகர் சொல்வதாக.



''ஆம் மன்னவா! ஒரு தோல்வியை ஈடுசெய்ய இன்னொரு வெற்றி வேண்டாமா?'' என்றான் குட்டுவன்.

''எது தோல்வி?''

''இப்பொழுது நடந்த சண்டையில் நான் அடைந்த தோல்வி. இந்த சண்டை சரித்திரத்தையே மாற்றுகிறது மன்னவா'' என்றான் குட்டுவன் சிறிது தளர்ந்த குரலில்.

''விளங்கச் சொல்லுங்கள்'' என்று சேரமன்னர் கேட்டார்.

''யானைப்படையை புரவிப்படை வெல்லுமென்பது புதுக்கருத்து. அதுவும் இத்தனைப் பெரிய நஷ்டம். போர் நஷ்டம், மான நஷ்டம் இரண்டும் சேர்ந்தது. எத்தனை பெரிய பாதகம் எனக்கு. சேரமன்னா, எனது காணிக்கையை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று குட்டுவன் சேர மன்னர் முன்பு மண்டியிட்டு தனது இரு மகுடத்தையும் கழற்றி அவர் காலடியில் வைத்தான். ''தாங்கள் அதிராஜனாவதற்குத் தேவையான ஏழு மகுடங்களில் என் மகுடத்தை முதல் காணிக்கையாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

சேரமன்னர் கண்களில் நீர் திரண்டது. அவர் தனது காலை ஒரு அடி முன் எடுத்து வைத்து வலது கையை குட்டுவன் தலைமீது வைத்து, ''குழந்தாய்! இன்று நடந்தது தோல்வியல்ல. இளவழுதியின் தந்திரம். படைபலமல்ல'' என்றார்.

''வெற்றிக்குக் காரணம் எதுவாக இருந்தாலும் வெற்றி வெற்றிதான். தோல்வி தோல்விதான். ஆகையால் வெற்றியைக் குறைத்து மதிப்பிட வேண்டாம்'' என்ற குட்டுவன்,

''மன்னவா! இளவழுதியின் சிறப்பைப் பற்றி, யுத்த தந்திரத்தைப் பற்றி உலகமே வியந்து போகிறது. எனது தோல்வியால் நான் அதைக் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. அணிவகுப்பில் கூட நெடுக்கில் நான்காகவும் குறுக்கில்

மூன்றாகவும் அணி செய்து படையைப் பிளந்த எதிரியைப் பற்றி இதுவரை யாரும் கேள்விப்பட்டது கூடக் கிடையாது. வியூக சாஸ்திரத்தை பரிபூரணமாக அறிந்த இளவழுதி ஒரு தனிப்படைக்குச் சமானம். இளவழுதிக்கும் மற்ற படைத்தலைவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு இதுதான். இளவழுதியிடம் அறிவு, சாஸ்திர ஞானம் இரண்டும் இணைந்திருக்கிறது. தாங்கள் அதிராஜனாவது திண்ணம். அதுவும் வெகு சீக்கிரம். அந்த நாள் அதிக தூரத்தில் இல்லை'' என்று பேசினான் குட்டுவன்.

சேர மன்னர் முகத்தில் திருப்தி துளிர்விட்டது. ''இது வரை தகடூர் வெற்றியைச் சேர்த்து மூன்று மகுடங்கள் கிடைத்துள்ளன. வடபுலத்தார்கள் இருவரையும் வெற்றி கொண்டதாக மனப்பால் குடித்தாலும் மொத்தம் நான்கு கிரீடங்கள்தானே ஆகும். இன்னும் மூன்று மகுடங்களுக்கு நான் எங்கே போவது?'' என்று வினவினார் சேரமன்னர்.

இதுவரை மௌனம் சாதித்த இளவழுதி, ''மன்னவா! வடபுலம் செல்லும்போது நம்மை யார் யார் எதிர்ப்பார்கள் என்பதை இப்பொழுது எப்படி நிர்ணயிப்பது?'' என்று கேட்டவன், ''இமயத்துக்கும் பொதியமலைக்கும் இடையே இருப்பது தமிழ்நாடு என்றாலும் மொத்தம் 56 நாடுகளில் வடக்கில் இருப்பது எத்தனை என்பது அங்கு போகும்போது தான் தெரியும்'' என்றான்.

மேலும் தொடர்ந்து, ''மன்னவா! தங்களை அதிராஜனாகப் பார்க்காமல் இந்த இளவழுதி சாகமாட்டான்'' என்று உணர்ச்சியுடன் பேசவும் செய்தான்.

மன்னர் முறுவல் காட்டினார். ''அதற்கு அப்புறமும் நீ சாக அவசியமில்லை, இளவழுதி! அதிராஜனாக ஆன பிறகு எதிரிகள் அளவு அதிகரிக்கும். ஒவ்வொரு வெற்றியும் ஒரு புது எதிரியை



உண்டாக்கும். ஆகவே அப்பொழுது உன் உதவி அதிகமாகத் தேவையாயிருக்கும்'' என்று மன்னர் வினவினார்.

இப்பொழுது குட்டுவன் உரையாடலில் உட்புகுந்து, ''மன்னவா! தாங்கள் சொல்வது தவறு. நான் இப்பொழுது தோற்றுவிட்டேனென்றால் தங்கள் எதிரியாக மாறிவிட்டேன் என்றா அர்த்தம்?'' என்று வினவினான். ''சேரகுல ரத்தம் என் உடம்பில் ஓடும்வரை நானும் நண்பனே!'' என்று கூறித் தனது பணிவைத் தெரிவித்துக் கொண்டான்.

''இனி அச்சமில்லை எனக்கு'' என்றார் சேரலாதன்.

''ஏன்?''

''தம்பியுள்ளவன் படைக்கஞ்சான் என்ற தமிழ்ப் பழமொழி பொய்க்குமா?'' என்று தெம்புடன் பேசினார் சேரலாதன். தொடர்ந்து மன்னர் சொன்னார் : ''இந்த மகுடத்தை ஏழாவது மகுடமாக வைத்துக் கொள்வேன். அது வரை நீ பழைய சுதந்திர மன்னனாகவே இருப்பாய்'' என்று கூறி குட்டுவனின் மகுடத்தை தன் கைகளால் சூட்டினார் சேரலாதன்.

''சேர்குல தாராள மனப்பான்மை எங்கு போய்விடும். ரத்தத்தில் ஓடத்தானே செய்யும்'' என மன்னனை மறைமுகமாகப் பாராட்டிய இளவழுதி, ''வடபுல யாத்திரைக்குத் திட்டமிட வேண்டும். ஆகவே நான் செல்கிறேன்'' என்று கூறி வாயிலை நோக்கி நடந்தான்.

''நீ எங்கும் போக முடியாது!'' மன்னர் கட்டளையாகச் சொன்னார்.

''ஏன்?'' இளவழுதி வியப்புடன் வினவினான். ''நான் விட்டாலும் உன் மனைவி விடமாட்டாள். நீ அவளுக்குச் செலுத்த வேண்டிய கடமை இருக்கிறதல்லவா? என்ற மன்னர் முறுவல் கொண்டார்.

மஸ்தானாவும், "ஆம்! எங்கும் போக முடியாது. எப்படி போகலாம்? என்னைக் கைவிட்டு கடற்கரை வரையில் கூட உங்களால் போக முடியாது. என் தந்தை விட மாட்டார்" என்றாள்.

மன்னர் சொன்னார் : "உங்கள் வாழ்க்கையை இன்றிரவு முடிவு செய்யும்."

இரவு வந்தது. எப்பேர்ப்பட்ட இரவு! முந்தைய இரவுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஓர் இரவு. நைடத இரவு. அந்த இரவில் இளவழுதி மஸ்தானாவுக்கு பல பாடங்களைப் போதித்தான். எல்லாம் இலக்கண முறைப்படி. அதிவீரராமபாண்டியன் அப்போது உயிருடன் இருந்திருந்தால், தான் இயற்றிய நைடதத்தைப் பற்றி பெருமை கொண்டிருப்பான்.



# 35. இளவழுதியின் புகழ்கொடி

இரவில் பஞ்சணை முகப்பில் ஒருபக்கமாக மஸ்தானா நின்றாள்.

"மஸ்தானா, சிறிது முறுவல் செய்!" என்றான் இளவழுதி.

அவள் முறுவல் செய்தாள். அடுத்த வினாடி அவள் பஞ்சணையில் - அவன் பக்கத்தில்... அவனுடைய இரும்புப் பிணைப்பில் இருந்தாள்.

இளநலம் பருகுதல், உபரி சுரதம் பருகுதல் முதலிய இலக்கணச் சிறப்புகள் தயக்கமின்றி நடந்தன.

மறுநாள் காலை உடல் முழுவதும் களைத்துச் சலித்து வலியினால் வளைந்து வளைந்து கால் தடுமாற நடந்து வெளியே வந்த மஸ்தானாவைச் சந்தித்த மன்னர் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகப் புன்முறுவலும் செய்தார். அவர் சிரிப்பைக் கண்டாலும் காணாததுபோல் வேறுவழியில் நடந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் அங்கு வந்த இளவழுதியைச் சந்தித்த மன்னர், "இளவழுதி! சண்டையிலெல்லாம் வியூகம் வகுக்கிறாய். இங்கு ஏதாவது வியூகம் வகுத்தாயா? மஸ்தானா ஓடுகிறாளே" என்று கேட்டார்.

"மன்னவா! முறைக்கு மாறாக எதுவும் நடக்கவில்லை" என்று இளவழுதி சிறிது வெட்கத்துடன் சொன்னான்.

'காலம் மாறுகிறது. ஆண் வெட்கப்படுகிறான்; பெண் அலட்சியமாகப் போகிறாள்' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட மன்னவர், "இளவழுதி! இந்த மன்மத வியூகத்தின் நுட்பங்களைச் சொல், கேட்போம்" என்று கேட்டார்.

"இது மன்மதன் வகுத்த வியூகம் அல்ல; பாண்டியன் வகுத்த வியூகம்" என்ற இளவழுதி, "கேளுங்கள் மன்னவா! ஆனால் நான்

சொல்வதில் ரசக்குறைவு இருந்தால் அதற்கு அதிவீரராம பாண்டியன் பொறுப்பல்ல'' என்று கூறி விளக்க முற்பட்டான்.

அது கேட்ட மன்னர் மெய்சிலிர்த்தார்.

''கேவலம்! கேவலம்'' என்றும் சொன்னார்.

''மன்னவா! இதெல்லாம் முனிவர்கள் வகுத்த வழி! இதில் வெறுப்புக்கோ சங்கோஜத்திற்கோ இடமில்லை'' என்றான் இளவழுதி.

மன்னர் கேட்டார்: ''பாண்டியன் முனிவனா?'' என்று.

''இல்லை; அவர் முனிவர் இல்லை. ஆனால் அவர் எழுத்திலிருந்து அவர் முனிவர்களை முழுதாகப் பின்பற்றியிருக்கிறார் என்று தெரிந்தது. முனிவர்களின் எழுத்துக்களை நன்றாகச் சுவைத்திருப்பதும் நன்றாக ஜீரணித்திருப்பதும் புலனாகிறது'' பிறகு நடந்ததைப் படிப்படியாகச் சொன்னான்.

பஞ்சணையிருந்த அறைக்குள் நுழைந்த சில நாழிகைக்குள் நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துக்கொண்ட இளவழுதி தனக்குள் நகைத்துக் கொண்டான்.

பாலை அருந்திவிட்டு பஞ்சணையில் உட்கார்ந்ததும் தன் கையிலிருந்த மலர்ச்சரத்தை விரித்து கிடந்த அவளது கூந்தலுக்கு இடையில் சுருட்டி முகர்ந்து பார்த்ததையும், கரிய குழல்களுக்கிடையே அவனது விரல்கள் செய்த விஷமத்தால் சற்றே நெளிந்து கொடுத்த மஸ்தானாவின் முனகலையும் ரசித்த இளவழுதி அப்படியே அவளது உடலையொட்டி தானும் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டதையும் நினைத்துக்கொண்டான். அப்படி அவன் அவளின் பின்புறமாகப் படுத்துக்கொண்டிருப்பதே அவளுக்கு இன்ப வேதனையை அளிக்க, அவள் மீண்டும் மீண்டும் முனகியதையும் அந்த சமயத்தில் நினைத்துக் கொண்டான்.



அந்த முனகல் ஒலியே ஒரு வகையான ஊடல் எனக் கண்டு, அவள் என்னதான் செய்கிறாள், பார்ப்போம் என்று இளவழுதி நினைத்துக்கொண்டிருந்தான். மஸ்தானா கண்கள் பரபரக்க திரும்பிப் பார்க்க, அவளின் பருத்த மார்பு விளைத்த இன்ப வேதனையைத் தாங்கமாட்டாது தவித்த அவனின் சிறிய இடையை தனது இடையுடன் சேர்த்துக் கொண்டதுடன் அவனது கைகளைத் தனது இடையுடன் சுற்றிக்கொண்டு 'தத்தரி நெடுங்கண் சேப்பத்தடமுலை தாங்கலாற்றாது எய்த்து நுண்மருங்கல் தேம்ப ஏந்தலோடு ஆடினாள்' எனும் நைடத வரிகளுக்கு உயிரூட்டி 'இன்பம் என்பது ஆணால் மட்டும் தரப்படுவதில்லை; அது ஒரு ஸ்திரீயாலும் தரப்படுவதுண்டு-அவளும் சமபங்கு இன்பம் தரவல்லவள்' என்று மெய்ப்பித்ததை நினைத்துக் கொண்டு மன்னருக்கு விளக்கினான் இளவழுதி.

மஸ்தானாவுக்கு தானும், தனக்கு மஸ்தானாவுமாக ஒருவரையொருவர் இறுகத் தழுவி இதழோடு இதழ் பொருத்தி முத்தமீந்து இதழமுதம் பருகி பின் தொண்டை வாய் அமிர்தமாந்தி-தளிர்த்து எழும் உவகை பொங்கதண் நறு சாந்த மார்பன் - அளப்பரு களிகொள் காமக்கடல் கத்து அழுந்தினோனே' என்னும் அதிவீரராம பாண்டியன் வரிகள் உண்மையாகிப் போனதையும் ஒருவித உவகையுடன் மன்னன் முன் எடுத்து வைத்தான்.

மகிழ்ச்சியின் விளிம்பில் நிற்கையில் மஸ்தானாவின் மார்பில் பட்ட பற்குறிக்காக 'நாளை உங்களது பணிப்பெண்கள் என்னைக் குளிப்பாட்டும்போது இது என்ன வடு என்று கேட்டால் என்ன சொல்வேன்!' என்று பயந்து மஸ்தானா பொய்த் துக்கம் செய்ததன் மூலம் 'மிலங்கொளி வயிரப் பைம்பூண் - இளமுலை - வடுக்கண்டேங்கி - பொலங்கொடி - நாணினோடும் பொய்த்துயில் கூர்ந்தாளன்றே!' என்ற நைடத வரிகள் உண்மையானதையும் மறக்காமல் சொன்னான் இளவழுதி.

பொய்த் தூக்கத்தில் அவளைத் தொட்டதால் அவள் கடிந்து கொண்டதையும், அப்படி கடிந்து கொண்டதனால் எங்கே தான் கோபம் கொண்டு ஒதுங்கிவிடுவேனோ என்று பயந்துகொண்டே மேலும் ஆழ்ந்து தூங்குவது போலச் செய்து அந்தத் தூக்கத்தின்போது கண்ட கனவினால் பயந்ததுபோல நடித்து திடுக்கிட்டு அலங்க மலங்க விழித்துப் பருத்த அவளின் மார்புகள் தன்னை அழுந்த அணைத்துக்கொண்டதுகூட நைடதத்தில் இருக்கிறது என்பது 'கலவியின் வேட்கை தூண்டக் கனவினில் வெருவினாள் போல், முலைமுகடழுந்த வேந்தன் முழவுத் தோள் புல்லினாளே' என்ற வரிகளில் நிருபணமாகிறது என்றும் விளக்கினான் இளவழுதி.

தனது பரந்த மார்பில் அவளது மார்புகள் அழுந்தப்படுத்து உறங்கியதையும், மன்னரிடத்து மறக்காது சொன்னான் இளவழுதி. அதுமட்டுமா! இந்தக்கணமம் நீங்கினால் அடுத்த கணத்தில் தாங்கள் உயிருடன் இருப்போமோ இல்லையோ என்ற கருத்தில் இருவருமே இன்பம் முழுவதையும் இன்றே அனுபவித்துத் தீர்த்துவிட வேண்டும் என்று தீவிரமாயிருந்ததையும், இன்பத்தின் உச்சியில் அவளது பாததூளியை எடுத்து தனது தலையில் வைத்துக்கொண்டதையும், முந்தின இரவின் இன்ப வேளையில் மஸ்தனா பேசியவற்றையும், தான் பேசியதையும் நினைத்துப் பார்த்து, மறுநாள் விழித்தபின் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாத அசட்டுத்தனத்துக்கு ஆளானதுகூட அதிவீரராம பாண்டியன் சொன்ன வாக்குகளே என்றும் இளவழுதி மன்னரிடத்துச் சொன்னான்.

மன்னர் சேரலாதன் இளவழுதி சொன்னதைக் கேட்கக் கேட்க வியப்பின் எல்லைக்கே சென்றார். ''இப்படியெல்லாமா ஒரு மன்னன் எழுதி வைப்பான்'' என்று வாய்விட்டுக் கேட்கவும் செய்தான்.



''இதில் வியக்கத்தக்க செய்தி ஒன்றுமில்லை மன்னவா! கற்பனையாளனுக்கு உடல் சங்கமமும், உள்ளத்துச் சங்கமமும் ஒன்றுதான். காதல் ஒரு நல்ல விஷயம்தான். இந்த விஷயத்தை நினைக்க, நினைக்க உடல் உருகிப் போகிறது. இதில் உருகி உருகி இளைத்துப் போகிறவர்களும், மாய்ந்து போகிறவர்களும்கூட உண்டு. ஒன்றை நினைத்து உருகிப் போவதைவிட அனுபவித்து மகிழ்ந்ததை வெளிப்படையாக இதுதான் விஷயம் என்று எழுதி வைத்துப் போவது மிகவும் சிறப்பல்லவா? அந்தக் காரியத்தைத்தான் அதிவீரராம பாண்டியர் செய்திருக்கிறார். அது தவறல்ல'' என்றான் இளவழுதி ஒரு ஞானியைப் போல.

''இளவழுதி! ஒன்று சொல்லட்டுமா, சொன்னால் தவறாக நினைக்க மாட்டாயே?''

''தவறாக நினைக்க என்ன இருக்கிறது மன்னவா?''

''மஸ்தானாவுக்கு கணவர்களாக அஹமது இருக்கிறான், ஜமாலுதீனும் இருக்கிறான். இருந்தும் மற்ற இருவரை விட மூன்றாவது கணவனான உன்னைத்தானே மஸ்தானா அதிகம் விரும்புகிறாள். இது எப்படி என்று அவ்வப்போது நான் நினைப்பதுண்டு?. அந்த நினைப்புக்கு இப்பொழுது சரியான விடை கிடைத்துவிட்டது. ஆமாம், மஸ்தானாவை மீட்டும் வித்தையை நீ நன்றாகக் கற்று வைத்திருக்கிறாய். அதுவும் சுத்த இலக்கணப்படி அவளை மீட்டுகிறாய் போலிருக்கிறது. இல்லாவிட்டால் உன்னையே அவள் சுற்றிச் சுற்றி வர வேறு காரணம் என்னவாயிருக்க முடியும்?'' என்று வினவினார் மன்னர்.

மன்னரின் இந்த கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் சில விநாடிகள் தயங்கினான் இளவழுதி. அவனேகூட மஸ்தானா தன்பேரில் தீவிர அன்பு கொண்டதற்கு என்ன காரணம் என்று பலமுறை யோசித்ததுண்டு? அதற்கான விடையைக் காண அவனால் அப்போதெல்லாம் முடிந்ததில்லை. இப்பொழுது

மன்னவர் கணிப்பு அவனை ஆச்சரியமும், ஏன்-அதிர்ச்சியுமடைய வைத்திருக்கிறது. 'தான் மஸ்தானாவை மடக்கி வைத்திருப்பது என்பது மன்னர் கண்டுபிடித்துச்சொன்ன இந்த வழிகளில்தானா? இதுதான் உண்மையென்றால் இதை உடனடியாகச் சொல்லத் தயக்கமேன்? இல்லையென்றால் வேறு காரணம் கூறவும் தாமதம் ஏன்?' என்று இளவழுதி உள்ளூர சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் அஹமத் உள்ளே நுழைந்தான். அதே சமயத்தில் ஆற்றில் நீராடி புத்தாடை புனைந்து, மலரைச்சூடி மலர்ந்த முகத்துடன் உள்ளே நுழைந்த மஸ்தானா உடல் இளைத்து கம்பனுடைய மெல்லியல் என்ற பெண்கள் இலக்கணத்துக்குக் கிட்டத்தட்ட சரியாக இருக்கவே,

''ஒரே நாளில் என்ன இப்படி இளைத்து விட்டாயே மஸ்தானா?'' என்று மன்னர் அங்கலாய்ப்புடன் கேட்டார்.

''இது இளைப்பா?'' என்று அஹமத் வினவினான் விஷமத்துடன்.

''இல்லை, தங்கள்ளைவிட சற்றுக் குறைவுதான்'' என்றாள் மஸ்தானா.

இதைக் கேட்ட இளவழுதி நகைத்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று உக்ரத்துடன் வினவினான் அஹமத்.

''அஹமத், எடையோ சதையோ ஒரு மனிதனுடைய சக்தியை நிர்ணயிப்பதில்லை. அதற்கு உதாரணம் சமீபத்தில் கடல்போரில் பார்த்தோம். யானை, புரவியைவிட பலமானது என்றாலும் புரவிப்படை யானைப்படையை எளிதில் ஊடுருவி விட்டது. நாம் மாளிகைகள் கட்டும் போது வஜ்ரம் பாய்ந்த பெரிய மரங்களை உத்திரமாகப் போடுகிறோம். ஆனால் அவற்றை சிறு புழுக்கள் துளைத்து விடுகின்றன. இதோ இந்த மஸ்தானாவுக்கு நீயும் ஜமாலுதீனும் மணவாளர்களாக இருந்தாலும் என்னைப்போன்ற ஒரு பூஞ்சையையும் மன்னர் மணவாளனாக்க வேண்டிய



அவசியம் ஏற்பட்டு விட்டது'' என்று சலிப்பு மிகுந்த குரலில் கூறியதன்றி மஸ்தானாவைப் பார்க்கவும் செய்தான் இளவழுதி.

மஸ்தானா அவன் கண்களைச் சந்திக்க இயலாமல் தனது பார்வையை நிலத்தில் ஒட்டினாள். இதைக் கவனிக்கவே செய்த அஹமத்,

''வெட்கப்படாதே மஸ்தானா!'' என்று தைரியமும் சொன்னான்.

''எதையும் இன்றிரவு சரிக்கட்டி விடுவார் மாப்பிள்ளை அஹமத்'' என்று மன்னர் சொன்னார்.

மஸ்தானா அர்த்தபுஷ்டியுடன் அஹமதை நோக்கினாள். அஹமத் முகத்தை ஏதோவிதமாகக் கோணிக் கொண்டு தன் அசட்டுத்தனத்தை நன்றாகவே வெளிப்படுத்தினான். அதை மன்னர், மஸ்தானா, இளவழுதி மூவருமே கவனித்தாலும், மன்னர் மட்டுமே பேசினார்.

''அஹமத்! நீ வீரனாக நடந்து கொண்டால் அரேபியாவில் நீ இழந்திருக்கும் சிற்றரசை நானே கைப்பற்றித் தருகிறேன். அதற்காக இளவழுதியை அனுப்பும்படி மதகுரு கேட்டிருக்கிறார். இளவழுதி, நீ போகும்போது உன்னுடன் வருவான். உனக்காகப் போராடுவான். ஆகையால் உன் வெற்றியைப் பற்றியோ, நீ அரசனாவதைப்பற்றியோ எந்தவித சந்தேகமும் வேண்டாம்'' என்று மன்னர் உறுதியாகப் பேசினார்.

இளவ்ழுதி மஸ்தானாவை நோக்கி தனது பார்வையைச் செலுத்தி,

''அராபிய அரசி என்ன சொல்கிறாள்?'' என்று வினவினான்.

''அராபிய அரசியாக இருந்தாலும் நான் கணவனுக்கு மனைவிதானே. ஆகையால் அவரே பதில் சொல்லட்டும்!'' என்று அஹமதைச் சுட்டிக்காட்டினாள்.

அஹமத் இருமுறை நெளிந்தான்.

''உங்கள் எல்லோருக்கும் எனது நன்றி. வேறு எந்த... மில்லாவிட்டாலும் மஸ்தானாவை அரசியாக்குவதற்காகவாவது நான் இந்தப் போரில் ஈடுபடுகிறேன். என் சொத்தை இப்பொழுது கைப்பற்றியவர் எனது சிறிய தந்தையாக இருந்தாலும் அவரை நான் விடப்போவதில்லை. என் தந்தை போகும்போது என்னை சிறிய தந்தை கையில் பிடித்துக் கொடுத்து, 'இவனை உன் மகன்போல் நடத்து, வயது வந்ததும் அரசை அவனிடம் ஒப்படைத்து விடு' என்று கூறிச் சென்றார். ஆனால் அதிகார ஆசை யாரை விட்டது. என் சிறிய தந்தை, என் தந்தைக்குக் கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்கவிட்டு, தானே அரசனாகி விட்டார். அதை மாமா (மதகுரு) எதிர்த்து வருகிறார். ஆனால் அவர் விருப்பம் ஒன்றை நான் ஏற்கனவே நிறைவேற்றி விட்டேன். மஸ்தானாவை எனக்குக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார். அதற்காகவே என்னை அரசபீடத்தில் ஏற்றவும் ஏற்பாடு செய்தார். அதற்காகவே தன் வளர்ப்புப் பெண்களான அலை அரசியையும், கடல் அரசியையும், இளவழுதியையும் அழைத்துவர சேரநாட்டுக்கு அனுப்பினார்'' என்றான் அஹமத்.

''இளவழுதியின் வீரத்தைப் பற்றி அரபு நாட்டில் பெரிதும் பரவியிருக்கிறது. அதனால் இளவழுதியைக்கொண்டே என் அரசை மீட்க மாமா தீர்மானித்தார்'' என்று விளக்கினான் அஹமத்.

மன்னர் உவகையும் பெருமிதமும் கலந்த பார்வையை இளவழுதிமீது வீசியதன்றி, ''இளவழுதி! உன்னால் சேரநாட்டு மதிப்பும் வீரமும் பிறநாட்டில் பரவுவதைக் கேட்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சேரநாடு உனக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறது. இனிமேல் அதன் நிர்வாகத்தில் உனக்குப் பங்கிருக்கும்'' என்றும் கூறினார் சொற்களில் பெருமிதம் ஒலிக்க.

பதிலுக்கு இளவழுதி தலைதாழ்த்தி மன்னருக்கு நன்றி தெரிவித்தான். அப்பொழுது மஸ்தானா இளவழுதியை அணுகி அவன் கையைப் பிடித்து, ''வாருங்கள் போகலாம்!'' என்று அழைத்தாள்.



''எங்கு?'' வியப்புடன் வினவினான் இளவழுதி.

''அரேபியாவுக்கு. அழைப்பு வந்திருக்கிறது.''

''அழைப்பது யார்?''

''வேறு யார்? என் தந்தைதான். மதகுரு'' என்றாள் மஸ்தானா.

''ஆம்! அவர்தான் அழைக்கிறார். போய்வா இளவழுதி'' என்று மன்னரும் சொன்னார்.

''மன்னவா! தங்களுக்கு எப்படித் தெரியும். எங்கோ இருக்கும் அவர் அழைப்பது?''

''இப்பொழுதுதான் அவர் சொற்கள் என் காதில் ஒலித்தன. இப்பொழுதும் அலை அரசி வருகிறாள் உன்னை அழைத்துப்போக'' என்றும் மன்னர் கூறினார்.

அப்பொழுது திடீரென கடற்பகுதியில் அலைகளின் இரைச்சல் மிகப் பெரிதாகக் கேட்டது. கடலை சாளரத்தின் மூலம் நோக்கிய மன்னர்,

''இதோ அவளே வந்துவிட்டாள்'' என்று உற்சாகத்துடன் கூறி கையை கடலை நோக்கிச் சுட்டிக்காட்டினார்.

எல்லோரும் சாளரத்தை நோக்கி ஓடினார்கள்.

அப்பொழுது ஊழிக்காற்று 'ஓ ஓ' என்ற சப்தத்துடன் அறைக்குள் நுழைந்தது.

# 36. இரண்டு பரம சுகமும் சேர்ந்தால் - 1

அரபுக் கடலின் பெரும் கொந்தளிப்பாலும் அலைகளின் எழுச்சியாலும் ஊழிக் காற்றுப் போல 'ஓ' வென்று சப்தமிட்ட பெருங் காற்றாலும் என்னென்ன உற்பாதங்கள் ஏற்படுமோ என்று மற்றவர்கள் திகிலடைந்தாலும் நெடுஞ்சேரலாதன் மட்டும் சிறிதும் திகிலடையாமல், "இந்த திடீர் எழுச்சிக்கு என்ன காரணமாயிருக்கும்?" என்று வினவினார்.

*"ஹிப்பலாஸாயிருக்கலாம்" என்று இளவழுதி தன் கருத்தைச் சொன்னான்.

இளவழுதியின் கருத்தை மன்னர் ஒப்புக்கொள்ளவில்லை. "இல்லையில்லை. இது ஹிப்பலாஸ் அல்ல. வடக்கை நோக்கி அடிக்கிறது. இது வழக்கமான பருவக் காற்றுதான். இதற்கும் ஹிப்பலாஸுக்கும் எதும் சம்பந்தமில்லை" என்று திட்டமாகச் சொன்னார்.

"அப்படியானால் இதற்குக் காரணம்?" என்று இளவழுதி கேள்வி தொடுத்தான். மேற்கொண்டு அவன் பேசவில்லை.

கடலைச் சுட்டிக்காட்டி, "காரணம் அதோ வருகிறது" என்று மன்னர் கூறினார். இதைக் கேட்டதும் முன்னால் நின்ற இளவழுதி சாளரத்தின் மூலம் கடலை உற்று நோக்கினான். அங்கு ஒரு சிறு விளக்கு மட்டும் தெரிந்தது. "எதையும் காணோமே?" என்று சொன்னான்.

"எதுவும் தெரியவில்லை? விளக்கு தெரியவில்லை?" என்று வினவினார் மன்னர்.

---

* ஹிப்பலாஸ் என்ற யவனன் எகிப்திலிருந்து இந்தியாவிற்கு வருவதற்கு கண்டுபிடித்த பருவக்காற்றுக்கு அவன் பெயர் வைக்கப்பட்டது.



"சிறு விளக்கு ஏதோ வந்து கொண்டிருக்கிறது. வேறு ஒன்றும் தெரியவில்லை. அந்த விளக்கும் இந்தக் காற்றில் அணையவில்லை. விசித்திரமாக இருக்கிறது. வருவது ஒருவேளை மரக்கலமாக இருக்குமோ?" என்று இளவழுதி கேட்டான்.

"இருக்காது. மரக்கலத்திற்கு இவ்வளவு சிறிய விளக்குகள் இருக்காது. பெரிய தீப்பந்தங்கள் இருக்கும். அல்லது யவன நாட்டு பெருவிளக்குகள் இருக்கும்" என்று சுட்டிக்காட்டினார் மன்னர்.

அதை ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாக, "ஆம் ஆம்!" என்று ஆமோதித்த இளவழுதி, "ஒருவேளை பெரும் படகாயிருக்குமோ? படகைச் செலுத்துவதற்குக் கூட யாரையும் காணோமே?" என்றும் கேட்டான்.

"நன்றாக உற்றுப்பார் இளவழுதி. படகில் ஓர் உருவம் இருக்கிறது. அந்த உருவம் தனது கையைத் தூக்குகிறது மேலே" என்றும் தான் கண்டதைச் சுட்டிக்காட்டினார் மன்னர்.

இளவழுதியும் உற்று நோக்க, அலைகளின் அத்தனைக் கொந்தளிப்பிலும் அலட்சியமாக நின்றிருந்தது அந்த ஒல்லியான உருவம். அது தன் கையை உயர்த்திய சமயத்தில் கீழிருந்த விளக்கு மெள்ள மேலே எழுந்து அந்த உருவத்தின் கைக்கு சமானமாக நின்றது.

"இளவழுதி, சீக்கிரம் அந்தப் படகைப் போய்ப் பார்த்துவிட்டு வா. படகிலிருந்து அந்த உருவங்களைக் கீழே இறக்கு. இங்கே அழைத்து வா" என்று உத்தரவிட்டார் மன்னர்.

"யார் அவர்கள்? தங்களுக்குத் தெரியுமா?"

"யார் இந்தக் கொந்தளிப்பில் அலட்சியமாக வருவார்கள்? இதைக் கூட யூகிக்க முடியவில்லையா உன்னால்?"

"தாங்கள் யூகித்து விட்டீர்களா?"

"ஆகா, யூகித்து விட்டேன். அலை அரசிதான் வருகிறாள். இந்தக் கொந்தளிப்பில் வேறு யாராக இருக்க முடியும். சீக்கிரம் போய்வா" என்று மன்னன் துரிதப்படுத்தினான்.

இளவழுதியும் தடையேதும் சொல்லாமல் விரைந்தான் படகுத் துறைக்கு. படகை அவன் நெருங்கும் முன்பு அதிலிருந்து அலை அரசியே குதித்து அவன் கையைப் பிடித்து "வாருங்கள் மன்னரிடம் போகலாம்" என்றாள்.

"இப்பொழுது மன்னரிடம் என்ன வேலை?" என்று இளவழுதி அதிகாரக்குரலில் கேட்டான்.

"வாருங்கள், மன்னரிடமே அதைக் கேட்கலாம்" என்ற அவள் அவன் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக்கொண்டு மன்னரிருந்த இடத்தை நோக்கிச் சென்றாள்.

அவர்கள் சற்று தூரத்திலிருக்கும்போதே, "வா அலை அரசி, வா இளவழுதி. உங்களை இப்பொழுதே அரேபியாவுக்கு அனுப்பி விடுகிறேன்" என்று சாளரத்திலிருந்தே இரைந்து பேசினார் மன்னர்.

சாளரத்தை நெருங்கியதும் அலை அரசி கேட்டாள்.

"மன்னவா! இன்றேவா அனுப்பப் போகிறீர்கள்?"

"இல்லை, இப்பொழுதே" என்றார் மன்னர்.

"கடலைப் பார்த்தீர்களா. இதில் யாராவது பயணம் செய்ய முடியுமா?" என்று அலை அரசி வினவினாள்.

மன்னர் முறுவல் செய்து, "கொந்தளிப்பில் வந்தவர்களால் திரும்பவும் முடியும்" என்று குரலில் சற்று இகழ்ச்சி தோன்ற சொன்னார்.

"அதுவும் அலை அரசியால் முடியாது என்றால் வேறு யாரால் முடியும்?" என்று மீண்டும் சொன்னார். இம்முறை இகழ்ச்சியில்லை; பாராட்டு இருந்தது குரலில்.



"ஏன் இவ்வளவு அவசரம்?" என்று அலை அரசி கேட்டாள்.

"மதகுரு உத்தரவிட்டுவிட்டார். இனிமேல் தாமதிக்க முடியாது. கிளம்புங்கள்" என்றார் மன்னர்.

மதகுருவின் பெயரைக் கேட்டதும் யாரும் பேசவில்லை. அலை அரசி கூட மௌனமாகவே நடந்தாள் படகை நோக்கி. படகை நெருங்கியதும் முதலில் அவள் அதில் ஏறி இளவழுதியையும் ஏறும்படி சைகை செய்தாள். அவன் ஏறியதும் அலைகள் அடங்கின. காற்றும் திசைமாறி படகை வடமேற்கில் திருப்பிச் சென்றது.

"துடுப்புகள் எங்கே?" என்று இளவழுதி வினவினான்.

"எதற்கு?" என்று அலை அரசி கேட்டாள்.

"துழாவிப் படகைச் செலுத்த!"

"இந்தக் கொந்தளிப்பில் துடுப்பு பயன்படாது. தவிர, படகுக்கும் போய்ச் சேரவேண்டிய இடம் தெரியும். அது தானாகவே போகும்" என்று விளக்கினாள் அரசி.

அப்போது படகின்மீது கயிற்றுச் சுருள் ஒன்று விழுந்தது போன்ற பிரமை ஏற்பட்டது இளவழுதிக்கு. அடுத்து படகு அசுர வேகத்தில் சென்றது - கடல்நீரைக் கிழித்துக் கொண்டு, அலையின்மீது தாவித்தாவி. அதன் வேகத்தைக் கண்டு இளவழுதி பிரமித்துப் போனான். அலை அரசி மட்டும் கீழே குனிந்து எதையோ ஒரு பாத்திரத்தை எடுத்து இளவழுதியிடம் கொடுத்து, "உங்களுக்கு உணவிருக்கிறது, புசியுங்கள்" என்றாள். "அடுத்த உணவு பஸ்ராவில்" என்றும் கூறினாள்.

இளவழுதி பாத்திரத்திலிருந்து உணவை எடுத்து மெள்ள புசித்து, மீதியை பாத்திரத்துடன் அலை அரசியிடம் நீட்டி, "இந்தா நீ சாப்பிடு" என்றான்.

''எனக்கு வேண்டாம்.''

''பட்டினி கிடக்கப் போகிறாயா?''

''இல்லை.''

''வேறு எதைச் சாப்பிடுவாய்?''

''காற்று நிரம்ப வருகிறது. வாயு பட்சணம்'' என்றாள்.

இரவு மெள்ள மெள்ள போய்க்கொண்டிருந்தது. படகு திடீரென மேலே எழுந்து கவிழ்ந்துவிடும் நிலைக்கு வந்தது.

''கீழே ஏதோ திமிங்கிலமோ பெரிய சுறாவோ வந்திருக்கிறது'' என்று காரணம் காட்டினாள் அலை அரசி.

''அப்படியானால் நமது கதி என்ன?'' என்று இளவழுதி வினவினான்.

''நமக்கு எந்த ஆபத்தும் வராது. நம்மை மதகுரு பஸ்ராவிலிருந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்'' என்று சமாதானம் சொன்னாள் அலை அரசி.

''அவருக்கு கண் இவ்வளவு தூரம் தெரியுமா?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் இளவழுதி.

அவள் சொன்னாள்: ''வெளிக்கண் தெரியாது. உட்கண் தெரியும். அதனால் உலகம் முழுவதும் அவரால் இருந்த இடத்திலிருந்தே பார்த்தும் செயல்படவும் முடியும். மதகுரு சாமான்யன் அல்லரங'' என்ற அலை அரசி அலட்சியமாக படகில் உட்கார்ந்து லேசாக தலையை ஒருபுறம் சாய்க்கவும் முற்பட்டாள்.

அவள் தலையை பிடித்துத் தன் மடியில் படுக்க வைத்துக்கொண்ட இளவழுதி, ''மிகவும் அலுத்திருக்கிறாய். சூழ்நிலையும் பயங்கரமாய் இருக்கிறது. கண்ணை மூடி உறங்கு. உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அவள் முதுகில் தனது கையால் ஆறுதலாகத் தடவிக் கொடுத்தான். அவனுக்கு



பதில் சொல்லவில்லை. மேற்கொண்டு சரசத்துக்கும் இடம் கொடுக்கவில்லை. கையை எடுத்து அப்புறம் தள்ளினாள். அவன் கை விழுந்த இடத்தில் நன்றாக சுருட்டப்பட்ட கயிறு இருந்தது. ஆகையால் கயிறு ஏற்கனவே விழுந்தது பிரமையல்லவென்றும், உண்மைதான் என்றும் தீர்மானித்து கயிற்றுச் சுருளை கையில் எடுத்துக் கொண்டான்.

''அலை அரசி, இதோ கயிறு இருக்கிறது'' என்றும் சொன்னான்.

''கயிறு எதற்கு?'' அவன் குழைந்தாள்.

''என்னைக் கட்டிப்போட'' என்றான் இளவழுதி.

''உங்களைக் கட்டிப்போட கயிறு தேவையில்லை'' என்றாள் அவள். ''கயிற்றைவிட பலமான வசதி இருக்கிறது'' என்று கூறியவண்ணம் தனது இரு கைகளையும் அவன் கழுத்தில் சுற்றி மெள்ள இறுக்கினாள். அவனும் திமிறாமல் அவளின் கைகளின் ஊடே தன் கழுத்தையும் தலையையும்கூட உருட்டினான். அப்படி உருண்ட தலை சற்று கீழே வரவே இரண்டு தலையணைகளிலும் புதைந்து ஆசுவாசப் பெருமூச்சுவிட்டான் இளவழுதி.

அவளும் திடீரென ஒரு திரும்பு திரும்பி அவன் தலையை தன் மார்பில் இறுக அணைத்துக்கொண்டாள்.

''இப்பொழுது எப்படியிருக்கிறது... சுகமா?'' என்று கேட்டாள் அவள்.

''பரம சுகம்'' என்றான் அவன்.

தலையை லேசாகத்திருப்பி, அவள் வலது மார்பின் முகட்டில் வைத்து, ''இப்பொழுது எப்படி இருக்கிறது?'' என்று கேட்கவும் செய்தான்.

அவளும் ''பரம சுகம்'' என்று அவன் சொன்ன சொற்களையே திருப்பினாள்.

''இரண்டு பரம சுகமும் சேர்ந்தால் சொர்க்கம்'' என்றான் அவன்.

''சொர்க்க வாயில் திறந்துதான் இருக்கிறது'' என்று அவள் சொல்லி நகைத்தாள்.

அவன் மெள்ள குனிந்து அவள் இதழ்களை தனது இதழ்களால் மூடினான். அவள் உணர்ச்சிப் பெருக்கால் அசைந்தாள். அவனும் உணர்ச்சி மேலீட்டால், ''அரசி! அரசி!'' என்று இருமுறை முனகினான்.

அப்பொழுது அரசியின் மேலாடை அறுந்து அவன் முகத்தில் திரும்பத் திரும்ப தடவியதால் அவன் எழுந்து உட்கார்ந்து அந்த ஆடையை சரிப்படுத்த முயன்றான்.

''இங்கு யாருமில்லை'' என்று சுட்டிக்காட்டிய அவள் ஆடையின் தலைப்பை எடுத்து தனது இடையில் சொருகிக் கொண்டாள். வானத்தில் ஓடிய பிறைச்சந்திரன் அவள் சைகை பயன் அளிக்கவில்லை என்பதை நிரூபிக்க நன்றாகவே தனது கதிர்களை அவளின் உடலின்மீது பாய்ச்சினான். சந்திரனின் அந்த வெளிச்சத்துக்குக்கூட அவள் பூவுடல் அதிக மெருகுடன் பிரகாசித்தது. அவன் கைப்பட்ட இடங்களில் மட்டும் சிறிது இரத்தம் பாய்ந்தது. சில இடங்கள் சிவப்பாகவும், சில இடங்கள் வெண்மையாகவும் இருந்ததால் அவள் ஒரு தாமரைத் தடாகம்போல் தோன்றினாள். இளவழுதி மேற்கொண்டு உணர்ச்சிவசப்பட்டாலும் செயல் படாமல் படகில் அவள் பக்கத்தில் படுத்து, காலை நன்றாக நீட்டிக் கொண்டான்.

''அரசி! நீயும் உறங்கு. நானும் உறங்குகிறேன். காலையில் பேசிக்கொள்வோம்.''

''அதற்குள் உறக்கம் பிடித்துவிட்டதா?'' என்று அவள் கேட்டாள்.

''உறக்கம் வராது. வரும் நேரமுமல்ல இது.''



''வேறு எதற்கு நேரம்?''

அவன் அவள் கழுத்தில் தனது உதடுகளைப் புதைத்து, ''சொல்லத் தெரியவில்லை'' என்றான்.

அவள், ''சொல்லித் தெரிவதில்லை'' என்று கூறியதுடன் தனது மார்பை அவனை நோக்கித் திருப்பி, அவன் மார்பிலும் அழுத்தி, ஒரு கையால் அவன் கழுத்தை வளைக்கவும் செய்தாள்.

பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை அவன் புரிந்து கொண்டான். அடுத்த சில விநாடிகள் அவன் கையில் அவள் பூவுடல் இருந்தது. அவளைத் தூக்கி தன் மார்புமீது கிடத்திக்கொண்டான். ''இயற்கையின் சக்தி அமானுஷ்யமானது!'' என்றும் சொன்னான்.

அவள் சொன்னாள்: ''மனிதன், மனிதனாகத்தான் இருக்க வேண்டும். அவனுக்குரிய கடமைகளைப் புரிய வேண்டும்.''

''என்ன கடமைகள்?'' அவன் வினவினான்.

''சொல்வத் தெரியவில்லை'' என்று அவன் பாடத்தையே திருப்பிப் படித்து, 'இதற்கு உபாத்தியாயர் தேவையில்லை'' என்றாள்.

''எதற்கு?'' என்று அவன் கேட்டான்.

''நாளை தெரியும்'' என்றாள் அவள்.

''எப்படி?'' அவன் கேட்டான்.

''நான் சொல்லித் தருவேன். நான் உபாத்தியாயர் பதவியை ஏற்றுக்கொள்வேன்'' என்றாள்.

போதனை மறுநாள்வரை காத்திருக்கவில்லை. அன்றிரவே, அந்தப் படகிலேயே துவங்கி விட்டது கடலரசன் உதவியால். திடீரென எழுந்த ஓர் அலை படகை ஒரு ஆட்டு ஆட்டவே, அலை

அரசியின் உடல் பக்கவாட்டில் திரும்பி இளவழுதியின் உடலுடன் பதிந்தது.

அப்புறம் போதனை நிற்கவில்லை. வெகு வேகமாகத் தொடர்ந்தது. வன்னி மரக்கட்டைகள் இரண்டு உராய்ந்தால் தீப்பொறிகள் கிளம்புவதுபோல் அவர்கள் இருவரின் உடல்களின் இழைப்பினால் உணர்ச்சிப் பொறிகள் பறந்தன. போதனை திடீரென சூடு பிடித்து உச்சஸ்தாயிக்குச் சென்றுவிட்டது. இருவரிடமிருந்தும் பாம்பு சீறுவதுபோல் 'உஸ், உஸ்' ஸென்று பெருமூச்சு எழுந்தது.



# 37. மின்னல்வேக நிகழ்ச்சிகள்!

உணர்ச்சித் தீப்பொறிகள் இருவர் உடலினின்றும் பாய்ந்து சென்றன. அவற்றை அணைக்கவோ என்னவோ கடலின் பக்கவாட்டில் எழுந்த ஒரு பெரிய அலை, நீர்த்திவலைகளை அவர்கள்மீது அள்ளித் தெளித்தது.

இளவழுதி தன் மேல்துணியால் அவள் நனைந்த உடலைத் துடைக்க ஆரம்பித்தான். சில சமயங்களில் ஆடையில்லாமல் அவனுடைய கையே அவளுடைய உடலைத் துருவித் துருவித் துடைத்தது.

அவன் ஏதோ செயல்பட முயன்றபோது, ''நாளை ஆகட்டும்'' என்ற அலை அரசி தன்னை விடுவித்துக் கொண்டாள். இருவருக்கும் அலுப்பு அதிகமாகவே அசதி ஆட்கொண்டு அவர்கள் கண்களை மூடினர்.

பொழுது விடியும் சமயத்தில் அலை அரசியின் வயிற்றுக்கருகில் ஏதோ நீண்டு வளைந்து அழுந்தவே அவள் திகிலுற்று 'ஐயோ'வெனக் கூவினாள். அதனால் சரேல் என்று எழுந்த இளவழுதி, ''என்ன விஷயம்?'' என் வினவினான்.

அவள் தன் வயிற்றைச் சுட்டிக்காட்டினாள். அதன் மீது சுறாமீன் ஒன்று வழவழப்பாக ஒரு ஜாண் நீளத்திற்கு படுத்திருந்தது. ''ஓ! மீன்தானா?'' என்று ஏமாற்றக் குரலில் அவள் கேட்டாள். ''வேறு எதை எதிர்பார்த்தாய்?'' என்று அவன் வினவினான்.

அவள் முகத்தில் விவரிக்க இயலாத நாணம் நிலவியது. 'எதை?எதை?' என்று தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

தெரிந்தும் சொல்ல இயலவில்லை அவளால். இயலவில்லையா? துணிவில்லையா?

சென்றமுறை சகல வசதிகளுடன் கூடிய மரக்கலப் பயணம்போல் இம்முறை இல்லாவிட்டாலும், திறந்த படகிலேயே

பயணம் செய்ய நேரிட்டதாலும் எந்தவித அலுப்போ களைப்போ இல்லாமலேயே பயணம் நடந்தது. தனிப்படகில் பயணம் செய்தாலும்கூட, பயணத்துக்கு வேண்டிய சகல வசதிகளுடனும் அலை அரசி வந்திருந்ததால் புதுமணத் தம்பதிகள் தனிக்குடித்தனம் நடத்துவதுபோல அடுத்த பதினைந்து நாள் பயணமும் நடந்தது.

உணவு தயாரிக்க வேண்டிய சாமான்களை ஒரு மரப்பெட்டியில் வைத்து படகின் ஒரு மூலையில் அலை அரசி வைத்திருந்தாள். சமைப்பதற்கு அவள் கொண்டு வந்திருந்த சின்ன விளக்கையே இரண்டு செங்கல்லுக்கு மத்தியில் வைத்து அடுப்பை உண்டாக்கிக் கொண்டாள். சமையலுக்குச் சரியாக ஏதுமில்லாதபோது படகுக்குக் குறுக்கே தனது கையை வெளியே நீட்டுவாள். அலை ஒன்று அப்போது எழுந்து அதிலிருந்து ஒரு வழவழத்த மீன் முதல் நாள் போலவே அவள் கையில்வந்து விழும். அதைப் பிடித்து விளக்கில் வாட்டி பதம் செய்து படைத் தலைவனுக்குக் கொடுப்பாள். அவனும் அதை உண்டு முகத்தில் மகிழ்ச்சிக்குறி காட்டுவான்-தான் உண்டது போக மீதியுள்ள மீனை அவளிடம் நீட்டுவான். அவள் அதை வாங்கி உண்பாள். அப்படி உண்ட ஒரு சமயத்தில்,

''நீ என் மனைவியின் ஸ்தானத்துக்கு வந்துவிட்டாய்.''

''என்ன? எப்படி?'' என்று கேட்டாள் அவள்.

''நான் உண்ட உணவில் மீதியை நீ சாப்பிடுகிறாய் அல்லவா?'' என்றான் அவன்.

''அதனால்?'' ஏதும் புரியாமல் வினவினாள் அவள்.

''கணவன் உண்டது போக மீதியை மனைவிமார் உண்பது எங்கள் நாட்டுப் பழக்கம்'' என்று இளவழுதி சுட்டிக்காட்டினான்.

''எங்கள் நாட்டில் அது பழக்கமில்லை'' என்றாள் அவள்.

''பழக்கப்படுத்திக் கொள் மீனாட்சி'' என்றான் இளவழுதி.



''மீனாட்சியா, அது என்ன?'' அலை அரசி கேட்டாள்.

''உன் பெயர். நான் வைத்தது'' என்றான் இளவழுதி புன்சிரிப்புடன்.

''உங்கள் நாட்டில் கணவர்கள் மனைவிமார்களுக்கு பெயர் வைப்பதும் ஒரு பழக்கமா?'' என்று வினவினாள்.

''இல்லை; அது உனக்குப் பொருத்தமாயிருக்கிறது என்று பெயர் வைத்தேன். மீனை நீ ஆட்சி செய்கிறாய். கையை நீட்டினால் அது வந்து விழுகிறது. கையை நீட்டாவிட்டாலும் மேலே வந்து வயிற்றைத் தழுவுகிறது'' என்று கூறி வயிற்றைத் தடவி மீனை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.

''இந்தா, இதை வைத்துக்கொள்'' என்றான்.

அவள் அதை கையில் வாங்கிக் கடலில் எறிந்தாள். ''வேண்டும்போது கூப்பிட்டுக் கொள்ளலாம்'' என்றும் சொன்னாள்.

''சரி மீனாட்சி'' என்ற இளவழுதி அவள் கண்களின் இமைகளை சிறிது பார்த்து, ''இவையும் மீன்களைப் போலத்தான் இருக்கின்றன. ஏன், நீயே ஒரு வாளை மீன்போல்தான் இருக்கிறாய்!'' என்று கூறி அவள் உடலைத் தடவி, ''என்ன வழவழப்பு! என்ன மென்மை!'' என்று உற்சாகத்துடன் சொன்னான்.

''அப்படியானால் என்னையும் சாப்பிட்டு விடுவீர்களா?'' என்று அவள் கேட்டு நகைத்தாள்.

''சாப்பிடுவேன், உரிமையைப் பெற்ற பிறகு. அதுவும் அங்கம் அங்கமாக சுவைத்துச் சாப்பிடுவேன். பஸ்ரா வரட்டும், உன் தந்தையிடம் கேட்டு உரிமை பெறுகிறேன்'' என்றான்.

''என் தந்தை உங்களைக் கொன்று விடுவார். என்னை எந்த ஆண்மகனும் தொடுவதையோ, என்னிடம் உரிமை

கொண்டாடுவதையோ அவர் விரும்புவதில்லை'' என்று சொன்ன அவளது குரலில் துன்பம் தோய்ந்து கிடந்தது.

ஆனால் பஸ்ராவை அவர்கள் அடைந்தபோது அப்படி எதுவும் நடக்கவில்லை. முதல் தடவை போலவே மதகுரு துறைமுகப் பாறையில் நின்றிருந்தார். எதையோ இழுப்பதுபோல கையை அடுத்தடுத்து நீட்டி இழுத்துக் கொண்டிருந்தார். படகு அவர் இழுத்த திசையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

''தந்தை நமது படகை இழுக்கிறார்'' என்றாள் அலை அரசி.

''எதைக்கொண்டு? எப்படி?'' என்று இளவழுதி கேட்டான்.

''நேற்று வந்து விழுந்த அந்த கயிற்றுச் சுருளைப் பாருங்கள்'' என்று சுட்டிக்காட்டினாள். அந்த கயிற்றுச் சுருளின் ஒரு நுனி, படகின் ஒரு வளையத்தில் சுருக்கிட்டிருந்தது. மீதிச் சுருளையும் இன்னொரு நுனியையும் காணோம். அதைப் பார்த்து மலைத்த இளவழுதியை நோக்கி, ''இன்னொரு நுனியைப் பிடித்துத் தான் அப்பா படகை இழுக்கிறார்'' என்று அலை அரசி அறிவித்தாள்.

''இதை முடிச்சுப்போட்டது யார்?'' என்று இளவழுதி கேட்டான்.

''தானாகவே போட்டிருக்கும், அப்பா ஆணையால்'' என்று அவள் விளக்கிய சமயத்தில், அந்தச் சுருக்கும் தானாகவே திடீரென்று அவிழ்ந்து நீரில் விழுந்துவிட்டது. அப்படியும் படகு துறையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

படகு துறையை அடைந்ததும் மதகுருவே இறங்கி அதை இழுத்து, தளையில் பிணைத்தார். படகிலிருந்தவரையும் இறங்கச் சொல்லி, பக்கத்திலிருந்த வண்டியில் ஏறும்படி கூறினார். அலை அரசி சிறிது தாமதிக்கவே, ''சீக்கிரம் ஏறு அம்மா! இல்லத்துக்குப் போவோம்'' என்று மதகுரு துரிதப்படுத்தினார்.

அவர்கள் அந்தப் பழைய மூன்று மாடிக் கட்டிடத்துக்குப் போனபோது மாலை நெருங்கிவிட்டது.



''சரி உள்ளே வா'' என்று மதகுரு அழைத்தார்.

''அப்பா! நாங்கள் இன்னும் நீராடவில்லை. உணவருந்தவில்லை'' என்று சொன்னாள் அலை அரசி.

''அதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்ற மதகுரு, ''இளவழுதி! இவளை அழைத்துப்போய் சுனையில் நீராட்டி நீயும் நீராடி வா'' என்றார்.

''இவர் எதற்கு அப்பா?'' என்று அலை அரசி கேட்டாள்.

''நன்றாக நீராட்டுவான். மஸ்தானாவையே நீராட்டியிருக்கிறான், அதில் வல்லவன். நீ போய் வா'' என்றார்.

இளவழுதி முன்னே நடந்தான். அலை அரசி நாணத்தினால் உடல் நெளிய கால்கள் பின்ன அவனைத் தொடர்ந்தாள். அடுத்து நடந்த சுனையாடலில் பேரின்பத்தைப் பெற்றாள்.

இளவழுதி அலை அரசியை சுனையில் நீராட்ட அழைத்துச் செல்லும் சமயத்தில் மதகுருவே வந்து, ''அப்பா இவள் உன் மனைவி என்பதை நினைவில் வைத்துக்கொள். அவளை ஜாக்கிரதையாகக் குளிப்பாட்டு, அவள் கோபித்துக் கொண்டு எங்கேயாவது ஓடிவிடப் போகிறாள்'' என்று எச்சரித்தார்.

இளவழுதி மிகுந்த வியப்பை முகத்தில் காட்டி, ''இவள் என் மனைவியா?'' என்று வினவினான் வியப்பு குரலிலும் ஒலிக்க.

''ஆமாம்!'' என்றார் மதகுரு அலட்சியக் குரலில்.

''இதற்கு என் சம்மதம் தேவையில்லையா?'' என்று சற்று எதிர்ப்பைக் காட்டினான் இளவழுதி.

''யார் சம்மதமும் தேவையில்லை. என் தீர்ப்புதான் இந்த விஷயங்களில் முடிவானது. மஸ்தானாவை உனக்குக் கொடுத்தேனே யாரைக் கேட்டுக் கொடுத்தேன். உன்னைக் கேட்டா, அவளைக் கேட்டா?'' என்றார்.

"ஏன் கொடுத்தீர்கள்?" என்று இளவழுதி வினவினான்.

"நிகழ்ச்சிகள் நான் எதிர்பார்த்ததைவிட துரிதமாக முன்னேறிவிட்டன. நீ இங்கு வந்த மறுநாள் விடியற்காலையில் மஸ்தானாவைத் தழுவி நிற்பதைக் கண்டேன். அவளும் வியப்பைக் காட்டவில்லை. அப்பொழுது அவளைத் தூய்மைப்படுத்த இருந்த ஒரே வழி அவளை உனக்குக் கொடுப்பதுதான் என்று தீர்மானித்தேன்" என்றார்.

"எனக்கு இரண்டு மனைவிகள் எதற்கு?" என்று வினவினான் இளவழுதி.

மதகுருவின் பதில் அவனைத் தூக்கிவாரிப் போட்டது. "இன்னொருத்தியும் இருக்கிறாளே அவளை என்ன செய்வது. கடலரசியை யாரிடம் தள்ளச் சொல்கிறாய்?" என்று எரிந்து விழுந்தார் மதகுரு.

"அவளும் எனக்குத்தானா?" என்று சற்று தழுதழுத்த குரலில் இளவழுதி கேட்டான்.

"இங்கு வேறு யார் இருக்கிறார்கள்?" என்று பதில் கேள்வியைத் தொடுத்தார்.

"ஏன் அஹமது இல்லையா? மஸ்தானாவுக்கு மாமன் முறை" என்று மறுபடியும் கேட்டான் இளவழுதி.

"மஸ்தானாவுக்கு ஐந்து பேர் மாமன்மார்கள் இருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் அவளைக் கட்டிக் கொடுக்க முடியுமா?" என்று மதகுரு விசாரித்தார்.

"உங்கள் தீர்ப்பை யார் எதிர்க்க முடியும். முடியாது என்று நீங்களே சொல்வதில்லையா? ஆகையால் அந்த ஐந்து மாமன்களுக்கும் மஸ்தானாவைக் கொடுப்பதை யார் தடுக்க முடியும்?" என்றான் இளவழுதி.



"அப்படியானால் ஒன்று செய்வோம். மஸ்தானாவை மட்டும் நீ கட்டிக்கொள். மற்றவர்களை அவர்கள் இஷ்டப்படி விட்டுவிடுகிறேன்" என்றார் மதகுரு.

அதுவரை மவுனமாயிருந்த அலைஅரசி, "நீங்கள் யாரை எப்படி விட்டாலும் இவர்தான் எனக்கு மணாளர்" என்று இளவழுதியைச் சுட்டிக் காட்டினாள்.

மதகுரு மெள்ள நகைத்தார். "அந்தப் பைத்தியம் மஸ்தானாவும் இதையே சொல்கிறாள். தமிழா, உன்னிடம் ஏதோ தனிக்கவர்ச்சி இருக்கிறது. பெண்களுக்கு நீ விளக்கு. அவர்கள் விட்டில்கள்" என்று சிலாகிக்கும் முறையில் பேசினார்.

"மதகுரு, அப்படியேதுமில்லை. இது உங்கள் கற்பனை. என் திருமண விஷயத்தை நான் எனது நாடு திரும்பியதும் தீர்மானிக்கிறேன்" என்று கூறினான்.

"முடியாது தமிழா! முடியாது. உன் விஷயம் ஏற்கனவே தீர்மானமாகிவிட்டது. அதிலிருந்து நீ தப்ப முடியாது. நான் சம்பந்தபட்டவரை மூன்று மனைவிமார்கள் உனக்கு நிச்சயம். இவளை சீச்சிரம் குளிப்பாட்டி அழைத்து வா. மற்றவற்றைப் பிறகு பேசிக் கொள்வோம்" என்றார்.

இளவழுதி, "வா அரசி!" என்று அவளை உரிமையுடன் கையைப் பிடித்து அழைத்து சுனையை நோக்கி நடக்கலானான்.

ஆனால் சுனையில் அன்று நீராடுவது அத்தனை சுலபமாயில்லை. புரவிகள் கூட்டம் மிக அதிகமாக இருந்ததால் சுனைக்குள் நுழைவதே கஷ்டமாயிருந்தது. இளவழுதி அரசியைத் தூக்கித் தோள்மீது போட்டுக் கொண்டு, புரவிகளினூடே மெதுவாக நடந்து சென்றான். கொஞ்சம் இடம் அகப்பட்டபோது அவளைக் கீழே இறக்கி சுனை நீரை அவள் மீது வாரி இறைத்தான். அவள் மெல்லிய உடலைத் தனது வலது கையால் துழாவித் துழாவி தேய்த்தான். சில இடங்களில் அவன் கை பட்டபோது அவள் ஒதுங்கினாள்.

அந்த சமயத்தில் அவன் முற்றும் எதிர்பாராத ஒரு விஷயம் நடந்தது. மதகுருவின் செல்லப்புரவி பக்கத்திலிருந்த பெரு மலையிலிருந்து வேகமாக ஓடிவந்து கனையில் நுழைந்து, அரசி மீது இடித்துக்கொண்டு நின்றது. பல்லால் அவள் சேலையையும் பற்றியது. அரசி அதன் மீது அநாயசமாகத் தாவி ஏறி உட்கார்ந்து கடிவாளக் கயிறுகளைப் பிடித்துக்கொண்டாள். அடுத்த சில விநாடிகளில் அது திரும்பி மலையை நோக்கிப் பாய்ந்தது. சில விநாடிகளுக்குள் புரவி, அரசி இருவருமே கண்ணுக்குத் தெரியவில்லை. அவள் போன திக்கை ஏறெடுத்து நோக்கினான் இளவழுதி.

மலையடிவாரத்தில் ஒரு பெரிய அடர்த்தியான தோப்பு ஒன்றிருந்தது. அடுத்த சில விநாடிகளில் அந்தத் தோப்பினூடே அலை அரசி வேகமாகச் சென்று கொண்டிருந்தாள். இளவழுதியும் இன்னொரு புரவிமீது தாவி ஏறி, எப்படியும் அவளை அழைத்து வரவேண்டும் என்ற தீர்மானத்துடன் மலையை நோக்கி புரவியைத் தட்டி விட்டான். புரவியும் அவன் கருத்தை அறிந்து கொண்டது போல் மலையை நோக்கிப் பறந்தது.

ஆரம்பத்தில் அடர்த்தியாய் இருந்த தோப்பு போகப் போக மரங்கள் குறைந்து, மரங்கள் அடியோடு இல்லாத ஒரு சதுக்கம் தெரிந்தது. அந்தச் சதுக்கத்தில் அவன் கண்ட காட்சி கோரம் - கோரம்.

அங்கிருந்த ஒரு நடுப்பாறையில் அலை அரசி கயிறுகள் கொண்டு பிணைக்கப்பட்டிருந்தாள். இரண்டு காட்டு மிராண்டிகள் இரண்டு பக்கங்களிலும் நின்று அவள் ஆடையை நீக்கிக் கொண்டிருந்தார்கள். அதற்கு மேல் பொறுக்க முடியாத இளவழுதி,

''யாரடா! நில் நில்'' என்று கூவிக்கொண்டு அரசியிருந்த இடத்தை நோக்கித் தனது புரவியை ஓட்டினான்.

அடுத்து மின்னல் வேக நிழ்ச்சிகள் துவங்கின.



# 38. கண்களைக் கொத்திய யமப்புறா!

அலை அரசியைப் பிடித்துக் கட்டியதன்றி, அவளது ஆடையைக் கிழிக்க முற்படுவதை கண்டதும் தான் அமர்ந்திருந்த புரவியை தோப்பு முகப்பில் நிறுத்தி, அதன்மீது சற்றே விறைத்து உட்கார்ந்தான்.

அரசியைப் பிடித்துக் கட்டியவர்கள், நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளாய் இருந்ததைக்கண்டாலும், அவர்கள் யாரென்று தெரியாததால் சிறிதே சிந்தனையில் இறங்கினான். இப்படியொரு காட்டுமிராண்டி ஜாதியார் ஆசியா மைனரிலிருந்து கிளம்பி, முதலில் யவனத்திலும் பிறகு பாரதத்திலும் நுழைந்து, கிராமங்களைக் கொளுத்தியும் பயிர்களை நாசம் செய்தும், மக்களை வெட்டி வீழ்த்தியும், தாங்கள் சென்ற இடமெல்லாம் பெரும் நாசத்தை ஈவு இரக்கமின்றி விளைவித்தார்கள் என்பதையும் கேட்டிருந்தானாகையால், இதுவும் அந்தக் கும்பலில் ஒரு பகுதியே என்று நினைத்தான்.

ஆனால், சிறிது நேரத்தில் அப்படியிருக்காது என்ற முடிவுக்கு வந்தான். அதற்குக் காரணம் அங்கு வந்த காட்டுமிராண்டிகளின் தோற்றமே! மேற்படி நாடுகளில் நுழைந்த நாடோடிகளுக்கு ஹூணர்கள் என்று பெயர் என்றும், அவர்களில் கருப்பு ஹூணர்கள், வெள்ளை ஹூணர்கள் என்று இரண்டு பிரிவு இருந்ததையும் அவன் கேள்விப்பட்டிருந்தான். இங்கு வந்தவர்களோ மாநிறமாகவும், அதிகமாக சடைபோட்ட குழல்களுடனும் இருந்ததைக் கவனித்தான். இப்படி அவன் ஆராய்ச்சியில் இருக்கையில், அரசியின் மேலாடை அடியோடு கிழிக்கப்பட்டு விட்டபடியால், அவள் மேலழகுகள் பகிரங்கமாகத் தெரிந்தன. அத்துடன் திருப்தி அடையாத அந்தக் காட்டுமிராண்டிகள் வெறியுடன் கூச்சலிட்டுக் கொண்டு அவளது ஆடையின் மிகுதியையும் கிழிக்க முற்பட்டனர். அவர்களில் நால்வர் முக்கால்

நிர்வாணத்தில் இருந்த அவளைத் தூக்கவும் முற்பட்டனர். அதுவரை காத்திருந்த இளவழுதி நிதானத்தை அடியோடு இழந்து தனது வாளை உருவிக்கொண்டு, புரவியின் விலாவில் இடது காலால் பலமாக உதைத்தான். சாதாரணமாகத் தட்டினாலே பறக்கக்கூடிய அந்த ஜாதிப்புரவி, அவன் காலால் உதைக்கப்பட்டதும் அம்பு போல் கிளம்பி அந்தப் புரவிகளின் நடுவில் பாய்ந்து விட்டது. அந்தப் பாய்ச்சலினாலும், அது முட்டியதாலும் இரு கொடியவர்கள், இரு பக்கங்களிலும் மல்லாந்து விழுந்துவிட்ட அதே சமயத்தில் இளவழுதியின் வாள் பம்பரம்போல் சுழன்று இரண்டு மூன்று தலைகளையும் மணலில் உருளச் செய்து விட்டதால், மணலும் ஆசையுடன் அவர்கள் குருதியை உறிஞ்சிக்கொண்டு, பயங்கரமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியது.

தலை இழந்த முண்டங்கள் தள்ளாடித் தள்ளாடி அங்குமிங்கும் போய்க்கொண்டிருக்கவே தலைகள் மட்டும் தண்ணீருக்குள் உருண்டோடி சுனைநீரைப் பருகலாயின. இந்த கோரக்காட்சிகளிடையே அரசிக்கு அருகில் வந்து விட்ட இளவழுதி, தனது இடது கையை கீழே கொடுத்து அவள் இடையைப் பிடித்து, மேலே தூக்கிப் புரவியில் தனக்கு முன்பாக உட்கார வைத்துக் கொண்டான். அந்தக் காட்சியைக் கண்ட மற்றும் சில கொடியவர்கள் அவனை நோக்கி ஓடி வரவே, அவன் தனது இடையிலிருந்த குறுவாள்களை எடுத்து ஒவ்வொன்றாகக் குறிபார்த்து வீச, ஒவ்வொரு வாளுக்கும் ஒருவன் பலியாகி, பலர் மல்லாந்து மலைப்பாறையில் விழுந்தார்கள். குறுவாள் மார்பினில் தைத்து செங்குத்தாய் நிற்க, குருதி இருபுறமும் வழிந்தோட, அதைக் கண்டுவிட்ட தோப்பிலிருந்த சில கழுகுகள் ஜிவ்வென்று பறந்து வந்து அந்த சடலங்களின் மேல் உட்கார்ந்து, காயம்பட்ட இடத்தில் அலகுகளால் குத்தி குத்தி அவர்களை ருசி பார்த்தன.



அப்போது அங்கு வந்த மதகுரு தன்னுடன் வந்த நாலைந்து புரவி வீரர்களிடம் மற்ற கொடியவர்களை இழுத்து வருமாறு ஏவினார்.

அன்றிரவு தனது குடியிருப்பைச் சுற்றிலும் பெரிய காவலையும் ஏற்படுத்தினார். சுமார் இருபது வீரர்கள் அவர்கள் குடியிருப்பைச் சுற்றிக் காவல் செய்தார்கள். முதலில் அனுப்பப்பட்ட வீரர்கள் கூட்டமாகச் சில கொடியவர்களைப் பிடித்துக் கொண்டுவர மதகுரு விசாரணை நடத்தினார். சிலரை கழுகுகளுக்கு இரையாகப் போட உத்தரவிட்டார். இன்னும் சிலரை பாலைவன மணலில் கழுத்து வரை புதைத்து சாகும்வரை அங்கேயே விட்டு விடும்படி தீர்ப்பும் அளித்தார்.

அதைப் பார்த்து அரசி, ''அப்பா! இது கொடுமையல்லவா?'' என்று வினவினாள்.

''உன்னைப் பாறையில் கட்டி ஆடைகளைக் கிழித்த போது இவர்கள் யோசித்தார்களா? சில தண்டனைகள் எல்லாம் சிலருக்குப் புரியும்'' என்று தமது தண்டனைகளுக்குச் சமாதானம் சொன்னார்.

மற்றவர் யாரும் அந்த சமாதானத்தை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இளவழுதி மட்டும், ''மதகுரு சொல்வதில் தவறில்லை'' என்றான்.

மதகுரு மகிழ்ச்சிப் புன்முறுவல் காட்டினார். ''இளவழுதி! உன்னுடைய மனையாட்டியை அவமானம் செய்தவர்களை நீயே கொன்று விட்டாய். அவர்களுக்கு அத்தகைய வீரமரணம் சரியில்லை. எதற்கும் நீ அவர்கள் தோப்புக்குள் சென்று அங்கு யாராவது பெண்கள் இருந்தால் பிடித்துவா பழி வாங்குவோம்'' என்று மதகுரு கொடிய குரலில் சொற்களை உதிர்த்தார்.

ஆனால் இளவழுதி கிளம்பும் முன்னமே தோப்பிலிருந்து பல நாடோடிப் பெண்கள் ஓடிவந்து மதகுருவின் காலில் விழுந்தனர்..

''ஐயா சரணம்! சரணம்!'' என்று அபயக்குரல் எழுப்பினார்கள்.

மதகுரு, ''தலைவி! ஒருத்தி அவயவங்களால் மட்டும் பெண்ணாவதில்லை. வேறு குணங்களும் தேவை. சொன்னால் உனக்குப் புரியாது. இருப்பினும் உங்களை இங்கு யாரும் எந்தவித அவமானத்திற்கும், கொடுமைக்கும் உள்ளாக்கமாட்டார்கள்'' என்று அபயம் கொடுத்தார்.

''இன்றிரவு நீ என் வீட்டிலேயே தங்கலாம். இளவழுதி உனக்கு காவலிருப்பான், அஞ்சாதே'' என்றும் சொன்னார் மதகுரு.

இரவும் வந்தது. தோப்பின் முகப்பிலிருந்த மூன்றடுக்கு மாளிகையின் மேலறையில் அவள் தங்க வைக்கப்பட்டாள். இரவு நன்றாக மூண்டதும் மதகுரு, இளவழுதியை நோக்கி, ''மஸ்தானா முதல் நாள் இருந்தாளே அதே அறைதான். நீ போகலாம்'' என்றார்.

ஆழ்ந்த சிந்தனையுடன் இளவழுதி படிகளில் ஏறிச் சென்றான். அவன் அந்த அறைவாயிலை நெருங்கும் முன்பாக கிரீச் என்று ஓர் அலறல் கேட்டது. அது அரசியின் குரல் என்பதை அறிந்ததும் வேகமாக ஓடினான் இளவழுதி. அவன் அறைவாயிலை அடைந்த அதே சமயத்தில் உள்ளே அந்த காட்டுமிராண்டித் தலைவியின் கைகள் அரசியின் கழுத்தை நெரித்துக் கொண்டிருந்தன.

இளவழுதியைக் கண்டதும் அந்தத் தலைவி, ''அதோ உன் காதலன் வந்துவிட்டான் போ'' என்று அரசியைப் பிடித்துத் தள்ள, அரசி இளவழுதியின் கைகளில் வந்து விழுந்தாள். இளவழுதியும் தன் இருகைகளால் அவளை நன்றாகத் தழுவி, ஆசுவாசமாக அவள் முதுகையும் தடவிக்கொடுத்தான். பிறகு அவன் உள்ளே சென்றதும் கீழே தரையில் கோரைப்பாய் ஒன்றில் படுத்திருந்த காட்டுமிராண்டித் தலைவி, ''வீரனே, வா என்னிடம்'' என்று தனது இரு கைகளையும் உயரத் தூக்கி அழைத்தாள்.

இளவழுதி சிறிது தயங்கித் தயங்கிச் சென்றான். அவள், அவன் சென்றதும் அவன் இரு கால்களையும் தனது இரு கைகளால்



பிடித்து வளைத்து அவனைத் தன் மீது தள்ளிக் கொண்டாள். இளவழுதி அவளிடமிருந்து தப்ப முயன்றும் முடியவில்லை. இரண்டு முரட்டுக் கைகளும் அவன் கழுத்தை வளைத்து இறுக்கின. இளவழுதியின் மூச்சுத் திணறலாயிற்று.

பிறகு அவன் மெள்ள எழுந்து வெளியே ஓட முயன்றான். ஆனால் எதிரே வந்த மதகுரு அவன் மார்பைப் பிடித்து, மீண்டும் அந்த காட்டுமிராண் தலைவியின் மீது தள்ளினார். அவள் கரங்குவித்து மதகுருவுக்கு நன்றி தெரிவித்தாள்.

மதகுருவும் ''அவனைக் கொன்றுவிடாதே'' என்று கெஞ்சினார்.

''அஞ்ச வேண்டாம். உயிருடனே அனுப்பி வைக்கிறேன்'' என்றாள். மதகுரு போக அனுமதி தந்தாள். மதகுரு இகழ்ச்சியுடன் அவளைப்பார்த்து நகைத்துவிட்டு வெளியேறினார்.

வெளியே நின்று இதையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்றிருந்த அரசி, ''மதகுரு, தாங்கள் இப்படியா?'' என்று வருத்தத்துடன் கேட்டாள்.

''இப்போது என்ன வந்துவிட்டது?'' என்று மதகுரு கேட்டார்.

''அவமானம்'' என்று வார்த்தையை முடி[illegible] அரசி, ''இந்தக் கொடிய செயலுக்கு நீங்கள் அனுமதியளிக்கும் நிலை ஒப்புக்கொள்ளக் கூடியதா?'' என்று வினவினாள்.

''நாளை தெரியும் பதில்'' என்ற மதகுருவின் குரலில் இளவழுதி அன்றுவரை கேட்டிராத கடுமை இருந்தது.

மறுநாள் அவர் பதில் கொடுத்தபோது அந்த குடில் முழுவதுமே கலங்கிவிட்டது. அத்தகைய கொடுமையை மதகுரு விளைவித்தார் அந்தக் கொடியவளுக்கு. அவளை கழுகுப் பாறை மீது கிடத்திவிட கட்டளையிட்டார். அவருடைய பணிமக்கள் அவளைத் தூக்கிக் கொண்டு போய் கை கால்களையும் பிணைத்துவிட்டார்கள். ஒரு சமயத்தில் பல கழுகுகள் அவள் மீது பாய்ந்து, அவள் உடலில் பல

இடங்களையும் கொத்தலாயின. போதாக்குறைக்கு அவருடைய யமப்புறாவும் எங்கிருந்தோ தோன்றி அவள் கண்களைக் குத்திக் கிளறி, விழியை அலகில் எடுத்துக் கொண்டு பறந்தது. மதகுரு தனது வாயிலில் இருந்தபடியே கையை நீட்டினார். அந்தப் புறா அந்த விழியை அவர் கையில் போட்டுவிட்டு மீண்டும் பாறையை நோக்கிப் பறந்தது. அடுத்த சில விநாடிகளில் இன்னொரு விழியும் மதகுருவிடம் வந்து சேர்ந்தது.

அந்த இரண்டு விழிகளையும் இரு கைகளிலும் மாறி மாறித் தூக்கிப்போட்டு சோழி விளையாடுவதுபோல் வேடிக்கைக் காட்டினார். இளவழுதி அந்த விழிகளை தான் வாங்கிக் கொண்டான். காட்டுமிராண்டித் தலைவி குற்றுயிராய்க் கிடந்தாள்.

''இளவழுதி, அவற்றை ஜாக்கிரதையாய் வைத்திரு. சமயத்தில் உபயோகப்படும்'' என்றார் மதகுரு.

அந்த சவவிழிகள் எந்த சமயத்தில் எப்படிப் பயன்படும் என்று புரியாததால் சிரித்தான்.

மதகுரு அந்த இரு விழிகளை தனது கையில் வாங்கிக் கொண்டு, தனது வாயால், 'ப்பூ... ப்பூ' என்று ஊதினார்.

''இதை உன் வேந்தனிடம் கொடு. அவனுக்குப் பயன்படும்'' என்று சொன்னார்.

இளவழுதி கண்களைத் தனது கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

''கண்பார்வை இழந்த யாரிடமும் இதைக் கொடு. பார்வை இழந்த கண்களைத் தோண்டிவிட்டு இவற்றை அந்த இடத்தில் வைத்தால் பார்வை கிடைக்கும்'' என்றார் மதகுரு.

அவர் சொன்னதை நம்பவில்லை என்றாலும் தலை தாழ்த்தி அவரை வணங்கி கண்களை ஏற்றுக் கொண்டான்.



# 39. காதல் அரசியும், காமத்தலைவியும்

இளவழுதி கண்களை வாங்கிக் கொண்டு, தலை வணங்கினாலும் அவன் தன்னை நம்பவில்லையென்பதை அவனது முகபாவத்திலிருந்து புரிந்து கொண்ட மதகுரு ''இளவழுதி! உனக்குத் தெரியாததெல்லாம் நடவாது என்று நினைக்காதே! அந்தக் கண்களை ஊதும் போதே மந்திரம் போட்டு விட்டேன். அந்தக் கண்களை கண் இழந்தவருக்குப் பொருத்தினால் உண்மையை உணர்ந்து கொள்வாய். அப்போது என் மந்திரபலம் உனக்குப் புரியும்'' என்று பெருமையுடன் கூறினார்.

''ஒருவேளை இன்றிரவு காட்டு மிராண்டிகளின் தலைவி உன் கண்களைப் பிடுங்கிவிட்டாலும், இவற்றை நீயே பொருத்திக் கொள். உன் பார்வை முன்னைவிட நன்றாக இருக்கும்'' என்று கூறினார்.

அதைக் கேட்ட இளவழுதி, ''இவள் ஏன் என் கண்களைப் பிடுங்க வேண்டும்?'' என்று வினவினான்.

சிறிது சிந்தித்துவிட்டு, ''இவள் இதுவரை தோல்வியே அறியாதவள். இன்று நீ அவளுக்கும் அவள் கூட்டத்துக்கும் தோல்வி அளித்திருக்கிறாய். அதனால் அவள் அதற்குப் பழிவாங்க நிச்சயமாய் சித்தமாயிருப்பாள். இன்றிரவு எப்படியும் உன் கண்களைத் தோண்டி விடுவாள். ஆகையால் எச்சரிக்கையாக இரு'' என்று எச்சரித்துவிட்டு வெளியே நடந்தார்.

''இருங்கள், நானும் வருகிறேன்'' என்று கூறிக் கொண்டே வாயில்படி வரையில் சென்றான்.

அப்போது நாடோடிக் கூட்டத் தலைவி ஒரே பாய்ச்சலில் அவன் மீது பாய்ந்து இளவழுதியைப் பின்னுக்கு இழுத்தாள். இளவழுதி ஏதும் புரியாமல், ''நீ எப்படி இங்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

''மதகுருதான் என்னை இங்கு அழைத்து வந்தார். உன்னை என்னிடம் ஒப்புவிக்க. நான் எப்படியும் என் கண்களுக்கு பழிவாங்குவேன் என்று அவருக்குத் தெரியும். அவர் தான் தப்பித்துக்கொள்ள என்னை இங்கு அழைத்து உன்னை என்னிடம் ஒப்படைத்தார். இல்லாவிட்டால் அவர் கண்களை நான் பிடுங்கியிருப்பேன். ஆனால் நீ வைத்திருக்கும் இந்தக் கண்களை வைத்து அவருக்குப் பார்வை கொடுத்திருக்க மாட்டேன். அவர் உயிர் உள்ள வரை குருடாகத் திரிய வேண்டியிருக்கும். அவர் செய்திருக்கும் அட்டூழியங்களுக்கு அதுதான் சரியான தண்டனை'' என்று கூறி, அவன் கச்சையிலிருந்த இரு கண்களையும் எடுத்து தன் கண்கள் இருந்த இடத்தில் வைத்துக் கொண்டாள்.

''தமிழா! இப்போது நீ நன்றாகத் தெரிகிறாய். அழகாக இருக்கிறாய். நான் உன்னை அரசனாக்குகிறேன். நான் ராணியாக இருந்து உன்னைப் பார்த்துக் கொள்கிறேன் வா'' என்று கூறி, இரு கைகளாலும் அவனை இழுத்துக் கொண்டே தரையிலிருந்த பாயில் சரிந்தாள்.

அடுத்த சில வினாடிகளில் அவள் நன்றாகக் குறட்டை விட்டு உறங்கும் சத்தம் கேட்டது. இளவழுதி எழுந்து உட்கார்ந்து, அவளை நோக்கினான். அவள் ஏதோ பெரிய காட்டு மிருகம்போல் பிரும்மாண்டமாக மல்லாந்து கிடந்தாள். அவளுடைய பிரும்மாண்டமான கால்களைப் பார்த்த இளவழுதி அந்தக் கால்கள் ஒருமுறை தன்னை நெரித்தால் தன் எலும்புகள் முறிவது திண்ணம் என்று நினைத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் நிறைவேறியது அவன் எண்ணம். அவள் சற்று அசைந்து ''வா என் கண்ணாளா!'' என்று அழைத்து ஒரு காலை எடுத்து அவன் மீது போட்டு, காலை சற்றே அழுத்தினாள். வெளியே அதே சமயம் ஏதோ ஒரு மரக்கிளை முறிந்தது. அது தனது எலும்பாகத்தான் இருக்க முடியும் என்று எண்ணிய இளவழுதி இடுப்பையும் முதுகையும் தடவிக் கொண்டான். அப்படி சேதம்



ஏதுமில்லை என்று அறிந்ததும், ''அப்பாடா பயந்தே விட்டேன்'' என்று அவளைப் பார்த்துச் சொன்னான்.

''தமிழா! தமிழகத்திலிருந்து வந்தும் உனக்கு காதலின் பலம் புரியவில்லை. எந்தப் பெண்ணும் தனது காதலனுக்கு எந்தவித தீங்கும் விளைவிக்க மாட்டாள். இது பெண்மையின் சுபாவம்'' என்றாள்.

''காதலா!'' என்று வியப்புடன் கேட்டான் இளவழுதி.

அப்பொழுது எங்கிருந்தோ ஒரு குயில் கூவியது. கடற்கரையிலிருந்து தென்றல் சுகமாக வீசியது. மெள்ள நகைத்துவிட்டுச் சொன்னாள்.

''சகுனங்கள் நன்றாயிருக்கின்றன'' என்று, அத்துடன் அவனை பக்கத்திலிருந்து ஒரு புரட்டு புரட்டி தன்னிரு கைகளாலும் குழந்தையைத் தூக்குவதுபோல் மேலே தூக்கிப் பிடித்துத் தன் மார்பில் படுக்க வைத்து அணைத்துக் கொண்டாள்.

அவன் விலக முயன்றான்.

''பெண் இன்பம் விரும்பும்போது விட்டுச் செல்வது மகா பாவம், கொலை பாதகம் என்று உங்கள் நாட்டு சாஸ்திரங்கள் கூறுகின்றன. நீயாகத் தேடி அலைந்து அடைய வேண்டியதை நானாகத் தரும்போது ஏன் ஓடப் பார்க்கிறாய். நீ ஆண் பிள்ளைதானே'' என்று சிணுங்கினாள்.

அப்பொழுது வாயிற்படியிலிருந்து, ''அவர் ஆண்மகன் தான், நீ பெண்தானா என்று யோசித்துக் கொள்?'' என்று அரசியின் குரல் கேட்கவே, வெகுண்ட அந்த தலைவி,

''தமிழா! அதோ வந்திருக்கிறாள் உன் காதலி. அவளிடம் என்ன அழகைக் கண்டுவிட்டாய் நீ. பருவச் செழிப்புகள்கூட போதுமான அளவுக்கு இல்லையே. என்னிடம் எல்லாம் சுமை சுமையாய்

இருக்கின்றன. ஆண்டு அனுபவி'' என்று இளவழுதியிடம் கூறிவிட்டு, ''அரசி நீ போய்விடு. இவனைக் குருடாக்கி உன்னிடம் அனுப்புகிறேன். என்னைப் போன்ற அழகியை ரசிக்க முடியாதவனுக்கு கண் எதற்கு?'' என்று கூற, அரசியும் வாயிற்படியை நெருங்கி,

''அவரைத் தொட்டால் நீ இந்த இடத்திலிருந்து வெளியேற முடியாது'' என்று சினத்துடன் கூறினாள். ''என்னை யார் தடுக்க முடியும்?'' என்று சீறினாள் தலைவி.

பதிலுக்கு மெள்ள நகைத்த அரசி, ''உன் கணவன், அந்த காண்டாமிருகத்தை அழைத்து வந்திருக்கிறேன்'' என்று கூறி வாயால் உதடுகளைக் குவித்து பெரிதாக ஊதினாள். சில வினாடிகளில் மாடிப்படிகளில் தடதடவென்று யாரோ ஏறிவரும் சப்தம் கேட்டது.

அந்த சப்தம் கேட்டதும் உயரமும் பருமனுமான ஒரு ராட்சதன் போன்ற பயங்கர உருவம் அங்கு வந்து ''என்ன நடக்கிறது இங்கே?'' என்று பயங்கரமான குரலில் வினவியது.

''சரசம்'' என்று அலை அரசி மெள்ள நகைத்தாள்.

''யாரவன்? இப்பொழுதே அவன் கால்களைக் கிழித்துப் போடுகிறேன்'' என்று கூறி அறையில் தலைவியின் தழுவலில் திணறிக் கொண்டிருந்த இளவழுதியை கொலைப் பார்வையாகப் பார்த்தான், பிறகு இரண்டு அடி முன்னால் எடுத்து வைத்தான்.

அலை அரசி குறுக்கே வந்து, ''இதற்கு அவர் பொறுப்பாளியல்ல'' என்று இளவழுதியைக் காப்பாற்ற தீனமான குரலில் கூறினாள்.

''எனக்குத் தெரியாதா இது'' என்று சொன்ன அந்தப் பயங்கர உருவம், ''அட காமக்கள்ளி.... அவனை அனுப்பி விடு. இல்லாவிட்டால் உன்னையும் அவனையும் சேர்த்தே



பாலைவனத்தில் புதைத்து விடுவேன்'' என்று கூறி அறைக்குள் காலெடுத்து வைத்து இளவழுதியின் கையைப் பிடித்து இழுத்தான்.

விஷயம் தலைக்குமேல் போய்விட்டதால் இளவழுதி பேசவுமில்லை; எதிர்ப்பைக் காட்டவுமில்லை. ஆனால் தலைவி அந்த உருவத்தின்மீது பாய்ந்து கீழே தள்ளி, ''அவர் மீது கை வைத்ததற்கே உன்னை நான் கொன்று விடுவேன்'' என்று ஆர்ப்பரித்து இளவழுதியின் குறுவாளை எடுத்து, அதை கணவன் மார்பில் புதைக்க கையை ஓங்கினாள்.

''அவனைக் கொல்லாதே. அவன் உன் கணவன்'' என்று எச்சரித்தாள் அரசி.

''அதனாலென்ன?'' என்று தலைவி வினவினாள்.

''நீ விதவையாகி விடுவாய்'' என்று சுட்டிக்காட்டினாள் அலை அரசி.

''விதவையாக இல்லாமலிருந்து இத்தனை நாள் என்ன சுகத்தைக் கண்டுவிட்டேன். இவனிடம் அடியும் உதையும் பட்டதைத் தவிர'' என்று இகழ்ச்சியுடன் கேட்ட தலைவி கையை மேலும் ஓங்கினாள்.

அப்பொழுது எங்கிருந்தோ எழுந்த இளவழுதியின் கை அவள் கையைப் பிடித்து ஒரு முறுக்கு முறுக்கவே குறுவாள் கீழே விழுந்தது. அதைத் தன் கையை நீட்டி எடுத்துக்கொண்ட அந்த பயங்கர மனிதன், ''இப்பொழுது குறுவாள் என்னிடமிருக்கிறது. இன்றைக்கு எப்படியும் ஒரு பலி கொடுத்தாக வேண்டும். அது நீதான்'' என்று குறுவாளை தலைவியின் கழுத்தை நோக்கித் திருப்பினான்.

அப்பொழுது என்ன காரணத்தினாலோ அந்தக் குறுவாள் அவன் கையைவிட்டுப் பறந்தது. தூரத்திலிருந்து இடிஇடியென்று ஒரு நகைப்பொலி கேட்டது. சற்று எட்ட குறுவாளைக் கையிலேந்தி மதகுரு சிரிப்புடன் நின்றார்.

# 40.நான் மூன்றாமவன்

குறுவாளை இருமுறை திருப்பிப் பார்த்து, கூரும் பார்த்து, "நல்ல எஃகில் வடிக்கப்பட்டிருக்கிறது. பாரதத்தின் வடமேற்கு எல்லையில் செய்யப்பட்டது. அநேகமாக புருஷபுரத்து வில்லவன் சாதாரணமாக தங்கள் அம்புகளுக்குப் பொருந்தும் நுனி. அந்த அம்புகளின் எஃகு முனைகள் கிரேக்கர்களின் கேடயங்களையே உடைத்து விட்டதாகக் கேள்வி. இதைக் கொண்டு எதையும் உடைக்கலாம். இந்தா இளவழுதி! இதை நீயே வைத்துக்கொள். என் படைகளின் தலைவனாக நாளைக்கு அஹமதின் சிற்றப்பன் கோட்டைக்குப் போகும்போது இந்தக் கத்தி பயன்படும். அங்குள்ள கோட்டைக் கதவு மிகவும் பலமானது. இந்த எஃகின் முன் அது அநாயசமாக வளையும். அப்புறம் உன் யோச்னையின்படி கோட்டைக்குள் புகுந்து அந்த சிற்றப்பனை சிறைசெய். முடிந்தால் கட்டி இங்கு கொண்டு வா" என்று உத்தரவிட்டார்.

"எப்பொழுது கோட்டைக்குப் பயணம்?" என்று இளவழுதி கேட்டான்.

"இப்பொழுது நீ எனது படையைப் பார்க்கப் போகிறாய். அவற்றை அணிவகுக்கும் முறையை நீ நிர்ணயித்துக் கொண்ட பிறகு போகலாம். அநேகமாக நாளைக் காலையில் நீ பயணப்படலாம். வெய்யிலுக்கு முன் போய்விட்டால் கோட்டையைத் தாக்கவும் செய்யலாம். அதெல்லாம் எனக்கெதற்கு? உன் பொறுப்பு" என்ற மதகுரு அவனை அழைத்துக்கொண்டு கீழே சென்றார். மதகுரு வீட்டுக்கும் மலை அடிவாரத் தோப்புக்கும் இடையே இருந்த சதுக்கத்தில் ஏராளமான வீரர்கள் தங்கியிருந்தார்கள். சிலர் ஒட்டகத்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டும், சிலர் புரவியின் கழுத்தைக் கட்டிக் கொண்டும், சிலர் பரஸ்பரம் அணைத்துக் கொண்டும் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.



"இதுதான் உங்கள் படையா?"

"ஆம் இளவழுதி! அரபு நாட்டில் இப்பொழுது குறுநில மன்னர்கள் அதிகம். இவர்களெல்லாம் நாடோடிக் கும்பல். ஆனால் போரில் புறமுதுகு காட்டாதவர்கள். இந்த ஒட்டகப் பிரிவையும், புரவிப் பிரிவையும் தனித்தனியாகப் பிரித்துவிடு" என்றார் மதகுரு.

"காலாட்படை வேண்டும். வெறும் வாகனப்படை போதாது. ஒவ்வொரு போரிலும் வெற்றி காண்பது காலாட்படைதான்" என்றான் இளவழுதி.

தொடர்ந்து கேட்டான் :

"இவற்றில் எத்தனை ஒட்டகங்கள், எத்தனை புரவிகள் இருக்கின்றன?"

"ஆயிரம் புரவிகள், ஐநூறு ஒட்டகங்கள். ஆனால் புரவிகளை விட ஒட்டகங்கள் பாலைவனப் போருக்கு மிகவும் பயன்படும். கோட்டையைத் தாக்கும்போது நீயே புரிந்து கொள்வாய்" என்றார்.

உடனே சட்டென்று மடியிலிருந்து ஒரு குழலை எடுத்து ஊதினார். அதைக் கேட்ட மாத்திரத்தில் ஐநூறு ஒட்டகங்களும் ஒட்டு மொத்தமாக அணிவகுத்ததுபோல் எழுந்தன.

மதகுரு, "அதோ பார் இளவழுதி! என்ன ஒரே சீராக போகின்றன!" என்றார்.

"இவைகளுக்குத் தலைவன் உண்டா?" என்று இளவழுதி கேட்டான்.

"குல்சமத் என்று ஒருவன் இருக்கிறான். அவன் பாபிலோனியா விலிருந்து வந்தவன். மகா வீரன். பல போர்களில் வெற்றிவாகை சூடியிருக்கிறான். உன்னைப் போலவே சூட்சம புத்தியுள்ளவன்" என்றார் மதகுரு.

''அப்படியானால் நான் எதற்கு? அவனை வைத்துக் கொண்டே இந்தப் போரை நடத்திவிடலாமே!'' என்று இளவழுதி கேட்டான்.

''சூட்சும புத்தி உள்ளவன்தான். சமயத்துக்குத் தக்கபடி அணிவகுப்பை மாற்றிப் போரிட அவனால் முடியாது. தவிர, அதோ பார்'' என்று எட்ட ஓடிக் கொண்டிருந்த ஓர் உருவத்தைக் காட்டினார்.

''அதோ போகிறாள் சமதின் ஆசை நாயகி'' என வேகமாக ஓடிக் கொணிடிருந்த நாடோடிகள் தலைவியைக் காட்டினார். ''இவளும் சமதுமாகச் சேர்ந்தால் என்னைக் கொல்வதற்கு வழி தேடுவார்களே தவிர, எனக்கு நலன் தேடுவதற்கான எதையும் செய்ய மாட்டார்கள். அநேகமாக கோட்டையைப் பிடித்த உடன் சமதே முடிசூடிக் கொண்டாலும் நாம் வியப்படைய வேண்டியதில்லை. அநேகமாக அவன் ராஜாவாகவும், இவள் ராணியாகவும் கோட்டையில் இருந்து கொண்டு என்னைப் பிடிக்க ஆட்களை அனுப்புவார்கள். அப்படி நான் அகப்பட்டுக் கொண்டால் நீதான் என்னைக் காக்க வேண்டும். நீ நல்ல உள்ளம் உள்ளவன். தவிர என் மகளுக்குக் கணவன். உன்னைக் கொண்டு நிலையான, உறுதியான ஒரு அரசை நானே இந்தத் தெற்கு அரேபியாவில் ஏற்படுத்துகிறேன்'' என்றார் மதகுரு.

''சரி நீ போய் வா'' என்றும் சொன்னார்.

தனது புரவியைத் தட்டிவிட்ட இளவழுதி முன்னே சென்ற இரு படைப் பிரிவுகளுடன் சேர்ந்து கொண்டான். சிறிது நேரம் அதை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்ற இடத்திலேயே நின்ற மதகுரு, தானும் ஒரு புரவியை எடுத்துக் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தார். அவர் கோட்டையை அடைந்தபோது கோட்டையின் பிரதான வாயிலில் பெரும் பூட்டை தனது கத்தி கொண்டு உடைத்துக் கொண்டிருந்தான் இளவழுதி.



ஒட்டகங்கள் ஒருபுறமாகவும், புரவிகள் இன்னொரு புறமாகவும் படுத்திருந்தன. வீரர்கள் யாரையும் காணோம். அனைவரும் கோட்டையை அணைத்து பெரிதாக வளர்ந்திருந்த மரங்களின் கிளைகளில் உட்கார்ந்திருந்தார்கள்.

''இதென்ன இளவழுதி?'' என்று மதகுரு கேட்டார்.

''கோட்டையின் உள்ளே போக ஒரு வழி. நான் ஒரு சமிக்ஞை கொடுத்ததும் .... இவர்கள் எல்லோரும் கோட்டை மதில்மேல் குதித்து உள்ளே குதித்து விடுவார்கள்! அதற்குள் நானும் இந்தக் கதவின் மூலம் உள்ளே சென்று அவர்களைப் போருக்குத் தூண்டுவேன்'' என்று கூறி, கதவைப் பலமாகத் தன் காலால் ஓர் உதை உதைக்க, பூட்டு படீரெனப் பிளந்து, உடைந்து கதவுகளும் மடாரென்று திறந்தன.

இளவழுதி தன் புரவியை ஒரு தட்டு தட்டி கோட்டைக்குள் நுழைந்து விட்டான். உள்ளே கோட்டை வீரர்களுக்கும், இளவழுதியின் வீரர்களுக்கும் போர் மும்முரமாக மூண்டது. அப்பொழுது கோட்டைக்குள் நுழைந்த மதகுரு போர் முடியும் தருவாயிலிருப்பதை உணர்ந்தார். அந்த சமயத்தில் ஒரு பெரிய புரவியிலிருந்த ஒரு வீரனை இளவழுதி கீழே இழுத்து வீழ்த்த முயன்றான். அவன் வீழ்ந்ததும் தன் காலைத் தூக்கி அவன் மேல் வைக்கவும் முயன்றான்.

''இளவழுதி, விட்டுவிடு அவனை'' என்று மதகுரு கூறினார்.

அக்கம் பக்கத்திலிருந்த வீரர்களும் படைத்தலைவன் கைகால்களைப் பிடித்து இழுத்தார்கள்.

''என்ன இது?'' என்று சீறினான் இளவழுதி.

மதகுரு அருகில் வந்து, ''இவன்தான் சமத். இவன் தயவில்லாமல் இந்தப் பாலைவனத்தில் நாம் எதுவும் செய்ய முடியாது'' என்று கூறவே,

சமத் மீது வைக்க முயன்ற காலை எடுத்துக் கொண்டு, "நாம் பிறகு சந்திப்போம். இப்பொழுது போய்வாரும்" என்றான்.

சமத் திரும்பி கோட்டையை ஒட்டியிருந்த வேறு விடுதிக்குள் நுழைந்தான்.

இளவழுதியும் அவன் ஒட்டகவீரர்களில் சிலரும் அந்த விடுதிக்குள் நுழைந்தனர். உள்ளே விடுதி அரண்மனை போல் இருந்தது. அழகுமிக்க பல நாட்டுப் பெண்கள் பலப்பல அலங்காரங்களுடன் காணப்பட்டார்கள்.

அவர்கள் நடுவில் நாடோடித் தலைவியும் காணப்பட்டாள்.

"நீ எங்கு வந்தாய் இங்கே?" என்று இளவழுதி கேட்டான்.

"நான் சமதின் ராணி. வேறு எங்கே போவேன்?" என்றாள்.

வியப்பு என்பதற்கு ஒரு பொருள் உண்டானால் அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தான் இளவழுதி.

"அங்கு ஒரு புருஷன் வந்தானே அவன் யார்?" என்றும் கேட்டான் இளவழுதி.

"அவன் என் முதல் புருஷன். இவன் இரண்டாவது புருஷன்" என்று அவள் கூறினாள்.

"அப்பொழுது நான்...?" என்று கிண்டலாகக் கேட்டான்.

"மூன்றாவதாக நீங்கள் இருப்பதானால் எனக்கு ஆட்சேபணையில்லை" என்றவள் மேலும் அவனை நோக்கி, "வாருங்கள் உணவுச் சாலைக்குப் போவோம்" என்று உட்புறம் அழைத்துச் சென்றாள்.

உணவுச்சாலை மிகவும் பெரிதாக இருந்தது. ஏராளமான சமையல்காரர்கள் உணவு தயாரித்துக் கொண்டிருந்தார்கள்.



சமதின் மனைவி, இளவழுதியை உட்கார வைத்து முதலில் உணவு பரிமாறினாள். பிறகு சமதை அழைத்து வந்தாள். சமது உணவை ஒரு பெரிய ராட்சதன் போல் தன்னிரு கைகளாலும் எடுத்து எடுத்து அருந்தினான். இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் பக்கத்திலிருந்த நாடோடித் தலைவியையே சாப்பிட்டு விடுவான் போலிருந்ததால் அவளைக் கையைப் பிடித்து அழைத்து வந்து தன்னிடம் உட்கார வைத்துக் கொண்டான் இளவழுதி.

"என் மனைவியை நீ எப்படித் தொடலாம்?" என்று சமத் வினவினான்.

"நான் மூன்றாமவன். சற்று முன்பு அவளே சொன்னாளே, நீ கேட்கவில்லையா?" என்று நகைத்தான்.

அன்று பகல் முழுவதும் கோட்டைக்கு வெளியே தங்கள் படைகளை அணிவகுப்பதில் காலத்தைச் செலவிட்டான். அன்றிரவு படுக்கப் போகும்போது மதகுரு அவனை அழைத்து, "இளவழுதி! இன்று அந்தக் கொடியவள் உன்னை அழிக்கப் பார்த்தாலும் பார்ப்பாள். எச்சரிக்கையாயிரு" என்று சொன்னார்.

# 41. தந்திரமும் மந்திரமும்

மதகுரு சொன்னது சரியாகத்தானிருந்தது. அந்தக் கொடியவன் காட்டிய பஞ்சணையில் படுத்திருந்த இளவழுதியை நள்ளிரவில் யாரோ நாலைந்து பேர் தூக்கினார்கள். தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்கள். எத்தனை திமிறியும் இளவழுதியால் அவர்களது பிடியிலிருந்து விடுபட முடியவில்லை. அந்த சமயத்தில் அறைக்குள் வந்த சமத் இளவழுதியின் பஞ்சணையில் படுத்திருந்த நாடோடிகளின் தலைவியை நோக்கி, ''ஏனடி, நீ இங்கு எப்படி வந்தாய்?'' என்று கேட்டான்.

அவள் சமதின் அறையில் திறந்திருந்த கதவைக் காட்டி, ''அந்தக் கதவின் மூலம் வந்து, இந்தக் கதவைத் திறந்து கொண்டு வந்தேன்'' என்று சர்வசாதாரணமாகச் சொன்னாள்.

''அவனை எங்கு கொண்டு போகிறாய்?'' என்று கேட்டாள்.

''அஞ்சாதே! அவனைக் கொன்றாலும் சடலத்தைப் புதைக்க உன்னிடம் கொடுக்கிறேன்'' என்று சமத் ஆறுதலாகப் பதில் சொன்னான்.

அப்பொழுது மதகுரு உள்ளே வந்து, ''எனது படைத்தலைவன் மீது யார் கையை வைத்தாலும் அவனை வெட்டி கழுகுகளுக்குப் போட்டு, இந்தக் கோட்டையைப் பொசுக்கி விடுவேன்'' என்று கூறித் திரும்பிச் சென்று விட்டார்.

இளவழுதியும் தலைவியும் சமதும் ஒருவர்மீது ஒருவர் விவரம் புரியாத பார்வையைச் செலுத்திக் கொண்டு நின்றார்கள். அப்போது மதகுருவின் குரல் வெளியிலிருந்து கேட்டது. ''சமத், உனது முடிசூட்டு விழா நாளையே நடக்கும். நானே இருந்து நடத்தி வைக்கிறேன். அது நடந்தபின் உன் மகுடம் மட்டுமே எனக்குத் தேவை'' என்றார்.



''எதற்கு?'' என்றான் சமத்.

''இளவழுதிக்குக் கொடுக்க'' என்றார் மதகுரு.

''இளவழுதிக்கு எதற்கு மகுடம். ஆள்வதற்கு நாடு இருக்கிறதா?'' என்று சமத் கேட்டான்.

''அது அவனுக்கல்ல. சேர மன்னன் அதிராஜனாக ஒரு மகுடம் குறைகிறது. அதற்கு இதை அனுப்பி வைக்கிறேன்.''

''அப்படியானால் என்னுடைய மகுடாபிஷேகத்தை சிறிது தள்ளி வைத்துக் கொள்ளலாமே'' என்றான் சமத்.

''ஒருநாள் கூடத் தள்ள முடியாது. இளவழுதி நாளை சேர நாட்டுக்குப் பயணமாகிறான்'' என்றார் மதகுரு.

சமத் உள்ளே சென்று ஒரு மகுடத்தை எடுத்து வந்து, ''இதோ என் மகுடம். இதை எது வேண்டுமானாலும் செய்யுங்கள்'' என்று எரிச்சலுடன் கூறினான்.

''இதை யாருக்குச் சேர வேண்டுமோ அவனுக்குக் கொடுத்து விடுகிறேன். அதாவது, உமது அண்ணன் மகன் அஹமத் இதைத் தரித்து, உனக்கு பதில் இங்கு முடிசூடுவான். அவனுக்கு உரிய ஸ்தானத்தில் அமருவான்'' என்றார்.

''ஓஹோ! இதெல்லாம் உங்கள் சூழ்ச்சியா?'' என்று கேட்ட சமத் மதகுரு மேல் பாய்ந்து, இரண்டு வீரர்களை அழைத்து, ''இளவழுதி போகுமிடத்திற்கு இவரையும் இழுத்துச் செல்லுங்கள்'' என்று கூறிவிட்டு, பல வீரர்கள் பல்லக்குத் தூக்க, அதில் சவாரி செய்தபடியே போனான் சர்வ அலட்சியமாக.

இளவழுதி நள்ளிரவில் கண்விழித்தபோது அவனைச் சுற்றி இருபது வீரர்கள் நின்றிருந்தார்கள். ஒவ்வொருவர் முகத்திலும் கொலைக் குறி இருந்தது. மதகுரு அவன் தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தார். நாடோடிகளின் தலைவி கதீஜா அவன் காலை வருடிக் கொண்டிருந்தாள்.

மதகுரு சட்டென்று எழுந்து, "இளவழுதி, என்னுடன் வா, கதீஜா நீயும் வா" என்று இருவரையும் அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குச் சென்றார்.

"நீங்கள் இருவரும் இங்கே உறங்குங்கள்" என்று ஒரு பஞ்சணையைக் காட்டிவிட்டு, "நான் அவர்களை அனுப்பிவிட்டு வருகிறேன்" என்று வெளியே சென்றார்.

அவர் திரும்பியதுமே கதீஜா இளவழுதியை முரட்டுத் தனமாகக் கட்டிக் கொண்டு பஞ்சணையில் விழுந்தாள்.

வெளியே சென்ற மதகுரு அங்கிருந்த வீரர்களை நோக்கி, "நீங்கள் கோட்டைக்குச் செல்லுங்கள். நான் பின்னால் வருகிறேன். சமதிடம் எந்தவித கவலையும் வேண்டாமென்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள்" என்று உத்தரவிடும் தோரணையில் வெளியே கையை நீட்டினார்.

இருபது வீரர்களும் வாயிலை நோக்கிப் பறந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் புரவிகள் வேகமாகச் செல்லும் குளம்புகளின் ஒலி கேட்டு திருப்தி அடைந்த முகத்துடன் மதகுரு உள்ளே வந்தார். அவர் வந்தபோது பஞ்சணையில் விகார நிலையிலிருந்த இருவரும் பிரிய முற்பட்டார்கள்.

"வேண்டாம்... வேண்டாம். இதோ நான் போகிறேன். சமதுக்கு சமாதானம் சொல்ல வேண்டும்" என்றார்.

"நீங்கள் இருந்தால் பாதகமில்லை. சும்மா இருங்கள்" என்றாள் கதீஜா.

இளவழுதி சினத்துடன், "ஏனடி! உனக்கு வெட்கமில்லை?" என்று கேட்டான்.

"தமிழா, என் வெட்கத்தையெல்லாம் உன்னிடம் ஒப்படைத்து விட்டேனே. இல்லாவிட்டால் நாம் இப்படி இணைந்திருக்க முடியுமா?" என்று கூறி நகைத்தாள்.



பொழுது விடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கோட்டையில் சமத் தன்னுடைய வீரர்கள் மீது எரிந்து விழுந்து கொண்டிருந்தான். "என்னடா செய்தீர்கள் அவர்களை? நமது சிறையில் அடைத்தீர்களா?" என்று உக்கிரத்துடன் வினவினான்.

"இல்லை. மதகுரு தனது மாளிகைக்கு எங்களை அழைத்துப் போய்விட்டார்."

"அவர் அழைத்தால் உங்களை யார் போகச் சொன்னது?" என்று எரிந்து விழுந்தான்.

"நாங்கள் எதுவும் செய்ய முடியவில்லை. நமது சிறையை அணுகிக் கொண்டிருக்கையில் இளவழுதி திடீரெனத் திரும்பி எகளில் இருவரை வெட்டிவிட்டான். அடுத்து மதகுருவும் அவனும் புரவியில் வேகமாக விரைந்தார்கள். நாங்கள் அவர்கள் இருவரையும் வெட்டிவிட வாட்களை ஓங்கினோம். மதகுரு ஏதோ கையை அசைத்தார். வாட்கள் இறங்கவே மறுத்தன. கைகளும் செயலற்றுவிட்டன. எங்களுக்கு நேர்முகமான சாதாரண போர் தெரியும். மந்திரப்போர் தெரியாது. போர்த் தந்திரம் என்பது உண்டு; போர் மந்திரம் என்பது இது வரையில் வரலாற்றில் இல்லாத புதுமை" என்றான் அந்த வீரர்களின் தலைவன்.

"அப்புறம் எங்கே போனார் மதகுரு?" என்று சமத் கேட்டான்.

"எங்கும் போகவில்லை. மதகுருவும் இளவழுதியும் கதீஜாவும் எல்லாரும் மதகுரு மாளிகையில்தான் இருக்கிறார்கள்" என்று வீரன் சொன்னான்.

"அப்படியானால் போய் அவர்களைப் பிடித்து இழுத்து வாருங்கள். இல்லையேல் அவர்களை சிறையில் அடைத்துவிட்டு வந்து நல்ல செய்தி சொல்லுங்கள்!" சமத் உத்தரவிட்டான்.

வீரர்களின் தலைவன் மற்ற வீரர்களை அழைத்து மதகுருவின் மாளிகையை நோக்கி மற்ற வீரர்களுடன் பறந்தான்.

மாளிகையின் வாயிலிலேயே அவனைச் சந்தித்த மதகுரு அவனையும் பார்த்தார்; அவனுக்குப் பின்னால் நின்றிருந்த வீரர்களையும் மிக இகழ்ச்சியுடன் பார்த்தார்.

''உங்களை சிறையில் அடைத்து வர எஜமான் உத்தரவு!''

''எப்படி அடைப்பாய்?'' என்று மதகுரு கேட்டார்.

''நீங்களாக வந்தால் நல்லது. இல்லையேல்... நாங்கள் இழுத்துப் போவோம்'' என்ற வீரன், ''மற்ற இருவரும் எங்கே?'' என்று வினவினான்.

''உள்ளே இருக்கிறார்கள்'' என்றார் மதகுரு.

இரண்டு மூன்று வீரர்களுடன் உள்ளே நுழைந்த வீரர்களின் தலைவன் கதீஜாவையும், இளவழுதியையும் இழுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

மதகுரு அவர்கள் இருவர் தலைமீதும் கையை வைத்து, ''சிறைக்குச் செல்லுங்கள்'' என்று கூற இருவரும் அங்கேயே மறைந்துவிட்டனர்.

''அவர்கள் எங்கே?'' என்று வீரர்களின் தலைவன் மறுபடியும் வினா தொடுத்தான்.

''உங்களது சிறையில் இருக்கிறார்கள். இதோ நானும் போகிறேன். இந்த நல்ல செய்தியை சமதிடம் சொல்லுங்கள்'' என்று கூறி, கைகளை உயரே தூக்கிக் கொண்டு வெளியே ஓடினார்.

வீரர்களின் தலைவன் அவர் வெகு தூரத்தில் ஓடுவதைக் கண்டு, தனது வீரர்களை தன்னைப் பின்பற்றச் சொல்லிவிட்டு அவரைப் பின்தொடர்ந்தான். ஆனால் மதகுருவை அவனால் பிடிக்க முடியவில்லை. மதகுரு ஓடிக்கொண்டிருக்கையில் திடீரென தரை பிளந்து அவரை உள்ளே இழுத்துக் கொண்டது.



அப்புறம் வீரர்களின் தலைவன் அந்த இடத்தைச் சேர்ந்து எட்டிப்பார்த்து, ''நமது பாதாளச் சிறையில் மூவருமே இருக்கிறார்கள். வாருங்கள் போகலாம்'' என்று கோட்டையை நோக்கிப் பறந்தான்.

அவன் சொன்ன செய்தியைக் கேட்ட சமத், ''அவர் ஓடிய வேகத்தில் பாதாளச் சிறையின் பொறி நழுவி இருக்க வேண்டும். எதற்கும் நீ போய் அதை மீண்டும் நல்ல பூட்டு போட்டு பூட்டி வா'' என்று கூற, வீரன் அந்த இடத்துக்கு விரைந்தான்.

போகும்போது கோட்டை கதவின் பெரிய பூட்டையும் எடுத்துச் சென்றான். 'பொறி' விலகிய இடத்துக்கு வந்ததும் பொறிக்கு பூட்டைப்போட்டு, ''மதகுரு!'' என்று குரல் கொடுத்தான்.

''யாரடா அது?'' என்று மதகுரு குரல் கொடுத்தார்.

''நான் தான் உங்களை சிறை செய்ய வந்தவன் நவாபின் உத்தரவின் பேரில்'' என்று சொன்னான்.

மதகுரு சிறைக்குள்ளிருந்தே இகழ்ச்சியாக நகைத்தார்.

''ஓஹோ! சமத் நவாபாகி விட்டாரோ!'' என்று இகழ்ச்சி குரலில் தெரிய கேட்டார் மதகுரு.

அப்போது பொறியின் மூலம் மேலே பார்க்க, சமத் மகுடம் தரித்து நின்றிருந்தான். அந்தக் காட்சி அவருக்கு வெறுப்பைத் தந்திருக்க வேண்டும்.

''பூட்டைத் திற'' என்று சமதைப் பார்த்து உத்தரவிட்டார்.

''திறக்காவிட்டால்....'' என்று சமத் கேட்டான். ''இன்னும் இருபது நாளைக்கு நீங்கள் இந்தச் சிறையிலிருந்து அகல முடியாது'' என்றும் கூறினான்.

மதகுரு பதிலுக்கு சிறைக்கம்பியின் மூலம் தன் கையை நீட்டி பூட்டின் மேல் கைவைக்க பூட்டு பெருத்த சப்தத்துடன் படாரென்று

வெடித்தது. சமதின் தலையிலிருந்த மகுடம் இறங்கி வந்து மதகுருவின் கையில் உட்கார்ந்து கொண்டது.

அடுத்து அந்தப் பொறியும் நகர்ந்தது. மகுடத்துடன் கூடிய கையை உள்ளே இழுத்துக் கொண்டார் மதகுரு. பின் சமதை நோக்கி,

''நவாப், நாளை காலை இந்த மகுடம் சேர நாடு போகிறது. நீ கடற்கரைக்கு வந்து சேர்'' என்று கூறி விட்டு கதவை மூடிவிட்டார்.

ஆனால் மறுநாள் காலை பெரும் ஏமாற்றம் காத்திருந்தது நவாப்புக்கு.



# 42. கண்ணுக்குத் தெரியாமல் நடந்த கதை !

மறுநாள் காலை நவாப் சமத் கடற்கரைக்கு வந்தபோது அங்கு மதகுரு தவிர மற்றெல்லோரும் இருந்தார்கள். இளவழுதி, அலைஅரசி, கதீஜா இவர்களும் இன்னும் பத்து மாலுமிகளும் காத்திருந்தார்கள். அப்பொழுது சமத் கேட்டான் இளவழுதியை நோக்கி.

''மதகுரு எங்கே?'' என்று.

''கோட்டைக்குப் போயிருக்கிறார்.''

''எந்தக் கோட்டைக்கு?''

''அதாவது அஹமதின் கோட்டைக்கு.''

''அங்கு எதற்கு?''

''அஹமதுக்கு முடிசூட்ட.''

''என்று முடிசூட்டப் போகிறார்கள்?'' என்று சமத் வினவினான். ''அஹமத் இப்பொழுது எங்கே?'' என்றும் கேட்டான்.

அப்பொழுது அவன் பின்னாலிருந்து மதகுருவின் குரல் ஒலித்தது.

''சேர நாட்டில் இருக்கிறான். நாளைக் காலையில் இங்கு வர ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளை உச்சி வேளையில் அவனுக்குச் சொந்தமான அரியணையில் அவன் அமருவான். நீயும் வந்து சேர். அவன் தலையில் நீயே மகுடத்தைச் சூட்டலாம்'' என்று சொன்ன மதகுரு,

''நாங்கள் மரக்கலத்துக்குப் போகிறோம். நீ கோட்டைக்குப் போய்ச்சேர். நாளைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய். நாளை

நான் அஹமதுடன் வந்து சேருகிறேன்'' என்று கூறி அங்கிருந்த படகொன்றில் இளவழுதி, அலை அரசி இருவரையும் ஏறச்சொல்லி, தானும் ஏறிக்கொண்டு ''இளவழுதி! துடுப்புகளைத் துழாவு. நான் போகவேண்டிய மரக்கலம் அதோ நிற்கிறது'' என்று எட்ட இருந்த ஒரு மரக்கலத்தைக் காட்டினார் மதகுரு.

இளவழுதி துடுப்புகளை வேகமாகத் துழாவி வெகு சீக்கிரம் மரக்கலத்தினருகே படகைக் கொண்டு வந்தான். மரக்கலத்திற்குப் பக்கத்தில் தோன்றிய நூலேணியில் முதலில் அரசியை ஏறச் சொல்லிவிட்டு தானும் ஏறி, ''மதகுரு, நீங்களும் வாருங்கள்'' என்று அழைக்க, மதகுருவும் நூலேணியில் காலை வைத்து ஏறினார்.

அடுத்த ஒரு நாழிகையில் மரக்கலம் பாய்விரித்து தென்மேற்கு நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அப்போது, ''இளவழுதி, பாய்களை அவிழ்த்துவிடு'' என்றார் மதகுரு.

இந்த புது உத்தரவு இளவழுதியைத் தூக்கிப்போடவே, ''என்ன மதகுரு, ஒரேயடியாக திட்டத்தை மாற்றுகிறீர்களே! பாய்களை இப்போது அவிழ்த்துவிட்டு அடுத்த இரண்டு பாய்களை அவிழ்த்தால் மரக்கலம் திரும்பவும் பழையபடி கரைக்கல்லவா போய்ச் சேரும்?'' என்று ஆட்சேபணை கிளப்பினான்.

''அதுதான் உத்தேசம்.''

''அப்போது சேரநாட்டுக்கு?''

''இன்னும் நான்கு நாட்கள் கழித்து புறப்படுகிறோம். அதற்குள் அங்கும் உன்னை வரவேற்க ஏற்பாடுகள் சித்தமாயிருக்கும்.''

''மதகுரு சில வினாடிகள் கண்களை மூடி மவுனமாய் இருந்தார். பிறகு, ''சேரநாட்டு மன்னன் வடபுல பயணத்துக்கு ஏற்பாடு செய்து படைகளை அடுத்த பவுர்ணமியன்று வடக்கை நோக்கி நகர்த்தத் திட்டமிட்டிருக்கிறான். இதற்குக் கேரளத்து பெரிய மந்திரவாதியே நாளும் நேரமும் நிச்சயித்திருக்கிறார். ஆகையால்



நீ சீக்கிரம் அங்கு போகாவிட்டால் வடபுல யாத்திரை பயனளிக்காது. கவலைப்படாதே சமயத்தில் உன்னை அங்கே சேர்த்து விடுகிறேன். நாளை அஹமத் வந்ததும் அவனுக்கு முடிசூட்டிவிட்டு நாலுநாள் கழித்து பஞ்சமி திதியன்று நீயும் அவனும் சேரநாடு சென்றால் படையெடுப்பு முறைகளை நீ நிர்ணயிக்க அவகாசமிருக்கும். ஆனால் இந்தப் படையெடுப்பில் உங்களுக்கு அதிக கஷ்டங்கள் கிடையாது. ஏனென்றால் சேரநாட்டிலிருந்து வடபுலப் பாதையில் இடையே உள்ள பலமான நாடு கலிங்கம் ஒன்றுதான். அங்கு அரசாளும் வஜ்ரஹஸ்தன் ஒருவனிடம் போரிடுவது தான் சிறிது கஷ்டம். அவனைத் தாண்டிவிட்டால் உங்களை எதிர்ப்பவர் யாரும் கிடையாது. அப்படியே இருந்தாலும் ஓரிரு சிற்றரசர்கள் சிறு படையுடன் இருப்பார்கள். அவர்களை முறியடித்துச் செல்வது உனக்கு ஒரு பெரிய காரியமல்ல. இமயவெற்றி சுலபத்தில் முடியும். ஏதாவது உங்களுக்கு எதிர்பாராத தடை ஏற்பட்டால் நான் அதை நிவர்த்திக்கிறேன். இங்கிருந்தே உங்கள் முன்னேற்றத்தில் ஒவ்வொரு அசைவையும் கவனிப்பேன்'' என்றார் மதகுரு.

''அது எப்படி முடியும்?'' என்று சந்தேகக் குரலில் இளவழுதி கேட்டான்.

''இப்படி வா'' என்று அவனை பக்கத்திலிருந்த அறைக்குள் அழைத்துச் சென்று அந்த அறையின் பக்கப் பலகையொன்றில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடியைக் காட்டி, ''இதைப் பார்'' என்று கூறி, ஏதோ வாயால் விடுவிடுவென்று சிறிதும் அர்த்தம் புரியாத சொற்களை முணுமுணுத்தார். அடுத்த விநாடி அந்தக் கண்ணாடிக்குள் ஒரு பெரும் பாதையொன்று தெரிந்தது. அதில் ரதங்கள் பலவும், ஒரு சிறு புரவிப்படையும் விரைந்து கொண்டிருந்தன. அடுத்து அலங்கரிக்கப்பட்ட இரு பட்டத்து யானைகள் சென்றன. கடைசியாக யானை ஒன்றின்மேல் அமர்ந்து பெரும் சங்கை ஊதிக்கொண்டு குட்டுவன் சென்றான். இந்த

ஊர்வலம் நேராக ஒரு பந்தலின் முகப்பை அடைந்தது. அடுத்து, பந்தல் உள்ளும் ஒரு காட்சி விரிந்தது.

''ஆச்சரியம்! ஆச்சரியம்! இது தொண்டியின் அரண்மனை முகப்பல்லவா?'' என்று கூறி திடீரென்று தலை வணங்கினான். அந்தப் பந்தலின் உட்புறத்தில் ஒரு கோடியில் நெடுஞ்சேரலாதன் பூரண போருடை அணிந்து உலாவுவது மதகுருவின் கண்களுக்குத் தெரிய, இளவழுதி தலை வணங்கிய காரணத்தை அவர் புரிந்து கொண்டார்.

இளவழுதி வணங்கிய தலையை திடீரென்று தூக்கி ''மதகுரு, மதகுரு'' என்று கூவினான்.

தூரத்தில் ஒரு படகு. அதில் அஹமத், மஸ்தானா இவர்களைத் தவிர கடலரசியும் இருந்தாள்.

''அவர்கள் இங்கே வரட்டும். உன் சந்தேகத்தைத் தெளிய வைக்கிறேன்'' என்றார் மதகுரு.

படகும் விரைவில் வந்து அஹமதும் பெண்களும் மரக்கலத்துக்குள் வந்து சேர்ந்ததும் மதகுரு அவர்களைத் தனது கண்ணாடியிருந்த அறையில் தங்கச் சொன்னார். இளவழுதியும் அதிலே தங்கும்படி உத்தரவிட்டார்.

இளவழுதி பதிலேதும் சொல்லாமல் சென்று அங்கே தங்கினான். அன்றிரவு விசித்திர நிகழ்ச்சிகள் ஏற்பட்டன.

அன்று நள்ளிரவில் ஏதேதோ விபரீதமான ஒலிகள் பல கேட்டன. அஹமத் மெய்சிலிர்த்து சிறு அச்சமும் அடைந்து, ''மஸ்தானா! இது என்ன மனித ஒலிகளாகத் தெரியவில்லையே?'' என்றான்.

அப்பொழுது கூரைப் பக்கத்திலிருந்து மதகுருவின் சொற்கள் காதில் விழுந்தன: ''அஹமத்! இவர்கள் நமது ஊழியர்கள். உனது ஆணை என்னவென்று கேட்கிறார்கள்? என்ன வேண்டுமானாலும் சொல்; நடக்கும்'' என்றார்.



''ஊழியர்களா? யாரையும் காணோமே!'' என்று அஹமத் கேட்டான்.

''கண்ணுக்குத் தெரியமாட்டார்கள். ஆணைக்குக் கட்டுப்படுவார்கள். உத்தரவிடு. அவர்களிடம் பழகிக் கொள்ள உனக்கு இது ஒரு சந்தர்ப்பம். உனது கைகளில் ஒன்றை மேற்புறமாக நீட்டு'' என்றார்.

அஹமத் அப்படியே நீட்ட அந்தக் கையை யாரோ இறுகப் பற்றினார்கள். அஹமதின் எலும்புகள் முறிந்து விடும்போல் இருந்தன.

''அய்யோ!'' என்று கூவினான் அஹமத்.

அப்போது மதகுரு நகைத்தார் எங்கிருந்தோ. ''ஊழியர்களிடம் அச்சப்படுவது நமது பலவீனத்தைக் குறிக்கும். ஆகவே தைரியமாகக் கட்டளையிடு.''

அஹமத் சிறிது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, ''இந்தக் கட்டிலோடு என்னையும் மஸ்தானாவையும் தூக்கிக்கொண்டு நமது கோட்டையில் வைத்து விடுங்கள். பிறகு மாமாவையும் கொண்டு வந்து எங்களிடம் சேர்ப்பித்து விடுங்கள்'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டில் மேலே உயர ஆரம்பித்தது. பிறகு அது சென்றவிடமெல்லாம் கதவுகள் திறந்தன. கதவுகளுக்கும் வெளியே வந்து, ஆகாயத்தில் பறக்கத் தொடங்கி வெகு வேகமாக கோட்டைக்கு வந்து தளத்தில் இறங்கியது.

அடுத்த வினாடி மதகுரு கட்டிலுக்குப் பக்கத்தில் நின்று அஹமதை தன் கையால் தட்டிக் கொடுத்தார்.

''அஞ்சாதே! இன்று காலை உனக்கு மகுடாபிஷேகம் என்பதை நினைவில் வைத்துக்கொள். இங்கு நான் சீக்கிரம் இளவழுதியை எதிர்பார்க்கிறேன்'' என்றார்.

அடுத்த வினாடி அஹமத் நாலைந்து முரட்டுக் காரங்களால் தூக்கப்பட்டு கீழே நீராட்ட அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு நீராட்டமும் பலமாக நடந்தது. பிறகு அலங்கார உடையணிவித்து அவனை வேறொரு அறைக்கு அழைத்துச் சென்றார்கள். இத்தனைக்கும் நீராட்டியது யார்? ஆடையணிவித்தது யார்? - என்று யாருமே கண்ணுக்குப் புலப்படவில்லை, ஏதோ பிசாசுகள் மதகுருவின் கைவசத்தில் இருப்பதாக அஹமத் தீர்மானித்துக் கொண்டான். மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

மதகுரு உத்தரவின்படி மஸ்தானாவையும் அவனையும் மஞ்சத்தில் உட்கார வைத்தபோதும் மகுடங்களை அணிவித்தபோதும் அவன் அசையாமலே உட்கார்ந்திருந்தான். மஸ்தானா மெள்ள அசைந்து, ''இதெல்லாம் அப்பாவின் உத்தரவுப்படி நடக்கின்றன. நீங்கள் எதையும் கண்டு கொள்ளாதீர்கள்'' என்றாள்.

''அப்படியானால் உன் அப்பாவுக்கு நான் அடிமையா? அவர் தன் இஷ்டப்படி என்னை ஆட்டுவிக்க?'' என்று உஷ்ணத்துடன் கேட்டான்.

''அடிமையென்பதில்லை. தற்சமயம் அவர் இஷ்டப்படி நடப்பது நமக்கு எல்லாவிதத்திலும் லாபம்'' என்றாள் மஸ்தானா.

''எந்த விதத்தில்?'' என்று அஹமத் கேட்டான்.

''உங்களுக்கு உங்களின் அரசு கிடைத்துவிட்டது'' என்று அவள் வாசகத்தை முடிக்குமுன்,

''உனக்கும் காதலன் கிடைத்துவிட்டான்'' என்றான் அஹமத்.

''என்ன உளறுகிறீர்கள்? நீங்கள் கணவன் இருக்க எனக்கு காதலன் எதற்கு?'' என்று அவள் கேட்டாள் சலிப்புடன்.



''அவரவர் தேவையைப் பொருத்தது'' என்று நகைத்தான் அஹமத்.

''தேவையா?'' என்று அவள் வியப்புடன் வினவினாள்.

''ஆம்! ஒரு கணவன் போதுமென்ற திருப்தி கொள்பவர்கள் இருக்கிறார்கள். போதாது என்றிருப்பவர்களும் இருக்கிறார்களல்லவா?'' என்று அவன் கேட்டான்.

''என் தந்தை வீட்டிலிருக்கும்போது என்னைப் பார்த்து இப்படிக் கேட்க உங்களுக்கு என்ன துணிச்சல்?'' என்று கேட்டாள் கோபத்துடன்.

''உன் தந்தை என்னை என்ன செய்து விடுவார்?'' என்று அவனும் கோபத்துடன் வினவினான்.

''சமயத்தில் புரிந்து கொள்வாய்?'' என்று மதகுருவின் குரல் அந்தரத்தில் ஒலித்தது.

இதைக் கேட்டதும் அஹமத் சிறிது ஆத்திரமடைந்து ''வா மஸ்தானா, போவோம்'' என்றான்.

''எங்கே?''

''நாம் மௌலி புனைந்த இடிடத்திற்குத்தான். நமது கோட்டையை - சிற்றரசை இத்தனை நாள் பிறர் ஆண்டது போதும். இனி நமே ஆள்வோம்; கிளம்பு'' என்றான்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டே மதகுரு ஒரு மூலையில் நின்றிருந்தார்.

''பெண்ணே, உன் புருஷனுக்கு இவ்வளவு சாமர்த்தியம் இருக்குமானால் உங்கள் இஷ்டத்தை நான் தடை செய்யவில்லை. உதவி வேண்டுமானால் கேளுங்கள். முடிந்ததை செய்கிறேன்'' என்று மதகுரு சற்று இளக்காரமாகப் பேசினார்.

''சரி மாமா, உதவி தேவையானால் கேட்கிறோம். கை கால்கள் சரியாக இருக்கும்வரை யார் உதவியும் வேண்டாம்'' என்ற அஹமத், ''வா மஸ்தானா'' என்று அவளையும் அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

மதகுரு பூனைபோல் மெதுவாகப் பின்தொடர்ந்தார். அஹமத் வாயிலில் வந்ததும் இரு புரவிகளை அழைத்து வரச்சொல்லி மஸ்தானாவை ஒரு புரவியில் ஏறச்சொல்லி இன்னொரு புரவியில் தான் ஏறி, புரவியை வெகுவேகமாக மாமாவின் பழைய மூன்றடுக்கு வீட்டுக்கு விரட்டினான். அங்கு போனதும் பயணத்தால் பெருமூச்சு வாங்க ஒரு மரத்தடியில் படுத்தான். சிறிது நேரத்திற்குள் மஸ்தானா வந்து பாலைவனச்சுனையில் ஒரு சிறு துணியை நனைத்துப் பிழிந்து அவன் முகத்தில் ஒற்றினாள்.

பிறகு எழுந்திருந்து, ''நான் போகிறேன். நீங்கள் கோட்டைக்கு வந்து சேருங்கள். இருவரும் ஆகாரம் உண்டு, இன்றே ராஜ்யபாரம் துவங்குவோம்'' என்று கூறிவிட்டு தனது புரவியின் மீது வேகமாகச் சென்று விட்டாள்.

அன்று பகல் கோட்டையில் அஹமதின் ராஜ்யபாரம் துவங்கியது. மதகுருவே முன்னின்று மகுடாபிஷேகத்தை நடத்தி ஆட்சியையும் துவக்கி வைத்தார்.

அப்போது உள்ளே வந்த இளவழுதியை நோக்கி ''அஹமத், இதோ உன்னுடைய கடல், நிலப்படைகளுக்கான தளபதி வருகிறார்'' என்று கூற, இளவழுதி மண்டியிட்டு அஹமதை வணங்கி எழுந்து, ''மன்னவர் வாழ்க'' என்றான். அப்பொழுது அஹமத் மஸ்தானாவைப் பார்த்து நகைத்தான்.

இளவழுதி தனது தலையை ஒருபுறம் சாய்த்து மஸ்தானாவுக்கும் தனது வணக்கத்தை தெரிவித்தான்.

''இப்பொழுது எல்லாம் சரியாகிவிட்டது'' என்றார் மதகுரு. அப்போது அஹமதை நோக்கி, ''நீ நல்ல அரசனாக அரசாள



வேண்டுமென்றால் அல்ப சந்தோஷங்களை விட்டுவிடு'' என்றார்.

''சந்தேகத்துக்கு இடமில்லை'' என்றான் இளவழுதி.

''சந்தோஷம்'' என்றான் அஹமத்.

எல்லாம் ஓர் அமைதிக்கு வந்துவிட்டதை உணர்ந்த மதகுரு, ''அப்பாடா'' என்று பெருமூச்சு விட்டார்.

''இளவழுதி, இனி சேரநாடு திரும்ப வேண்டாம். இங்கேயே அவருக்கு ராஜ்யம் தருகிறேன். ஆகையால் அரேபியாவை விட்டுப்போக அவசியமில்லை'' என்றார்

''உழைக்கிறபடி உழைத்தால் பாலைவனத்தையும் பசுஞ் சோலையாக்கலாம். இல்லாவிட்டால் பசுஞ் சோலையையும் பாலைவனமாக்கலாம்'' என்று தனது அபிப்பிராயத்தையும் கூறினார்.

''இந்த மாதத்திற்குள் சகலமும் சரியாகிவிடும்'' என்றும் உறுதி கூறினார்.

அப்பொழுது இளவழுதி, ''மதகுரு, என்னால் சேர நாட்டைவிட்டு இருக்க முடியாது. ஆகையால் அங்கு என்னைக் கொண்டுபோய்ச் சேர்க்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான்.

# 43. மாலைத் தீவின் கொள்ளைக் கப்பல்

மதகுரு சிந்தித்தார். அவர் முகத்தில் குழப்பம் தெரிந்தது. அதை கவனிக்கவே செய்த இளவழுதி, "மதகுரு! நாட்டுப்பற்று, சொந்த மண் என்னைப் பற்றி இழுக்கின்றன. நான் போய்த்தான் ஆகவேண்டும்" என்றான்.

"சரி சரி, போய் வா. உன்னை இங்கு நிறுத்த முடியாது. உன் எண்ணங்கள் எல்லாமே நிறைவேறும். போய் வா வீரனே. போய் வா. உன் மன்னனுக்கு என் ஆசிகளைச் சொல். சேரன் அதிராஜனாவதில் எனக்கும் பங்குண்டு என்பதை நினைவுபடுத்தி ஒருமுறை இங்கு வந்து போகச் சொல்" என்று சிறிது அழுத்தியும் சொன்னார் அதிகாரத் தோரணையில்.

அடுத்து இளவழுதி, "அஹமத், எனக்கு ஒரு புரவி கொடு" என்று யாசிப்பதுபோல் இரு கைகளையும் நீட்டினான்.

"நீ ஒரு பெரிய புரவி வீரன்தான் என்றாலும் புரவி மரக்கலமாகாது. கடலில் புரவியில் அமர்ந்து எப்படிச் செல்ல உத்தேசம்?" என்று வினவினான் அஹமத்.

"அஹமத், புரவி மரக்கலமாகாது என்று எனக்குத் தெரியும். வேடிக்கை வேண்டாம். எனக்கு இங்கே கொஞ்சம் வேலையிருக்கிறது. அதை முடித்துவிட்டு வருகிறேன். அதற்குள் நீ எனக்கொரு மரக்கலத்துக்கு ஏற்பாடு செய்; மாலை வருகிறேன்" என்று கூறிவிட்டு புரவி மீதேறி பஸ்ராவின் பாலைவனச் சோலைக்கு விரட்டினான்.

"இவன் எங்கு போகிறான்?" என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்ட அஹமத், "மதகுரு, அப்படித்தானே?" என்றும் வினவினான்.

மதகுரு நகைத்தார். "அப்படியேதான். மாலையில் பார் தெரியும்" என்றார்.



மாலையில் இளவழுதி வரத்தான் செய்தான். ஆனால் தனியாக அல்ல. அலை அரசியும் கடல் அரசியும் அவனுடன் வந்தார்கள். அவர்கள் இருவரையும் ஒரு படகில் ஏற்றிக்கொண்டு துடுப்புகளைத் துழாவிச்சென்ற இளவழுதி ஒருமுறை திரும்பி அஹமதை நோக்கி கையை ஓங்கி ஏதோ செய்தான். அஹமதும் தனது இரு கைகளை உயர்த்தி செய்கை செய்தான். அந்த இரு கைகளிலிருந்தும் இரண்டு புறாக்கள் பறந்து வந்து இளவழுதியின் தோள்கள் மீது அமர்ந்தன. அப்புறாக்களை எடுத்தெறிய முயன்ற இளவழுதியை அலை அரசி தடுத்தாள்.

"அந்த இரண்டிலும் நாம் போக வேண்டிய வழி, தொட வேண்டிய துறைமுகங்கள், எடுத்துக் கொள்ள வேண்டிய எச்சரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன" என்றாள் அலை அரசி.

"வழி தெரியாதா? வழி காட்ட என்ன இருக்கிறது? நாம் ஏற்கனவே வந்த வழியில்தானே திரும்ப வேண்டும்?" என்றான் இளவழுதி.

"அப்படியில்லை இளவழுதி. வந்தது நமது முயற்சியாலோ சாமர்த்தியத்தாலோ இல்லை. மதகுருதான் நம்மை அசுர வேகத்தில் வரவழைத்தார். நாம் இப்பொழுது இயற்கையின் விதிப்படி செல்லவேண்டியிருக்கும். அப்படிச் சென்றால் அடுத்த இரண்டு வாரங்களுக்கு நாம் சேரநாட்டை அடையமுடியாது. ஆகவே துரிதமான பயணத்துக்கு வழி ஏதாவது இருந்தால் புறாவின் அடிச்சிறகில் குறிப்பு ஓலைகள் இருக்கும். மதகுரு காரணமில்லாமல் புறாவை அஹமதிடம் கொடுத்திருக்கமாட்டார்" என்றாள் கடல் அரசி. கூடவே அவனுக்கருகில் வந்து அந்த இரண்டு புறாக்களின் அடிச்சிறகிலிருந்து இரண்டு செய்திச் சுருள்களை எடுத்து இளவழுதியிடம் நீட்டினாள்.

அவற்றைப் பிரித்துப் பார்த்த இளவழுதி பெரும் பிரமிப்புக்கு உள்ளானான். அப்படியொரு செய்தி அதில் இருந்தது.

அன்றிரவு மரக்கலத்தின் படுக்கையறையில் அந்தச் செய்திச் சுருள்களை விரித்துப் படித்த இளவழுதி, "இதென்ன சுத்த பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது. புறாக்கள் மரக்கலங்களை எப்படி இழுத்துச் செல்லும்? புறாக்களின் கால்களில் மெல்லிய பட்டுக் கயிற்றைக் கட்டி அவற்றை பாய்மரத் தூண்களில் அல்லவா பிணைத்து விடும்படியாக எழுதியிருக்கிறார்?" என்று சற்று இளக்காரமாகவே பேசினான்.

"மதகுருவையோ, அவருடைய நடவடிக்கைகளையோ எடைபோட நாம் யார்?" என்று பரிந்து பேசினாள் அலை அரசி.

"உண்மை, உண்மை" என்ற இளவழுதி தன் கையிலிருந்த பட்டுக் கயிற்றின் நுனியை மரக்கலத் தூண்களில் பிணைத்தான். அடுத்த விநாடி மரக்கலம் அலைகளை மீறி காற்றெனப் பறந்தது.

அதைக் கண்ட மூவருமே பிரமித்தார்கள். அப்போது அலை அரசி ஒரு யோசனை சொன்னாள்: "இப்படி மரக்கலத்தை இழுப்பதைவிட நமது கைகால்களினால் அந்தக் கயிற்றை கட்டினால் நாமே வேகமாகப் போய்ச் சேர்ந்து விடலாமே" என்றாள்.

"உசிதமல்ல" என்றான் இளவழுதி.

"எது?" இது அலைஅரசியின் கேள்வி.

"இந்த வேகத்தில் நமது கால்கள் தனித்தனியாகப் பிய்த்துக் கொள்ளுமே. மரக்கலத் தூணில் கட்டியதுதான் சரி" என்றான் இளவழுதி. "கைகால்கள் இல்லாத மனைவியை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?"

"எதுவும் செய்ய உங்களால் முடியும்" என்றாள் அலை அரசி.

அதை நிரூபிப்பவன் போல் அலை அரசியின் மீது புரண்டான் இளவழுதி.



அப்பொழுது அதே அறையில் மூலையில் படுத்திருந்த கடல் அரசி, "அதோ பாருங்கள், நம்மைக் கவ்வ ஒரு யமன் வருகிறது" என்று சாளரத்து வழியே கையை நீட்டினாள்.

அதைப் பார்த்த அலை அரசியும்கூட, "அட எழவே! இவனிடமா சிக்கிக் கொண்டோம். நாம் தொண்டி போய்ச் சேர்ந்த மாதிரிதான்" என்றாள்.

"ஏன்?" என்றான் இளவழுதி.

"அது மாலத்தீவின் கொள்ளைக் கப்பல். அது எந்த ஒரு கப்பலையும் பாரதத்தை நோக்கிச் செல்ல விடுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றாள் அலை அரசி.

"அதெப்படி ஒரு மரக்கலம் எல்லோரையும் நிறுத்த முடியும்?" என்று கடல் அரசி வினவினாள்.

"சென்ற ஓராண்டு காலமாக முடிந்துதான் வருகிறது" இந்தக் கப்பலை நாம் தாக்கியதும் அல்லது அது நம்மைத் தாக்கியதும் இன்னும் நூறு மரக்கலங்களாவது நம்மைச் சூழ்ந்து தீ வைத்துவிடும்" என்றாள் அலை அரசி. "இதை நானே பலமுறை பார்த்திருக்கிறேன். உயிருக்கு அஞ்சுபவர்கள் உடனடியாக மதகுருவை சரணடைந்து பாதுகாப்புக்கு வழிதேடுங்கள்" என்று மேலும் சொன்னாள் அலை அரசி.

"நீ போக வேண்டாம் அரசி. உன்னை நான் காப்பாற்றுகிறேன்" என்று இளவழுதி அவள் இடையில் தன் கையைக் கொடுத்து தன்னுடன் சேர்த்து இழுத்துக் கொண்டான். ஆனால் மேலும் எங்கிருந்தோ தோன்றிய இரு கைகள் அவள் இடையை பிடித்து உயரத்தூக்கி கடலில் எறிந்து விட்டது.

என்ன ஆச்சரியம். கடலில் இரு கைகள் உயர எழுந்து அவளை அப்படியே பிடித்து நீருக்குள் இழுத்துச் சென்று விட்டது. அடுத்த

கணம் கடலுக்குள் பாய்ந்து விட்டான் இளவழுதி. அவனையும் இரண்டு இரும்புக் கைகள் எங்கோ இழுத்துச் சென்றன. அவன் ஒரு பெரிய விடுதியின் வாயிலில் நின்றான். அந்த வாயில் வழியே உள்ளேயும் சென்றான். உள்ளே போகப் போக பல அறைகள் இருந்தன. ஒன்று சொர்க்கம் போல் இருந்தது. அந்த சொர்க்கத்தின் பஞ்சணையில் தேவஸ்திரீபோல் படுத்துக் கிடந்தாள் அலை அரசி.

அப்பொழுது உள்ளே நுழைந்த இளவழுதியை நோக்கி, ''நான் என்ன சொன்னேன்?'' என்றும் கேட்டாள்.

''ஆம்! உன் தந்தையின் பிரதாபத்தைச் சொன்னாய். நானும் ஒப்புக்கொண்டேன்'' என்ற இளவழுதி, அந்தப் பஞ்சணையில் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

''எழுந்திருங்கள், அப்பா வரப்போகிறார்'' என்று எச்சரித்தாள்.

''ரொம்பவும் பயமுறுத்தாதே! இளவழுதிக்கு அஞ்சாநெஞ்சன் என்ற பெயரும் உண்டு.''

''மகிழ்ச்சி'' என்றாள் அலை அரசி.

அடுத்து நிகழ்ந்தது யாரும் நம்பமுடியாத ஜகஜ்ஜால வித்தை!



# 44. சீதனம்

சொர்க்கத்தின் பஞ்சணையில் தேவஸ்திரீ போன்று படுத்திருந்த அலை அரசியைக் கண்டதும், அவள் பக்கத்தில் உட்கார்ந்த இளவழுதியை, 'எழுந்திருங்கள், அப்பா வரப்போகிறார்' என்று அலை அரசி எச்சரித்ததும் - இளவழுதி தான் அஞ்சாநெஞ்சன் என்று கூறிக்கொண்ட போதிலும் சிறிதே சிந்தனை வயப்படவும் செய்தான்.

''ஆமாம் அரசி! நான் ஒன்று கேட்பேன் பதில் சொல்வாயா?''

''ஓ தாராளமாய்!''

''உன் தந்தையார்தான் அரேபியாவில் இருக்கிறாரே, அவர் எப்படி இங்கு வரமுடியும்? உன்னை நான் நெருங்காம லிருப்பதற்குக் காரணம் சொல்ல வேறொன்றும் உனக்குக் கிடைக்கவில்லையா?'' என்றான் இளவழுதி.

''நானும் தெரியாமல் கேட்கிறேன். நீங்கள் கடலில் மிதக்கும் மரக்கலத்தில்தானே இருந்தீர்கள். நானும் உங்கள் அருகில் இருந்தேன். அப்படியிருக்க கடலினுள், அதுவும் மூழ்கிக் கிடக்கும் மரக்கலத்துள் நான் எப்படி வந்தேன் என்று உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று சொல்லிவிட்டு கலகலவென நகைத்தாள்.

''இரு கைகள் உன்னை உயரே தூக்கிக் கடலினுள் கொண்டு சென்றது. தொடர்ந்து உனக்கு என்னவோ ஆபத்து என்று என் மனம் சொல்லிற்று. நானும் கடலினுள் குதித்துவிட்டேன். ஆமாம், உன்னை யார் கடலினுள் கொண்டு சென்றது?'' என்று கேட்டான் இளவழுதி.

''வேறு யார், என் தந்தைதான்.''

''அவர்தான் மந்திர தந்திரங்களை தன் சொந்த நலனுக்குப் பயன்படுத்துபவர் இல்லையே.''

''இப்பொழுது மட்டும் சொந்த நலனுக்குப் பயன்படுத்தினார் என்று யார் சொன்னது?''

''நான்தான் சொல்கிறேன்.''

''என்னைக் காப்பாற்றியது அவரின் சொந்த நலன் ஆகாது. என்னைக் கடலினுள் இழுத்ததன் மூலம் உங்களையும் கடலினுள் குதிக்க வைத்தார். அதில் அவரது நலனை விட நமது நலன்தான் இதில் அடங்கியிருந்தது. நாம் மரக்கலத்தில் இன்னும் சற்றுநேரம் இருந்திருந்தால் கொள்ளைக் கப்பலைச் சேர்ந்தவர்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள். நிராயுதபாணியான நாம் மூவரும் அவர்களிடம் சிக்கி சின்னாபின்னமாகி இருப்போம். அதைத் தவிர்க்கவே தந்தை இந்த வேலையைச் செய்தார். அதோடு இந்த மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் புதைந்து கிடக்கும் பொன்னும், மணியும், நவரத்தினமும் நம்மைச் சேர வேண்டும் என்றும் அவர் ஆசைப்பட்டார். அதனால் அவர் அருபமாக வந்து இந்த ஒத்தாசையை மேற்கொண்டார்'' என்று அலை அரசி வினவினாள்.

''அப்படியென்றால் உன் தந்தை எங்கிருந்தாலும் அவரது பார்வை நம்மீது இருந்து கொண்டே இருக்கிறது என்று கொள்ளலாமா?'' என்று அவளைக் கட்டிப்பிடித்தான்.

''ஆமாம்! அப்படித்தான். இந்தச் செயலை விடுங்கள். அப்பா வந்துவிடுவார்'' என்று அவன் அணைப்பிலிருந்து சற்றே விலகினாள் அரசி.

''எங்கே பார்ப்போம்'' என்ற இளவழுதி அவளது இடையைப் பற்றி மார்புறத் தழுவ முயன்றபோது முரட்டுக் கரம் ஒன்று பற்றி, அவனை மூலையில் தூக்கி வீசியது. தொடர்ந்து 'ஹாஹ்ஹா' என்று சிரிக்கவும் செய்தது. சந்தேகமில்லை. அது மதகுருவின் சிரிப்பொலி தான் என்பதைப் புரிந்துகொண்ட இளவழுதி, அதிர்ச்சியுற்று சிரிப்பு எழுந்த திசை நோக்கிப் பார்த்தான். அவன் பார்வைக்கு அங்கொன்றும் புலப்படவில்லை.



''இளவழுதி, உன் அகக்கண்ணுக்கு நான் புலப்படமாட்டேன். அதற்கு சில வித்தைகளை கற்றிருக்க வேண்டும். நீ கேரளத்து பெரிய மந்திரவாதியுடன் பழகினாய்; என்னிடம் தொடர்பு கொண்டிருந்தாய். இருந்தும் இந்த வித்தையைக் கற்றுக்கொள்ளும் எண்ணம் உனக்கு இல்லை. ஆதலால் வீணான இந்த முயற்சியைவிட்டு விடு'' என்றார் மதகுரு.

அலை அரசி, இளவழுதியின் தர்ம சங்கடத்தைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். இளவழுதியோ தலை நிமிர்ந்து யாரையும் பார்க்கும் திராணி இன்றி தளத்தையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். இந்தச் சூழ்நிலையை மாற்றும் நோக்கத்துடன் அலை அரசி, ''அப்பா! அக்காவை என்ன செய்திருக்கிறீர்கள்?'' என்று கடல் அரசியின் நிலை குறித்து வினவினாள்.

''அவள் மரக்கலத்துக்குக் காவலாக இருப்பாள். எனது மந்திர சக்தியினால் அவளையும் மரக்கலத்தையும் கொள்ளையர் கண்களுக்குப் புலப்படாமல் செய்ய புகை மூட்டம் எழுப்பியிருக்கிறேன். கொள்ளையர்களின் கப்பல் அந்த இடத்தைத் தாண்டிச் சென்ற பிறகு புகைமூட்டமும் விலகிவிடும்'' என்றார் மதகுரு.

''இது கோழைத்தனம். அந்தக் கடற்கொள்ளைக்காரர்களைக் கொன்று குவித்து இந்தப் பகுதியைச் சுதந்திரமாக்கினால் பலருக்கும் நன்மையுண்டாகும். அதை விட்டுவிட்டு....'' என்று முனகினான் இளவழுதி.

''இது கோழைத்தனமல்ல இளவழுதி. விவேகமான செயல் என்று சொல். நீயோ தன்னந்தனியன். ஒரேயொரு உடைவாள் மட்டுமே உன்னிடம் இருக்கிறது. உன்னோடு வந்திருப்பவரோ இரு கன்னியர்கள். அவர்களிடமும் ஆளுக்கொரு குறுவாள் மட்டுமே உண்டு. இந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு உன்னால் என்ன

செய்து விடமுடியும்? கொள்ளைக் கப்பலில் இருப்பவர்களோ நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களிடம் ஏராளமான ஆயுதங்கள் இருக்கின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்'' என்று நகைத்தார் மதகுரு.

''உங்கள் போக்கு புதுவிதமாய் இருக்கிறது. அன்று அஹமதின் சித்தப்பனிடம் சிறைப்பட்டபோது உங்கள் மந்திர தந்திரத்தைப் பயன்படுத்தாமல் இருந்தீர்கள். இன்று மட்டும் இதுபோன்ற காரியத்தில் ஈடுபடுகிறீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை?'' என்றான் இளவழுதி. அவன் குரலில் சலிப்பு இருந்தது.

''ஆம்! இதோ பார் இளவழுதி'' என்று சிலவிநாடிகள் கழித்து அவரிடமிருந்து வந்த பதிலில், இதுவரை கேட்காத புதுத்தொனி இருந்தது. அலை அரசி தன் அழகிய விழிகளை ஏறெடுத்து மதகுருவின் குரல் வந்த திக்கை நோக்கினாள். இளவழுதியும் அந்தத் திசையிலேயே பார்வையைச் செலுத்தினான்.

''உள்ளதைச் சொல்கிறேன் இளவழுதி! உனக்கு பல விஷயங்கள் புரியவில்லை. உதாரணமாக என் பேச்சும் போக்கும் உனக்குப் புரியவில்லை. அது புரியாமல் இருப்பதே நல்லது. நான் அழைத்து அரேபியாவுக்கு வந்தாய். நீயாக வரமாட்டாய் என்ற எண்ணத்தில் என் ஆசை மகள் மஸ்தானாவை அனுப்பினேன். அவள் அழகில் மயங்கினாய். நீ மயங்குவாய் என்று எதிர்பார்த்துதான் அவளை உன் மண்ணிற்கு அனுப்பினேன். அவள் ஏற்கெனவே மணமானவள் என்ற நிலையிலும் உன்னோடு பழகினாள். அது தவறுதான். இருப்பினும் அவள் விதி அப்படி. இது இயற்கையின் விருப்பம். அதனால் அந்தப் போக்கிலேயே அவளை விட்டேன். அவளது கணவனுக்கு ராஜ்ஜியம் கிடைத்ததும் அவள் உன்னைவிட்டு விலகும்படி ஆயிற்று.

''உன்னை வழியனுப்பும் போதுகூட அவள் வாய் திறக்கவில்லை. இதெல்லாம் உனக்குப் புதிராக இருக்கலாம். நான்தான் அவளை ஏதும் பேசாமலிருக்கும்படிச் செய்தேன். அவள் பேசினால் உன் மனம் பேதலித்து விடும் என்று கருதினேன். காரணமென்ன? அலை அரசியும் என் மகளைப் போன்றவள். அவளுக்கும் ஒரு வாழ்க்கையை நான் அமைத்துத் தரவேண்டுமல்லவா, அதனால் தான் இப்போது அலை அரசியை உன் பின்னால் அனுப்பியிருக்கிறேன். அவள் இனி அரேபியாவுக்கு வருவதென்பது இயலாது. இனி அவள் உன் மனைவியாகிவிடுவாள். அவளுடன் சீதனமாக ஒன்றும் கொடுக்க முடியவில்லையே என்ற உறுத்தல் என்னுள் இருந்தது.



அதனால்தான் இந்தப் பகுதிக்கு உங்கள் மரக்கலம் வருமாறு செய்தேன். இந்தப் புதையுண்ட மரக்கலத்தில் ஏராளமான செல்வங்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். இதை எடுக்க பல ராஜ்ஜியங்களைச் சேர்ந்தவர்கள் முயன்று தோற்றிருக்கிறார்கள். இவையனைத்தையும் உன் மரக்கலத்திற்குள் கொண்டு சேர்த்து விடு. நாளை சூரிய அஸ்தமனத்திற்குள் நீங்கள் தொண்டியில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். மறுநாள் உனது மன்னன் வடபுல யாத்திரைக்கு நாள் குறித்திருக்கிறான். அந்த யாத்திரையில் பங்கு கொள்ள நீ வருவாய் என்று உன் மன்னனுக்குச் செய்தி அனுப்பியாகிவிட்டது. வீரத்தைக் காட்டுகிறேன் என்று வீணாக நேரத்தைச் செலவழிப்பது நல்லதல்ல. அதனால்தான் உங்களை கடலுக்குள் கொண்டு சென்றேன்'' என்று விளக்கினார் மதகுரு.

மெள்ள மதகுருவின் கை ஒன்று அவன் தோள்மீது படுவதை உணர்ந்து இளவழுதி திரும்பினான்.

''ஆமாம் இளவழுதி, நீ உன் மன்னனது வெற்றிக்கு உதவவேண்டுமல்லவா! விரைவில் போய்ச் சேர்'' என்றும் சொன்னார்.

அந்தச் சில நிமிடங்களில் இளவழுதி, உலகத்திலுள்ள வஞ்சகம், சுயநலம், போட்டி, பொறாமை எல்லாமும் மறைந்து அன்பும்

பாசமும் மட்டுமே மேலெழுந்து நின்றதை உணர்ந்து மதகுருவுக்குத் தலைவணங்கினான். அவன் காதில் 'விரைவாகப் போய்ச் சேர்' என்ற மதகுருவின் குரல் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. அதனால் ஏற்பட்ட பெருங்கவலையில் என்ன செய்வது என்று திகைத்து நின்றான். இதை உணர்ந்த அலை அரசி அருகே வந்து ஆதரவாக அவன் தோளைப்பற்றி, "உம், சீக்கிரம் இந்தப் பெட்டிகளைத் திறவுங்கள்" என்றாள்.

இளவழுதி தன் உடைவாளை எடுத்து அந்தப் பெட்டிகளில் பூட்டியிருந்த கனமான பூட்டுகளை உடைத்து எறிந்தான். மூடிகள் திறக்கப்பட்ட பெட்டிக்குள்ளிருந்து மேல்நோக்கி விழித்த பெரும் செல்வத்தைக்கண்ட இளவழுதியும் அலை அரசியும் திகைத்து நின்றனர். அவர்கள் ஆயுளில் கண்டிராத செல்வம், பலவகை நகைகள், பலவகை நவமணிகள், பலவகை நாணயங்கள், விதவிதமான பண்டங்கள், பாத்திரங்கள், துணிகள் என்று குவிந்து கிடந்தன. விழித்த கண்கள் விழித்தபடி, திறந்தவாய் திறந்தபடி இருவரும் நின்றனர். அவர்களது கைகால்கள் கூட சில வினாடிகள் அசைவற்று ஸ்தம்பித்து நின்றன. அணுகத் தகாத புதையலைக் கண்டு பயப்படுபவர்களைப் போல் அவர்கள் நின்றிருந்தனர். அங்கிருந்த கணக்கற்ற பெட்டிகளில் இரண்டில் தங்க நாணயங்களும் வெள்ளி நாணங்களுமாகக் கலந்து வழிந்தன. இன்னொன்றில் வைர, கோமேதக, நீல வைடூரிய, மாணிக்கங்களும் அவைகளால் பதிக்கப்பட்ட பற்பல ஆபரணங்களும் நிரம்பியிருந்தன. இன்னொரு பெட்டியில் மன்னர்களது மாளிகைகளிலிருந்து கவர்ந்து வரப்பட்ட நானாவித பாத்திரங்களும், கடைசி இரு பெட்டிகளில் வாள்கள், குறுவாட்கள், கேடயங்களும் இருந்தன. ஒவ்வொரு வாளிலும், குறுவாளிலுமுள்ள கைப்பிடிகள் நவரத்தினக் கற்களால் பதிக்கப்பட்டு ஜொலித்தன.



எதிரே வாயைப் பிளந்து கொண்டு நின்ற இளவழுதியை நோக்கி மதகுருவின் குரல் மீண்டும் எழுந்தது:

"இளவழுதி எடுத்துக்கொள்! இவ்வளவு செல்வங்களும் உனக்குத்தான். அலைஅரசியுடன் இவ்வளவு சீதனத்தையும் உனக்குத் தருகிறேன். உனக்கென்று ராஜ்ஜியம் கொடுத்தால் உன் மன்னன் நெடுஞ்சேரலாதனை விட்டுவிட்டு வரமாட்டாய். இந்தச் செல்வங்களைக் கொடுத்தால் அதை அட்டியின்றி பெற்றுக் கொள்வாய். உன் மன்னனும் உன்னைப் பொன்போல் போற்ற இந்தப் பெருஞ்செல்வம் உனக்குத் தேவைதான். நான் எனது மந்திர சக்தியால் இவ்வளவு செல்வங்களையும் உன் மரக்கலத்தில் சேர்ப்பிக்கிறேன்" என்று சொல்லி, அவ்வாறே செய்யவும் செய்தார்.

மந்திரத்தால் கட்டுண்டவன் போல் இளவழுதி அந்த மூழ்கடிக்கப்பட்ட கப்பலை விட்டு கடலுக்குள் பாய்ந்தான். அவனைத் தொடர்ந்து அலை அரசியும் வந்தாள். கடல் மட்டத்தில் இவர்களது மரக்கலத்தில் கடலரசி நின்று கொண்டு இவர்களை நோக்கிக் கையசைத்தாள். அவளது முகத்தில் மகிழ்ச்சியின் ரேகைகள். இவர்கள் மரக்கலத்தை அடைந்ததும் கைலாகு கொடுத்து தூக்கி அவர்களை மரக்கலத்தில் சேர்த்தாள். உடலில் வழியும் நீரைத் துடைத்துக்கொண்டே மதகுருவின் அடுத்த உத்தரவுக்குக் காத்து நின்றான் இளவழுதி.

இவனது விருப்பத்திற்கிணங்க மதகுருவும், "போய் வா இளவழுதி. அலை அரசி பத்திரம். கடல் அரசியும் அப்படியே. உங்களது வடபுல யாத்திரை சிறப்பாக அமையும்!" என்று அருபமாக நின்று ஆசீர்வதித்தார்.

அவரது ஆசியைத் தலைவணங்கி ஏற்றுக் கொண்டான் இளவழுதி.

''அப்பா, இப்பயணத்தில் எங்களுக்கு இடைஞ்சல் ஏதுமின்றி நீங்களே மரக்கலத்துக்கு கவசமாக இருந்து வழி நடத்திச் செல்லவேண்டும்'' என்றாள் அலை அரசி, மதகுருவின் குரல் ஒலித்த திசை நோக்கி.

''அப்படியே மகளே!'' என்றார் அவர், அவளது தலையில் கைவைத்து அலை அரசியும் அவரிடமிருந்து பிரியாவிடை பெற்றாள்.

இரவு ஏறியிருந்தது. பௌர்ணமி கழித்து ஏழு நாட்கள் ஆகிவிட்டதால் பதினான்கு நாழிகைகளுக்குப் பிறகே கிருஷ்ணபட்சத்துச் சந்திரன் தலைகாட்ட முடியும் என்று யூகித்த இளவழுதி வானத்தை அண்ணாந்து பார்த்தான். அப்போது அலை அரசி மெள்ள அவன் அருகில் வந்து தோளைப் பற்றிக் கழுத்துப் பகுதியில் அலையாடிக் கொண்டிருந்த கேசங்களை ஒதுக்கி மெதுவாகத் தன் அதரங்களை அங்கே பதித்தாள். இளவழுதிக்கு இது சுகமாக இருந்திருக்க வேண்டும். அவனும் அவளுக்கு நேராகத் திரும்பி, அவளது முகத்தைக் கைகளில் ஏந்தி அந்த இருளிலும் அவளது விழிகளில் புகுந்து எதையோ தேடினான். அவன் தேடிய புதையல் கிடைத்ததா என்பது தெரியவில்லை? அவனது உடலோ அலை அரசியின் உடலோடு சேர்ந்து ஒட்டிக்கொண்டது. அலை அரசி தடையேதும் சொல்லவில்லை. அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது கை குறுக்காக அவனது முதுகுப் பகுதியை வளைத்துக் கொண்டிருந்தது. அவளது அதரங்கள் துடிப்பதை உணர்ந்த இளவழுதி தனது உதடுகளை அதில் அழுத்தி அந்தத் துடிப்பை நிறுத்தினான்.



# 45. தொண்டித் துறைமுகம் நோக்கி...

மனித வாழ்வில் நொடிப்பொழுது என்பது அற்ப காலம். ஆனால் அந்த அற்பகாலம் விளைவிக்கிற மாற்றங்கள் வியக்கத்தக்க வகையில் இருக்கும். இந்த மாற்றங்கள் எண்ணங்களிலும் ஏற்படலாம், சரீரத்திலும் ஏற்படலாம். ஏன் உணர்ச்சிகளிலும்கூட ஏற்படும். ஆகையால் நொடிப் பொழுதுதானே என்று அந்த அற்ப காலத்தை ஒதுக்குவதற்கில்லை. அதன் வேகம் இணையற்றது என்று உணருவதுதான் விவேகம். அந்த விவேகம் மறையும் காலமும் உண்டு. அதை மயக்க வைக்கும் காலம் என்று வேதாந்தம் சொல்லும். மயக்கம் தரும் காலங்களில் மன்மதனின் ஆளுகைக்கு உட்படும் நேரமும் ஒன்று.

அப்படிக் காதல் வயப்பட்டு அவள் உதடுகள் துடித்ததும், அந்தத் துடிப்பினை உள்ளுணர்வுகளால் அறிந்து கொண்ட இளவழுதி அவளை மேலும் தன் உடலோடு இறுக அணைத்து, துடிக்கும் அவளது இதழ்களைத் தன் இதழ்களால் பொருத்தி இன்பம் துய்த்ததும் கூட ஒரு விநாடி நிகழ்ச்சியே! அந்த ஒரு விநாடி கால இன்பம் அவளுக்கு என்னென்னவோ இன்பத்தை வாரி வழங்கியது. அலை அரசி தன் உதடுகளை அவனது உதடுகளிலிருந்து பிரித்து அவனையே கூர்ந்து நோக்கினாள். அந்த அற்ப காலத்தில் ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளத்தில் அவளது இதயம் படபடத்ததை, அணைப்பில் இருந்த மார்பகத்தின் மூலம் இளவழுதியால் உணர முடிந்தது. அவன் முன் எப்போதையும் விட இப்பொழுது அழகாகத் தோன்றியதாக உணர்ந்தாள் அலை அரசி.

ஆசை ஆசையாய் அவனது புருவங்களை, அதரங்களை, மீசையை, கன்னச் செழுமையை, உறுதியான காதுகளை, நீண்ட அழுத்தமான கழுத்துப் பகுதியை அவள் பார்த்துக் கொண்டும், சிற்சில சமயங்களில் தனது வலது கையால் அவைகளைத்

தடவியவாறும் இருந்தாள் அரசி. இவளின் நிலை இப்படியிருக்க, இளவழுதியோ தன் மனதுக்குள் 'பெண் ஜென்மம் சிறந்த ஜென்மம். அதற்கு இணை ஏதுமில்லை. அதற்கு உவகை இந்த அலை அரசிதான்' என்று எண்ணிக் கொண்டான். திடீரென சிரிப்பொன்றை உதிர்த்தான்.

''எதற்கு இந்த நேரத்தில் சிரிப்பு?'' என்றாள் சிறிது அதிர்ச்சியைக் குரலில் காட்டி.

''உன் நிலை குறித்து சிரித்தேன்.''

''ஏன்? என் நிலைமைக்கு என்ன?''

''கவலையடையக்கூடிய நிலைமை இல்லை. இருந்தாலும் சிரிப்பு வந்தது. சிரித்தேன்.''

''ஏன் சிரிப்பு வரவேண்டும்?'' என்று சிணுங்கினாள் அரசி.

''உன்னை என்னுடன் சேர்த்த விதியை நினைத்தேன். உனக்கு நினைவிருக்கிறதா? தொண்டி கடற்கரைக்கு வந்தாய். மதகுருவின் சக்தி மூலம் என்னை மயக்கத்தில் ஆழ்த்தினாய். பிறகு என் இதயத்தைத் திருடிக் கொண்டாய். பிறகு மஸ்தானா வந்தாள். அவளுடன் நெருங்கிப் பழகினேன். இதை நீ அறிந்தும் அறியாமலும் இருந்தாய். இப்பொழுது மதகுரு நீ என் மனைவி ஆவாய் என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். சீதனம் கொடுக்கவில்லையே என்று திரும்பவும் வந்து சீதனமாக இந்த மரக்கலம் நிறைய செல்வத்தையும் நிரப்பிவிட்டுச் சென்றிருக்கிறார். ஆனால் இனிமேல்தான் நான் உன்னை என் மனைவியாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று நினைத்தேன், சிரிப்பு வந்தது. மனைவி ஆனபிறகு சீதனம் வந்து சேருவது எங்கள் நாட்டுப் பழக்கம். உன் விஷயத்திலோ நீ இன்னும் மனைவியாகவில்லை. சீதனம் முன்கூட்டியே வந்திருக்கிறது.''



''உண்மைதான், உங்களது சம்பிரதாயங்களின்படி. ஆனால் நீங்கள் என்றோ என் கணவராகி விட்டீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. ஆமாம், உங்களைப் பார்த்த அன்றே என் கணவர் இவர் தான் என்று என் மனம் சொல்லிற்று. மஸ்தானாவுடன் நீங்கள் நெருங்கிப் பழகுவதை நான் கண்டுகொள்ளவில்லை என்று தானே சொன்னீர்கள். அது உண்மையில்லை. என் மனம் புழுங்கியது எனக்குத்தான் தெரியும். நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும் எனக்குச் சொந்தமானவர் என்று என் உள்ளத்தில் ஓர் உறுதி இருந்ததால் அதைச் சமாளித்தேன். சுதந்திரம் ஒருத்தியின் அழகைக் கெடுக்கிறது; அடக்கம் ஒருத்தியன் அழகைக் கூட்டுகிறது என்பது எங்கள் நாட்டில் ஒரு பழமொழி. அடக்கமுள்ள பெண்களுக்குள்ள அழகு அடக்கமில்லாத பெண்களுக்கு இருப்பதில்லை. தலைகுனிந்த பெண்ணிடமிருக்கும் எழில் தலைகுனியாமல் நிமிர்ந்து நடக்கும் பெண்களிடம் கிடையாது.

சுதந்திரத்தை ஓர் ஆணிடம் கொடுத்துவிட்டு அவனுக்கு அடங்கி நடக்கும் பெண்ணின் அழகே உன்னதமானது. நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என் அழகை உங்களிடம் மானசீகமாகச் சேர்த்தேன். அவ்வளவு தான். இதற்கு உங்கள் அனுமதி வேண்டாமா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் என் ஆசையைத் தடை செய்ய யாரால் முடியும்? என்னால்கூட அது முடியாதே. இதனால் மஸ்தானாவைப் பழிக்கிறேன் என்று நினைத்து விடாதீர்கள். இயற்கை அவளை வஞ்சித்து விட்டது. ஆதலால் அவளது நடவடிக்கை இப்படியாகிவிட்டது. ஒ[illegible] முறையில் நான் அவளுக்குத் தமக்கையானதால் இ[illegible] அனுமதித்தேன். எங்கள் பகுதியில் இது பெரிய குற்றமுமில்[illegible] ஒருவன் அக்கா, தங்கையரை மணந்து கொண்டோ அ[illegible] விரும்பியோ வாழ்வது உண்டுதான். மஸ்தானாவிடம் [illegible] நெருங்கிப் பழகியது பசியைப் போக்க உண[illegible] மனம் போன்றது'' என்று ஏதோ பெரிய தத்துவத்தை[illegible]யத்தின் மிக ரகசியமாக அவன் காதில் முணுமுணு[illegible]

பேசுவதை நிறுத்தி, சற்றே சரிந்து அவனது மார்பில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

மெய்மறந்து அவளது வாய்வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த இளவழுதி அவளது மன அடக்கத்தை வியந்தான். அவள் கூற்றில் யாதொரு குற்றமுமில்லை என்பதை உணர்ந்தான்.

அதே நேரத்தில் அலை அரசி கேட்டாள்:

''நீங்கள் வடபுல யாத்திரை சென்று எவ்வளவு நாளில் திரும்புவீர்கள்?''

''ஏன் அரசி! நீ என்கூட வரப்போவதில்லையா?''

''உங்கள் நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ர்க்களத்துக்கு வருவதுண்டா?''

ல்லை, அவர்களது வேலையெல்லாம் அந்தப்புரத்தில் ான்.''

யிருக்க நான் மட்டும் வருவது எப்படி நியாயமாகும்? ர் சென்று திரும்புகிறவரை உங்களுக்காகப் செய்வதோடு, உங்கள் வருகைக்காகக் ஏற்படும் சுகத்தை அனுபவிக்கப் போகிறேன். ும் என்னைச் சந்திக்க விரைந்து வந்துவிட

சி, ஆனால் ஒப்பற்ற வாள்வீச்ச ாரியின் ானா?''

ாம் இனி இளவழுதியின் புஜங்களில் ரம் போன்ற தோள்களிரண்டையும் கொண்டாள். அவள் நிலையை களைப் புரிந்து கொண்ட அவன் பு வந்தது. ம நாட்டுப் பழக்க மனைவியாகவில்லை.



மரக்கல அறையை விட்டு வெளியே வந்த கடல் அரசி அவர்களை நோக்கி, ''எவ்வளவு நேரம்தான் இந்த குளிரெடுக்கும் டற்காற்றில் வெளியே நிற்பீர்கள்! அறைக்குள் வாருங்கள்'' என்று அழைத்தாள்.

சுயநினைவு பெற்ற இருவரும் அவளைப் பின் தொடர்ந்து மரக்கல அறைக்குச் சென்று தங்களது பஞ்சணைக்குச் சென்றனர்.

பஞ்சணையில் இளவழுதியின் அணைப்பிலிருந்த அலை அரசி,

'சே! நான் எத்தனை வெட்கமற்றவள்!' என்று தன்னைத்தானே கண்டித்துக் கொண்டாள். உண்மையிலேயே அது கண்டனமா அல்லவா என்பது அவளது பருவ விழிப்புகளுக்குத்தான் தெரியும். அப்படி அந்த உணர்வுகள் ஏற்பட்டதால்தானோ என்னவோ இந்த சமயத்தில் தன் மனத்தை இளவழுதியிடம் திறந்து காட்டினாள். அப்படி நடந்து கொள்ளாது போனால் தானும் இளவழுதியும் பரஸ்பரம் நெருங்கி வரமுடியாது என்று இயற்கைதான் உந்தியிருக்க வேண்டும் என்றும் நினைத்துத் தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள் அலை அரசி. காதல் பொய்யாகி விடக்கூடாது என்பதில் அவள் குறியாய் இருந்தாள். இல்லையென்றால் அவன் மஸ்தானாவுடன் பழகியதை ஒரு குற்றவுணர்வாகக் கொண்டு தன்னை விட்டு ஒதுங்கிவிடக் கூடுமோ என்றும் பயந்து அதனால் தான் வெட்கம் கெட்டு எல்லாவற்றையும் சொன்னதாகவும் ஒரு பக்கத்தில் குற்றச்சாட்டு எழத்தான் செய்தது. ஆம், அதிலென்ன தவறு இருக்கிறது; காதலைப் பற்றி பொய் சொல்லி கருத்தை ஏமாற்றலாம்; இதயத்தை எப்படி ஏமாற்ற முடியும்? அப்படி என் மனதை இப்போது திறக்காவிட்டால் நான் மோசம் போய்விடுவேனோ என்றும் என் உணர்வுகள் உந்தியது. அதனால் தான் இவ்வளவு தூரம் மனம் திறந்து இளவழுதியிடம் பேசியதாகவும் பதில் குரல் இதயத்தின்

இன்னொரு மூலையில் சமாதானமாக எழுந்தது. ஒருவாறு சமாதானமடைந்த அரசி அப்படியே தூங்கிப் போனாள்.

பலகணி வழியே பறவைகளின் நானாவித கூக்குரல் வெகு அருகில் நிலம் இருப்பதற்கான அறிகுறி என்று உணர்ந்து பஞ்சணையிலிருந்து எழ விரும்பினாள். அவள் மார்பின் குறுக்காக இளவழுதியின் கை கிடக்கவே, ஓசைப்படாமல் அந்த கைகளை மெள்ள எடுத்துவிட்டு எழுந்தாள். கடல் அரசி இன்னொரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்தாள். யாரையும் எழுப்பாது அலை அரசி மட்டும் மரக்கலத்தின் தளத்துக்கு வந்து சேர்ந்தாள். மரக்கலம் சீராக தொண்டித் துறைமுகம் நோக்கி வழியில் ஒரு தீவை இடப்புறமாக ஒதுக்கிக்கொண்டு சென்று கொண்டிருந்தது. அந்தத் தீவுக் கூட்டங்களில் வசிக்கும் பறவையினங்களின் ஒலிதான் அது என்று கண்டு கொண்டாள். ப்ாரதத்தின் மேற்குத் தொடர்ச்சிமலை கருமையாய் கடலுக்குள் நிற்கும் அரணாய் காட்சி அளித்ததால் சேரநாட்டை நெருங்கிவிட்டோம் என்ற குதூகலம் அவள் நெஞ்சில் எழுந்தது.

முகம் கழுவி பல் துலக்கியவள் திரும்பவும் பஞ்சணையிருந்த அறைக்கே திரும்பினாள். அப்போதும் அவர்கள் இருவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். மெள்ள இளவழுதியை நெருங்கி அவனது நெற்றியில் விழுந்திருந்த சுருள் கேசங்களை ஒதுக்கிவிட்டு தனது இதழ்களை மெள்ளப் பதித்தாள். இளவழுதியும் முனகிக்கொண்டே அவளது கழுத்தைப்பற்றி தன்னருகே நெருக்கினான்.

''எழுந்திருங்கள், இன்று காலை என்ன சாப்பிடப் போகிறீர்கள்?'' என்று முணுமுணுத்தாள்.

''காலை உணவுதானே. இங்கே வா'' என்று அவளது கன்னத்தில் பதித்த உதடுகளை அவளது இதழிலும் பொருத்தினான். ''இதைவிட வேறென்ன உணவு வேண்டும்'' என்று கேட்கவும் செய்தான்.



இளவழுதியின் கை அவள் முதுகுப்புறத்திலிருந்து நழுவி இடைக்குக் கீழே பருத்துக் கிடந்த அழகு மேட்டில் தவழ முற்பட்டபோது அவள் அவன் கையைத் தட்டிவிட்டு 'உம்' என்றாள்.

அவர்களிருவரும் அந்தக் காலை நேரத்தை மறந்தார்கள். உலகை மறந்தார்கள்.

# 46. வடபுல யாத்திரை

விஜயதசமி நாளன்று நல்ல முகூர்த்தத்தில் மன்னர் வடபுல யாத்திரை போவதென்று முடிவாயிற்று. மன்னரோடு புறப்பட இருந்த படை வீரர்களின் எண்ணிக்கை மட்டும் பதினையாயிரம். படைகளோடு ஏவலாளர்கள், யானைகள், புரவிகள், எருதுகள், கறவைப் பசுக்கள் முதலியவற்றோடு, ஆயுதங்களைத் தீட்டிக் கொடுப்போரும், வைத்தியர்களும், போர்ப் பிரார்த்தனை செய்யும் கடகாச்சாரியார்களும், சமையற்காரர்களும், பல தொழிற் சம்பந்தப்பட்டவர்களும் சேர்ந்து கூட்டம் கடல்போல் பரவியது.

வடபுல யாத்திரை கிளம்புவதற்கு முன்பாகவே வீரர்கள் பலமாதகாலமாக தங்கள் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள். மன்னரின் சிறந்த தளபதிகள், பூமி நாட்டரசன் முதலானோரும் சேர்ந்து அவர்களுக்கு பலவகையில் பயிற்சிகளைக் கொடுத்திருந்தனர். பயிற்சி இரவும் பகலுமாக நடந்தது. மன்னர் புறப்படும்முன் தனது இஷ்ட தெய்வங்களைப் பூஜித்தார். பட்டத்தரசியைப் பார்த்துவரப்போனார். அரசி ''மன்னருக்கு மங்களம் உண்டாகட்டும்'' என்று வேண்டி வெற்றி மாலை சூட்டியதுடன் பட்டத்துக் கத்தியையும் கொடுத்தாள். மன்னன், தான் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் உடனுக்குடன் அரண்மனைக்குத் தகவல் அனுப்பி வைப்பதாகச் சொன்னார்.

அங்கிருந்து தனது அமைச்சரிடம் சென்றார். அவரிடமும் ஆசி பெற்றார். ''வெற்றி உண்டாகட்டும்'' என்று அவர் ஆசீர்வதித்தார். அவரிடம் அரண்மனையைக் காக்கும் பொறுப்பை ஒப்படைத்து, அன்புடன் அமைச்சரைக் கட்டித்தழுவினார். கடைசியில் படைகள் தயாராக நின்று கொண்டிருந்த இடத்துக்கு தனது பட்டத்து யானைமீது ஏறிச் சென்றார். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பரவியிருந்த அந்தப் பெரும் படைக் கூட்டத்தைக் கண்டு மன்னர் நெடுஞ்சேரலாதன் முகத்தில் மகிழ்ச்சிப் பெருக்கு காணப்பட்டது.



சுபலட்சணங்களுடன் மன்னரின் பட்டத்துப் புரவியை ட்டாலும், ஆபரணங்களாலும் அலங்கரித்து அதன் நெற்றிப் பாட்டில் யாகப்புரவி என்ற பெயரினைப் பொறித்த பொற்பட்டயத்தைக் கட்டினர். மன்னரும் படைகளும் புறப்படத் யாராயிருந்த நிலையில் யாருடைய வரவுக்காகவோ த்திருப்பது போன்ற பாவனை அங்கு காணப்பட்டது. ஆம்; ளவழுதிக்காகத்தான் மன்னரும் மற்றவர்களும் காத்திருந்தார்கள். தகுரு சொன்னபடி செய்யக்கூடியவராயிற்றே; இன்னும் ளவழுதியைக் காணவில்லையே?' என்று மன்னர் நினைத்த ந்த நேரத்தில் வீரன் ஒருவன் புரவி மீது வந்திறங்கினான்.

அவன் மன்னர்முன் மண்டியிட்டு, ''இளவழுதியும் அலை அரசியும் துறைமுகம் வந்து சேர்ந்தார்கள். இன்னும் சற்று நேரத்தில் ங்களுடன் வந்து சேர்ந்து கொள்வதாகச் சொன்னார்'' என்றுகூறி வணங்கினான்.

அதிகாலை நேரத்தில் எழுப்பி காலை உணவாக என்ன வேண்டுமெனக் கேட்டதும் அவளை அருகே இழுத்து கழுத்தை வளைத்து அவளது கன்னத்தில், கழுத்தில் தனது இதழ்களைப் பதித்துப் புதைத்தான். இதைவிட வேறு என்ன உணவு வேண்டும் என்று கேட்கவும் செய்தான். அரசியும் அந்த காலை நேரத்தில் ஏற்பட்ட இன்பலாகிரியில் திளைத்து தன்னை மறந்தாள்; இந்த உலகை மறந்தாள்.

''இதுவே சொர்க்கம்'' என்று சொல்லவும் செய்தாள்.

''சொர்க்கம் இதுவென்றால் இந்த மரக்கலம், இந்த பஞ்சணை இதுபோன்று சொர்க்கத்தில் கிடக்குமா?'' என்றாள் அரசி.

''அரசி, எங்களது சங்க இலக்கியங்களில் சொர்க்கம் பெண்களிடம் இருக்கிறது என்று பாடல் உண்டு. அவளது இதழ்களில், கழுத்தில், இளமார்பில்கூட சொர்க்கம் உண்டு. ஏன் - பெண்களின் சிற்றிடையில், அப்புறம்... அப்புறம்... பெண்ணே, ஒரு

சொர்க்கம்தானே... பஞ்சணையில் கிடந்தால் என்ன? மரக்கலத்தில் கிடந்தால் என்ன? இல்லை, மண்ணில் கிடந்தால்தான் என்ன?" என்று அவளது கழுத்தில், மார்பில், சிற்றிடையில் தனது இதழ்களை மீண்டும் பதித்த இளவழுதி என்ன காரணத்தினாலோ அவளை அணைத்திருந்த கைகளை நீக்கி, விலகிப் படுத்து அந்த மரக்கல அறையின் விட்டத்தைப் பார்த்தான்.

இளவழுதியை நோக்கி அரசி, "என்ன சிந்தனை வயப்பட்டு விட்டீர்கள்?" என்றாள் குரலில் கேலி தொனிக்க.

"சிந்தனை செய்யக் கூடாதா?" அவன் குரல் வரண்டு போயிருந்தது.

"சிந்தனை செய்யும் சமயமா இது?" என்று வினவினாள் அவனது சிந்தனைக்குக் காரணம் புரியாத அலை அரசி. அவளது முகத்திலும் சிந்தனை ரேகைகள் படியலாயிற்று.

"உங்களது நினைவு வேறு எங்கோ சிறகடித்துச் சென்று விட்டது. நான் போகிறேன்" என்று எழுந்தாள்.

"ஆமாம் அரசி! என் சிந்தனை யாவும் தொண்டிக்கரையில் இறங்கியதும் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதற்கான திட்டத்தில் லயித்து விட்டது."

"என்ன திட்டம் போட்டிருக்கிறீர்கள்?"

"என் தாத்தா பெருவழுதியைச் சந்தித்து அவரிடம் ஆசி வாங்க வேண்டும். பிறகு உன்னை அவரிடத்தில் ஒப்படைத்துவிட்டுச் செல்வதா? அல்லது அரண்மனையிலுள்ள பெண்களிடம் விட்டுச் செல்வதா என்பதில் சிந்தனை? தாத்தாவிடம் விட்டுச் செல்லலாம் என்றால் நான் முன்பு மாதிரி வெறும் கடலோடி அல்ல. இப்போது நான் சேரநாட்டுத் தளபதி. அதனால் உன்னை அரண்மனையில் அரசியின் பாதுகாப்பில்தான் விட்டுச்செல்ல வேண்டியிருக்கும். நீ அவர்களுடன் நைச்சியமாகப் பழக வேண்டும். அதுபோலவே



அவர்களும் உன்னிடம் அன்பு செலுத்த வேண்டுமே என்றெல்லாம் கவலை வந்து விட்டது. உனது பழக்க வழக்கங்கள் வேறு. எங்களது பெண்டிரின் பழக்க வழக்கங்கள் வேறு. இதையெல்லாம் நினைத்தேன். இருந்தாலும் உன் நுண்ணறிவால் எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்வாய் என்னும் முடிவுக்கு வந்தேன். முற்றிலும் பிரம்மச்சாரியாக இருந்துவிட்டால் தொல்லையில்லை. இப்போது நீ வேறு என்னிடம் சேர்ந்து கொண்டு விட்டாயே, கவலைப்படாமல் இருக்க முடியுமா?" என்று கேலியுடன் நகைத்தான் இளவழுதி.

பெரிதும் குழப்பத்திற்கு ஆளான அலை அரசி அவன் கைகளுடன் தன் கைகளைப் பிணைத்துக் கொண்டவாறே "சேரநாட்டு தளபதியாருக்கு களங்கம் ஏற்படும்படி இந்த அலை அரசி நடந்து கொண்டுவிட மாட்டாள் என்பதற்கு உறுதியளிக்கிறேன்; போதுமா?" என்று குனிந்து அவனது நெற்றிப் பொட்டில் ஒரு முத்தமிட்டாள்.

இளவழுதி படுக்கையைவிட்டு எழுந்து மரக்கலத்தளத்துக்கு வந்தான். சூரியன் உச்சியில் ஏறியிருந்தான். இதழமுதம் மட்டுமே பசியை அடக்கிவிடும் என்று இன்பலாகிரியில் அவன் கூறியது எவ்வளவு தவறு என்பதை உணர்ந்தான். அவனது எண்ணத்தைக் ...றிப்பால் உணர்ந்த அலை அரசி, கடல் அரசி தயாரித்து ...த்திருந்த உணவை அவனுக்கு அளித்தாள். அவளுக்கும் அதே ...தானே!

உண்டு முடிந்து மரக்கலத்தளத்தின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு எதிரே பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை கரும்பச்சையாக நீண்ட மேற்குத் தொடர்ச்சி மலை. கடற்கரையில் அவனது வருகைக்காகக் காத்திருந்த சிறு கூட்டம் கரும்புள்ளியாய் தோன்றி, மெள்ள மெள்ள பெரிதாகி மனித உருவங்கள் தெரியத் தலைப்பட்டன.

இளவழுதியின் தாத்தா பெருவழுதியும் அந்தக் கூட்டத்தில் இருந்தது கண்டு அவன் ஆச்சரியமுற்றான். சொந்த நாட்டுப் பூமியில் காலடி எடுத்து வைக்கப் போகிறோம் என்றதுமே இளவழுதிக்கு உற்சாகம் கரை புரண்டோடியது. வாயு வேகம் மனோவேகம் என்பதையெல்லாம் கடந்து தனது தாத்தாவின் கையைப்பற்றி அணைத்துக்கொள்ள ஆவலுற்றான்.

கரையில் இறங்கி இளவழுதி வர, அவனது இரு பக்கத்திலும் அலை அரசியும், கடல் அரசியும் வர, பெருவழுதி எதிர்கொண்டழைத்தான். வந்த சுருக்கிலேயே அங்கிருந்த காவலனிடம் மன்னருக்கு செய்தி சொல்லி அனுப்பிவிட்டு தாத்தாவிடம் குசலம் விசாரித்தான்.

பெருவழுதியிடம் அலை அரசி, கடல் அரசி இருவரையும் ஒப்படைத்து, ''நான் திரும்பி வரும்வரை இவர்கள் இருவரையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பு'' என்று கூறிவிட்டு மன்னரைக் காணப் புரவியில் ஏறிய இளவழுதியை நோக்கி மந்திரி பிரதானிகள் வருவதைக் கண்டு தரையில் குதித்தான்.

''உங்கள் எல்லோரிடமும் வாழ்த்துப்பெற்றுச் செல்கிறேன்'' என்று குனிந்து வணங்கினான்.

அவர்களும் கையை உயரே தூக்கி ''மங்களம் உண்டாகட்டும்'' என்றார்கள்.

''மன்னர் உனக்காகவே காத்துக் கொண்டிருக்கிறார். இன்னும் களப்பலி கொடுக்கவில்லை. நீ உடனே செல்'' என்று துரிதப்படுத்தியதுடன் அவர்களும் உடன் வரவும் செய்தார்கள்.

எல்லோருமாக போர் வீரர்கள் சூழ்ந்திருந்த திடலுக்கு வந்தபோது மன்னர் தனது தலையை அசைத்து இளவழுதியின் வருகையை ஆமோதித்தார். இளவழுதியைக் கண்டதும் வீரர்கள்



மட்டுமின்றி, முன்னர் வரவழைக்கப்பட்ட அரபுப் புரவிகளும் தங்களது கனைப்பின் மூலம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

இளவழுதி தனது புரவியிலிருந்து இறங்கி இதர புரவிகள் பக்கம் சென்று அவைகளைத் தடவிக் கொடுத்தான். சில புரவிகளின் நெற்றியில் கன்னத்தைப் பதித்து தன் அன்பை வெளிப்படுத்தவும் செய்தான்.

மன்னர் நெடுஞ்சேரலாதன், மந்திரிகள், அரண்மனைப் பெண்டிர், அலை அரசி, பெருவழுதி யாவரும் இதைக்கண்டு மெய்சிலிர்த்த சமயத்தில், நடக்கக்கூடாதது ஒன்று நிகழ்ந்தது! மன்னர் இந்தச் செயலை அறவே வெறுத்தொதுக்கிய போதிலும் திடீரென ந ந்து விட்டது அந்த நிகழ்ச்சி!

# 47 ஒற்றன் கொண்டுவந்த செய்தி

தயாராய் நின்றுகொண்டிருந்த படைகளை மன்னர் பார்வையிட்ட நேரத்தில், இளவழுதி அங்கு வந்து சேர்ந்திருந்த அந்த வேளையில், கடகாச்சாரியார் போர்க்கம்பத்தை நட்டு பூஜை போட்டு, வெற்றி தருமாறு வேண்டினார். கம்பத்தின் அருகே மன்னர் வந்தவுடன் பல்வகை வாத்தியங்கள் முழங்கின. கற்பூர ஆரத்தி ஒளி வீசியது. அப்பொழுது உடலெங்கும் சிவப்பு சாந்து பூசி இடையில் சிவப்புத் துண்டு உடுத்திய இளைஞன் அங்கு ஓங்காரமிட்டபடி வந்து சேர்ந்தான். அவன் கையில் சாணைபிடித்த பட்டாக்கத்தி. அவனது ஓங்காரச் சத்தம் கேட்டு மன்னர் அந்தப் பக்கமாகத் திரும்புவதற்குள்ளாகவே, அவனே போர்க்கம்பத்தை மூன்று தடவை சுற்றி முடித்தான்.

இடது கையால் தனது தலைமுடி உச்சியைப்பிடித்துக் கொண்டு வலது கையில் இருந்த பட்டாக்கத்தியை ஓங்கி, இமைக்கும் நேரத்தில் தன் கழுத்தில் இறக்கினான். தலை வேறு உடல் வேறாக அவன் வேரற்ற மரம்போல் கீழே வீழ்ந்தான். உடலிலிருந்து அறுபட்ட தலை துடிதுடித்து அடங்கிப் போனது. உடலும் அப்படித்தான் ஆனது. படைவீரர்கள் ஜெயகோஷம் எழுப்ப ரணபேரிகை கொம்பு, தாரை, தப்பட்டை எல்லாமாகச் சேர்ந்து ஓசை எழுப்பி அந்த இடத்தை உணர்ச்சிமயமாக்கிய வேளையில் மன்னர் அந்தப் பக்கமாகப் பார்வையைச் செலுத்தினார். அவர் மனம் துணுக்குற்றது. அவர் தன் வாழ்நாளில் இதுபோன்ற நடைமுறைகளை ஒழித்திருந்தான். போருக்குப் புறப்படும்போது களப்பலியென நரபலி கொடுக்கப்படுவதை அறவே வெறுத்தார். சம்பிரதாயத்துக்காக எந்த உயிரையும் பலி கொடுக்கக் கூடாது என்று ஆணை வேறு இட்டிருந்தார். ஆனால் அரச குடும்பத்திற்காகவும், நாட்டுக்காகவும் சுபிட்சம் வேண்டி பலி கொடுப்பதற்கென்றே ஒரு குடும்பத்தார் இருந்தார்கள். அவர்கள் வேலையே தங்களது உயிரை பலி கொடுப்பது தான். இதையொரு



பாக்கியமாகவே அவர்கள் கருதினார்கள். அவர்கள் சொல்லி வைத்து தங்கள் உயிரைப் போக்கிக் கொள்வதில்லை. யாரும் எதிர்பாராத நேரத்தில் இப்படி திடுமென வந்து தங்கள் உயிரைப் போக்கிக் கொள்வதை ஒரு மரபாகக் கொண்டிருந்தார்கள்.

மன்னர் நெடுஞ்சேரலாதனின் ஆட்சிக்காலத்தில் மிகப்பெரிய போர் எதையும் சாதிக்காத காரணத்தினால் இதுபோன்ற களப்பலிக்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இப்பொழுது மன்னர் வடபுலயாத்திரை போவது என்பது மிகப்பெரிய போர் என்று கருதியதால் களப்பலி கொடுக்கும் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் தன்னை நாட்டுக்காக அர்ப்பணித்துக் கொள்ள நேர்ந்தது.

இதை மன்னர் புரிந்து கொண்டாரானாலும் அவர் மனம் துணுக்குற்றதை மந்திரி பிரதானிகள் புரிந்து கொண்டு அவருக்கு ஆறுதல் சொல்ல முற்பட்டனர்.

"நீங்கள் ஆயிரம் சொன்னாலும் இது அருவருக்கத் தக்க செயலே. இந்த மடமைகள் நம்மை விட்டுப்போக வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இது எப்படியோ எதிர்பாராமல் நடந்து விடுகிறது" என்று சொல்லி உயிரைப் போக்கிக்கொண்ட இளைஞனின் உடலையும் தலையையும் ஒரு சேரவைத்து தனது வீர வணக்கத்தைச் செலுத்தினார். வழக்கப்படி உயிர்ப்பலி கொடுத்த இளைஞனின் குடும்பத்துக்கு இருபத்தைந்து கிராமங்களை மானியமாக அளித்தார். சகலவிதமான மரியாதைகளையும் அவனுக்குச் செலுத்தினார். அவன் பெயரில் நடுகல் ஒன்றும் நடப்பட்டது. அவன் வீர சுவர்க்கம் எய்தியதாக வீரர்கள் கோஷமிட்டனர்.

பின்னர் மன்னர் அமர்ந்திருந்த யானை தன் துதிக்கையை உயர்த்தி போர் வெறியுடன் எக்காளமிட்டது. மன்னரும் அதன் சைகையைப் புரிந்து அதைத் தட்டிக் கொடுக்க, யானை எட்டி எட்டி

நடையைப் போட்டது. இளவழுதியும் தனது புரவிமீது தாவி ஏறி மன்னரைத் தொடர்ந்து செல்ல, வீரர்களும் ஜெயகோஷமிட்டு மழைக்காலத்துப் பெருவெள்ளம்போல எதிரியை வீழ்த்தக் கிளம்பினர்.

முன்னே யாகப் புரவி அதன் பின்னே அவர்கள் செல்ல, நாட்கள், மாதங்கள் எனப் பல கடந்து அவர்கள் தமிழ் நாட்டு எல்லையைக் கடந்தனர். எங்கும் எதிர்ப்பில்லை. அதனால் போரும் இல்லை. எதிர்ப்பட்ட நாட்டைச் சேர்ந்த மன்னர்கள் மன்னரை அன்புடன் வரவேற்றனர்.

அவர்கள் பலமாத பயணத்திற்குப் பிறகு கலிங்கத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்தார்கள். இரண்டு நாழிகைகள் பயணத்துக்குப் பிறகு நெடுஞ்சாலை மறைந்து விட்டதையும், சாலையின் ஒரு பக்கத்தில் காடு தோன்றுவதையும் கண்டனர்.

"மன்னர் பெருமானே! இந்தக் காடு எதைச் சேர்ந்தது?" என்று இளவழுதி வினவினான்.

"மகேந்திர மலையாக இருக்கக்கூடும். லாங்குலி நதிகுதி வருவது இங்கேதான். இந்த மலையிலிருந்து உற்பத்தியாகும் மூன்று நதிகளுக்கு ரிஷிகுல்யா, வம்சதாரா, லாங்குலியா என்று பெயர். இதில் லாங்குலி நதி தான் பெரியது. இந்த நதிகளைப் பார்க்கையில் இது மகேந்திர மலையாகத்தான் இருக்க வேண்டும் என்று யூகிக்கிறேன்" என்றார் மன்னர்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே யாகப் புரவியைத் தொடர்ந்து சென்றவர்கள் ஓடிவந்து, புரவியை மடக்கி விட்டார்கள் என்றும், தாங்கள் கலிங்க மன்னன் முதலாம் வஜ்ரஹஸ்தனுடைய ஆட்கள் என்று அவர்கள் குறிப்பிட்டதாகவும், மன்னர் உத்தரவிட்டால் சண்டையிட்டுத்தான் புரவியை மீட்க முடியும் என்று தோன்றுகிறதென்றும் கூறினார்கள்.



"வீரர்களே! இதில் சண்டை என்பது போரில்தான் முடியும். வஜ்ரஹஸ்தன் நம்மை எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தனது வீரர்களுக்கு புரவியை மடக்கச் சொல்லி உத்தரவிட்டிருப்பான். அவர்களை சில வீரர்கள் என்று எண்ணி விடாதீர்கள். அவர்களை பலநூறு வீரர்கள் கண்காணித்து மறைவில் இருப்பார்கள் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார் மன்னர்.

"போர் வந்தால் என்ன? நமது வீரர்கள் ஒரு நல்ல போரைச் சந்தித்து வெகு நாட்களாகி விட்டது. அதைச் சந்தித்துவிட வேண்டியதுதான். வெற்றி நம் பக்கம்தான்" என்றான் இளவழுதி. அவன் குரலில் உஷ்ணமும் உறுதியுமிருந்தது.

"நல்லது இளவழுதி! நீ பக்கத்தில் இருக்கையில் வெற்றி கூடவே இருப்பது போலத்தான். ஆனாலும் இந்த இயற்கைச் சூழல் நமக்குப் புதிது. நாம் முற்றிலுமாக வேறு நாட்டில் இருக்கிறோம். ஆதலால் எதிரியின் பலம், பலவீனம் இரண்டையும் அறிந்து போரில் இறங்குவதுதான் புத்தி சாதுரியம். இதனால் நாம் நமது படைகளின் சேதாரத்தைக் குறைக்க முடியும். நாம் இங்கேயே முகாமிடுவோம். நமது ஒற்றர் படையின் தலைவனை வரச்சொல். அவனுக்கு வேலை வந்து விட்டது."

அப்படியே ஒற்றர் தலைவன் வரவழைக்கப்பட்டான். அவன் வந்ததும் மன்னர் அவன் தோளில் கைபோட்டு அவனைத் தனியிடத்துக்கு அழைத்துச் சென்று, அவன் காதில் ஏதோ ரகசியம் பேசினார். ஒற்றர் தலைவனும் தலைவணங்கி எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அகன்றான்.

தனக்காக அமைக்கப்பட்ட கூடாரத்தை நோக்கிச் சென்றார் மன்னர். உள்ளே சென்று இருக்கையில் அமர்ந்ததும் வெகு நேரம் சிந்தனை வயப்பட்டிருந்தார். பிறகு நறுக்கு ஓலையை எடுத்து எழுதினார். அதை வீரன் ஒருவனை அழைத்து, "இதை வஜ்ரஹஸ்தனிடம் சேர்ப்பித்துவிட்டு பதில் வாங்கி வா!" என்றார்.

வீரன் அகன்றதும், ''மன்னர் சிந்தனைவயப்பட்டிருப்பதைப் பார்த்தால், போருக்கு பயப்படுவதுபோலத் தோன்றுகிறது'' என்றான் அருகிலிருந்த இளவழுதி.

''ம்ம் அப்படியா! போருக்குப் பயப்படவில்லை இளவழுதி. மனித உயிர்கள் தேவையில்லாமல் மண்ணில் சவமாக விழ வேண்டாமே என்ற கவலை வந்துவிட்டது. இதைத் தடுக்க சில யுக்திகளைக் கையாளுவது நம் கடமை. அதற்கான யோசனைகள் தான் என்னை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது. இதை பயம் என்று கேலி செய்கிறாய். இள ரத்தமில்லையா உனக்கு. அதனால் தான் இப்படிப் பேசுகிறாய்!'' என்ற மன்னரின் குரலில் ஆழ்ந்த வேதனை தென்பட்டது.

''போரை நாமா வரவழைக்கிறோம்? தானே வலிய வந்தால் அதை வரவேற்க வேண்டியதுதானே!''

''ஆம், உண்மைதான். வஜ்ரஹஸ்தன் எப்படி நடந்து கொள்ளப் போகிறான் என்பதைப் பொறுத்தது அது. அவன் உனக்கு நிறைய வேலை கொடுப்பான் என்றுதான்படுகிறது. நாம் வடபுல யாத்திரை செல்வதும் வெற்றி பெறுவதும் உறுதி. அப்படியிருக்கும்போது வஜ்ரஹஸ்தன் போன்றவர்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்படத்தானே செய்யும். நம்மை எதிர்கொண்டழைத்தால் அவன் வீரம் விலைபோய் விட்டதாக ஆகிவிடாதா? அவனது போதகர்கள் அப்படித்தானே சொல்கிறார்கள்'' என்றார் மன்னர்.

''நமக்கு நாடு பிடிக்கும் ஆசை ஏதுமில்லை என்று விளக்கிவிட்டால் எல்லாம் சுலபமாகிவிடுகிறது?''

''சுலபந்தான். அவன் அதை ஒத்துக்கொள்ள வேண்டுமே.''

''அதில் என்ன இடைஞ்சல்?''



''இடைஞ்சல் இருக்கிறது. தமிழர்கள்மீது அவன் விதைத்து வைத்திருக்கும் எதிர்ப்புணர்வில்தான் அவனது பலமே இருக்கிறது. அப்படியிருக்கையில் நம்முடன் சமரசமாகிப் போனால் அவன் அரசனாக நீடிக்க முடியாத வகையில் தாயாதிக் காய்ச்சல் அங்கே உண்டு. அதனால் வஜ்ரஹஸ்தன் ஒருநாளும் நம்மிடம் சமரசமாகப் போக மாட்டான்'' என்று மன்னர் விளக்கினார்.

அப்போது ஒற்றன் கொண்டு வந்து கொடுத்த ஓலையில் இருந்த செய்தி இளவழுதிக்கு மகிழ்ச்சியையும் அரசருக்கு அருயையையும் அளித்தது.

# 48. கலிங்க மன்னனுடன் போர்

கலிங்க மன்னன் வஜ்ரஹஸ்தனிடமிருந்து வந்த ஓலையில் இருந்த செய்தி இதுதான்: 'நீங்கள் எங்களுடன் சமாதானமாகப் போவது நன்மை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். யோசித்துப் பார்த்தேன். அதில் நன்மையைவிடத் தீமையே எங்களுக்கு அதிகம். ஆதலால் போரிட்டு வெற்றிக் கொள்ளுங்கள்' என்று கண்டிருந்தது. தான் படித்த அந்த ஓலை நறுக்கை மன்னர் நெடுஞ்சேரலாதன் சிந்தனையினூடே இளவழுதியிடமும் நீட்டினார். அதைப்படித்த இளவழுதி முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

இதைக் கண்ட மன்னர், "என்ன இளவழுதி! உன் விருப்பம் நிறைவேறி விட்டது அல்லவா?" என்றார்.

"மன்னர் மன்னா! இதில் என் விருப்பம் என்பது எதுவுமில்லை. அது வஜ்ரஹஸ்தனின் விருப்பமாக அல்லவா இருக்கிறது!" என்று பதில் கேள்வி எழுப்பினான்.

மேலும், "நாமாக சண்டைக்குப் போவதில்லை. வந்த சண்டையையும் விடுவதில்லை. இது தாங்கள் அறிந்ததுதானே" என்று கேட்கவும் செய்தான்.

"ஆம்! நாமாகப் போரிடுவது கூடாது. வலிய வருகிற சண்டையையும் மோதிப் பார்த்துவிட வேண்டியதுதான்" என்றார் மன்னர்.

"அப்படியென்றால் போருக்கு அயத்தமாக வேண்டியது தானே?"

"அப்படித்தான் நினைக்கிறேன்" என்ற மன்னர், "போர் என்று வந்தால் நாம் ரிஷிகுல்யா நதியைத் தாண்டித்தான் மகேந்திர மலையின் மறுபகுதியை அடைய முடியும். அங்குதான் வஜ்ரஹஸ்தனின் அரண்மனை இருக்கிறது. ஒருபுறம் இயற்கையாகவே அமைந்த மலைகள் அரணாக இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இந்த நதி வேறு அவனுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. சமீபத்திய பருவ மழையால் ரிஷிகுல்யாவில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதை நமது படைகள் தாண்டிச் செல்வது என்பது சுலபமில்லை. மேலும் துணிந்து ஆற்றில் இறங்கினால் நமது படைவீரர்களில் பாதிப்பேரை நாம் இழந்து விடுவோம். இதையெல்லாம் யோசித்துத்தான் வஜ்ரஹஸ்தன் இறுமாப்புடன் இருக்கிறான். அதனால்தான் நாம் இங்கு வந்ததும், நதியைத் தாண்ட முடியுமா? என்று ஆராய்ந்து வர ஆட்களை அனுப்பினேன். அவர்கள் வரட்டும்" என்றார் மன்னர்.



மன்னர் மேலுக்கு போரைத் தவிர்ப்பதுபோலக் காட்டினாலும் பெருத்த திட்டத்துடன்தான் அனைத்து விஷயங்களிலும் இருக்கிறார் என்பதை அறிந்த இளவழுதி பெருமிதம் அடைந்தான். ஆனால் அவனுக்கு சந்தேகம் ஒன்று இருந்தது. தன் மனதில் தோன்றிய சந்தேகத்தை மன்னர் முன் வைக்கவும் செய்தான்.

"மன்னா! வெள்ளம் வடிவது இப்போது இல்லையென்றால் நாம் வெகுகாலம் காத்திருக்க வேண்டியிருக்குமே. அப்படிக் காத்திருப்பது என்றால் நமது வீரர்கள் உற்சாகம் இழந்துவிடுவார்களே!" என்றான்.

"நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது. எதற்கும் நதியைக் காணச் சென்றவர்கள் வரட்டும்" என்றார் மன்னர்.

நதியைத் தாண்ட முடியுமா என்று ஆராயப் போயிருந்தவர்கள் அங்கே வந்தார்கள்.

"நதி உற்பத்தியாகும் பகுதியில் ஓரிடத்தில் குறுகிய இடைவெளியில் அது ஓடுகிறது. அந்த இடத்தில் பாலம் அமைத்து தாண்ட முடியும். அதற்கப்பால் கிழக்கு நோக்கில் நதியின்

போக்கில் போனால் மூன்று ஆறுகளைக் கடப்பது கடினமாகிவிடும்" என்று தெரிவித்தார்கள்.

மன்னர் தன் புரவியில் ஏறிக்கொண்டார். ஆட்கள் கண்டு வந்த பகுதி நோக்கி தன் புரவியைச் செலுத்தினார். இளவழுதியும் தனது புரவியில் ஏறிக்கொண்டு மன்னரைப் பின்தொடர்ந்தான். எங்கு நோக்கினாலும் பச்சைப்பசேலென்ற மரங்கள் அளித்த மரகத ஆடையைப் பூண்டிருப்பது போன்ற கவர்ச்சித் தோற்றத்தில் மகேந்திர மலை அவர்கள் மனதை நிறைத்தது. இந்த இயற்கைக் காட்சிக்கு நிலவாறும் அருமையான வித்தியாசத்தைத் தோற்றுவித்தது.

ரிஷிகுல்யா நதியின் அதிவேக நீரோட்டத்தையும் அதன் பயங்கர ஆழத்தையும் பிரவாகத்தில் தெரிந்த சுழல்களாலும், மிதந்து வந்த நுரைகளாலும் கண்டு கொண்டான் இளவழுதி. இந்த நதியைத் தாண்டுவது என்பது குதிரைக் கொம்புதான் என்பதையும் உணர்ந்து கொண்டான். படகின் துணைகொண்டு மறுகரைக்குச் செல்லலாம். ஒரு சிலருக்குத்தான் சாத்தியம். ஆனால் பெரும் சைன்யத்தை சிறு படகின்மூலம் எப்படி அப்பால் கொண்டு செல்ல முடியும் என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

இரண்டு நாழிகைகள் நதிக்கரையோரமாகப் பயணம் செய்த மன்னரும் இளவழுதியும் ஆட்கள் குறிப்பிட்ட அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த குறுகிய இடைவெளியில் நதி வெ? வேகமாகப் பாய்ந்தது. தவறி விழுந்தால் இமைக்கும் நேரத்தில் உடல் எங்கோ சென்றுவிடக்கூடிய வேகம். அந்த இடத்தில் நீரின் ஆழம் இரண்டு விரல்களின் உயரமே இருந்தது. உறுதியாக மரங்களால் பாலம் ஒன்றை அமைத்து அந்தப் பாறை இடைவெளியில் போட்டால் எளி தாக மறுகரைக்குச் சென்றுவிடலாம் என்பதை மன்னர் கண்டு கொண் டார். அவரது யோசனையை மற்றவர்கள் செயல்படுத்தினார்கள்.



அடுத்த இருநாட்களில், முன்யோசனையுடன் கொண்டுவந்திருந்த சாமான்களுடன் அங்கிருந்த மரங்களை அழித்து ஒரு மரப்பாலம் தயாரானது. அதை வெகு பத்திரமாக அந்த நதியின் இடைவெளியில் கச்சிதமாகச் சேர்த்தார்கள். இவையெல்லாம் எதிரிகளுக்குத் தெரியாமல் இரவு நேரங்களிலேயே நடந்தது. பாலம் அமைந்த அடுத்த இரண்டு நாட்களில் சேரமன்னரின் சைன்யங்கள் பாலம் சிறிது சிறிதாக மகேந்திர மலையின் அடுத்த பகுதிக்குப் போய்ச் சேர்ந்தது.

பாலம் அமைக்கும் கலைஞர்கள் அந்த வேலையைச் செய்யும்போதே படைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவரவர்களுக்கு இன்னின்ன வேலைகள் என்று உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. நான்கு பிரிவுப் படைகளும் தகுந்த தளபதிகளுடன் கலிங்கத்தின் அரண்மனையை இடது-வலது, முன்புறம்-பின்புறம் என்று வியூகம் அமைத்து தாக்குவதற்குத் தயாரான நிலையில் இருந்தன.

அரண்மனைக்கு முன்புறம் இளவழுதியும் பக்கவாட்டில் இரண்டு உபதளபதிகளும் படைப் பிரிவிற்குத் தலைமை தாங்கினார்கள். அரண்மனைக்குப் பின்புறம் நின்ற படைக்குத் தலைமை வகித்த தளபதி அழகில் சிறந்த இளம் வாலிபனாகக் காட்சியளித்தான். இதுவரை வீரர்கள் யாரும் கண்டிராத இந்தத் தளபதியைப்பற்றி வீரர்கள் மத்தியில் பெரும் பேச்சாய் இருந்தது. எந்தப் பகுதியிலிருந்து இந்தத் தளபதி வந்தார், எங்கு பயிற்சி பெற்றார் என்பதெல்லாம் இவர்களுக்குப் புரியாத புதிராயிருந்தது. ஒவ்வொரு வீரனும் அவனை நெருங்கிப் பார்த்துப் பேசுவதை பெரிய பேறாகக் கருதத் தலைப்பட்டார்கள். இளவழுதிக்கு மட்டுமன்றி மன்னருக்கும் செய்தி பரவிற்று. அவர்களுக்கும் இதே சந்தேகம் உண்டு என்றாலும், போர் குறித்த வேலைகளின் மும்முரத்தில் இருந்ததால் இதற்கான விசாரணைகளில் இறங்காது தங்கள் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

படைகள் வியூகம் அமைக்கப்பட்டபின் அதிகாலை வேளையில் போர்ச்சங்கம் முழங்கப்பட்டபோது வஜ்ரஹஸ்தன் விழித்துக் கொண்டான். 'இரு கரைகளும் ஒன்றாகப் பெருக்கெடுத்து ஓடும் ரிஷிகுல்யா நதியைத் தாண்டி அவ்வளவு பெரிய சேனை வரமுடியாது' என்ற தீர்மானத்துடன் கவலையற்று இருந்தான் அவன். இந்தப் போர்ச் சங்கத்தைக் கேட்டு விழிப்புற்று எழுந்த சமயத்திலும், இது நடக்கக்கூடிய நிகழ்ச்சியா என்று நினைத்தான்? ஏதோ மனப்பிராந்தியால் அப்படித் தோன்றுவதாக எண்ணி மீண்டும் தனது பஞ்சணையில் படுத்தவனை கோட்டைக் காவலனின் பதற்றக் குரல் வாரிச் சுருட்டிக்கொண்டு எழவைத்தது.

''மன்னா! சேரநாட்டுப் படை நம்மை நாலாப்பக்கங்களிலும் முற்றுகையிட்டிருக்கிறது'' என்றான்.

''ஆ! என்ன? அப்படியா?'' என்று குரல் கொடுத்த வஜ்ரஹஸ்தனின் உடல் கண நேரம் ஆடிப் போனது. இந்தப் பெரு வெள்ளத்தில் நீந்தி எவ்விதச் சேதாரமும் இல்லாமல் நம்மை முற்றுகையிடவும் செய்துவிட்டது என்றால் எதிரி பலம் பொருந்தியவனாகத்தான் இருக்க வேண்டும் என்று அப்போதுதான் நினைத்தான். செய்வதறியாமல் திகைத்தான். அவசரத்தில் ஏதேதோ உத்தரவுகளைப் பிறப்பித்தான். தளபதிகளை அழைத்து கடிந்து கொண்டான். ஒற்றர்களைக் கூப்பிட்டு ஏக வசனத்தில் பேசினான். கடைசியாக போர் உடைகளை அணிந்து கொண்டு தனது அறையை விட்டு உருவிய வாளுடன் வெளியேறினான். கோட்டையின் மதில்கள் மீதேறி நாலாப் பக்கமும் சுற்றிச் சுற்றி வந்து படைகளின் பலத்தைக் கண்டு திகைப்புற்றான். எதிரியை எளிதாக எண்ணி இறுமாந்திருந்த தனது நிலையை எண்ணி வெட்கப்பட்டான்.

வாயிலின் முன்னே நின்ற பெரும் படைக்கு பெரும் மரப்பலகைகளை முகப்பாகவும், கேடயமாகவும் கொண்டு நின்ற யானைகளின் வரிசையைப் பார்த்தபோது கிலியால் அவன் வயிறு



கலங்கியது. மேலிருந்து எவ்வளவுதான் அம்புகள் பொழிந்தாலும் அனைத்து அம்புகளும் யானையின் தந்தங்களில் பிணைக்கப்பட்டிருந்த பலகைகளில் பட்டுத் தெறிக்குமேயொழிய எதிரிகளின் நெஞ்சங்களைப் பிளக்காது என்பதைக் கண்டு விக்கித்தான்.

கடைசியாக ஒலித்த போர்ச் சங்க ஓசை கேட்டு அதையே உத்தரவாகக் கொண்டு சேரநாட்டுப் படைகள் உயிரின் மீதுள்ள ஆசையை விட்டு அசுர வேகத்துடன் அரண்மனையைத் தாக்கின. இரு பக்கங்களிலும் கணக்கற்ற நஷ்டம். வஜ்ரஹஸ்தனது படைகள் போதிய திட்டங்கள் எதுவும் இல்லாததால், எப்படிப் போரிடுவது? எந்தப் பக்கம் தாக்குவது? என்று ஆணையிடவும் எவரும் இன்றி தத்தளித்தது. மூன்று பக்கங்களிலிருந்தும் எழுந்த தாக்குதலைச் சமாளிக்க முடியாது சிக்கி நசுங்கியது.

# 49. ஆண் வேடத்தில் சாதனை

கோட்டை மேலிருந்து பொழியப்பட்ட விஷ அம்புகள் அனைத்தும் பலனின்றி யானைகளின் தந்தத்தில் பிணைக்கப்பட்டிருந்த பலகைகளால் தடுக்கப்பட்டு விட்டதால் இளவழுதியும், அவனது பிரிவு வீரர்களும் கோட்டையின் சமீபம் நெருங்கினார்கள். விஷ அம்பினால் தாக்கப்பட்ட ஒருசில புரவிகள் முக்கி முனகி முன்னேறின. வீரர்கள் அந்தப் புரவியை அப்படியே விட்டுவிட்டு காலாட்படைகளோடு சேர்ந்து கொண்டு, ஈட்டி, அம்பு போன்றவற்றால் கோட்டையைக் காத்து நின்ற வீரர்கள் மீது வீசினார்கள். யானைப்படை உக்கிரம் கொண்டு கோட்டையை நோக்கி வெகு வேகமாக முன்னேறியது. காவலுக்கு நின்ற வீரர்களின் எண்ணிக்கை குறைந்து இருந்ததால் அவர்கள் திகைத்து நின்ற நேரத்தில் யானைகள் கோட்டைக் கதவை பலம் கொண்ட மட்டும் முட்டித் தாக்கின.

கோட்டையைக் காத்து நின்ற வீரர்களும் செயலற்றுப் போனார்கள். சில வீரர்கள் சேர வீரர்களுடன் உக்கிரத்துடன் மோதினர். வாட்களின் மோதலும், ஈட்டிகளோடு ஈட்டிகள் உராய்தலும், தடுக்கப்பட்டும் எதிரிகளால் தட்டிவிடப்படும் வீழ்ந்த வாட்கள், ஈட்டிகள் இவற்றால் ஏற்பட்ட ஒலிகளும் அந்தக் கோட்டைப் பகுதியை நிகரற்ற போர்க்களமாகச் செய்தது.

கலிங்கப்படை பெரிதாயினும் எதிர்பாராமல், பயிற்சி ஏதுமில்லாமல், வழி நடத்தும் தளபதிகள் இல்லாமல் போனதாலும், நாலாப்பக்கங்களிலும் திடீர் திடீரென வந்த பலவித தாக்குதல்களினாலும் சிறிது சளைக்கவே செய்தது. அந்தச் சமயத்தில் இளவழுதி கோட்டைச் சுவரின் மீது ஏறினான். அவனைத் தொடர்ந்து வீரர்கள் பலரும் ஏறி மதிலின் தளத்தில் நின்ற வீரர்களை வெட்டி வீழ்த்தினர். இளவழுதி தனது வியூகத்தை உடனுக்குடன் மாற்றியதால் கலிங்க வீரர்கள் போராடும்



உணர்வினை அவ்வப்போது இழந்தனர்; திக்கு முக்காடினர். போர் துவங்கி பல நாழிகைள் ஓடிவிட்டாலும் வெற்றி தோல்வி யார் பக்கம் என்பது திட்டமாகத் தெரியவில்லை. ஒருபுறம் தான் மண்ணையும் மன்னனையும் காப்பாற்றத் துடிக்கும் கலிங்கத்தின் மிகப்பெரிய சைன்யம்; மறுபுறம் தமிழர் வீரத்தை நிலைநாட்டத் துடிக்கும் சேரர் படை. ஆகவே சேதம் என்பது இருபக்கமும் அதிகமாகவே இருந்தது.

உச்சி தாண்டி ஆறு நாழிகைகள் கடந்துவிட்ட சமயத்தில் வஜ்ரஹஸ்தன் தனது பெண்டு பிள்ளைகளுடன் ரகசிய வழியில் தப்பிக்க முயல்கிறான் என்ற தகவல் இளவழுதிக்கு வந்தது. இந்தச் செய்தி கலிங்க வீரர்கள் மத்தியிலும் வேகமாகப் பரவவே அவர்கள் முற்றிலுமாகச் செயலிழந்து நின்றார்கள்.

இடது, வலது புறங்களில் போரிட்ட தமிழர்களும் எதிரிப்படைகளைக் கொன்று குவித்து முன்னேறி வந்து இளவழுதியுடன் சேர்ந்து கொண்டார்கள். அவர்களின் முகத்தில் வெற்றியின் அறிகுறி. அவர்கள் ஏககாலத்தில் வஜ்ரஹஸ்தனைத் தேடிச் சென்றபோது அவனைச் சபையில் காணவில்லை. அந்தப்புரத்தை அடைந்தபோது அங்கே தாதிமார்கள், சில வேற்று நாட்டு அடிமைப் பெண்கள் தவிர அரச குடும்பத்தைச் சேர்ந்த யாரும் இல்லை என்பது அங்கிருந்த அலங்கோலத்தில் தெரிந்தது. அங்கே இருந்த அடிமைப் பெண்களில் ஒருத்தியைப்பிடித்து, "எங்கே உங்கள் மன்னர்?" என்று உபதளபதிகளில் ஒருவன் கேட்க, "அவர்கள் சுரங்கவழியில் தப்பிச் செல்கிறார்கள்" என்றாள் தாதி.

அவளை வழிகாட்டச் சொல்லி சுரங்க அறையின் வாயிலை அடைந்தான் இளவழுதி. "உடன் சிலவீரர்கள் மட்டும் வந்தால் போதும். உபதளபதிகள் இங்கேயே நிற்கலாம். சமயத்திற்கு ஏற்ப உசிதப்படி அவர்கள் நடந்து கொள்ளலாம்" என்று ஒரு தீப்பந்தத்துடன் சுரங்கத்திலுள்ளே இறங்கினான்.

ஒரு நாழிகைப் பயணத்துக்குப்பின் வெளிக்காற்று சிலுசிலுவென வீச, அரண்மனைக்கு வெளியே வந்து விட்டோமென்ற எண்ணத்துடன் தனது நடையை வேகமாகப் போட்டான். சரியாக அரண்மனையின் பின்புறத்தை அடைந்து இருந்தது அந்தச் சுரங்க வழி.

மன்னர் வகுத்த திட்டப்படி புதிய உபதளபதியின் தலைமையில் இங்கே ஒரு படைப்பிரிவு நின்றிருக்க வேண்டுமே என்று எண்ணமிட்டபடி இளவழுதி சுற்றும் முற்றும் பார்த்தான்.

தூரத்தில் தெரியும் கணவாய் வழியாக ஒருவன் பாய்ந்து முன்னேறுவதும், அந்தப் பகுதியில் பெரிய சலசலப்பும் சேரநாட்டு வீரர்களின் ஆவேசக் குரலும் துல்லியமாகக் கேட்க, இளவழுதியும் அவனது வீரர்களும் அந்தத் திசையை நோக்கி ஓடினார்கள்.

போர் துவங்க போர்ச் சங்கம் முழக்கப்பெற்று ஐந்து நாழிகைகள் கடந்தும் வெற்றிபற்றி செய்தி வராமல் அரண்மனையின் பின்புறத்தை முற்றுகையிட்டிருந்த படைவீரர்கள் சோம்பிக் கிடந்த நேரத்தில் தூரத்தே இருந்த நான்கு கால் மண்டபத்தில் அதன் தளபதி தரையில் தூசு தட்டிவிட்டுச் சிறிதே ஒருக்களித்துச் சாய்ந்த நேரத்தில் மண்டபத் தரைக்குள்ளே ஏதேதோ ஒலி கேட்டு எழுந்து உட்கார்ந்தான். வெளியே எந்த ஒலியும் கேட்காததால் மீண்டும் தரையில் படுத்து இடது காதை தரையோடு தரையாக வைத்து உற்றுக்கேட்க அந்தச் சத்தம் அருகில் நெருங்கி வருவது நன்கு புலனாகவே உஷாரானான்.

சமயோசிதமாக வீரர்கள் எல்லாரையும் பக்கத்திலுள்ள காடுகளில் ஒளிந்து கொள்ளச் சொல்லிவிட்டு தானும் ஒரு செடி மறைவில் மறைந்து கொண்டான். அவன் எதிர்பார்த்தது போல சிறிது நேரத்திற்கெல்லாம் மண்டபத்தின் மத்திய பகுதி மேல் நோக்கித் திறக்க அதிலிருந்து ஒரு பெண் உருவம் வெளிவந்தது. அவள் அரண்மனைத் தாதியாயிருக்கலாம். அவளைத் தொடர்ந்து



மேலும் பல பெண்கள் வெளிவரத் தலைப்பட்டார்கள். உடன் சில வீரர்கள், தொடர்ந்து வஜ்ரஹஸ்தன் தோன்றி மண்டபத்தின் மேல் பகுதியை மூடிவிட, பக்கத்திலுள்ள கணவாய் வழியாக இமைக்கும் நேரத்தில் பல்லக்குகள் வந்து நிற்க அதில் பெண்கள் யாவரும் ஏறிக் கொண்டார்கள். கலிங்க நாட்டு வீரனொருவன் கொண்டுவந்திருந்த புரவியில் வஜ்ரஹஸ்தன் ஏறிக்கொள்ளும் சமயத்தில் மறைந்திருந்த சேரநாட்டு உபதளபதி வெளியே வந்து வஜ்ரஹஸ்தனது புரிவியின் கடிவாளத்தைப் பற்றிக்கொண்டான். ''உயிருக்குப் பயந்து ஓடுவது மன்னருக்கு அழகில்லை'' என்று சொல்லவும் செய்தான்.

வஜ்ரஹஸ்தன் வேறுவழியின்றி புரவியிலிருந்து இறங்கிய சுருக்கிலேயே ஆவேசமாக வாளைவீசவும் செய்தான். உக்கிரமாக நடந்த இந்த வாள் போரில் சேரநாட்டுத் தளபதியன் கை தாழவே, இமைக்கும் நேரத்தில் வஜ்ரஹஸ்தன் தனது வாளை அவன் விலாவில் பாய்ச்சிவிட்டான். எதிர்பாராத இந்தத் தாக்குதலால் சேரநாட்டு உபதளபதி கீழே சாய, கோபமுற்ற சேரநாட்டு வீரர்கள் ஏககாலத்தில் வஜ்ரஹஸ்தனைச் சூழ்ந்துகொள்ள அவனது கழுத்தைச் சுற்றி பல வாட்கள் முற்றுகையிட்டன. அதே நேரத்தில் இளவழுதியும் வீரர்களும் அங்கு வந்து சேர, வஜ்ரஹஸ்தன் செய்வதறியாது ஒரு நிமிடம் நின்றபின் தனது வாளை வானில் வீசி அது கீழ்நோக்கி வரும்போது வாளின் நுனிக்குத் தனது மார்பைக் காட்டிக்கொண்டு நிற்க, கணநேரத்தில் அவனது வாளுக்கே இரையாகிப் போயிருக்கலாம். ஆனால் அப்படி ஒரு வீரமரணத்தை வஜ்ரஹஸ்தனுக்கு வழங்க இளவழுதிக்கு விருப்பமில்லை போலும். பாய்ந்து வந்த வஜ்ரஹஸ்தனை அப்பால் தள்ளிவிட்டு தன் வாளால் கீழ்நோக்கி வரும் வஜ்ரஹஸ்தன் வாளையும் தட்டிவிட்டான்.

வஜ்ரஹஸ்தனை விலங்கிட்டு வெற்றி முழக்கத்துடன் சேரநாட்டு வீரர்கள் நெடுஞ்சேரலாதனின் பாசறைக்கு இழுத்துச்

சென்றதும், இளவழுதி மயக்கமுற்று கீழே விழுந்து கிடக்கும் உபதளபதியின் பக்கம் பார்வையைச் செலுத்தினான். அந்த இடத்தில் உபதளபதியைக் காணோம். சிகிச்சையளிப்பதற்காக பாசறைக்கு எடுத்துச் சென்றிருப்பதாக வீரர்கள் சொல்லவே, தனது புரவியில் ஏறிக்கொண்டு சிகிச்சையளிக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

பாசறையைச் சுற்றிலும் ஏராளமான வீரர்கள் காயமுற்றுக் கிடந்தார்கள். அவர்களுக்கு சேரநாட்டு வைத்தியர்கள் தங்களது திறமையால் சிகிச்சை செய்து கொண்டிருந்தனர். இளவழுதி நேராக தலைமை வைத்தியரிடம் சென்று, ''உபதளபதியின் காயம் எப்படி இருக்கிறது?'' என்று வினவினான்.

வைத்தியர் வாயால் பதில் சொல்லாமல் கையால் கூடாரத்தின் பக்கமாகச் சுட்டிக்காட்டினார்.

இளவழுதி கூடாரத்தை நெருங்கியபோது, ''மகளே! வைத்தியனிடம் வெட்கப்பட்டு பயனில்லை. முகத்தை அந்தப் பக்கம் திருப்பிக்கொள். நான் மருந்திடுகிறேன். பெண்கள் வேலை அந்தப்புரத்தில் இருக்கிறது. நீயோ ஆண் வேடமிட்டு போர்க்களத்திற்கு வந்து வீணான சிரமத்துக்கு ஆளாகி இருக்கிறாய். புதிய உபதளபதிபற்றி வீரர்கள் புகழ்ந்து பேசுகிறார்களே, என்ன , விஷயம் என்று அப்போதே சந்தேகமிருந்தது. அழகான பெண்களுக்கு ஆண் வேடம் போட்டால் தெரியாமல் போய்விடும் என்று நினைத்தாயா?'' என்றார் மன்னர், அவளது காயங்களுக்கு மருந்திட்டவாறே.

''மன்னிக்க வேண்டும் மன்னவா, உங்களிடமோ உங்கள் படைத்தலைவரிடமோ நானும் உடன் வருகிறேன் என்றால் நீங்கள் அனுமதிப்பீர்கள் என்பது நிச்சயமில்லை. உங்களது வடபுல யாத்திரை வெற்றிபெற வேண்டுமென்பது என் ஆசை. அதற்கு என் தந்தையும் தனது பரிபூரண ஆசியை வழங்கியிருக்கிறார். அப்படியிருக்க, அவரது ஆசி நிறைவேற நான் அந்தப்புரத்தில் இருப்பது முறையா? மேலும்...'' என்று சொல்ல வந்ததை பாதியிலேயே நிறுத்தினாள் அலை அரசி. அவள் பார்வை கூடாரத்தின் வாயில் பகுதியில் நிற்கும் இளவழுதியை நோக்கியிருந்தது.



''உன் இளவழுதியைவிட்டுப் பிரிந்திருக்கவும் உன்னால் முடியாது இல்லையா?'' என்று சிறிது நகைத்தார் மன்னர்.

''அலை அரசி, நன்றாக இருக்கிறது உன் செயல். உன்னால் எங்களுக்கு பெருத்த அவமானம்'' என்று வருத்தம் தொனிக்கும் குரலில் இளவழுதி சொல்லிக் கொண்டே அவளது படுக்கையருகில் வந்தான்.

''வா இளவழுதி! என்ன அப்படிச் சொல்லிவிட்டாய். இவளால் அல்லவோ வஜ்ரஹஸ்தன் பிடிபடும்படியாயிற்று.''

''அதைத்தான் சொல்கிறேன் மன்னா. தங்களுக்கு படைத்தலைவன் என்ற பெயரில் நானோ, பூழித் தேவனோ இருக்க எந்த யோக்கியதையும் இல்லாமல் செய்துவிட்டாள் இந்தப் பெண்.''

''அவள் உன்னில் பாதியில்லையா? அப்படியிருக்க அந்த வெற்றியில் உனக்கும்தானே பங்கிருக்கிறது.'' - மன்னர்.

''உண்மை, உண்மை. இதை இளவழுதி மன்னித்தாலும் இந்த பூழித்தேவன் மன்னிக்கத் தயாரில்லை.''

''அப்படியானால் அரசியின் இந்தச் செயலுக்குத் தண்டனை உண்டு. அப்படித்தானே?''

''ஆம். அப்படித்தான்!''

''என்ன தண்டனை?''

''நாம் இவர்கள் இருவரையும் தனியே இருக்க சிறிது நேரம் அனுமதிப்பதுதான்'' என்று பூழித்தேவன் சொல்ல, மன்னர் உள்பட அங்கிருந்த அனைவரும் கேலிச்சிரிப்புச் சிரித்தார்கள். அலை அரசி பார்வையை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள். அவள் முகத்தில் நாணம் கனிந்தது.

கூடாரத்தின் திரையை எடுத்து மறைத்துவிட்டு அலை அரசியின் அருகில் வந்து குனிந்து அவளது இதழ்களை தன் இதழ்களுடன் சேர்த்தான் இளவழுதி. மற்ற எந்த மருந்தையும் விட இந்த இதழமுதம் இதமாயிருந்தது அவளுக்கு.



# 50. மன்னன் அதிராஜனாதலும் இளவழுதி-அலை அரசி திருமணமும்

மடியில் கிடந்த அலை அரசியின் உடலை இரு கைகளாலும் வாரி எடுத்து மார்பில் சாத்திக் கொண்டு, அவள் கண்களுடன் தனது கண்களைக் கலந்தான் இளவழுதி. அந்த அழகியின் சமீபத்தால், அவள் எழில்கள் அசைந்த அழகால், அவள் உடல் காட்டிய உணர்ச்சித் துடிப்பால் வீரனான அவன் துன்பமும் ஓரளவு அகலவே, ''அலை அரசி, உன் அழகு எந்தக் கவலையையும் அழித்துவிடும். எந்த இரும்பு மனத்தையும் உருக்கிவிடும்'' என்று கூறிக் கொண்டு அவள் மார்பில் தன் முகத்தைப் பதித்தான்.

''ஆ! ஆ! பார்த்து, வஜ்ரஹஸ்தனது வாள் பாய்ந்த இடம் சற்றுக் கீழே இருக்கிறது'' என்று விலாவைச் சுட்டிக் காட்டினாள். தொடர்ந்து இளவழுதி எழுந்து விடாமல் கைகளை உயரே தூக்கி அவனது கழுத்தைக் கட்டிக் கொள்ளவும் செய்தாள். உணர்ச்சி மிகுதியால் நெளிந்தாள். தன்னைத் தாங்கி நின்ற அவன் கைகளில் இடது கை மட்டும் தன் உடலைத் தாங்கியிருந்ததையும், வலது கை ஆராய்ச்சியில் ஈடுபடுவதையும் நினைத்து, அந்தக் கையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அவனது மடியில் புரண்டாள். அப்படிப் புரண்டதால் அவனது கை அவள் உடலுக்கு அடியில் சிக்கிக்கொண்டது. சிக்கிய கை சிக்காத கையைவிட இம்சை விளைவிக்கவல்லதென்பதைப் புரிந்து கொண்டாள் அலை அரசி.

சரேலென எழுந்தவள் வைத்த கண் எடுக்காமல் அவனைப் பார்த்தாள்.

''அலை அரசி'' என்று மெதுவாக அழைத்தான் இளவழுதி.

'உம்'. ஒரு ஒலிதான் அவளிடமிருந்து பதிலாக வந்தது.

அந்த ஒலியில் ஓராயிரம் அர்த்தங்கள் இருப்பினும் அவற்றைக் கவனிக்கவில்லை இளவழுதி.

"நீ செய்தது நியாயமா?"

"எது?"

"சொல்லிக்கொள்ளாமல் ஆண் வேடமிட்டு எங்களுடன் படையில் கலந்தது."

"உங்களைவிட்டுப் பிரிந்திருக்க மனமில்லை. உங்களிடம் கேட்டால் மன்னர் மீது பழி போடுவீர்கள். அவரும் போர்க்களத்திற்குப் பெண்கள் தேவையில்லையென்பார். அதனால் அரசியிடம் சொன்னேன். அவரும் மறுத்தார். எனது கண்ணீர் அவரைச் சம்மதிக்க வைத்தது. நீங்கள் புறப்பட்ட மூன்றாம் நாள் உங்கள் படையுடன் நானும் ஒரு தளபதியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். இதற்கு மந்திரி அநிருத்தர் உதவினார்."

"கடைசியில் உன் பயமே நிருபணமாயிற்று இல்லையா?"

"எப்படி?"

"வாள் தாக்கியதும் கீழே விழும்படியான பூஞ்சை உடம்புக்காரியான நீ மயங்கி விழுந்து உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டாயே?"

"இல்லை, என் வாள் வீச்சை அரேபியாவில் கண்ட நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்! எனது கை லாகவம் நீங்கள் அறியாததா? இதற்கு மேலும் நான் ஆண் உடையில் இருக்க விரும்பவில்லை. மேலும் ஆண் உடையில் இருப்பதே ஒரு அசௌகரியமாகப் பட்டது. ஒரு பெண் பெண்ணாக இருப்பது சுலபம் போல. அதனால் வாள் வீச்சினால் அதிர்ச்சி ஏற்பட்ட போதிலும் பெரிதும் மயங்கியதுபோல் நடித்து விழுந்தேன்" என்று விளக்கினாள் அலை அரசி.



கைது செய்யப்பட்ட முதலாம் வஜ்ரஹஸ்தன், மன்னர் நெடுஞ்சேரலாதன் முன் தலை குனிந்து நிற்க, விசாரணை எளிதில் முடிந்தது. யாரையும் அடிமைப்படுத்தும் நோக்கம் தமக்கு இல்லையென்றும், தமது நோக்கத்திற்குக் குறுக்கே நிற்பவர்களைத் தண்டிக்காமல் விடுவதில்லையென்றும் கூறி, நட்பு முறையில் இருக்கச் சம்மதித்தால் அவனையே மன்னனாக்குவதாக விருப்பம் தெரிவித்தார் மன்னர் நெடுஞ்சேரலாதன். வஜ்ரஹஸ்தனும் இதற்குச் சம்மதித்து ஓலை எழுதித் தரவே அவனிடமே அரசு ஒப்படைக்கப்பட்டது.

இளவழுதியும், பூழித்தேவனும் இந்த உடன்பாட்டுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. இருப்பினும் மன்னர் சொல்லிவிட்டால் அதை சிரமேற்கொள்வது அவர்களது பண்பானதால் வாய் பேசவில்லை.

இமயம் சென்று திரும்பும் வரை அலை அரசி அங்கு தங்கியிருப்பது என்று முடிவாயிற்று. அடுத்த இரு தினங்களில் நெடுஞ்சேரலாதனின் படைகள் வடக்கு நோக்கிப் புறப்பட்டன. வழியில் எந்த எதிர்ப்புமில்லை. மாறாக, வரவேற்பே இருந்ததால் அவர்களது பயணம் சுலுவாயிற்று. கலிங்கத்திலிருந்து பயணம் தொடங்கி அடுத்த இரு மாதங்களில் இமயத்தை அடைந்தார்கள்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெள்ளிமலைச் சிகரம். உலகத்தின் அழகெல்லாம் இங்கே வந்து குவிந்து கிடப்பதாகத் தோன்றியது மன்னருக்கு. எங்கோ கங்கோத்ரி மலையில் சிறு ஊற்றாகக் கசிவும், சலசலப்புமாகத் தோன்றியவளா இந்த கங்கைப் பெண்ணாள்? அவள் வரும் வழியெல்லாம் வளத்தைத் தந்து இங்கே இவ்வளவு பெரிய நதியாக ஓடிக்கொண்டிருக்கிறாள் என்று மலைத்தான் இளவழுதி. எதிர்க்கரையைப் பார்ப்பதற்கே கண்ணில் வலி எடுக்கிறதே. அப்படியென்றால் நதி எவ்வளவு அகலம் என்று வியந்தான். அகன்ற படகுகளில் ஏறிக்கொண்டு கங்கையைக் கடந்தார்கள்.

அடுத்த இருவாரப் பயணத்திற்குப் பிறகு மன்னர் உச்சிக்குச்சென்று சேரநாட்டு விற்கொடியைப் பறக்க விட்டார். சுற்றி நின்ற வீரர்கள், 'இமயத்தில் கொடி நாட்டிய நெடுஞ்சேரலாதன் வாழ்க, வாழ்க!' என்று வாழ்த்தொலி எழுப்பினார்கள். இளவழுதி தாள் பணிந்து மன்னரை வணங்கினான். அவனது வணக்கத்தை ஏற்றுக்கொண்டு அவனை மார்புறத் தழுவிக் கொள்ளவும் செய்தார். உடன் இருந்த பூழித்தேவனையும் மன்னர் அணைத்துக் கொண்டார். வீரர்கள் மீண்டும் வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

''இளவழுதி! இப்பொழுது நமது காலத்தில் இமயத்திற்கு வந்து கொடி நாட்டியிருக்கிறோம். இனி எதிர்காலத்தில் நமது சந்ததியினர் தொடர்ந்து தங்களது வீரத்தை நிலைநாட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இப்பொழுது போலவே எதிர்காலத்திலும் உன்னைச் சார்ந்தவர்கள் அவர்களுக்கு உதவுவார்கள் இல்லையா?'' என்று வினா எழுப்பினார்.

''நிச்சயமாக மன்னவா, நிச்சயமாக'' என்று இளவழுதி உறுதியளித்தான்.

பின்னர் மன்னரும் இளவழுதியும், பூழித்தேவனும் சமவெளிக்கு இறங்கி வந்தார்கள்.

மகத நாட்டைக் கடந்தபோது கணக்கற்ற மாந்தோப்புகளைக் கண்டு மகிழ்ச்சி எய்தினார் மன்னர். ஒரு கணம் இது காவிரிக்கரையா, இல்லை கங்கைக் கரையா என்றுகூட ஐயம் எழுந்தது மன்னருக்கு? மகத மன்னன் அபிநந்தன் மன்னருக்குப் பெரும் வரவேற்பையே ஏற்பாடு செய்திருந்தான். பாஞ்சால நாட்டரசன், அவன் கீழிருந்த நூற்றுக்கணக்கான குறுநில மன்னர்கள் தங்கள் குடிபடைகளோடு மன்னரை வரவேற்ற காட்சி... இப்படி கலிங்கத்தை அடையும் வரையிலும் - வழியில் திரும்பிய பக்கமெல்லாம் எங்கு பார்த்தாலும் மன்னர் நெடுஞ்சேரலாதனுக்கு



வெற்றி முழக்கங்கள் முழங்கப்பட்டன. ஏராளமான பரிசுகள் அந்தந்த நாட்டு மன்னர்களாலும் வழங்கப்பட்டன.

கலிங்க எல்லையில் வஜ்ரஹஸ்தனும் அவனது பரிவாரங்களும் எதிர்கொண்டழைத்துச் சென்றன. அங்கு சில நாட்கள் தங்கியிருந்தபின் அவர்கள் சேரநாட்டை நோக்கிக் கிளம்பினார்கள்.

ஆங்காங்கே அரண்மனைப் பெண்டிர், மந்திரிமார், அண்டை நாட்டு மன்னர்கள், குறுநில மன்னர்கள், வியாபாரிகள், சமூகப் பெரியவர்கள் எல்லோரும் எதிர்கொண்டழைத்தனர். விழா மண்டபத்தில் நடுநாயகமாக அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் மன்னரை உட்கார வைத்தார்கள். நல்ல நேரத்தில் அரண்மனைப் பண்டிதர் அதிராஜனுக்கு உரிய எட்டு கிரீடங்களைச் சுற்றிலுமாக நவரத்தினங்களாலும், முத்துக்களாலும், வைர வைடூரியங்களாலும் இழைக்கப்பட்ட பொற்கிரீடத்தை சூட்டினார். கூடியிருந்தவர்கள் கையொலியுடன் வாழ்த்தொலியும் எழுப்ப சத்தம் விண்ணை எட்டியது.

மன்னர் தனது ஆசனத்தில் இருந்து எழுந்து எல்லாருக்கும் தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார். அதே சுபவேளையில் இளவழுதிக்கும் அலை அரசிக்கும் திருமணத்தையும் நடத்தி வைத்தார். அலை அரசியின் கையைப் பிடித்து அழுத்தினான் இளவழுதி. அவளும் அவனை ஏறிட்டு நோக்கிய அதே சமயம் முதியவன் பெருவழுதி அங்கே வந்து தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டான். கடல் அரசிகூட அலை அரசியின் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். அவர்கள் மூவரும் ஆனந்த வெள்ளத்தில் நீந்தினார்கள்.

முறைப்படி அவர்களை முதலிரவுப் பஞ்சணையுள்ள அறையில் தள்ளினார்கள். இளவழுதி அர்த்த புஷ்டியுடன் அலை அரசியைப் பார்க்க, அவளோ கட்டிலைச்சுற்றி மெள்ளச் சுழன்று

சுழன்று வந்தாள் மயங்கி விழப்பார்த்த அந்த புஷ்பத்தை அள்ளி எடுத்துக் கொண்டான் இளவழுதி.

அப்படியே அவளைக் கட்டிலில் கிடத்தினான். அவளது முகத்தை நோக்கிக் குனிந்தான். தன் இதழ்களால் அவள்து இதழ்களைப் பொத்தினான்.

''என்ன முணுமுணுக்கிறாய் அலை அரசி?'' என்று இளவழுதி அவள் காதுகளில் கிசுகிசுத்தான்.

''ம்ம்'' என்று விரகத்தில் முனகிய அவள் தன் கைகளை அவன் கழுத்துக்காகக்கொடுத்து மார்பில் அழுத்தியபடி, ''இதெல்லாம்... உண்மைதானா?'' என்று தழுதழுத்தாள்.

அந்த நிலையிலும் கலகலவென்று நகைப்பொலி எழுப்பிய இளவழுதி, ''எது? எது உண்மைதானா என்று கேட்கிறாய்? என்னைப் பொறுத்தமட்டில் இதோ... இது உண்மை'' என்று தன் ஆட்காட்டி விரலால் அவள் ஈரம் கசிந்த உதடுகளை வருடினான். ''இது உண்மை...'' என்று அவன் விரல்அடுத்த மழமழவென்றிருந்த அவள் மோவாயில் நெருடியது. ''இது உண்மை'' என்று அவள் சங்குக் கழுத்தை வருடியது. ''இது உண்மை'' என்று அடுத்து அவன் விரல் நுனி சடேலென்று கீழே இறங்கி அவள் இளமைக் கொழுப்புகளின் நுனியில் வட்டம்போட்டபோது அதற்குமேல் தாளாத அலை அரசி ஆவேசத்தோடு இளவழுதியின் முகத்தை அழுத்திக்கொண்டாள். அவளது அழகிய மென்மைகள் அவனை ஆசையோடு அணைத்தன. தன் மார்பில் புதைந்த அவன் முகத்தோடு ஏதோ பேசி அவனைப் பஞ்சணையில் சாய்த்தாள் அலை அரசி. அப்புறம் அங்கே பேச்சுக்குத் தடை விழுகிறது. அந்த நிலையில் அவர்களைக் காண மென்சுகந்தம் மெல்லத் திருடன் போல் உள்ளே நுழைந்து அவர்களை வருடியது. சாளரத்தின் வெளியே பூர்ண சந்திரன் தானும் அவர்களது அந்த நிலையைக் காணும் ஆவலுடன் எம்பி எம்பி மேலே வந்து கொண்டிருந்தான்.

★★★

